12399

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR

திருச்சிற்றம்பலம்.

# திருவிளையாடற்புராணம்.

இது

கற்றோரும் மற்றோருமாகிய யாவருக்கும்

எளிதிலே பயன்படும்பொருட்டு,

யாழ்ப்பாணத்து நல்லூர்

## ஆறுமுகநாவலரால்

கத்திய ரூபமாகச் செய்து,

மேற்படியூர்

**சதாசிவப்பிள்ளையால்**

சென்னபட்டணம்

வித்தியாநுபாலனயந்திரசாலையில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

மூன்றாம் பதிப்பு.

சாதாரண௵ ஆடிமீ

இதன்விலை ரூபா - க.

(Copyright Registered.)

[illegible]

[illegible]

[illegible]

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY.
TIRUVANMIYUR, MADRAS-41

# த்திரம்.

| படலப்பெயர். | பக்கம். |
|---|---|
| அங்கம்வெட்டினபடலம். | ௧௩௦ |
| அட்டமாசித்தியுபதேசித்தபடலம். | ௧௬௯ |
| அருச்சனைப்படலம். | ௨௭௬ |
| அன்னக்குழியும்வைகையுமழைத்தபடலம். | ௯௫ |
| இசைவாதுவென்றபடலம். | ௧௮௨ |
| இடைக்காடன்பிணக்குத்தீர்த்தபடலம். | ௨௧௯ |
| இந்திரன்பழிதீர்த்தபடலம். | ௨௫ |
| இந்திரன்முடிமேல்வளையெறிந்தபடலம். | ௭௮ |
| இரசவாதஞ்செய்தபடலம். | ௧௫௬ |
| உக்கிரபாண்டியனவதாரப்படலம். | ௭௧ |
| உக்கிரகுமாரனுக்குவேல்வளைசெண்டுகொடுத்தபடலம். | ௭௬ |
| உலவாக்கிழியருளியபடலம். | ௧௪௨ |
| உலவாக்கோட்டையருளியபடலம். | ௧௫௩ |
| எல்லாம்வல்லசித்தர்திருவிளையாடற்படலம். | ௧௦௯ |
| எழுகடலழைத்தபடலம். | ௯௭ |
| கடல்சுவறவேல்விட்டபடலம். | ௭௭ |
| கரிக்குருவிக்குபதேசஞ்செய்தபடலம். | ௧௯௩ |
| கல்லானைக்குக்கரும்பருத்தியபடலம். | ௧௦௮ |
| கீரனைக்கரையேற்றியபடலம். | ௨௦௩ |
| கீரனுக்கிலக்கணமுபதேசித்தபடலம். | ௨௧௧ |
| குண்டோதரனுக்கு அன்னமிட்டபடலம். | ௯௩ |
| சங்கப்பலகைதந்தபடலம். | ௨௦௨ |
| சங்கத்தார்கலகந்தீர்த்தபடலம். | ௨௧௬ |
| சமணரைக்கழுவேற்றியபடலம். | ௨௯௨ |
| சுந்தரப்பேரம்பெய்தபடலம். | ௨௦௦ |
| சோழனைமடுவில்வீட்டியபடலம். | ௧௫௭ |
| தடாதகைப்பிராட்டியார்திருவவதாரப்படலம். | ௬௩ |
| தண்ணீர்ப்பந்தல்வைத்தபடலம். | ௧௫௧ |
| தருமிக்குப்பொற்கிழியளித்தபடலம். | ௨௦௯ |
| தலவிசேடம். | ௧௧ |
| திருநகரங்கண்டபடலம். | ௩௮ |
| திருமணப்படலம். | ௫௧ |
| திருமுகங்கொடுத்தபடலம். | ௧௭௮ |

| படலப்பெயர். | பக்கம். |
|---|---|
| திருவாலவாயானபடலம். | ௧௯ |
| திருவாதவூரடிகளுக்குபதேசித்தபடலம். | ௨௨௪ |
| தீர்த்தவிசேடம். | ௧௪ |
| நரிபரியாக்கியபடலம். | ௨௩௪ |
| நாகமெய்தபடலம். | ௧௩௩ |
| நாரைக்குமுத்திகொடுத்தபடலம். | ௧௯௬ |
| நான்மாடக்கூடலானபடலம். | ௧0௨ |
| பரிநரியாக்கியபடலம். | ௨௪௨ |
| பலகையிட்டபடலம். | ௧௮௧ |
| பழியஞ்சினபடலம். | ௧௨௧ |
| பன்றிக்குட்டிக்குமுலைகொடுத்தபடலம். | ௧௮௭ |
| பன்றிக்குட்டிகளைமந்திரிகளாக்கியபடலம். | ௧௯௧ |
| பாண்டியன்சுரந்தீர்த்தபடலம். | ௨௫௬ |
| புராணவரலாறு. | ௭ |
| மண்சுமந்தபடலம். | ௨௪௭ |
| மலயத்துவசனையழைத்தபடலம். | ௬௮ |
| மாணிக்கம்விற்றபடலம். | ௯௮ |
| மாபாதகந்தீர்த்தபடலம். | ௧௨௬ |
| மாமனாகவந்துவழக்குரைத்தபடலம். | ௧௬௧ |
| மாயப்பசுவைவதைத்தபடலம். | ௧௩௫ |
| மாறியாடினபடலம். | ௧௧௯ |
| மூர்த்திவிசேடம். | ௧௯ |
| மெய்க்காட்டிட்டபடலம். | ௧௩௮ |
| மேருவைச்செண்டாலடித்தபடலம். | ௮௯ |
| யானையெய்தபடலம். | ௧௧௧ |
| வரகுணனுக்குச்சிவலோகங்காட்டியபடலம். | ௧௬௫ |
| வருணன்விட்டகடலைவற்றச்செய்தபடலம். | ௧00 |
| வலைவீசினபடலம். | ௨௨0 |
| வளையல்விற்றபடலம். | ௧௪௫ |
| வன்னியுங்கிணறுமிலிங்கமுமழைத்தபடலம். | ௨௬௯ |
| விடையிலச்சினையிட்டபடலம். | ௧௪௯ |
| விருத்தகுமாரபாலரானபடலம். | ௧௧௪ |
| விறகுவிற்றபடலம். | ௧௭௨ |
| வெள்ளையானைசாபந்தீர்த்தபடலம். | ௩௫ |
| வெள்ளியம்பலத்திருக்கூத்தாடியபடலம். | ௫௮ |
| வேதத்துக்குப்பொருளருளிச்செய்தபடலம். | ௯௩ |

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

# மதுரையறுபத்துநான்கு

# திருவிளையாடற்புராணம்.

## கடவுள்வணக்கம்.

### விநாயகர்.

சத்தி யாய்ச்சிவ மாகித் தனிப்பர
முத்தி யான முதலைத் துதிசெயச்
சுத்தி யாகிய சொற்பொரு ணல்குவ
சித்தி யானைதன் செய்யபொற் பாதமே.

### சிவம்.

வென்றுளேபுலன்களைந்தார்மெய்யுணருள்ளந்தோறுஞ்
சென்றுளேயமுதமூற்றுந்திருவருள்போற்றியேற்றுக்
குன்றுளேயிருந்துகாட்சிகொடுத்தருள்கோலம்போற்றி
மன்றுளேமாறியாடுமறைச்சிலம்படிகள்போற்றி. (உ)

### சத்தி.

சுரும்புமுரல் கடிமலர்ப்பூங் குழல்போற்றி
புத்தரியத் தொடித்தோள் போற்றி
கரும்புருவச் சிலைபோற்றி கவுணியர்க்குப்
பால்சுரந்த கலசம் போற்றி
இரும்புமனங் குழைத்தென்னை யெடுத்தாண்ட
வங்கயற்க ணம்பி ராட்டி

அரும்புமிள நகைபோற்றி யாரணநூ
புரஞ்சிலம்பு மடிகள் போற்றி. (ரு

## வாழ்த்து.

மல்குக வேத வேள்வி வழங்குக சுரந்து வானம்
பல்குக வளங்க ளெங்கும் பரவுக வறங்க ளின்ப
நல்குக வுயிர்கட் கெல்லா நான்மறைச் சைவ மோங்கிப்
புல்குக வுலகமெல்லாம் புரவலன் செங்கோல் வாழ்க. (சு)

## நூற்பயன்.

திங்களணி திருவால வாயெம் மண்ணா
றிருவிளையாட் டிவையன்பு செய்து கேட்போர்
சங்கநிதி பதுமநிதிச் செல்வ மோங்கித்
தகைமைதரு மகப்பெறுவர் பகையை வெல்வர்
மங்கலநன் மணம்பெறுவர் பிணிவந் தெய்தார்
வாழ்நாளு நனிபெறுவர் வாறு டெய்திப்
புங்கவரா யங்குள்ள போக மூழ்கிப்
புண்ணியராய்ச் சிவனடிக்கீழ் நண்ணி வாழ்வார். (ரு)

## பரசிவம்.

பூவண்ணம் பூவின் மணம்போல மெய்ப் போதவின்ப
மாவண்ண மெய்கொண் டவன்றன் வலியாணை தாங்கி
மூவண்ண றன்சந்நிதி முத்தொழில் செய்ய வாளா
மேவண்ண லன்னோன் விளையாட்டின் வினையை வெல்வாம்.

## சிவசத்தி.

அண்டங்க ளெல்லா மணுவாக வணுக்க ளெல்லாம்
அண்டங்க ளாகப் பெரிதாய்ச் சிறிதா யினோனும்
அண்டங்க ளுள்ளும் புறம்புங் கரியா யினோனும்
அண்டங்க ளீன்ற துணையென்ப ரறிந்த நல்லோர். (உ)

## சோக்கலிங்கமூர்த்தி.

பூவி னாயகன் பூமக னாயகன்
காவி னாயக னாதிக் கடவுளர்க்
காவி நாயக னங்கயற் கண்ணிமா
தேவி நாயகன் சேவடி யேத்துவாம். (ங)

### அங்கயற்கண்ணி.

பூங்கயற்கண் ணரியபரம் பரனுருவே
தனக்குரிய படிவ மாகி
இங்கயற்க ணகனுலக மெண்ணிறந்த
சராசரங்க ளீன்றுந் தாழாக்
கொங்கையற்கண் மலர்க்கூந்தற் குமரிபாண்
டியன்மகள்போற் கோலங் கொண்ட
அங்கயற்கண் ணம்மையிரு பாதப்போ
தெப்போது மகத்துள் வைப்பாம். (௪)

### சபாபதி.

உண்மையறி வானந்த வுருவாகி
யெவ்வுயிர்க்கு முயிராய் நீரின்
றண்மையனல் வெம்மையெனத் தனையகலா
திருந்துசரா சரங்க ளீன்ற
பெண்மையுரு வாகியதன் னானந்தக்
கொடிமகிழ்ச்சி பெருக யார்க்கும்
அண்மையதா யம்பலத்து ளாடியருள்
பேரொளியை யகத்துள் வைப்பாம். (௫)

### சோமசுந்தரர்.

சடைமறைத்துக் கதிர்மகுடந் தரித்துநறுங்
கொன்றையந்தார் தணந்து வேப்பந்
தொடைமுடித்து விடநாகக் கலனகற்றி
மாணிக்கச் சுடர்ப்பூ ணேந்தி
விடைநிறுத்திக் கயலெடுத்து வழுதிமரு
மகனாகி மீன நோக்கின்
மடவரலை மணந்துலக முழுதாண்ட
சுந்தரனை வணக்கஞ் செய்வாம். (௬)

### தடாதகைப்பிராட்டியார்.

செழியர்பிரான் திருமகளாய்க் கலைபயின்று
முடிபுனைந்து செங்கோ லோச்சி
முழுதுலகுஞ் சயங்கொண்டு திறைகொண்டு
நந்திகண முனைப்போர் சாய்த்துத்

தொழுகணவற் கணிமணமா லிகைசூட்டித்
தன்மகுடஞ் சூட்டிச் செல்வந்
தழைவுறுதன் னரசளித்த பெண்ணரசி
யடிக்கமலந் தலைமேல் வைப்பாம். (எ)

## காண்மாறியாடியவர்.

பொருமாறிற் கிளர்தடந்தோ ளொருமாறன்
மனங்கிடந்த புழுக்க மாற
வருமாறிற் கண்ணருவி மாறுது
களிப்படைய மண்ணும் விண்ணும்
உருமாறிப் பவக்கடல்வீழ்ந் தூசலெனத்
தடுமாறி யுழலு மாக்கள்
கருமாறிக் கதியடையக் கான்மாறி
நடித்தவரைக் கருத்துள் வைப்பாம். (அ)

## தக்ஷிணாமூர்த்தி.

கல்லாலின் புடையமர்ந்து நான்மறையா
றங்கமுதற் கற்ற கேள்வி
வல்லார்க ணால்வருக்கும் வாக்கிறந்த
பூரணமாய் மறைக்கப் பாலாய்
எல்லாமா யல்லதுமா யிருந்ததனை
யிருந்தபடி யிருந்து காட்டிச்
சொல்லாமற் சொன்னவரை நினையாம
னினைந்துபவத் தொடக்கை வெல்வாம். (கூ)

## சித்திவிநாயகர்.

உள்ளமெனுங் கூடத்தி லூக்கமெனுந்
தறிநிறுவி யுறுதி யாகத்
தள்ளரிய வன்பென்னுந் தொடர்பூட்டி
யிடைப்படுத்தித் தறுகட் பாசக்
கள்ளவினைப் பசுபோதக் கவளமிடக்
களித்துண்டு கருணை யென்னும்
வெள்ளமதம் பொழிசித்தி வேழத்தை
நினைந்துவரு வினைக டீர்ப்பாம். (க0)

### சுப்பிரமணியர்.

கறங்குதிரைக் கருங்கடலுங் காரவுணப்
பெருங்கடலுங் கலங்கக் கார்வந்
துறங்குசிகைப் பொருப்புஞ்சூ ரூரப்பொருப்பும்
பிளப்பமறை யுணர்ந்தோ ராற்றும்
அறங்குலவு மகத்தழலு மவுணமட
வார்வயிற்றி னழலு மூள
மறங்குலவு வேலெடுத்த குமரவேள்
சேவடிகள் வணக்கஞ் செய்வாம். (கக)

### சரசுவதி.

பழுதகன்ற நால்வகைச்சொன் மலரெடுத்துப்
பத்திபடப் பரப்பித் திக்கு
முழுதகன்று மணந்துசுவை யொழுகியணி
பெறமுக்கண் மூர்த்தி தாளிற்
றொழுதகன்ற வன்பெனுநார் தொடுத்தலங்கல்
சூட்டவரிச் சுரும்புந் தேனுங்
கொழுதகன்ற வெண்டோட்டு முண்டகத்தா
ளடிமுடிமேற் கொண்டு வாழ்வாம். (கஉ)

### திருநந்திதேவர்.

வந்திறை யடியிற் றாழும் வானவர் மகுடகோடி
பந்தியின் மணிகள் சிந்த வேத்திரப் படையாற்றாக்கி
அந்தியும் பகலுந் தொண்ட ரலகிடுங் குப்பையாக்கும்
நந்தியெம் பெருமான்பாத நகைமலர் முடிமேல்வைப்பாம்.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

கடியவிழ் கடுக்கைவேணித் தாதைபோற்கனற்கண்மீனக்
கொடியனை வேவ நோக்கிக் குறையிரந் தனையான் கற்பிற்
பிடியன நடையாள் வேண்டப் பின்னுயி ரளித்துக் காத்த
முடியணி மாடக் காழி முனிவனை வணக்கஞ் செய்வாம்.

### திருநாவுக்கரசுநாயனார்.

அறப்பெருஞ் செல்விபாகத் தண்ணலைந்தெழுத்தாலஞ்சா
மறப்பெருஞ் செய்கை மாறா வஞ்சக ரிட்டகல்லே

நிறப்பெருங் கடலும் யார்க்கு நீந்துதற் கரிய வேழு
பிறப்பெனுங் கடலு நீத்த பிரானடி வணக்கஞ் செய்வாம்.

சுந்தரமூர்த்திநாயனார்.

அரவக லல்குலார்பா லாசைநீத் தவர்க்கே வீடு
தருவமென் றளவில்வேதஞ் சாற்றிய தலைவன்றன்னைப்
பரவைதன்புலவிதீர்ப்பான்கழுதுகண்படுக்கும்பானு [ம்.
ளிரவினிற்றூதுகொண்டோனிணையடிமுடிமேல் வைப்பா

மாணிக்கவாசகசுவாமிகள்.

எழுதரு மறைகட் டேறா விறைவனை யெல்லிற்கங்குற்
பொழுதறு காலத் தென்றும் பூசனை விடாது செய்து
தொழுதகை தலைமேலேறத் துளும்புகண் ணீருண்மூழ்கி
அழுதடியடைந்தவன்பனடியவர்க்கடிமைசெய்வாம்.(கஎ)

சண்டேசுரர் முதலிய நாயன்மார்.

தந்தைதா ளொடும்பிறவித் தாளெறிந்து
நிருத்தரிரு தாளைச் சேர்ந்த
மைந்தர்தாள் வேதநெறி சைவநெறி
பத்திநெறி வழாது வாய்மெய்
சிந்தைதா னரனடிக்கே செலுத்தினராய்ச்
சிவானுபவச் செல்வ ராகிப்
பந்தமாந் தொடக்கறுத்த திருத்தொண்டர்
தாள்பரவிப் பணிதல் செய்வாம்.

திருச்சிற்றம்பலம்.

# புராணவரலாறு.

நித்தியராய், வியாபகராய், தம்வயத்தராதல், தூய வுடம்பினராதல், இயற்கையுணர்வினராதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களினீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை என்னும் எண்குணங்களும் உடையராய் உள்ள பசுபதியாகிய சிவன், ஆன்மாக்களுக்கு அருள்செய்யும்பொருட்டு, ஒருதிருமுகமும், சந்திரன் சூரியன் அக்கினி என்னும் முச்சுடர்களாகிய மூன்று திருக் கண்களும், கங்கையையும், பிறையையும், கொன்றைமாலையையும் சூடிய சடாமுடியும், சங்கக்குண்டலத்தையும் தோட்டையும் அணிந்த திருச்செவிகளும், காளகண்டமும், மான் மழு அபயம் வரதம் என்பவைகளோடு கூடிய நான்கு திருக்கரங்களும், விபூதியினாலே உத்தூளிக்கப்பட்ட செம்பவளத்திருமேனியும், வெள்ளைப்பூணூலையும் எண்ணிறந்த பிரம விட்டுணுக்களுடைய என்புமாலைகளையும் பிரம கபாலங்களையும் அணிந்த திருமார்பும், புலித்தோலை உடுத்து உடைவாளுடனே கச்சையுடைத்தாய் விளங்கும் திருவரையும், வீரக்கழலும் சிலம்பும் ஒலிக்கும் செந்தாமரை மலர்போலுந் திருவடிகளும் உடைய ஸ்ரீகண்ட சரீரியாய், பல இரத்தினங்களாலே புனையப்பட்ட வெள்ளிமயமாகிய நானாவித சிகரங்களோடு கூடிய திருக்கைலாசமலையிலே, செம்பொற்றிருக்கோயிலிலே, தமது கணநாயகர்கள் மெய்யன்போடு சேவிப்ப, தும்புருநாரதர்கள் இசைபாட, முனிவர்கள் தங்கள் கைகள் சிரசின்மேல் ஏறிக் குவியவுங் கண்களினின்றும் ஆனந்த அருவி பாயவும் மெய்ம்மயிர் சிலிர்ப்பவும் அம்மயிர்க்கால் தோறும் திவலை உண்டாகவும் அழலிடைப்பட்ட மெழுகுபோல மனங்கசிந்துருகவும் சரீரம் நடுங்கவும் கண்டம் விம்மவும் நாத்தழுதழுப்பவும் உரை தடுமாறவும், தம்மையல்லாத பிறரொருவரையும் பேசுதலறியாத வேத சிரசுகளை எடுத்தோத, திருநந்திதேவர் திருக்கரத்திற்கொண்டருளிய வேத்திரப்படையினாலே பலமுறை விலக்கப்பட்டும் அடிக்கப்பட்டும் ஒதுக்கப்பட்டும் பின்னிட்டு ஒது

ங்கிய திருமால் பிரமன் இந்திரன் முதலாகிய தேவர்கள் ஒரோவழி அருகித் தங்கண்மேல் ஓடிய திருநோக்கமும் திருப்புன்முறுவலும் கண்டு, இனி உய்ந்தனம் உய்ந்தனம் என்று, பணிந்த மொழியும் தணிந்த நடையும் உடையர்களாய், ஆடையொதுக்கித் தலைபணிந்து வாய்புதைத்துத் தங்கள் தங்கள் குறைகளைக் கூற, எண்ணில்கோடி சூரியர்களது ஒளியைப்போலும் ஒளியையுடைய திவ்விய சிங்காசனத்தின்மேலே, தமது அருட்சத்தியும் உலகமாதாவுமாகிய உமாதேவியார் தமது இடப்பாகத்தின் மேவ, அளவிறந்த பெருங்கருணையோடு வீற்றிருந்தருளுவர்.

அவர் வீற்றிருந்தருளும் அத்திருக்கோயிலுக்கு முன் உள்ள சிவதீர்த்தக்கரையிலே ஒரு ஆயிரக்கால் மண்டபம் உண்டு. அந்த மண்டபத்திலே வியாசமுனிவருடைய மாணாக்கராகிய சூதமுனிவர் புலித்தோலாசனத்தின்மேல் இருந்தார். அப்பொழுது சம்புபத்தர், சதானந்தர், உத்தமர், மகோதரர், உக்கிரவீரியர், பிரசண்டர் முதலாகிய முனிவர்கள் யாவரும் அந்தச் சிவதீர்த்தத்தில் வந்து ஸ்நானஞ்செய்து, அம்மண்டபத்தில் ஏறியிருந்து, சந்தியாவந்தனம் முதலியவற்றை முடித்து, சிவனைத் தியானித்துத் துதித்துக்கொண்டு, சூதமுனிவர் திருமுன்சென்று, அவருடைய திருவடிகளை மலர்களினால் அருச்சித்து, அவரை வணங்கித் துதித்து, அநாதிமுத்த சித்துருவாகிய முதற்கடவுள் சிவபிரான் என்பதே வேதம் ஆகமம் மிருதி புராணம் முதலிய நூல்களினது துணிபொருளென்று தெளிந்துணர்ந்த முனிவரரே, அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்தருளிய பரமசிவன் உயிர்கண்மேல் வைத்த பெருங்கருணையினாலே விசேடமாக எழுந்தருளியிருக்கும் தலங்கள் மகாமேருகிரி, மந்தரகிரி, கைலாசகிரி, திருப்பருப்பதம்,* முதலாக அநந்தம் என்று முன்னே அருளிச்செய்தீர். எல்லாத்தலங்களினும் மேலானதாய், எல்லாத்தீர்த்தங்களினும் மேலாகிய தீர்த்தத்தைத் தன்னிடத்து உடையதாய்,

* திருப்பருப்பதம் ஸ்ரீசைலம்; இது மல்லிகார்ச்சுனமெனவும் பெயர் பெறும்.

பரமசிவன் எல்லாத்தலங்களினும் தன்னிடத்தே விசேடமாக எழுந்தருளியிருக்கப்பெற்றதாய் உள்ள தலமொன்று அடியேங்களுக்குச் சொல்லியருளும் என்று விண்ணப்பஞ் செய்தார்கள்.

சூதமுனிவர் அது கேட்டு, முகமலர்ந்து, பரமசிவனையும தமது ஆசாரியராகிய வியாசமுனிவரையும் சிந்தித்துத் துதித்து, தல்விசேடத்தைத் தம்முள்ளே ஆராய்ந்து துணிந்துகொண்டு, அவ்விருடிகளை நோக்கி, முனிவர்களே, பதினெண்புராணங்களுள் காந்தம் மிக உயர்ந்ததாய், சனற்குமாரசங்கிதை, சூதசங்கிதை, பிரமசங்கிதை, விட்டுணுசங்கிதை, சங்கரசங்கிதை, சூரசங்கிதை,* என ஆறுசங்கிதைகளை உடைத்தாயிருக்கும். அவற்றுள், சங்கரசங்கிதை பரமசிவனாலே உமாதேவியாருக்குச் சொல்லியருளப்பட்டது. அப்போது அதனை முருகக்கடவுள் அவ்வம்மையார் மடியிலிருந்து கேட்டுணர்ந்து, தம்மை வழிபடும் நன்மாணுக்கராகிய அகத்தியமகாமுனிவருக்குச் சொல்லியருளினார். அன்றுதொட்டு அது அகத்தியசங்கிதை என வழங்குகின்றது. அதனுள்ளே கேட்பவர்களுக்கு முத்தியைக் கொடுக்கும் ஒரு சிவஸ்தலம் சொல்லப்படுகின்றது. அது திருவாலவாய் என்றார்.

கேட்டன் மாத்திரத்திலே முத்தியைத் தரும் தலம் என்றவுடனே முத்தியின் மிக்கவிருப்பத்தை உடையமுனிவர்கள் அகமகிழ்ந்து, சூதமுனிவரை அஞ்சலிசெய்து, தபோநிதியே, அந்தத்திருப்பதியின் பெருமையை அடியேங்களுக்கு அருளிச்செய்யும் என்று விண்ணப்பஞ்செய்ய, சூதமுனிவர் தாம் கேட்ட முறைப்படி சொல்வாராயினர்.

முனிவர்களே, முன் ஒருநாளிலே பிரமதேவர் காசிப்பதியை அடைந்து, அகத்தியர், வியாசர், நாரதர், சனகர், சனந்தர், சனாதனர், சனற்குமாரர், கௌதமர், பராசரர், வாமதேவர், வான்மீகர் † வசிட்டர், சுகர் முதலாகிய

* சூரன் - சூரியன். † வான்மீகரெனினும், வான்மீகியெனினும், வான்மிகியெனினும் பொருந்தும்.

முனிவர்களோடு பத்து அசுவமேதஞ்செய்து, அவர்களுக்குக் கொடுக்கற்பாலனவற்றைக் கொடுத்துவிட்டு, சத்தியலோகத்தை அடைந்தார். அதன்பின் முனிவர்கள் எல்லாரும் காசிவிசுவேசர் சந்நிதியை அடைந்து, வலஞ்செய்து வணங்கித் துதித்துக்கொண்டு, முத்திமண்டபத்திற்சென்று, தக்ஷிணாமூர்த்தி சந்நிதியிலிருந்து, நாரதமுனிவரை நோக்கி, முனிவரரே, தலம் தீர்த்தம் மூர்த்தி என்னும் மூன்றினாலும் விசேடமுடைய ஒரு சிவதலம் சொல்லும் என்று கேட்டார்கள். அதற்கு நாரதமுனிவர், கலைகளெல்லாம் நன்குணர்ந்த சனற்குமாரமகாமுனிவரிடத்தே கற்றவர் வியாசமுனிவர், அவரிடத்துக் கேளுங்கள் என்றார். அவ்வியாசமுனிவர், முற்றறிவினராகிய முருகக்கடவுளிடத்தே வேதம் முதலிய நூல்களெல்லாவற்றையும் ஐயந்திரிபற உணர்ந்தவர் அகத்தியமகாமுனிவர், அவரிடத்துக் கேளுங்கள் என்று விடுத்தார். உடனே அம்முனிவர்கள் அகத்தியமகாமுனிவரை அடைந்து, வணங்கித் துதித்து, கருணாநிதியே, தலவிசேடம் தீர்த்தவிசேடம் மூர்த்திவிசேடம் என்னும் இம்மூன்றுவிசேடங்களும் ஒருங்குடைய ஒரு சிவதலம் அடியேங்களுக்குத் திருவாய்மலர்ந்தருளும் என்று விண்ணப்பஞ் செய்தார்கள்.

அது கேட்ட அவ்வகத்தியமகாமுனிவர் திருமுகமலர்ந்து அருள்கூர்ந்து. முத்திமண்டபத்தில் வந்து இறக்கும் நான்கு கோழிகளையும் * விநாயகக்கடவுளையும் முருகக்கடவுளையும் தக்ஷிணாமூர்த்தியையும் வணங்கி, மீனாக்ஷிய

* மகானந்தன் என்னும் ஒருபிராமணன் தான் சண்டாளன் கையிற்றானம் வாங்கினமைபற்றித் தன்வருணத்தாரால் நீக்கப்பட்டு, தன்மனைவியோடும் மக்கள் இருவரோடும் காசியினின்றும் நீங்கி,கங்கையாடிக்காவடிகொண்டுபோவார்பின்செல்லும்போது, காட்டிலே வேடர்களாலே தன் மனைவி மக்கள்களோடு கொல்லப்பட்டான். இறக்கும்பொழுது காசியைத் தியானித்துக்கொண்டு இறந்தமையால், முன்னையறிவோடு சேவலாய்ப் பிறந்தான். அவன் மனைவி பேடும், மக்களிருவரும் குஞ்சுகளுமாய்ப் பிறந்தார்கள். இந்நான்குகோழிகளும் காசிக்குச் செல்வார்பின்னே தொடர்ந்து சென்று, காசியை அடைந்து, முத்திமண்டபத்தின் இருக்கின்றன. மூன்றாமுகத்தில் இவை அம்மண்டபத்தின் இறத்தலாற் கைலாசத்

ம்மையையும் சோமசுந்தரக்கடவுளையும் தமது இருதயக மலத்தில் இருத்தித் தியானித்து, நெஞ்சநெக்குருகக் கண்ணீர் வார மெய்ம்மயிர் சிலிர்ப்ப ஆனந்தபரவசராகி, அம்முனிவர்களை நோக்கி, இருடிகளே, கிருபாசமுத்திரமாகிய பரமசிவன் பார்வதிதேவியாருக்குத் திருவாய்மலர்ந்தருளிய சங்கரசங்கிதையை நமது பரமாசாரியராகிய சுப்பிரமணியக்கடவுள் நமக்கு அருளிச்செய்தார். அந்தச் சங்கிதையிலே நீங்கள் வினவிய மூன்று விசேடமும் ஒருங்குடைய தலமொன்று சொல்லப்படுகின்றது· அது செயற்கரிய பெருந்தவங்களைச் செய்து அதனாலே சித்தசுத்தியைப்பெற்று அதனாலே சிவஞானத்தை அடைந்து அரிதிற்பெறற்பாலதாகிய முத்தியைக் கேட்பவர்களுக்கு எளிதிற்கொடுக்கும் தலம், வேதாந்தப் பொருளாகிய பரமசிவன் அருளுருக்கொண்டு அறுபத்துநான்கு திருவிளையாடல்களைச் செய்தருளிய தலம், அதன்பெயர் திருவாலவாய், அது பூலோகசிவலோகம். அந்தத்தலத்தின் மூன்று விசேடங்களையும், சோமசுந்தரக்கடவுள் செய்தருளிய அறுபத்துநான்கு திருவிளையாடல்களையும், நமது ஆசாரியர் நமக்குத் திருவாய்மலர்ந்தருளியபடியே, நாம் உங்களுக்குச் சொல்வாம் என்று சொல்லலுற்றார்.

திருச்சிற்றம்பலம்.

---

## தலவிசேடம்.

சிவபத்தியிற் சிறந்த முனிவர்களே, நீங்கள் விரும்பிக் கேட்ட தலம் நாம் இப்போது சொல்லிய திருவாலவாயேயாம். இந்தத்திருப்பதியிலே சுவர்ணகஞ்சம் * எனப் பெயர்கொண்ட ஒருதடாகமும், அதன் சமீபத்திலே ஞானவடிவாய் முளைத்த சோமசுந்தரமூர்த்தி எனப் பெயர்கொ

---

தையடையும். அன்றுதொட்டு அம்மண்டபம் குக்குடமண்டபமென்றும் பெயர்பெறும். இவ்வாறே திருமாலுக்குப் பரமசிவனாலே திருவாய்மலர்ந்தருளப்பட்டது. இச்சரித்திரம் காசிகண்டத்தில் முத்திமண்டபத்தின் கதையுரைத்தவத்தியாயத்திற் காண்க.

* சுவர்ணகஞ்சம் - பொற்றாமரை.

ண்ட ஒரு சிவலிங்கமும் உண்டு. இந்தத்திருவாலவாய்க்கு ஒப்பாகிய தலமும், சுவர்ணகஞ்சத்துக்கு ஒப்பாகிய தீர்த்தமும், சோமசுந்தரமூர்த்திக்கு ஒப்பாகிய சிவலிங்கமூர்த்தியும், மூவுலகங்களினும் இல்லை. இது சத்தியம். இம்மூன்றனுள், தலவிசேடத்தை முன்னே சொல்வோம், கேளுங்கள்.

எவ்வுலகங்களினும் புண்ணியதலங்களே சிறந்தன, அவைகளுள்ளே சிவதலங்கள் சிறந்தன, அவைகளுள்ளே அறுபத்தெட்டுச் சிவதலங்கள் சிறந்தன, அவைகளுள்ளே பதினறு சிவதலங்கள் சிறந்தன, அவைகளுள்ளே நான்கு சிவதலங்கள் சிறந்தன. அவைகளாவன சிதம்பரம், காசி, திருக்காளத்தி, திருவாலவாய் என்பவைகளாம். இந்நான்கனுள்ளும், சிதம்பரம் தரிசித்தவர்களுக்கும், காசி தன்னிடத்திறந்தவர்களுக்கும், திருக்காளத்தி வழிபட்டவர்களுக்கும் போகத்தையும் மோக்ஷத்தையும் கொடுக்கும்: திருவாலவாய் தன்பெயரைக் கேட்டவர்களுக்குப் போகத்தையும் மோக்ஷத்தையும் கொடுக்கும்: ஆதலால், இந்நான்கனுள்ளும் திருவாலவாயே சிறந்தது. இதுவுமன்றி, பரமகருணாநிதியாகிய பரமசிவன் எல்லாத்தலங்களையும் படைக்கும்பொருட்டு முன்னே இத்திருவாலவாயைப் படைத்து, இதன்கண் எழுந்தருளியிருந்தார்.

திருவாலவாயென்று கேட்டவரே தருமத்தை அடைவர்; திருவாலவாயென்று நினைத்தவரே பொருளை அடைவர்; திருவாலவாயிலே சோமசுந்தரக்கடவுளைத் தரிசித்தவரே இன்பத்தை அடைவர்; திருவாலவாயில் எந்நாளும் வசித்தவரே மோக்ஷத்தை அடைவர்.

காசி முதலிய சிவதலங்கள் தேகாந்தத்தில் முத்தியைக்கொடுக்கும்; இத்திருவாலவாய் தன்னிடத்து வசிப்போர்க்கு இம்மையிலே சீவன்முத்தியையும் பின்னர்ப் பரமுத்தியையுங் கொடுக்கும். அதனால் இச்சீவன்முத்திபுரம் தனக்குத் தானே ஒப்பாகும். ஆதலால் இத்திருப்பதியை விட்டுப் பிறபதிகளிற்சென்று தவஞ்செய்வோர் தம்முள்

ளங்கையினுள்ள பாயசத்தை உகுத்துவிட்டுப் புறங் கையை நக்குவார் போல்வர்.

மற்றைத் தலங்களிலே அசுவமேதம், வாசபேயம், சோடசீ, அக்கினிட்டோமம், இராசசூயம் முதலிய யாகங்களைச் செய்த பேறும், தரிசபூர்ணமாசம் முதலிய இட்டிகளைச் செய்தபேறும், எள் நெய் அன்னம் கன்னிகை குதிரை தேர் யானை வீடு வெள்ளி பசு பொன் ஆபரணம் வஸ்திரம் வயல் அடிமை முதலிய தானங்களைச் செய்த பேறும், காசி முதலிய சிவதலங்களிலே வசித்த பேறும், கங்கை, காளிந்தி, சரசுவதி, காவிரி, கிருஷ்ணவேணி, துங்கபத்திரை, பாலி, தாமிரபர்ணி முதலிய நதிகளெல்லாவற்றினும் ஸ்நானஞ்செய்த பேறும், திருவர்லவாயிலே எந்நாளும் வசித்தவருக்குக் கிடைக்கும்.

மற்றைத்தலங்களிலே செய்யப்பட்ட கொலை, களவு, கள்ளுணல், பிறர்மனைநயத்தல் முதலிய பாதகங்களெல்லாம் திருவாலவாயிலே எந்நாளும் வசிப்பவரை விட்டு நீங்கும்.

மற்றைத்தலங்களிலே மாசந்தோறும் சாந்திராயணவிரதம் அனுட்டித்தலாலாகும் பயன் திருவாலவாயிலே இரவிற்புசித்தலால் உண்டாகும். மற்றைத்தலங்களிலே ஒரு மாசம் உபவசித்தலாலாகும் பயன் திருவாலவாயிலே ஒருநாள் உபவசித்தலால் உண்டாகும். மற்றைத்தலங்களிலே நான்குமாசம் உபவசித்தலாலாகும் பயன் திருவாலவாயிலே அட்டமிவிரதம் அனுட்டித்தலால் உண்டாகும். மற்றைத்தலங்களிலே ஆறுமாசம் உபவசித்தலாலாகும் பயன் திருவாலவாயிலே சோமவாரவிரதம் அனுட்டித்தலால் உண்டாகும். மற்றைத்தலங்களிலே ஒருவருடம் உபவசித்தலாலாகும் பயன் திருவாலவாயிலே சிவராத்திரிவிரதம் அனுட்டித்தலால் உண்டாகும். ஐம்பொறிகளையும் வென்ற தபசி திருவாலவாயிலே முப்பொழுதும் போசனஞ்செய்துகொண்டு வசித்தானாயினும், அவன் வாயுவை உண்டு பெருந்தவஞ் செய்தோனாவன். திருவால

வாயிலே பிராமணருக்கு ஒருபிடி அரிசியும் தபசிகளுக்கு ஒருபிச்சையும் கொடுத்தவர் மற்றைத்தலங்களிலே சோடசதானஞ் செய்தலாலாகும் பயனைப் பெறுவர்.

எல்லாத்தலங்களிலும் வசித்த பேறும், எல்லாத் தீர்த்தங்களிலும் ஸ்நானஞ்செய்த பேறும், எல்லாத் தானங்களையுங்கொடுத்த பேறும், எல்லாப்பூசைகளையுஞ் செய்த பேறும், எல்லாத்தவங்களையும் முடித்த பேறும், எல்லாமந்திரங்களையும் செபித்த பேறும், எல்லா நூல்களையும் அறிந்த பேறும், எல்லா யோக ஞானங்களையும் அனுட்டித்த பேறும், திருவாலவாயிலே எந்நாளும் வசிப்பவருக்குக் கிடைக்கும்.

ஆதலால் திருவாலவாய்க்கு ஒப்பாகிய தலம் எங்கும் இல்லை. இதனால், வினைகளை வென்று சிவபெருமானுடைய திருவடிக்கீழ் வாழும் பேரின்பத்தைப் பெற்று உய்ய விரும்புவோர், திருவாலவாயிலே, சிவனிடத்து அன்பும் உயிர்களிடத்து அருளும் உடையராய், எந்நாளும் வசிக்கக்கடவர்.

முன்னொருநாளிலே, பிரமதேவர், திருக்கைலாயமுதலிய தலங்களெல்லாவற்றையும் ஒருதுலைத்தட்டிலும், திருவாலவாயை மற்றைத்தட்டிலும் இட்டுத் தூக்கியபோது, திருவாலவாயே மிகக் கனத்தமை கண்டு, இதுவே மூவுலகங்களினும் மிக மேலாகிய தலம் என்று நிச்சயித்தார்.

இத்திருப்படைவீட்டின் திருநாமங்களாவன, சிவநகரம், கடம்பவனம், சீவன்முத்திபுரம், கன்னியாபுரம், திருவாலவாய், மதுரை, பூலோகசிவலோகம், சமட்டிவித்தியாபுரம், நான்மாடக்கூடல், துவாதசாந்ததலம் என்பனவாம்.

திருச்சிற்றம்பலம்.

## தீர்த்த விசேடம்.

முனிவர்களே, பரமகாருணிகராகிய சோமசுந்தரக் கடவுள், கங்கை, காவிரி முதலிய நதிகளும், கடல்களும்,

மேகங்களும், பிறவும் தோன்றுமுன்னே, தமக்கு அபிஷேகஞ் செய்தற்பொருட்டு உண்டாக்கியருளிய தீர்த்தம் பொற்றாமரைவாவி. அது எப்படியெனில், சொல்வோம், கேளுங்கள்.

உண்மையறிவானந்த வடிவாகிய சொக்கலிங்கமூர்த்தி ஆதிகாலத்திலே ஒருதிருவிளையாட்டைத் திருவுளத்தடைத்து, அருள்வடிவாகிய மீனாக்ஷியம்மையாரோடு தருமவடிவாகிய இடபவாகனத்தின்மேற்கொண்டு, தமக்கு முன்னும் பின்னும் பக்கமும் திருநந்திதேவர் முதலிய கணநாதர்கள் துதிசெய்து சூழும்படி சென்று, நாகருலகத்தினும், சுவர்க்கத்தினும், சத்தியலோகத்தினும், வைகுண்டத்தினும், தமது உலகத்தினும் சஞ்சரித்துத் திருவிளையாடல் செய்து; அங்கங்குள்ளோர் தமது சந்நிதியில் வந்து வணங்கித் துதிக்க, அவரவருக்குத் திருவருள்செய்து, தமது திருவாலவாயை அடைந்து, தமது கணநாதர்கண்மேல் திருக்கடைக்கண் சாத்தியருளினர்.

அப்பொழுது திருநந்திதேவர் முதலிய கணநாதர்கள் வணங்கித் துதித்து, எம்பெருமானே, இச்சிவலிங்கமூர்த்திக்கு அபிஷேகஞ்செய்யவும், அடியேங்கள் ஸ்நானஞ் செய்து உய்யவும், கங்கை முதலிய நதிகளும், தடாகங்களும், பிற நீர்நிலைகளும் இல்லையே. ஆதலால், அடியேங்கண்மேல் பெருங்கருணைகூர்ந்து, இங்கே ஒருதீர்த்தம் உண்டாக்கியருளுகவென்று விண்ணப்பஞ்செய்தார்கள். உடனே வேண்டுவார் வேண்டியதே ஈயுஞ் சிவபிரானுனவர் அந்தச் சிவலிங்கமூர்த்திக்குத் தென்கீழ்த்திசையிலே தமது சூலத்தை நாட்ட, அது பூமியையும் பாதாளத்தையும், அண்டகடாகத்தையும் கிழித்தது. அவ்விடத்தினின்றும் பெரும்புறக் கடல்போல நீர் பெருகி மேலேயோங்க, சிவபெருமான் தமது திருக்கரத்தால் அமைத்து, சடாமுடியிலுள்ள கங்கைநீரை அதிலே தெளித்துக் கலந்து, புண்ணியதீர்த்தமாக்கி, கணநாதர்களை நோக்கித் திருவாய்மலர்ந்தருளுவார். நம்முடைய அன்பர்களே, இத்தீர்

த்தம் மற்றைத்தீர்த்தங்கள் எல்லாவற்றிற்கும் முன்னே நம்மால் உண்டாக்கப்பட்டமையால் ஆதிதீர்த்தமெனவும், இனி உண்டாக்கப்படுந் தீர்த்தங்களெல்லாவற்றிற்கும் மேலாயிருத்தலால் பரமதீர்த்தமெனவும், தன்னிடத்தே ஸ்நானஞ்செய்தவருக்கு மங்கலத்தைக் கொடுத்தலால் சிவதீர்த்தமெனவும், ஞானத்தைக் கொடுத்தலால் ஞானதீர்த்தமெனவும், முத்தியைக் கொடுத்தலால் முத்திதீர்த்தமெனவும், பெயர் பெறும். இந்தத் தீர்த்தத்திலே ஸ்நானம்பண்ணித் தர்ப்பணஞ்செய்து, தானங்கொடுத்து, அதன் கரையிலிருந்து பஞ்சாக்ஷரஞ் செபித்து, மெய்யன்புடனே நம்மை வலஞ்செய்து வணங்கித் துதித்தவர் தாம் மானுடப்பிறவியைப் பெற்றதனாலாகிய பயனைப் பெறுவர். இந்தத் தீர்த்தத்தினாலே நமக்கு அபிஷேகஞ்செய்யின், பதினாலுலகங்களினும் உண்டாக்கப்படுந் தீர்த்தங்களெல்லாவற்றானும் அபிஷேகஞ்செய்த பயன் கிடைக்கும் என்றருளிச்செய்து, தாம் அந்தத்தீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்துகொண்டு, அக்கணநாதர்களை நோக்கி, நீங்கள் இந்தத்தீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்து இங்குள்ள சிவலிங்கத்தை அன்போடு பூசை செய்யுங்களென்று அனுஞ்ஞைசெய்து, சிவலிங்கத்தின் மறைந்தருளினார். அவ்வனுஞ்ஞையைத் தலைமேற்கொண்டு திருநந்திதேவர் முதலிய கணர்கள் பொற்றாமரைவாவியிலே ஸ்நானஞ்செய்து, சோமசுந்தரமூர்த்தியை அந்தத்தீர்த்தத்தினாலே விதிப்படி ஆட்டிப் பூசித்து, தாம் விரும்பிய வரங்களைப் பெற்றார்கள். இத்தீர்த்தத்தின் வரலாறு இது; இனி இதன் மகிமையைச் சொல்வோம், கேளுங்கள்.

பொற்றாமரைவாவியைப் பார்த்தால், பாவம் நீங்கும். அதிலே ஸ்நானஞ்செய்தால், விரும்பிய பொருள்களெல்லாம் கிடைக்கும். முழுக்கொன்றுக்கு உலகத்துள்ள தீர்த்தங்கள் எல்லாவற்றினும் ஸ்நானஞ்செய்த பயன் கிடைக்கும். சரீரத்தை மிருத்திகையினாலே விதிப்படி சுத்திசெய்து வருணசூக்தமந்திரத்தை உச்சரித்துக்கொண்டு ஸ்நா

னஞ்செய்தால், புண்ணியதீர்த்தங்களெல்லாவற்றினும் ஸ்நானஞ்செய்து நான்குவேதங்களையும் முற்றவுணர்ந்த பிராம்மணர்களுக்கு எல்லாப்பொருள்களையும் தானஞ்செய்த பெரும்பேறு உண்டாகும். நெருப்பை நினைவின்றித் தீண்டினும் அது சுடுமன்றோ, அதுபோலவே பொற்றாமரைவாவியை நினைவின்றித் தீண்டினும் அது மலத்தை நீக்கி முத்தியைக் கொடுக்கும். பொற்றாமரை வாவியிலே ஸ்நானஞ்செய்தவர் சீவன்முத்தியைப் பெறுவர். வாருண ஸ்நானம், ஆக்கினேயஸ்நானம், மந்திரஸ்நானம் முதலிய எண்வகை ஸ்நானங்களைச் செய்த பேறுகளெல்லாம் பொற்றாமரைவாவியிலே ஸ்நானஞ்செய்த பெரும்பேற்றுக்கு ஒவ்வாவாம். பொற்றாமரைவாவியிலே ஸ்நானஞ்செய்து சோமசுந்தரக்கடவுளை வணங்கினோன் பரமுத்தியை அடைவன். சிரத்தையின்றி ஸ்நானஞ்செய்தவன் சுவர்க்கத்தை அடைவன். சிரத்தையோடு ஸ்நானஞ்செய்து தேவர் முதலியோருக்கு அட்சதை, திலம் என்பவை கொண்டு தருப்பணஞ்செய்தவன் யாகங்களெல்லாவற்றையும் முடித்த பயனை அடைவன். விரதம், பூசை, தானம், தருமம், ஓமம், தவம், செபம், தியானம் என்பவைகளைப் பொற்றாமரைவாவிக்கரையிலிருந்து செய்யின், மற்றைத் தலங்களின் இருந்து செய்த பயனிற் கோடிமடங்கு அதிகமாகிய பயன் கிடைக்கும்.

பொற்றாமரை வாவியிலே சென்மநக்ஷத்திரத்திலே ஸ்நானஞ்செய்தால், பிறவித்துன்பம் நீங்கிவிடும். சித்திரை, கார்த்திகை, மாசி என்னும் மாசங்களிலே ஸ்நானஞ்செய்து பிதிரர்பொருட்டுப் பிண்டங்கொடுத்தால், அவர் தாம் ஆழ்ந்த பிறவிக்கடலினின்றும் நீங்கி முத்திக்கரையேறுவர். பொற்றாமரைவாவிக்கரையிலே பிதிர்கடன்களைச் செய்யின், எள்ளொன்றிற்கு ஆயிரம் வருடமாக அவர் சுவர்க்கலோகத்தை ஆளுவர். மூவுலகத்திலுள்ள தீர்த்தங்களும் நாடோறும் சேவிக்கும் பொற்றாமரைவாவியிலே எந்நாளும் ஸ்நானஞ்செய்து அந்தத் தீர்த்தத்தினுலே சிவபிரா

ஊைப் பூசிப்பவர் இப்பிறவியிற்றானே முத்தியை அடைவர். அக்கினிகோத்திரம், விரதம், வேதபாராயணம், தானம், தவம் என்னும் இவைகள் தரும் பேறுகளெல்லாம் சோமசுந்தரக்கடவுளைப் பூசிக்குஞ் சிவப்பிராமணர்களுக்குப் பொற்றாமரைவாவிக்கரையிலிருந்து தானஞ்செய்யும்பேற்றிலே கோடியினொன்றுக்கு ஒப்பாகாவாம். முற்பிறப்புக்களிலே நல்லொழுக்கம் பூண்டு, விரதமும், தானமும், தவமுஞ்செய்த சுத்தான்மாக்களுக்கன்றி, மற்றையோருக்கு இத்தீர்த்தம் இப்பிறப்பிலே நாடோறும் ஸ்நானஞ்செய்தற்குக் கிடையாது.

சிவபெருமானுடைய அட்டமூர்த்தங்களுள் சலம் என்னும் மூர்த்தமாகிய பொற்றாமரைவாவியிலே அமாவாசையிலும், மாசப்பிறப்பிலும், கிரகணபுண்ணியகாலத்திலும், விதிபாதயோகத்திலும், ஸ்நானஞ்செய்து தருப்பணமும் தானமும் செபமுஞ்செய்தால், முறையே நூறுமடங்கு, ஆயிரமடங்கு, இலக்ஷமடங்கு, அனந்தமடங்கு பயன்கிடைக்கும். சித்திரை மாசப்பிறப்பும், ஐப்பசி மாசப்பிறப்புமாகிய விஷுவத்புண்ணியகாலங்களிலே ஸ்நானஞ்செய்தால், மற்றை நாள்களிலே ஸ்நானஞ்செய்த பயனிலும் பதினாயிரமடங்கதிகமாகிய பயன் கிடைக்கும். தைமாசப்பிறப்பும், ஆடிமாசப்பிறப்புமாகிய அயனபுண்ணியகாலங்களிலே ஸ்நானஞ்செய்தால், இருபதினாயிரமடங்கதிகமாகிய பயன் கிடைக்கும். சோமவாரமும் அமாவாசையுங் கூடிய புண்ணிய காலத்திலே ஸ்நானஞ்செய்தால், அனந்தமடங்கதிகமாகிய பயன் கிடைக்கும். பிரயாகையிலே தைமாசமுழுதினும் ஸ்நானஞ்செய்த பேறு பொற்றாமரைவாவியிலே ஒருநாள் ஸ்நானஞ்செய்தவனுக்குக் கிடைக்கும். ஒருவருடம் நியமமாக ஸ்நானஞ்செய்து மீனாக்ஷியம்மையையும் சொக்கலிங்கமூர்த்தியையும் வழிபடின், மலடிக்கும் புத்திரபாக்கியம் கிடைக்கும். இத்தீர்த்தத்தைப் பார்த்தலினாலே தருமமும், தீண்டலினாலே பொருளும், உட்கொள்ளலினாலே இன்பமும், ஸ்நானஞ் செய்தலினாலே முத்தியும், கிடைக்கும்,

12379

இத்தீர்த்தம் சிவபிரான் அருளிச்செய்த காரணங்களானன்றி வேறு பல காரணங்களினாலும் பலபெயர் பெறும். சிவனுடைய சடாமுடியிலுள்ள கங்கைநீர் கலக்கப்பெற்றமையால் சிவகங்கையெனவும், எல்லாத்தீர்த்தங்களினும் உத்தமமாய் விளங்குதலால் உத்தமதீர்த்தமெனவும், பொற்றாமரைமலர்கள் அலர்தலால் பொற்றாமரைவாவியெனவும், தருமம், அருத்தம், காமம், மோக்ஷம் என்னும் உறுதிப்பொருள் நான்கையுந் தருதலால் தருமதீர்த்தம், அருத்ததீர்த்தம், காமதீர்த்தம், மோக்ஷதீர்த்தமெனவும் பெயர் பெறும்.

திருச்சிற்றம்பலம்.

## மூர்த்தி விசேடம்.

முனிவர்களே, மகாமேருமலை, திருக்கைலாயமலை, மந்தரமலை, திருக்கேதாரம், காசி முதலிய தலங்களிலே சிவலிங்கமூர்த்திகள் தோன்றுமுன்னரே இக்கடம்பமரத்தடியிலே இந்தச்சிவலிங்கந் தோன்றியது. இது தோன்றியபின்னரே அத்தலங்களிலுள்ள சிவலிங்கங்களெல்லாம் தோன்றின. ஆதலால், ஞானவடிவாகிய இந்தச்சிவலிங்கம் மூலலிங்கமென்று சிறப்பித்துச் சொல்லப்படும். தமது இச்சைவயத்தாற் கொள்ளப்பட்ட முப்பத்திரண்டிலக்கணங்களும் அமைந்த திருமேனியையுடைய சிவபெருமான் உமாதேவியாரோடும் இச்சிவலிங்கத்தில் அழகுசெய்து சாந்நித்தியராய் இருந்தலால், தேவர்கள் சோமசுந்தரக்கடவுளென்று திருநாமஞ் சாத்தினார்கள். இச்சோமசுந்தரக்கடவுள் உலகமெங்கும் வியாபித்து நிற்றலாலன்றோ, இவர்முதுகிலே பாண்டியன்கையிற் பிரம்பு பட்ட அடித்தழும்பு மூவுலகங்களினும் பட்டது. சமட்டி வடிவாகிய இந்தச்சிவலிங்கமூர்த்தியைத் தரிசித்தவர் மற்றைத்தலங்களினுள்ள வியட்டிவடிவாகிய சிவலிங்கமூர்த்திகளைத் தரிசித்தவராவர்: ஒரு மரத்தின் வேரிலே ஊட்டும் நீர் அதன் கிளைகளெல்லாவற்றையும் தழையச்செய்யுமன்றோ!

உயிர்களிடத்துள்ள பெருங்கருணையினாலே அறுபத்துநான்கு திருவிளையாடல்களைச் செய்தருளிய இச்சிவலிங்கமூர்த்திக்கு ஒப்பும் உயர்வும் மூவுலகத்தினும் இல்லை. மலைகளுள்ளே மகாமேருவும், தருக்களுள்ளே தேவதாருவும், யாகங்களுள்ளே அசுவமேதமும், தானங்களுள்ளே அன்னதானமும், மனிதர்களுள்ளே சிவப்பிராமணரும், தேவர்களுள்ளே சிவபிரானும், விரதங்களுள்ளே சோமவாரமும், மந்திரங்களுள்ளே பஞ்சாக்ஷரமும், இரத்தினங்களுள்ளே சிந்தாமணியும், தருமங்களுள்ளே சிவதருமமும், தபசிகளுள்ளே சிவபத்தரும், பசுக்களுள்ளே காமதேனுவும், தீர்த்தங்களுள்ளே பொற்றாமரைவாவியும், சிவலிங்கமூர்த்திகளுள்ளே சோமசுந்தரமூர்த்தியும் மேலாகும். தோற்றமும் நடுவும் இறுதியுமின்றி அகண்டபரிபூரணமாய் உயிர்களுக்குப் பந்தத்தையும் முத்தியையுங் கொடுத்தருளும் சிவபெருமான், தம்மை வழிபடுவோருக்கு இம்மை மறுமை வீடு மூன்றையும் அருளிச்செய்யும்பொருட்டு, வேதங்களெல்லாம் துதிக்க, இச்சொக்கலிங்கத்திலே எந்நாளும் சாந்நித்தியராய் இருப்பார். இச்சிவலிங்கத்தைத் தரிசித்தோர் உரையுணர்வொடுங்கச் சுத்தசிவசோதியை உள்ளே தரிசித்தவராவர்.

இச்சிவலிங்கப் பெருமானைத் தரிசித்தவருடைய பாவங்களெல்லாம், அக்கினியினாலே பஞ்சும், கோபத்தினாலே தவமும், மருந்தினாலே நோயும், உலோபத்தினாலே உத்தமகுணங்களும், சூரியோதயத்தினாலே இருளும், பெருங்காற்றினாலே மேகமும், சிங்கத்தினாலே யானையும், குலிசத்தினாலே மலைகளும், காமநோயினாலே விவேகமும், சிவஞானத்தினாலே அவித்தையும், கருடனாலே பாம்பும், செருக்கினாலே கல்வியும்போலச் சிதைந்துவிடும்.

சோமசுந்தரக்கடவுளைப் பிராதக்காலத்திலே தரிசித்தவர் நாற்றிசைக்கடலுட்பட்ட பூதானஞ்செய்த பயனைப் பெறுவர்; மத்தியானத்திலே தரிசித்தவர் ஆயிரங்கோதானஞ்செய்த பயனைப் பெறுவர்; சாயங்காலத்திலே தரிசித்

தவர் கோடி கோதானஞ்செய்த பயனைப் பெறுவர்; அர்த்த யாமத்திலே தரிசித்தவர் அசுவமேதஞ்செய்த பயனைப் பெறுவர். இவ்வுண்மையை உணர்ந்து நியமமாக இந்நான்கு காலமும் சென்று வலஞ்செய்து வணங்கித் துதிக்கும் மெய்யடியார்கள் முற்பிறப்பிற்செய்த பாவங்களினின்றும் நீங்கி, பரிசுத்தராகி, கல்விப்பொருளையும் செல்வப்பொருளையும் பெற்று, தாம் வேண்டிய போகங்களை அனுபவித்து, பின் ஆணவமலத்தினின்றும் நீங்கி, சிவபிரானுடைய திருவடிக்கீழ் வாழ்வர்.

சோமசுந்தரக்கடவுளுடைய திருநாமத்தைக் கேட்டால், பத்துப்பிறவியிற் செய்த பாவம் நீங்கும்; நினைத்தால், நூறுபிறவியிற்செய்த பாவம் நீங்கும். சோமசுந்தரக்கடவுளை இப்போது வணங்குவோமென்று எழுந்து வீட்டுப்புறத்திலே சென்றால், ஆயிரம் பிறவியிற்செய்த பாவம் நீங்கும்.

சோமசுந்தரக்கடவுளைத் தரிசித்தவர் ஆயிரம் அசுவமேதஞ்செய்த பயனைப் பெறுவர்; உருத்திராக்கத்தினாலே துதித்தவர் ஆயிரம் இராசசூயயாகஞ்செய்த பயனைப் பெறுவர்; உள்ளங்கையளவினதாகிய தீர்த்தத்தினாலே அபிஷேகஞ்செய்து பூசித்தவர் மற்றைத்தலங்களிலுள்ள சிவலிங்கமூர்த்திகளைச் சிவாகமவிதிப்படி சோடசோபசாரத்தோடு பூசித்தவராவர்; பஞ்சாமிர்தம், பஞ்சகவ்வியம், தேன், முப்பழம், சந்தனக்குழம்பு, கந்தோதகம் என்பவைகளால் ஆட்டி விதிப்படி பூசித்தவர் பாவத்தினின்றும் நீங்கி, அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப்பொருணன்கையும் பெற்று வாழ்வர்; வடித்தெடுக்கப்பட்ட வாசங்கலந்த தீர்த்தத்தினாலே அபிஷேகஞ்செய்தவர் இலக்ஷம் அசுவமேதப் பயனைப் பெறுவர்; திருமேனியிலே கஸ்தூரி, பச்சைக்கருப்பூரம், குங்குமம், சந்தனம் என்பவைகளை மட்டித்தவர் சுவர்க்கத்திலே தேவப்பெண்களோடும் வாசங்கலந்த சந்தனக்குழம்பு பூசிக்கொண்டு, இன்பத்தின் மூழ்கி வாழ்வர்.

சோமசுந்தரக்கடவுளுடைய திருமுடியிலே ஒருமலர் சாத்தினவர் மற்றைத்தலங்களினுள்ள சிவலிங்கமூர்த்திகளை நூறு பொன்மலராலே பூசித்த பயனைப் பெறுவர். சோமசுந்தரக்கடவுளுக்கு ஒருதரந் தூபங்கொடுத்தவர் மனம் வாக்குக் காயங்களினாலே முன் செய்த ஆயிரம்பாவம் நீங்கிவிடும். திருவமுது நிவேதித்தவர் அவிழ் ஒன்றற்கு யுகம் ஒன்றாகச் சிவலோகத்தில் வாழ்வர். தாம்பூலமும் முகவாசமுங் கொடுத்தவர் நூறுகோடி தேவவருடம் சிவலோகத்து வாழ்வர். ஒரு கர்ப்பூரதீபமிட்டவர் சிவசாரூப்பியம் பெறுவர். திருமஞ்சனக்குடம், அபிஷேககலசம், தூபக்கால், தீபக்கால், மணி முதலியன கொடுத்தவர் தாஞ்செய்த பாவங்களெல்லாம் நீங்கப்பெற்று, தாம் விரும்பிய போகங்களெல்லாம் அனுபவித்து வாழ்வர். சோமசுந்தரக்கடவுளுடைய சந்நிதியிலே நிருத்தமும் கீதமும் வாத்தியவொலியும் செய்வித்தவர், அரசர்களாய், தம்முன்னே வாத்தியங்கள் ஒலிப்ப, மூவுலகத்தாரும் வணங்க, நிருத்தமும் கீதமும் கண்டும் கேட்டும், இன்பவெள்ளத்து மூழ்குவர். சோமசுந்தரக்கடவுளை அட்டாங்கமோடாயினும் பஞ்சாங்கமோடாயினும் ஒருதரம் நமஸ்கரித்தவர் அரசராய்ச் செங்கோல் செலுத்தி, எல்லாருந் தம்மிடத்துக்கு வந்து தம்மிருகாலினுந் தலைவருடும்படி தம்மை வணங்க வீற்றிருப்பர். இப்படிப்பட்ட பெருமையையுடைய சோமசுந்தரக்கடவுளது சந்நிதியிலே செய்யும் ஓமம், தவம், செபம், தானம் முதலியன அணுவளவினவாயினும் மகாமேருவளவினவாம். உத்தமோத்தமமாகிய இந்தச்சிவலிங்கமூர்த்தியினது பெருமை முழுதையும் யாவர் அளந்து சொல்ல வல்லவர்! முனிவரரே நாம் சிறிதறிந்தபடி சொன்னோம்.

திருவாலவாய்க்கு ஒப்பாகிய தலமும், பொற்றாமரைவாவிக்கு ஒப்பாகிய தீர்த்தமும், சோமசுந்தரமூர்த்திக்கு ஒப்பாகிய சிவலிங்கமும், பூமி அந்தரம் சுவர்க்கம் என்னும் மூவுலகத்துமில்லை. இம்மூர்த்திக்குக் கருப்பூரசுந்தரர்,

கடம்பவனசுந்தரர், கலியாணசுந்தரர், அபிராமசுந்தரர், சம்பகசுந்தரர், மகுடசுந்தரர், கஸ்தூரிசுந்தரர், பழியஞ்சு சுந்தரர், சோமசுந்தரர், ஆலாசியசுந்தரர், நான்மாடக்கூட லுடையர், மதுராதிபர், சமட்டிவித்தியாபுரேசர், சீவன்முத் திபுரேசர், பூலோகசிவலோகேசர், கன்னியாபுரேசர், மூல லிங்கம் முதலிய பல திருநாமங்கள் உண்டு.

கீழேழுலகமும் உருவ முளைத்தெழுந்த இச்சிவலிங்க த்தை ஆதாரமாகப் பொருந்தி அறுபத்துநான்கு திருவிளை யாடல் செய்தருளிய கருணாநிதியாகிய சோமசுந்தரக்கடவு ளது பெருமையை நமது சற்குருநாதசுவாமிகள் திருவாய் மலர்ந்தருளியபடியே சொன்னோம். இனி அறுபத்துநான்கு திருவிளையாடல்களையும் சொல்வோம், கேளுங்கள்.

திருச்சிற்றம்பலம்.

முதலாவது

# இந்திரன் பழி தீர்த்த படலம்.

கிருதயுகத்திலே, தேவேந்திரன், சுவர்க்கலோகத்திலே மந்தாரநிழலிலே சுதர்மை என்னும் தேவசபையிலே முப்பத்துமுக்கோடி தேவரும் சேவிப்ப, இரத்தின சிங்காசனத்தின்மேலே வீற்றிருந்து, தேவப்பெண்களுடைய நிருத்தத்தையும் கீதத்தையும் கண்டும் கேட்டும், களிப்பாகிய மதுக்கடலிலே மூழ்கினான். அப்பொழுது தேவகுருவாகிய பிருகற்பதிபகவான் அங்கே வந்தார். பெண்மயலில் அகப்பட்ட இந்திரன் அது கண்டும், இருக்கைவிட்டெழுந்து அவருடைய திருவடிகளை வழிபாடு செய்யாது, வாளாவிருந்தான். அதுகண்ட பிருகற்பதிபகவான் விரைந்து போய்விட்டார். உடனே இந்திரனுடைய செல்வம் சிறிது குன்றியது. இந்திரன் அதனையறிந்து, எனக்கு இந்தக்கேடு குருவை வழிபாடு செய்யாத அதிபாதகத்தினாலே விளைந்தது என்று தெளிந்து, துன்பமடைந்து, பிருகற்பதியைத் தேடத் தொடங்கி, அவருடைய உலகத்தினும் மற்றையுலகங்களினும் தேடிக் காணாமையால், சத்தியலோகத்தை அடைந்து, அங்குந்தேடிக் காணாது, பிரமதேவர் திருமுன் சென்று, அவரை வணங்கித் துதித்து, முன் நிகழ்ந்த சமாசாரத்தை அவருக்கு விண்ணப்பஞ்செய்தான். பிரமதேவர் அது கேட்டு, இந்திரனுக்குக் குருநிந்தையினாலே பின் நிகழ்வதனை முன் அறிந்துகொண்டு, இந்திரனை நோக்கி, நீ உன் குருவாகிய வியாழனைக் காணுமளவும், அசுரகுலத்திற் பிறந்தும் அறிவொழுக்கங்களாலே சிறந்தவனும் துவட்டாவுடைய புத்திரனும் மூன்று சிரசுகளையுடையவனுமாகிய விசுவரூபனை உனக்குக் குருவாகக் கொள்வாயாக என்றார். இந்திரன் பிரமதேவருடைய சூழ்ச்சியை அறியாமையால் அதற்கு உடன்பட்டு, அவரை வணங்கி அனுமதி பெற்றுக்கொண்டு போய், விசுவரூபனைத் தன்குருவாகக் கொண்டான்.

இந்திரன் தன்பொருட்டு ஒருயாகஞ்செய்யும்படி வேண்ட, விசுவரூபன் அதற்கு உடன்பட்டு, புறத்திலே தேவ

ர்களுக்குச் செல்வம் பெருகுக என்று சொல்லி, அகத்திலே அசுரர்களுக்கெல்லாம் உய்யுந்திறம் உண்டாகுக என்று நினைந்து, யாகஞ்செய்தான். இவ்வஞ்சகத்தை இந்திரன் ஞானதிருட்டியினாலே அறிந்து, தன் குலிசாயுதத்தினாலே விசுவரூபனுடைய தலைகள் மூன்றையுஞ் சேதித்தான். அவைகள் மூன்றும் காடையும், ஊர்க்குருவியும், சிச்சிலியுமாய்ப் பறந்தன. இந்திரன், தன்னைப் பிரமபாவம் கோபித்து வந்து பற்றினமையால், பெருந்துயரம் அனுபவித்தான். தேவர்கள் அந்தப்பாவத்தை மரங்களினிடத்தும், மண்ணினிடத்தும், பெண்களினிடத்தும், நீரினிடத்தும் புகுத்தினார்கள். அவர்கள், நமக்கு இப்பாவந்தீருமுறைமை எப்படி என்று கேட்க, தேவர்கள், இப்பாவம் நீரினிடத்து நுரையாயும், மண்ணினிடத்து உவராயும், பெண்களினிடத்து பூப்பாயும், மரங்களினிடத்துப் பிசினாயும், கழியக்கடவது என்றார்கள். பின்னும் அவர்கள், இப்பழியைத் தாங்கிய எங்களுக்கு வரும் நலம் யாது என்று கேட்க, தேவர்கள், கருப்பமுள்ள பெண்கள் கருவுயிர்க்குமளவும் கணவரைப் புணர்ந்து வாழக்கடவர்; மண்ணைத் தோண்டிய குழி அதனால் வடுவொழியக்கடவது; நீர் இறைக்குந்தோறும் ஊறக்கடவது; மரம் வெட்டினாலும் தழைக்கடவது என்று நன்மையை அருளிச்செய்தார்கள். இதனால் இந்திரன் அழுக்கு நீங்கிய இரத்தினம்போலப் பிரமபாவம் நீங்கி, விளக்கமுற்றான்.

துவட்டாவானவன் தன் குமாரனாகிய விசுவரூபனை இந்திரன் கொன்றமையைக் கேள்வியுற்று, கோபித்துப்பெருமூச்செறிந்து, பழிவாங்க நினைந்து, ஒரு யாகஞ்செய்து, யாககுண்டத்தினின்றுந் தோன்றிய விருத்திராசுரனை, இந்திரனைக் கொல்லும்படி, ஏவினான். விருத்திராசுரன் வடவாமுகாக்கினிபோலக் கோபங்கொண்டு, இந்திரனிடத்துச் சென்றான். இந்திரனும் வெள்ளையானைமேற்கொண்டு எதிர்த்தான். இருவரும் யுத்தஞ்செய்யும்பொழுது, இந்திரன் விருத்திராசுரன்மேலே தன் குலிசத்தையெறிந்

தான்; விருத்திராசுரன் இடிபோல ஆரவாரித்து, ஓரிருப்பு லக்கையினாலே இந்திரனைப்புயத்திலே அடித்தான். உடனே இந்திரன் மூர்ச்சையடைந்து, சிறுபொழுதிலே மூர்ச்சை நீங்கி, இப்பகைவனோடு போர்செய்ய யான் வலியிலேன் என நினைந்து, சத்தியலோகத்தை அடைந்து, பிரமதேவரை வணங்கித் துதித்து, தான் படுகின்ற துயரத்தைச் சொன்னான்.

பிரமதேவர் இந்திரனோடு வைகுண்டத்தை அடைந்து, மகாவிட்டுணு திருமுன் சென்று, அவரைவணங்கித் துதித்து, நிகழ்ந்த சமாசாரத்தை விண்ணப்பஞ்செய்தார். மகாவிட்டுணு இந்திரனை நோக்கி, இந்திரனே, உன்கையினுள்ள குலிசம் மிகப்பழையது, பகைவருயிரைக் கவர வல்லதன்று, வேறு புதியதொருகுலிசம் வேண்டும், அது பெறுதற்கு உபாயஞ்சொல்வோம். நாம் திருப்பாற்கடல் கடையும்பொழுது தேவர்களும் அசுரர்களும் ஆயுதங்களோடு வரலாகாது என்று, ஆயுதங்களெல்லாவற்றையும் ததீசிமுனிவரிடத்தே சேர்ப்பித்தோம். அம்முனிவர் நெடுங்காலஞ்செல்லவும், தேவர்களாயினும் அசுரர்களாயினும் வந்து கேட்டிலர்மையால், அவ்வாயுதங்களனைத்தையும் விழுங்கிவிட்டார். அவைகளெல்லாம் ஒன்றாகத் திரண்டு முதுகந்தண்டைப் பொருந்தின, அது குலிசாயுதமாம். நீ போய்க் கேட்கு முன்னே சீவகாருண்ணியமே வடிவமாகவுடைய அம்முனிவர் அதனை உனக்குத் தருவார் என்றார்.

அதுகேட்ட இந்திரன் விட்டுணுவை வணங்கி, விடைபெற்றுக்கொண்டு, தேவர்களோடு ததீசிமுனிவருடைய ஆச்சிரமத்தையடைந்து, அவரை வணங்கித் துதித்தான். ததீசிமுனிவர் இந்திரன் முதலிய தேவர்களை நோக்கி, இன்சொற்களைச் சொல்லி, நீங்கள் மிக மெலிந்து வந்தீர்கள், உங்களுக்கு நிகழ்ந்த காரியம் யாது? சொல்லுங்கள் என்றார். இந்திரன் அது கேட்டு, தயாநிதியாகிய சுவாமீ, நீர் மறுதலொன்றை விரும்பி இத்தேவர்களோடு வந்தேன்;

அது பகைவராகிய அசுரரைக் கொன்று எமது குடியை உய்விக்க வல்லது, அது உம்முடைய சரீரத்திலுள்ளது என்று விண்ணப்பஞ்செய்தான். உடனே ததீசிமுனிவர் சூரியனைக்கண்ட செந்தாமரை மலர்போலத் திருமுகமலர்ந்து, இந்திரனை நோக்கி, நாய்கள் நம்முடையதெனவும், நரிகள் நம்முடையதெனவும், தாய் தந்தையர்கள் நம்முடையதெனவும், யமன் நம்முடையதெனவும், பிணிகள் நம்முடையதெனவும், பேய்கள் நம்முடையதெனவும், நினைத்துக்கொண்டிருத்தல்போல நாமும் நம்முடையதென்று நினைத்துக்கொண்டிருக்கும் சரீரம் யாருடையது! பாம்பு தன்றோலையும் பறவை தன் கூட்டையும் தானென்று கொள்ளுமா! அவ்வாறே உயிரும் இச்சரீரத்தை நானென்று கொள்ளுதல் கூடுமா! இரக்கஞ் சிறிதுமில்லாத அசுரர்களாலே பெருந்துயரத்தை அனுபவிக்கும் தேவர்கள் உய்யும்பொருட்டு இப்புன்புலால் யாக்கையைக் கொடுத்துப் புண்ணியத்தையும் புகழையும் பெற்றுக்கொள்வேனேயாயின், யான் எடுத்த இச்சரீரத்தினாலாகும் பயன் இதைவிட வேறு யாது! என்றருளிச்செய்து, சமாதிகூடிப் பிரமநாடிவழிக்கொண்டு கபாலத்தைக் கிழித்துப்போய், விமானத்திலேறிச் சுவர்க்கத்தையடைந்து, வீற்றிருந்தார்.

தேவதச்சன் ததீசிமுனிவருடைய முதுகந்தண்டைக் குலிசமாகச் செய்து கொடுக்க, இந்திரன் வாங்கிக்கொண்டு, தேவசேனையோடு சென்று விருத்திராசுரனை வளைந்துகொண்டான். தேவசேனையும் அசுரசேனையும் செய்த போரில் அநேகர் இறந்தார்கள். அது கண்டு, இந்திரனும் விருத்திராசுரனும் போர் செய்யத் தொடங்கினார்கள். இந்திரன் ஆக்கினேயாஸ்திரம் விட்டான்; விருத்திராசுரன் அதனை வாருணாஸ்திரம் விட்டுத் தடுத்தான். இந்திரன் வாயவ்வியாஸ்திரம் விட்டான்; விருத்திரன் அதனை நாகாஸ்திரம் விட்டு விலக்கினான். இந்திரன் நாகாஸ்திரம் விட்டான்; விருத்திரன் அதனைக் காருடாஸ்திரம் விடுத்துத் தடுத்தான். இந்திரன் மோகாஸ்திரம் விட்டான்; விருத்தி

ரன் அதனை ஞானாஸ்திரம் விட்டு மாற்றினான். இந்திரன் விடுத்த தெய்வப்படைகளனைத்தையும் இப்படியே விலக்கி, விருத்திராசுரன் வேறாயுதம் விடும்படி நெருங்கினான். இந்திரன் அது கண்டு, மானமாகிய காற்றுக் கோபமாகிய அக்கினியை மூட்ட அது சுடுதலைப் பொறுக்கலாற்றாதவனாகி, தன்கையிற் குலிசத்தை விதிர்க்க; விருத்திரன் அதற்கஞ்சி, சமுத்திரத்தில் விழுந்து ஒளித்துக்கொண்டான். இந்திரனும் அவனோடு விழுந்து அவனைத் தேடிக் காணாது, பிரமதேவரை யடைந்து, விண்ணப்பஞ்செய்தான். பிரமதேவர் அகத்தியமகாமுனிவரிடத்துச் செல்லும்படி விடுப்ப, இந்திரன் அம்முனிவரிடத்துச் சென்று, விண்ணப்பஞ்செய்தான். உடனே அகத்தியமுனிவர் உண்மையறிவானந்தவடிவாகிய சிவபிரானுடைய ஊழித்தீப்போலும் சிவந்த திருமேனியைத் தியானித்துக்கொண்டு, அசுரன் ஒளித்துக்கொண்டிருக்கும் சமுத்திரநீரையெல்லாம் உழுந்தளவினதாக்கி, தமது உள்ளங்கையில் எடுத்துக்கொண்டு பருகினார். தருமநெறியை விட்டுச் சம்பாதிப்பவர்களுடைய செல்வம் குன்றுதல்போலச் சமுத்திரங்களெல்லாம் வற்றிப்போயின. முன் போரிலே தோற்றுப்போன விருத்திராசுரன் அவ்விடத்து ஒரு பெரிய மலையினுச்சியிலே தவஞ்செய்துகொண்டிருத்தலை இந்திரன் கண்டு, தன்கைக்குலிசத்தினாலே அவனுடைய தலையை அறுத்தான். உடனே பிரமகத்திதோடம் இந்திரனைப் பிடித்துக்கொண்டது. அது உம்மென்னும், மார்பைத் தட்டும், கோபித்தெழும்பும், ஆரவாரிக்கும், யுத்தஞ்செய்ய வாவென்னும், வாயை மடிக்கும், பற்களைக் கடிக்கும், விழும், எழுந்தோடும், திரும்பும், அழும், சிரிக்கும், சீறும். அது கணப்பொழுதாயினும் நீங்காது, இந்திரனுக்குத் துயரஞ்செய்தது. இந்திரன் அச்சங்கொண்டு, விரைந்துபோய், ஈசானதிக்கிலுள்ள ஒரு தடாகத்தில் விழுந்து, ஒரு தாமரைநாளத்துக்குள்ளே ஒளித்துக்கொண்டான். அதனாலே சுவர்க்கலோகம் தன் பொலிவு குன்றியது.

தேவர்கள் தங்களுக்கு அரசன் இல்லாத வறுமையை நோக்கி, பூமியிலே நகுடன் என்னும் ஓரரசன் அசுவமேதஞ்செய்தலை அறிந்து, அவனை மகுடந்தரித்துத் தங்களுக்கு அரசனாகக் கொண்டார்கள். அரசனாய்வரும் நகுடன், இந்திராணியை இங்கே அழைத்துக்கொண்டு வாருங்கள் என்றான். பக்கத்திலுள்ளவர் போய், அதனை இந்திராணிக்குச் சொல்ல, அவள் பிருகஸ்பதிபகவானிடத்திற் சென்று, சுவாமீ, என்னாயகன் இருக்கும்போதே மற்றொருவன் வந்து என்னைத் தன்மனைவியாகக் கொள்ளுதல் தருமமா என்றாள். பிருகஸ்பதிபகவான் அவளை நோக்கி, சத்தவிருடிகளும் தாங்கும்படி சிவிகையின்மேல் வந்தால், அவனே தேவேந்திரன் அவனே உன்கணவன் என்றார். இந்திராணி அதற்கு உடன்பட்டு, குருவை வணங்கி, விடை பெற்றுக்கொண்டு போய், சத்தவிருடிகளும் தாங்கும்படி சிவிகையின்மேலேறி இங்கே வரக்கடவை என்று நகுடனுக்குத் தூதனுப்பினாள். நகுடன் சிவிகை தாங்கும் இருடிகளை மதியாதும், தனக்கு விளையுந் துன்பத்தை அறியாதும், இன்பமனுபவிக்கும் ஆசையால் விரைந்து செல்ல நினைந்து, இந்திராணியிடத்திற்குக் கொண்டுபோங்கள் சர்ப்ப * என்றான். அப்பொழுது சிவிகையின் முற்கொம்பு தாங்கி முன்னடக்கும் அகத்தியமகாமுனிவர் அவ்வரசனை, நீ சர்ப்பமாகக்கடவை எனச் சபித்தார். உடனே அவன் சர்ப்பமாய்விட்டான்.

அதன்பின்பு தேவர்கள் பிருகஸ்பதிபகவானை வணங்கி, கருணாநிதியாகிய சுவாமீ, அரசனில்லாமையால் பொன்னுலகம் துன்பம் அடைகின்றது என்று விண்ணப்பஞ்செய்ய, அவர் போய், அந்தத் தடாகத்தில் ஒளித்துக்கொண்டிருந்த இந்திரனைக் கூவி, தம்முடைய சொல்லையறிந்து வெளிப்பட்டுவந்த அவனைக் கொண்டு திரும்பி வந்தார். இந்திரன் குருவை வணங்கி, கருணைக்கடலாகிய சற்குருநாதசுவாமீ அடியேனை வருத்துகின்ற இப்பழி நீங்குவது

* சர்ப்ப - விரைந்து நடக்க ஏவுதல்.

எங்ஙனம்! திருவாய்மலர்ந்தருளும் என்றான். பிருகஸ்பதி பகவான், இந்திரனே, இக்கொலைப்பழி பூமியினன்றித் தீராது, நீ வேட்டையாடச் செல்வான்போல இப்பழியைத் தீர்த்துக்கொள்ளும் பொருட்டுப் பூமியினிடத்தில் வா என்றார்.

இந்திரன் குதிரைமேலேறிக்கொண்டு, தன்குருவும் தேவர்களும் சூழ்ந்து வர, பூலோகத்திலிழிந்து, திருக்கைலாய மலையை வணங்கி, தென்றிசை நோக்கிச் சென்று, கங்கை முதலிய தீர்த்தங்களிலே ஸ்நானஞ்செய்து, திருக்கேதாரம், காசி, காஞ்சி முதலிய சிவதலங்களை வணங்கியும் கொலைப்பழி தீராமையால் வருத்தமுற்றுப் போய், கடம்பவனத்தின் எல்லைக்குச் சமீபித்தான். உடனே அவனைக் கொலைப்பழி விட்டு நீங்கியது. இந்திரன் பெருமகிழ்ச்சியடைந்து, பிருகஸ்பதிபகவானுக்கு விண்ணப்பஞ்செய்ய, அவர், இங்கே புண்ணியதலமும், புண்ணியதீர்த்தமும், இருக்கின்றன, நமக்குக் கிடைத்தல்வேண்டும், நீ இதனை அறியக்கடவை என்றார். இந்திரன் அதனை அறிந்துவரும்பொருட்டுச் சில ஒற்றரை விடுத்து, அவ்வெல்லையைக் கடந்து அவ்வனத்திலுள்ள அதிசயங்களைப் பார்த்துக்கொண்டு, சரீரமுழுதும் புளகம் போர்ப்பப் பேரானந்தத்தோடு போவானாயினன். அப்பொழுது ஒற்றர்கள் மீண்டு வந்து, வணங்கி நின்று, மகாராசனே, இந்தக்கடம்பவனத்திலே பரிசுத்தமாகிய ஒருவாவிக்கரையிலே கடம்பவனநிழலிலே ஒப்பில்லாதசோதிவடிவாய் முளைத்த ஒரு சிவலிங்கம் இருக்கின்றது என்றார்கள். அவ்வாக்கியத்தைத் தன் செவித்துவாரத்தில் வார்க்கும் அமிர்தமெனக் கொண்டு பேரானந்தமடைந்த இந்திரன் அவ்வொற்றர்களோடும் வழிக்கொண்டு, கைகளைச் சிரசின்மேலே குவித்துவைத்துக்கொண்டு, சிவலிங்கப்பெருமானிடத்தே பதிந்த பேரன்பு பிடித்திழுப்பச் சென்று, பொற்றாமரைவாவியிலே ஸ்நானஞ்செய்து, கடம்பவனத்துள்ளே புகுந்தான் அங்கே, உண்மையறிவானந்தவடிவாய், உயிர்க்குயிராய,

இயங்கியற்பொருள் நிலையியற்பொருள் என்னும் பொருள்களனைத்தும் தன்னிடத்தே தோன்றி யொடுங்க நின்ற கருவாகி முளைத்த சிவக்கொழுந்தைத் தன்னுயிரங்கண்களுங்களிப்பக் கண்டான். கண்டபொழுதே அடியற்ற மரம்போல விழுந்தான், எழுந்து கண்களினின்றும் ஆனந்த அருவி பாயப் பேரானந்தப்பெருங்கடலுண் மூழ்கி, உரைகுழற, நாத்தழுதழுப்ப, சரீரம் நடுங்க, அன்புருவாயினான். சிவலிங்கப்பெருமானைப் பூசிக்க விரும்பி, பூசைத்திரவியங்களெல்லாம் சுவர்க்கத்தினின்றும் கொண்டுவரச் சில தேவரை விடுத்தான். சிவலிங்கப்பெருமானுக்கு ஒருவிமானஞ்செய்யும்பொருட்டுத் தேவதச்சனை விடுத்தான். சிவபெருமானை விரைவாகப் பூசிக்கவேண்டுமெனக் கிளர்ந்த பேராசையினாலே பூவின்பொருட்டுப் பொற்றாமரைவாவியிலே போனான். பூக்கிடையாமையாலே சோர்ந்தான். உடனே சிவபிரானது திருவருளினாலே அவ்வாவியிலே பொற்றாமரைமலர்கள் மலர்ந்திருக்கக் கண்டான். அன்பு மேன்மேலும் பெருகக் கூத்தாடினான். பொற்றாமரைமலர் மலர்ந்திருக்குங் காரணத்தினாலே அவ்வாவிக்குப் பொற்றாமரைவாவியெனத் திருநாமஞ்சாத்தினான். அவ்வாவியிலே ஸ்நானஞ்செய்து, பொற்றாமரைமலர்களைப் பறித்துக்கொண்டு, சிவலிங்கப்பெருமான் சந்நிதியை அடைந்து, காட்டை வெட்டி நிலத்தைத் திருத்திக்கொண்டு வரும்பொழுது, சிவக்கொழுந்தின் திருமுடிமேலே சூரியகிரணம் மெல்லத் தீண்டக்கண்டு, பதைபதைத்து, தன்குடையினாலே நிழல்செய்ய நினைந்தான். அப்பொழுது சூரியமண்டலம்போல ஓரிரத்தினவிமானம் ஆகாயத்தினின்றும் இழிந்தது. எட்டு யானைகளும் முப்பத்திரண்டு சிங்கங்களும் அறுபத்துநான்கு கணங்களும் தாங்குவதாக மயனாலே நிருமிக்கப்பட்ட அந்தவிமானத்தைச் சாத்தி, இந்திரன் சோமசுந்தரக்கடவுளைப் பூசிக்கத் தொடங்கினான். தேவர்கள் ஐந்தருக்களினாலே தரப்பட்ட பீதாம்பரம், இரத்தினாபரணம், சந்தனம், கங்காசலமாகிய திருமஞ்சனம், திருப்பள்ளித்தாமம், பஞ்சகவ்வி

யம், பழம, தேன், தூபம், தீபம், திருவமுது என்னும் இவைகளெல்லாவற்றையும் கொண்டு வந்தார்கள்,

இந்திரன் பொற்றாமரைவாவியிலே விதிப்படி ஸ்நானஞ்செய்து, சிவசின்னங்களாகிய விபூதி ருத்திராக்ஷங்களைத் தரித்து, அன்புருவமாகி, அருளுருவமாகிய சிவலிங்கப்பெருமானைச் சிவாகமவிதிப்படி பூசை செய்து, வலஞ்செய்து, அட்டாங்க பஞ்சாங்கவிதிப்படி நமஸ்கரித்து எழுந்து, கும்பிட்டுக் கூத்தாடி, ஆனந்த அருவி சொரிய அஞ்சலிசெய்து நின்று துதிப்பானாயினான்:—

அங்கணா போற்றி வாய்மை யாரணா போற்றி நாக
கங்கணா போற்றி மூல காரணா போற்றி நெற்றிச்
செங்கணா போற்றி யாதி சிவபரஞ் சுடரே போற்றி
யெங்கணா யகனே போற்றி யீறிலா முதலே போற்றி. (க)

யாவையும் படைப்பாய் போற்றி யாவையுந் துடைப்பாய் போற்றி
யாவையு மானாய் போற்றி யாவையு மல்லாய் போற்றி
யாவையு மறிந்தாய் போற்றி யாவையு மறந்தாய் போற்றி
யாவையும் புணர்ந்தாய் போற்றி யாவையும் பிரிந்தாய் போற்றி. ()

இடருறப் பிணித்த விந்தப் பழியினின் றென்னை யீர்த்துன்
னடியிணைக் கன்ப னாக்கு மருட்கடல் போற்றி சேற்கண்
மடவரன் மணாள போற்றி கடம்பமா வனத்தாய் போற்றி
சுடர்விடு விமான மேய சுந்தர விடங்க போற்றி. (ங)

பூசையும் பூசைக் கேற்ற பொருள்களும் பூசை செய்யு
நேசனும் பூசை கொண்டு நியதியிற் பேறு நல்கு
மீசனு மாகிப் பூசை யான்செய்தே னெனுமென் போத
வாசனை யதுவு மான மறைமுத லடிகள் போற்றி. (ச)

இப்படியே இந்திரன் துதிசெயயும்போது சோமசுந்தரக்கடவுள் வெளிப்பட்டு, குறுநகை தோன்ற, இந்திரன் மேலே திருவருட்கண் சாத்தி, உன்னுடைய விருப்பம் யாது? சொல் என்று திருவாய்மலர்ந்தருளினார். உடனே இந்திரன் வணங்கி, எழுந்து, சிரசின்மேலே கைகளைக் கூப்பிக்கொண்டு நின்று, கிருபாசமுத்திரமாகிய சுவாமீ, உம்முடைய தலத்தின் எல்லைக்குச் சமீபமாக வருமளவு

வில் என்கொலைப்பழியும் முற்பிறப்பிலே செய்த தீவினையும் நீங்கப்பெற்று, உம்முடைய திருவடித்தாமரைமலரைத் துதித்துப் பூசை செய்யவும் உரியனானேன்: இதனிற்சிறந்த பேறு யாது! இத்திருவடித்தாமரைமலர்களை இவ்வண்ணமே எந்நாளும் பூசை செய்ய விரும்புகின்றேன். இதுவே அடியேன் விருப்பம் என்று விண்ணப்பஞ்செய்தான். சோமசுந்தரக்கடவுள், அன்பனே, இருதுகளுள்ளே சிறந்த வசந்தருதுவும், மாசங்களுள்ளே சிறந்த சித்திரை மாசமும், நக்ஷத்திரங்களுள்ளே சிறந்த சித்திரைநக்ஷத்திரமும், திதிகளுள்ளே சிறந்த பௌர்ணிமாதிதியும் கூடுஞ் சித்திரைச் சித்திரைதோறும் வந்து வந்து, நம்மைப் பூசை செய்வாயாக; இதனால் முந்நூற்றறுபத்தைந்து நாளும் பூசை செய்த பயன் கிடைக்கும். நீ சுவர்க்கலோகத்திற் சென்று, பலபோகங்களையும் அனுபவித்துக்கொண்டு வாழக்கடவை. அதன்மேல் உனக்கு மலபரிபாகம் உண்டாக, பிரமா விட்டுணு முதலிய தேவர்களுடைய பதங்களினும் பிறவற்றினும் விராகம் உண்டாகும். அப்பொழுது உனக்குச் சாயுச்சியந் தருவோம் என்று திருவாய்மலர்ந்து, விடைகொடுத்து இலிங்கத்தின் மறைந்தருளினார்.

இந்திரன் உடம்பெங்கும் புளகங்கொள்ளச் சிரசின்மேலே கைகளைக் குவித்தான், அடியற்ற மரம்போல விழுந்தான், எழுந்து, ஆனந்த அருவி சொரிய நின்றான், பலமுறை துதிசெய்து கூத்தாடினான், பின் இலிங்கசமீபத்திலிருந்து, சிவனை இருதயகமலத்திலே தியானித்து, பஞ்சாக்ஷரத்திலே நூற்றெட்டுருச் செபித்து, செபத்தையும் கன்மங்களையும் தன்னையும் நிவேதித்து, குருவைப் பூசித்து, அபராதம் பொறுத்தருளும் என்று விண்ணப்பஞ்செய்து, பூசையைமுடித்தான். சிவபிரானுடைய திருவடிகளைப் பிரிதலாற்றாது வருத்தமுற்று, அவருடைய திருவருளாணைக்கு அஞ்சி, பிரியாவிடைபெற்றுக்கொண்டு, சுவர்க்கத்தை அடைந்து, சோமசுந்தரக்கடவுளுடைய திருவடிகளைச் சிறிதும் மறவாத சிந்தையோடு முன்போல அர

சுசெய்துகொண்டிருந்தான். சித்திரைச் சித்திரைதோறும் வந்து சோமசுந்தரக்கடவுளைப் பூசித்தான்.

திருச்சிற்றம்பலம்.

இரண்டாவது

## வெள்ளையானை சாபந்தீர்த்தபடலம்.

துருவாசமுனிவர் காசியிலே சிவாகமவிதிப்படி தம்முடைய பெயரினாலே ஒரு சிவலிங்கந்தாபித்து, பூசை செய்து, தோத்திரம் பண்ணினார். பண்ணும்பொழுது, சிவபிரானுடைய திருமுடியினின்றும் ஒரு தாமரைப்பூ விழ, துருவாசமுனிவர் அதைத் தம்முடைய இரண்டு கைகளையும் விரித்து ஏந்தி, கண்களிலும் சிரசிலும் மார்பிலும் ஒற்றிக்கொண்டு, சரீரம் பூரித்து, மனமகிழ்ச்சி பெருக, விடைபெற்றுக்கொண்டு சுவர்க்கலோகத்துக்குப் போனார். போம்பொழுது, இந்திரன் அசுரர்களைக் கொன்று, தன்னகரமாகிய அமராவதிக்கு மீளுவானாகி, வெற்றிமாலை அணிந்து, தேவசேனைக்கடல் ஆரவாரிப்ப, வேதமும் பல்லாண்டும் ஒலிப்ப, எத்திக்கிலும் வாத்தியங்கள் கலிப்ப, தேவமகளிர் பாடும் மிக வினிமையாகிய கீதஞ் செவிமடுப்ப, சாமரை நிரைகள் இரட்ட, வெண்குடை நிழற்ற, வெள்ளையானைமேற்கொண்டு, பவனி வந்தான். அப்பொழுது தேவர்கள் அருகு வந்து, தங்கள் தங்கள் மனசிற்கு இசைந்த கையுறைகளைக் கொடுத்து, வணங்கிக் கண்டார்கள். துருவாசமுனிவர் ஆசி கூறி, தம்முடைய கையிலிருந்த தாமரைப்பூவை நீட்டினார். விவேகமில்லாதவனாகிய இந்திரன் செல்வச்செருக்கினாலே அதனை ஒருகை நீட்டி வாங்கி, வெள்ளையானையின்மேல் வைத்தான். வெள்ளையானை தன்மேல் வைக்கப்பட்ட தாமரைப்பூவைக் கீழே தள்ளி, காலினாலே மிதித்துச் சிந்தியது.

துருவாசமுனிவர் அது கண்டு, அக்கினி சிந்தும்படி பார்த்து, தேவர்களெல்லாம் பயந்தோடும் விண்ணம் பெ

ரும் கோபங்கொண்டு நின்று, விசுவாதிகரும் விசுவசேவியருமாகிய * சிவபெருமானுடைய திருவடித்தாமரைகளை மறவாதமெய்யன்பர்கள் அருவருத்துத் தள்ளிவிட்ட புல்லிய செல்வத்தினாலாய தருக்கையுடைய இந்திரா, என்ன காரியஞ் செய்தாய்! தேவர்களுடைய கையுறைகளையே நன்கு மதித்தாய்! சர்வலோகைகநாயகராகிய எமது சிவபிரானுடைய திருமுடியின்மேலே சாத்தப்பட்ட தாமரைப்பூவை வழிபடாது வாங்கி, யானை மிதித்துச் சிந்தும்படி அதன்மேல் வைத்தாயே, மூடா! விட்டுணுவினுடைய இறுமாப்பும், பிரமனுடைய இறுமாப்பும் உன்னுடைய இறுமாப்பும் பரமபதியாகிய சிவபிரானைப் பூசித்தபேறென்பது சிறிதும் நினைந்திலையே,பேதாய்!இச்சிவத்துரோகத்தினாலே, பாவீ, உன்னுடைய சிரசு பாண்டியனொருவனுடைய வளையினாலே சிதறக்கடவது; இந்த வெள்ளையானை காட்டானையாகக்கடவது என்று சபித்தார். உடனே தேவர்கள் நடுநடுங்கி, துருவாசமுனிவருடைய திருவடிகளிலே விழுந்து நமஸ்கரித்து, எழுந்து அஞ்சலிசெய்து, ஆடையொதுக்கி, தலை பணிந்து, வாய் புதைத்து நின்று, ஐம்பொறிகளையும் வென்ற சுவாமீ, அடியேங்களுடைய அரசனும் வெள்ளையானையும் பெருங்கொடும்பாவஞ் செய்தமையால் சபித்தீர், இந்தச்சாபத்தை இப்போதே தீர்த்தருளும் என்றிரந்தார்கள். துருவாசமுனிவர் திருவுளமிரங்கி, சிவநிர்மாலியநிந்தனை பரிகாரத்தினாலே நீங்காது. இந்திரனுக்குத் தலையளவாக வந்தது முடியளவாகப் போகக்கடவது. வெள்ளையானை காட்டியானையாகி, நூறுவருடஞ் சென்றபின் முன்போலாகக்கடவது என்று பிறிது சாபஞ்சொன்னார் இந்திரன் மகுடபங்கம் அடைந்த சரித்திரம் பின்னே சொல்வோம், அது நிற்க.

வெள்ளையானை சுவர்க்கத்தை விட்டு, அறிவிழந்து, காடடியானையாகி, காடடியானைகளோடு சேர்ந்து, எங்குந்

* விசுவாதிகர் - உலகத்துக்கு இறைவர். விசுவசேவியர் - உலகத்தால் வழிபடற்பாலர்.

திரிந்து, நூறுவருடமுஞ் செல்ல, கடம்பவனத்திலே புகுந்து, பொற்றாமரைவாவியைக் கண்டது. அப்பொழுது முன்னையறிவுதோன்ற, பொற்றாமரைவாவியிலே ஸ்நானஞ்செய்தது. உடனே காட்டியானை வடிவம்நீங்கிப் பழைய வடிவந்தோன்றியது. அப்பொழுது சிவபிரானுடைய திருவருளினாலே சொக்கலிங்கமூர்த்தி எதிர்தோன்றக் கண்டு, கும்பிட்டு, புழைக்கையால் மொண்ட தீர்த்தத்தினாலே சிவலிங்கப்பெருமானுக்கு அபிஷேகஞ்செய்து, திருப்பள்ளித்தாமஞ் சாத்திப் பூசை செய்தது. உடனே சோமசுந்தரக்கடவுள் வெளிப்பட்டு, நீ இங்கு வந்த காரியம் யாது? உனக்கு வேண்டும் வரம் யாது? என்று வினவியருள, வெள்ளையானை வணங்கி நின்று, முன்னே தனக்கு நேரிட்ட சாபத்தையும் அதனாலே தான் வந்த முறைமையையுஞ் சொல்லி, தமியேன் பிரம விட்டுணுக்களாலும் அடையப்பெறாத உம்மை அடையப்பெற்றேன். இனி அடியேனுக்கு ஒருகுறை உண்டாமோ! எம்பெருமானே, உம்முடைய திருவடிகளைப் பிரியாது, இவ்வெட்டு யானைகளுடனே ஒன்பதாக அடியேனும் உமக்கெதிரே இவ்விமானத்தைத் தாங்க என் மனம் விரும்புகின்றது என்று விண்ணப்பஞ்செய்தது. கருணாகரராகிய சோமசுந்தரக்கடவுள் யானையின்மேலே திருக்கடைக்கண் சாத்தி, தேவேந்திரன் நம்மிடத்து மெய்யன்புடையவன்: ஆதலால் நீ அவனைத் தாங்குதல் நம்மைத் தாங்குதல்போன்று, நமக்குப் பெருமகிழ்ச்சி ப்பயக்கும் என்று சொல்லி விடைகொடுத்தருளினார்.

வெள்ளையானை வணங்கி விடைபெற்றுக்கொண்டு, சொக்கலிங்கமூர்த்திக்கு மேற்குத்திசையிலே போய், அங்கே தன்பெயரினாலே ஒருதீர்த்தம் உண்டாக்கி, அதன்கரையிலே சிவலிங்கமூர்த்தியையும் விநாயகரையும் பிரதிட்டைபண்ணி, பூசை செய்துகொண்டிருந்தது. இந்திரன் அது கேட்டு, வெள்ளையானையைக் கொண்டுவர ஒற்றரை விடுத்தான். வெள்ளையானை தன்னை வந்தழைத்த ஒற்றரை

முன்போக விடுத்து, சொக்கலிங்கமூர்த்திக்குக் கிழக்குத் திக்கிலே போய், அங்கே ஐராவதபுரம் எனத் தன்பெயரால் ஒருநகரம் உண்டாக்கி, இந்திரேச்சுரர் எனத் தன்னிறைவன்பெயரால் ஒரு சிவலிங்கந்தாபித்து, பூசைசெய்து கொண்டிருந்தது. இந்திரன் நம்முடைய யானை இன்னும் வந்திலதென்று பின்னரும் ஒற்றரைவிடுப்ப, வெள்ளை யானை சுவர்க்கத்தை அடைந்து, இந்திரனை வணங்கி, தனக்கு நிகழ்ந்தவையனைத்தும் விண்ணப்பஞ்செய்து, இனிது வாழ்ந்திருந்தது.

மேற்குத்திக்கிலுள்ள கசபுட்கரிணியிலே ஸ்நானஞ் செய்து, ஐராவதவிநாயகரையும் ஐராவதேச்சுரரையும் மெய்யன்போடு வணங்கினவர் சாபத்தொடர்ச்சியினின்றும் பாவத்தொடர்ச்சியினின்றும் நீங்குவர். ஐராவதஞ்சென்ற நெறியேபோய், வைகைநதியிலே ஸ்நானஞ்செய்து, தென்கரையில் எழுந்தருளியிருக்கும் இந்திரேச்சுரரை வணங்கினவர் இம்மையிலே அறம் முதலிய மூன்றையும் அடைந்து, மறுமையிலே பதினன்கு தேவேந்திர பட்டம் வரையும் சுவர்க்கத்திலே பலபோகங்களை அனுபவித்து, பின்புநிராசை உதிக்க, முத்தியை அடைவர்.

திருச்சிற்றம்பலம்.

---

மூன்றாவது

## திருநகரங்கண்டபடலம்.

கடம்பவனத்துக்குக் கீழ்த்திசையிலே சந்திரகுலத்துப் பிறந்த குலசேகரபாண்டியராசனுக்கு இராசதானியாய் உள்ளது மணவூர். அந்நகரத்திலே வைசியர் குலத்திலே சிவபூசை முதலிய சிவபுண்ணியங்களை மெய்யன்போடு செய்யும் தனஞ்சயன் என்பவன் ஒருவன் இருந்தான். அவன் மணவூரிலிருந்து மேற்றிசையிலுள்ள ஊர்களிலே போய், வாணிகஞ்செய்துகொண்டு, ஊருக்குத் திரும்பி வரும்பொழுது, கடம்பவனம் புகுமளவிலே,

சூரியன் அஸ்தமயனமாயிற்று. இருள்செறிந்த அவ்விரவிலே தனித்தவனாய் மெலியாநின்ற தனஞ்சயன் அக்கடம்பவனத்தினுள்ளே பேரிருளைப் போக்கி விளங்காநின்ற விமானத்தை நேரே கண்டு, அதன்சமீபத்திலே போய், அதன்கண் எழுந்தருளியிராநின்ற சொக்கலிங்கமூர்த்தியைத் தரிசித்து, வணங்கிக்கொண்டு பேரானந்தப் பெருஞ்செல்வம் அடைந்தவனாய், அங்கிருந்தான். அன்று சோமவாரமாகையினாலே, தேவர்கள் அங்கு வந்து, சொக்கலிங்கமூர்த்தியை நான்கு யாமத்திலும் விசேடபூசை செய்தார்கள். சோமவாரவிரதம் அனுட்டிக்கும் தனஞ்சயன் தேவர்கள் அங்கு வந்து பூசைசெய்தலைத் தனக்குச் சிவபெருமான் அருளிச்செய்த ஞானதிருட்டியினாலே கண்டு, பொற்றாமரை வாவியிலே ஸ்நானஞ்செய்து, நியமம் முடித்துக்கொண்டுவந்து, சோமசுந்தரக்கடவுளை வலஞ்செய்து வணங்கி, உட்புகுந்து, சிவபூசைக்குரிய கஸ்தூரி பனிநீர் முதலிய கந்ததிரவியங்களைத் தேவர்கள் கையிற்கொடுத்தான். தான் திருக்கோயிற்புறத் திருந்துகொண்டு தன்னுடைய இட்டலிங்கத்தைப் பூசை செய்து, யாமந்தோறும் வந்து சோமசுந்தரக்கடவுளைத் தரிசனஞ்செய்தான். விடிந்த மாத்திரத்திலே தேவர்களொருவரையுங் காணாதவனாய், விமானத்தின்கண் எழுந்தருளியிராநின்ற சோமசுந்தரக்கடவுளை மாத்திரம் கண்டான். கண்டு, அதிசயமடைந்து, நமஸ்கரித்தெழுந்து, இருகைகளையும் சிரமேற்கூப்பி, வலஞ்செய்து, தன்னூருக்குச் செல்ல ஒருவாறு துணிந்து, விடை பெற்றுக்கொண்டு ஊர் வந்து சேர்ந்தான். சேர்ந்தவுடனே, குலசேகரபாண்டியனிடத்துச் சென்று, மகாராசனே, நேற்று அந்தக்கடம்பவனத்திலே ஓரதிசயங்கண்டேன். நான் வாணிகஞ்செய்துகொண்டு வரும் பொழுது கடம்பவனத்திற் புகுமளவில், சூரியன் அஸ்தமயன மாயிற்று. அப்பொழுது சூரியமண்டலம்போலப் பேரிருளை நீக்காநின்ற ஒருவிமானத்தையும் அதில் வீற்றிருக்கும் சிவலிங்கமூர்த்தியையுங் கண்டேன்." தேவர்கள் வந்து, அக்கடவுளை நான்குயாமமும் பூசை செய்துகொ

ண்டு போனார்கள். விடிந்தவுடனே நானும் விடைபெற்றுக் கொண்டு திரும்பிவிட்டேன் என்றான். அதுகேட்டவுடனே குலசேகரபாண்டியன் சிவபெருமானுடைய திருவடிகளைச் சிந்தித்து இருகைகளையுஞ் சிரமேற்கூப்பி உள்ளத்தில் அன்பும் அற்புதமும் பெருக, இருந்தான்.

அன்றிரவு சோமசுந்தரக்கடவுள் ஒருசித்தராகி, குலசேகரபாண்டியனுக்குச் சொப்பனத்திலே தோன்றி, அரசனே, காட்டை வேரொடு களைந்து, கடம்பவனத்தைத் திருத்தி, நகரமாகச் செய்வாயாக என்று சொல்லிவிட்டு, மறைந்தருளினார். குலசேகரபாண்டியன் விடியற்காலத்திலே விழித்தெழுந்து,நித்தியகர்மங்களை முடித்துக்கொண்டு, தான் கண்ட கனவை மந்திரிகளுக்கும் முனிவர்களுக்கும் சொல்லி, நனவிற் கேட்டதும் கனவிற் கண்டதும் ஒத்திருத்தல் கண்டு, மந்திரிகளோடும் கடம்பவனம் புகுந்து, பொற்றாமரைவாவியிலே ஸ்நானஞ்செய்து, விமானத்தின்கண் வீற்றிருந்த சொக்கலிங்கமூர்த்தியைத் தூரத்தே கண்டான். கண்டு, வணங்கி, இரண்டு கைகளையும் சிரசின்மேற் குவித்துக்கொண்டு, அன்பு பின்னின்று தள்ள, திருவருள் எதிர்வந்திழுப்ப, என்பெல்லாம் நெக்கு நெக்குருக, விரைந்து திருமுன் சென்று, நமஸ்கரித்தெழுந்து நின்று, துதிப்பானாயினான்:—

சரண மங்கையோர் பங்குறை சங்கர சரணஞ்
சரண மங்கல மாகிய தனிமுதல் சரணஞ்
சரண மந்திர வடிவமாஞ் சதாசிவ சரணஞ்
சரண மும்பர்க ளுயக பசுபதி சரணம். (க)

ஆழி ஞாலமே லாசையு மமரர்வான் பதமேல்
வீழு மாசையும் வெறுத்தவர்க் கன்றிமண் ணுண்டு
பீழை மூழ்கிவா னரகொடு பிணிபடச் சுழலும்
ஏழை யேங்களுக் காவதோ வெந்தைநின் கருணை. (உ)

சூள தாமறைச் சென்னியுந் தொடத்தொட நீண்ட
நீள வின்னைக் கன்பில மாயினு நீயே
மூள வன்புதந் தெங்குடி முழுவதும் பணிகொண்
டாள வேகொலிக் கானகத் தமர்ந்தனை யென்னா. (ங)

இவ்வாறு துதித்து, உண்ணின்றும் பெருகிய அன்பு கண்வழியாகச் சொரிதல்போலச் சொரிந்து பரந்த நீர்வெள்ளத்தினும் சிவானந்த வெள்ளத்தினும் மூழ்கி, மெய்யனோடு வலஞ்செய்து, வணங்கிக்கொண்டு, புறம்போந்து, ஓரிடத்து மந்திரிகளோடும் இருந்தான்.

அப்பொழுது பாண்டியராசனுடைய ஆணையினாலே மந்திரிகளால் ஏவப்பட்ட ஏவலாளர்கள் அந்தக்காடு முழுதையும் வெட்டி நிலத்தைத் திருத்துவித்தார்கள். அதன்பின், பாண்டியராசன், இங்கே நகரமுண்டாக்குவது எப்படி என்று மந்திரிகளோடு கலந்து யோசித்துக்கொண்டிருந்தான். அப்பொழுது சோமசுந்தரக்கடவுள், கனவில் வந்தருளியபடியே, சித்தராய் எழுந்தருளி வந்தார். உடனே பாண்டியராசன் இருக்கைவிட்டெழுந்து, எதிர்கொண்டு, நமஸ்கரித்து, ஆசனங்கொடுத்தான். சித்தரானவர் தாம் ஆதிகாலத்தில் அருளிச்செய்த சிவாகமத்தின்வழித் தோன்றிய சிற்பநூல் விதிப்படி, ஆலயமும் மண்டபமும் கோபுரமும் நகரமும் இவ்வாறு செய்தல் வேண்டுமென விதித்து, மறைந்தருளினார்.

பாண்டியன், சிற்பநூலிலே வல்ல தபதிகளைக்கொண்டு, சிவபெருமான் சித்தராய் வந்து விதித்தபடியே, பதுமமண்டபமும், அர்த்தமண்டபமும், மகாமண்டபமும், நிருத்தமண்டபமும், அறுகாற்பீடமும், யாகசாலையும், திருமடைப்பள்ளியும், பரிவாரதேவர்கள் ஆலயமும், சொக்கலிங்கமூர்த்திக்கு வலப்புறத்திலே மீனாக்ஷியம்மை வீற்றிருக்கும் திருக்கோயிலும், திருமாளிகைப்பத்தியையுடைய திருமதில்களும், மண்டபங்களும், கோபுரங்களும், அகழியும் சமைப்பித்தான். கடைத்தெருக்களும், சித்திரகூடங்களும், திருவிழாக்கொள்ளும் திருவீதிகளும், வீடுகள் நெருங்கிய பெருந்தெருக்களும், கவர்வழிகளும், நாற்சந்திகளும், அம்பலங்களும், சபைகளும், செய்குன்றுகளும், மேடைகளும், நாடகசாலைகளும், முனிவர்களிருக்கையும், பிராமணவீதிகளும், இராசவீதிகளும், வைசியவீ

திகளும், வேளாளவீதிகளும், யானை குதிரை தேர்களுக்கு நிலைக்களங்களும், கல்விச்சாலைகளும், அறச்சாலைகளும், பிறவும் செய்வித்தான். கிணறுகளும், ஓடைகளும், குளங்களும், பொய்கைகளும், திருநந்தனவனங்களும், சோலைகளும், உழவுகொல்லைகளும், பூந்தோட்டங்களும், அணிபெற அமைப்பித்தான். அந்நகரத்தின் வடகீழ்த்திசையிலே தனக்கு மாளிகை செய்வித்தான்.

அதன்பின் நகரத்திற்குச் சாந்தி செய்ய நினைந்தான். அப்பொழுது சோமசுந்தரக்கடவுள் தமது சடாமுடியினுள்ள சந்திரகலையின் அமிர்தத்தைக் கங்கைநீரொடு கலந்து, சிந்தினார். அது அந்நகரமுழுதும் பரந்து, அதனைத் தன்மயமாக்கிச் சாந்தி செய்தது. அது, மதுரமயமான தன்மையினாலே, மதுராநகரம் எனப் பெயர்பெற்றது. கிழக்கே ஐயனாரையும், தெற்கே சத்தமாதர்களையும், மேற்கே விட்டுணுவையும், வடக்கே பத்திரகாளியையும், காவலாக நிறுவினான். சோமசுந்தரக்கடவுளைச் சிவாகமவிதிப்படி பூசை செய்யும்பொருட்டு, வேதாகமங்களின் மிக வல்ல ஆதிசைவராகிய சிவப்பிராமணரைக் காசியினின்றும் வருவித்து, அந்தத் தலத்திலே தாபித்தான்.

பாண்டியன் சுபதினத்திலே தன்மாளிகையிலே போயிருந்துகொண்டு, திருக்கோயிலிலே நித்தியம், நைமித்திகம், காமியம் என்னும் மூன்றும் வழுவாது நடக்க, வைதிகநெறியுஞ் சைவநெறியும் தழைத்தோங்க, பிராமணர் முதலிய நான்குவருணத்தாரும், அனுலோமர் பிரதிலோமர்களும், பிறரும் தங்கள் தங்களுக்கு மனுநூலிலே விதிக்கப்பட்ட விதிவழியொழுக, அரசுசெய்தனன். அவன் மலயத்துவசன் என்னுங் குமாரனைப் பெற்று, அவனை முடிசூட்டி அரசனாக்கி, பலநாள் கழிந்தபின், ஒருநாள் திருக்கோயிலிற்சென்று சோமசுந்தரக்கடவுளை வணங்கி, மும்முறை வலஞ்செய்து, சிவத்தோடு கலந்துவிட்டான்.

திருச்சிற்றம்பலம்.

நான்காவது

## தடாதகைப் பிராட்டியார்

# திருவவதாரப்படலம்.

மலயத்துவசபாண்டியன் வடமொழி தமிழ்மொழி இரண்டினும் மிக வல்லவன், மனுநூல்வழி தவமுது செங்கோல் நடாத்துபவன், முறை வேண்டினோருக்கும் குறை வேண்டினோருக்கும் காண்டற்கு எளியன்,* கருணைக்கு உறையுள், திரிகாலமும் நியமமாகச் சிவதரிசனஞ்செய்பவன், மிக்க அழகையுடையவன், பதினாயிரம் மகளிரையுடையவன். சூரியகுலத்துப் பிறந்த சூரசேனன் என்னும் அரசனுடைய மகளாகிய காஞ்சனமாலையை விவாகஞ் செய்தான்.

அவன் நெடுங்காலம் புத்திரபாக்கியம் இல்லாமையால் வருத்தமுற்று, சிவவிரதங்களை அனுட்டித்து, பல தானங்கள் செய்து, பின்பு அசுவமேதஞ்செய்யத் தொடங்கி, தொண்ணூற்றொன்பது யாகம் செய்தான். அப்பொழுது தேவேந்திரன், இப்பாண்டியன் நூறு யாகமும் முடிப்பின், என்பதம் நொடிப்பொழுதின் மாறிவிடும் என்று நினைந்து, பாண்டியனிடத்துச் சென்று, அசுவமேதத்தை முடிக்காவண்ணம் தடுத்து, நீ விரும்பியது புத்திரபாக்கியம்; அதற்கு இசையப் புத்திரகாமேட்டி செய்வையாயின், நீ புத்திரனைப் பெறுவாய் என்று சொல்லிவிட்டு, தன்னுலகத்தை அடைந்தான்.

மலயத்துவசபாண்டியன் தன்மனைவியோடு யாகசாலையிலே புகுந்து, புத்திரகாமேட்டி செய்யத்தொடங்கினான். யாககுண்டத்திலே நெய், பொரி, சமித்து முதலியவற்றால் ஆகுதி செய்யும்போது, அக்கினி சிகைவிட்டெழுந்தது. அப்பொழுது, மலையரையனுடைய மனைவியாகிய மேனை நாண, மலையத்துவசபாண்டியனுடைய வலத்தோளும் அவன்மனைவியாகிய காஞ்சனமாலையினுடைய இடக்கண்ணும் துடிக்க, ஈரேழுலகமும் மகிழ்வெய்த, சைவசமயந்தழைத்தோங்க, பாவங்குன்ற, தருமம் வளர, வேதங்கள் ஒலிக்க,

தேவதுந்துமிகள் எத்திக்கிலும் கலிக்க, தேவமகளிர் நடிக்க, மதுரையினுள்ளாருடைய உள்ளத்திலே அவரையறியாத மகிழ்ச்சி பொங்க, பதினெண்பாடை நிலங்களுள் தமிழ்நாடே சிறக்க, தமிழ்நாட்டு மூவேந்தருள் பாண்டியரே பெருமையெய்த, உலகமாதாவாகிய உமாதேவி மூன்று முலைகளையுடைய ஒரு பெண்பிள்ளை வடிவமாகி, மூன்று பிராயத்தோடு யாககுண்டத்தினின்றுந் தோன்றி வந்து, காஞ்சனமாலையுடைய மடியில் இருந்தாள். உடனே காஞ்சனமாலை அப்பெண்பிள்ளையை எடுத்து, மார்போடு அணைத்துக்கொண்டு, உச்சிமோந்து, முத்தமிட்டு, பேரானந்தப் பெருஞ்செல்வமுடையளாயினாள்.

பராஞானவடிவமாகிய மீனாக்ஷியம்மையே தன்னன்புமிகுதியினாலே வெளிவந்து தன்பிள்ளையாய் அவதரித்த பெருங்கருணையையும், அதற்குக்காரணமாயுள்ள தன்மனைவியுடைய பெருந்தவத்தையும் அறியாமையால், மலயத்துவசபாண்டியன் வருத்தமுற்று, நான் புத்திரபாக்கியமின்றி நெடுங்காலம் வருந்தி, பெருந்தவங்கள் செய்தேன்; அதன்பின் இந்தப் புத்திரகாமேட்டி செய்தேன். இந்தயாகமோ ஒரு பெண்பிள்ளையைத் தந்தது. ஐயையோ! இந்தப் பெண்பிள்ளையும் என்பகைவர்கள் நகைக்கும்வண்ணம் மூன்று முலைகளையுடையதாய் வந்தது. இதற்கு நான் யாது செய்வேன்! என்றான். அப்பொழுது, அரசனே, உன் மகளுக்குப் புத்திரனுக்குப்போல வேதவிதிப்படி சடங்குகளெல்லாம் செய்து, தடாதகையெனப் பெயரிட்டு, முடி சூட்டக்கடவாய்; இப்பெண்ணுக்குக் கணவன் வரும்போது ஒருதனம் மறையும்; நீ மனங்கலங்காதே என்று, சிவபிரானுடைய திருவருளினாலே, ஆகாயத்தினின்றும் ஓரசரீரிவாக்குத் தோன்றிற்று. அது கேட்டவுடனே மலயத்துவசபாண்டியன் அன்பும் உவகையும் பெருக, கண்களினின்றும் சொரியாகின்ற ஆனந்தவருவி மார்பெங்கும் நிறைய, அடியார்க்கெளியராகிய சோமசுந்தரக் கடவுளைத் துதித்து, யாகத்தை முடித்து, எழுந்து தன் மனைவியோடும் யாகசாலையை நீத்து, மாளிகையை அடைந்தான்.

அங்கே மண்டபத்தில் இருந்து, பிராமணருக்கும் பிறருக்கும் சுவர்ணதானஞ் செய்தான். சோமசுந்தரக்கடவுளுடைய திருக்கோயிலிலே விசேடபூசை திருவிழா முதலியன செய்வித்தான். சிறையிலிருக்கின்றவர்களை விட்டுவிடுங்கள், சிறைச்சாலைகளை இடித்துவிடுங்கள். ஏழு வருடம் குடிகளிடத்து இறை வாங்காது விடுங்கள். அயல் வேந்தரிடத்துந் திறை வாங்காது விடுங்கள்; ஆயத்துறையை நீக்கிவிடுங்கள், ஆலயங்களையும் அறச்சாலைகளையும் விசேடமாக நடாத்துங்கள் என்று வள்ளுவனைக்கொண்டு முரசறைவித்தான். பகைமன்னரைக் கால்விலங்கை வெட்டுவித்து, யானை குதிரை தேர் அரசுரிமை முதலியவற்றை முன்னிருந்தபடியே கொடுத்து, அவரவர் தேசத்துக்குப் போகவிடுத்தான். யாவரும் தத்தமக்கு வேண்டுவன எடுத்துக்கோடற்பொருட்டுப் பண்டாரத்தைத் திறப்பித்து விடுத்தான். புலவர்களுக்குப் பொன், வஸ்திரம், ஆபரணம், யானை, குதிரை, தேர் முதலியவற்றைக் கொடுத்தான். பாண்டிநாட்டில் வசிப்பவர் யாவரும் பெருமகிழ்ச்சி அடைந்தனர்.

சிவபெருமான் அருளிச்செய்தவண்ணமே மலயத்துவசபாண்டியன் சாதகர்மம் முதலிய சடங்குகளைச் செய்து, தடாதகையெனப் பெயரிட்டு, அளவிறந்த பெருங்களிப்போடு வளர்க்கும் நாளிலே, தடாதகைப்பிராட்டி வேதம் முதலிய அறுபத்துநான்கு கலைகளையுங் கற்றுணர்ந்து, யானை குதிரை தேர் செலுத்துந் திறத்தினும், வில் வாள் முதலிய படைத்தொழிலினும், மிக வல்லளாயினாள். அது கண்டு, தந்தையாகிய மலயத்துவசபாண்டியன் மனமகிழ்ந்து, அவளுக்கு முடிசூட்டத் துணிந்தான். அவனுடைய ஆணையினாலே மந்திரியாகிய சுமதி முடிசூட்டும் மங்கலதினம் வரையறுத்து, தேயங்கடோறும் ஓலை போக்கி, நகரமெங்கும் அலங்கரிப்பித்து, முனிவர் அரசர் முதலிய யாவரையும் வருவித்தான்.

மலயத்துவசபாண்டியன் யானையின்மேல் வருவிக்கப்பட்ட கங்கை முதலிய நவதீர்த்தமும் பூரித்த சுவர்ணகு

ம்பத்தைப் பூசித்து, அக்கினிகாரியஞ்செய்து, இரத்தின சிங்காதனத்தைப் பூசை பண்ணினன். பின்பு திருமுடியை யானைமேல்வைத்து, நகர்வலஞ்செய்து, பூசித்து, தடாதகைப்பிராட்டியாரை, அச்சிங்காதனத்தின்மேலே, இரத்தினச்சுடிகையையுடைய பொன்வடிவாகிய ஐந்தலைநாகம் படம் பரப்பி மேலே கவிக்கும்வண்ணம், அதன்கீழ் எழுந்தருளப்பண்ணி, கும்பதீர்த்தத்தினலே அபிஷேகஞ்செய்து, தேவர்கள் கற்பகப்பூமாரி பொழிய, முனிவர்கள் ஆசி கூற, தேவமகளிர்கள் நடிக்க, இருடிபத்தினிகள் பல்லாண்டு பாட, மங்கலவாத்தியம் முழங்க, வேதம் ஒலிக்க, அவளுக்கு முடிசூட்டித் தன்னரசைக் கொடுத்தான். அதன்பின், வெண்குடை நிழற்ற, வெண்சாமரம் வீச, தேவர்கள் பூமாரி பெய்ய, மங்கலதூரியம் முழங்க, வெள்ளையானைமேலேற்றி, நகர்வலஞ்செய்வித்து, அசரீரிவாக்குத் தோன்றிய நாளினும் பேரானந்தப்பெருஞ்செல்வம் அடைந்தான்.

சிலநாளாயினபின், மலயத்துவசபாண்டியன் சுவர்க்கம் அடைந்தனன். அவனுக்குச் செயற்பாலனவாகிய உத்தரக்கிரியைகளை மகளாகிய தடாதகைப்பிராட்டி விரதநெறிபூண்டு, விதிப்படி செய்து முடித்தனள்.

பெண்ணரசியாகிய தடாதகைப்பிராட்டியார் அறநூல்வழி அரசியற்றிய பெருமையைச் சிறிது சொல்வாம். சூரியன் உதிக்க ஐந்துநாழிகை உண்டென்னும் காலமாகிய பிராமீமுகூர்த்தத்திலே இனியவாத்தியவொலி திருச்செவிமடுப்ப விழித்தெழுந்து, சிவத்தியானம் பண்ணி, ஸ்நானஞ்செய்து, சந்தியாவந்தனம் இயற்றி, சோடசதானங் கொடுத்து, சிவபூசை முடித்துக்கொண்டு, அந்தணர் அமைச்சர் முதலாயினேர் சூழ, திருக்கோயிலிற் சென்று, சோமசுந்தரக்கடவுளை விதிப்படி வலஞ்செய்து வணங்கித் துதித்து, மாளிகைக்குத் திரும்புவாள். திரும்பி அத்தாணிமண்டபத்தை அடைந்து, அநிந்திதை கமலினி என்னுந் தோழியர் இருவரும் மானுடமகளிராகி அடைப்பை

யும் பொற்களாஞ்சியும் ஏந்த, இலக்குமியும் சரசுவதியும் அவ்வாறே மானுடமகளிராகி இருபுறத்தும் வெண்சாமரை வீச, சோழராசனும் சேரராசனும் தன்னுடைய திருவடிகளிலே வீழ்ந்து வணங்கித் தான் பணித்த ஏவல்களைச் செய்ய, ஏவலாளர்கள் எம்பெருமாட்டியார் எப்போது தமது திருவருட்கண் சாத்துவரோ என்று சிறிதும் இமையாது பார்த்துக்கொண்டு நின்று திருக்கண் சாத்தியவழி உய்ந்தோம் உய்ந்தோம் என்று கைகூப்பி வாய்பொத்தித் தத்தமக்குரிய பணிகேட்டுய்ய, கஞ்சுகிமாக்கள் இவன் மராடதேசராசன், இவன் கருணாடதேசராசன், இவன் விராடதேசராசன், இவன் குருதேசராசன், இவன் சேரன், இவன் சோழன் என்று இருபக்கத்தினும் தங்கள் கையிற் பிரம்பினாலே சுட்டிக் காட்ட, வடமொழியினும் தமிழ்மொழியினும் வல்லபுலவர்களும், வேதம் முதலிய அறுபத்துநான்கு கலைகளையுணர்ந்தவர்களும், சமயநூல் ஆறினும் வல்லவர்களும், முனிவர்களும், சிவஞானிகளும், பஞ்சாங்கஞ்சொல்லும் அந்தணரும், சுமதி முதலிய மந்திரிகளும் சூழ, இரத்தினசிங்காசனத்தின்மேலே அமிர்தவடிவாகிய பிரதிமைபோல வீற்றிருந்தருளுவள். திருக்கோயிலிலே நடக்கும் நித்திய நைமித்திகங்களையும், பிராமணருக்குரிய விருத்திகளையும், தருமசாலையிலே நடக்கும் அன்னதானம் முதலியவற்றையும், குடிகளுக்கு நிகழ்வனவற்றையும், மந்திரிகளால் அறிந்தும், தனித்தனியே ஒற்றரை விடுத்தறிந்தும், அவ்வவைகளிலே குறைவுண்டாயின் அக்குறை செய்தாரைத் தண்டித்து, அதனைத் தீர்ப்பாள். வாதிகள் தம்முள் வாதஞ்செய்யும் கோட்டியின்மேலே மகிழ்ச்சி கூர்வாள். நினைப்பினும், சொல்லினும், கேட்பினும், புத்தமிர்தத்தினும் தித்திக்கும் வண்ணம் புலவர்களாலே தொடுக்கப்பட்ட செய்யுள்களைத் திருச்செவி மடுப்பாள். பிராமணரையும், சைவரையும், துறவிகளையும் அமுது செய்வித்து, அவர்கள் தங்கள் நாவினாலே செய்யும் விருந்தை அமுதுசெய்வாள். பின் பகலிலே சிவபுராணங்களையும் மனு முதலிய தருமநூல்

களையும் கேட்டுத் திருவுளமகிழ்வாள். இல்வாழ்வார் செய்யும் தருமங்களை விருத்திசெய்யும்பொருட்டுத் திரவியங்களைக் கொடுப்பாள். யாகங்களை நடத்துவாள். கல்விப்பொருள் செல்வப்பொருள் என்னும் இரண்டையும் தன்னிருகண்போலக் கொண்டு தழைத்தோங்கும்படி நாடோறும் வளர்ப்பாள். கன்னியாகிய தடாதகைப்பிராட்டியினாலே இவ்வாறு அரசியற்றப்பட்டமையால், பாண்டிநாடு கன்னிநாடெனப் பெயர்பெற்றது.

இவ்வாறே மீனாட்சியம்மையார் திருவவதாரஞ்செய்த சரித்திரத்தை அகத்தியமகாமுனிவர் திருவாயமலர்ந்தருளியபோது, முனிவர்கள் அவரை வணங்கி, தபோநிதியே, நான்கு வேதங்களாலும் உணரப்படாத பராசத்திவடிவாயும், சர்வான்மாக்களையும் பெற்ற மாதாவாயும் உள்ள எம்பெருமாட்டியாகிய உமாதேவி தக்கனும் இமையமலையரையனும் நெடுங்காலம் வருந்தித் தவஞ்செய்தமையால் அவர்களுக்கு மகளாய்த் திருவவதாரஞ் செய்தனள். மனிதனாகிய பாண்டியனுக்கு மகளாய் வந்த காரணம் யாது என்று வினவ, அகத்தியமகாமுனிவர் சொல்வாராயினார்:—

முனிவர்களே, கேளுங்கள். விசுவாவசு என்னும் பெயரையுடைய ஒருவித்தியாதரன் வித்தியாவதி என்னும் ஒருபெண்ணைப் பெற்றான். அவள் உமாதேவியிடத்து மிக்க அன்புடையளாகி, தன்பிதாவை வணங்கி, ஐயா, அடியேன் உமாதேவியை வழிபட்டு உய்யவேண்டும் என்றாள். விசுவாவசு உமாதேவியினுடைய மந்திரத்தை அவளுக்கு உபதேசித்தான். அவள் பிதாவை நோக்கி, உமாதேவியை வழிபடுதற்குச் சிறந்த புண்ணியதலம் யாது என்று வினவ, அவன் அவளை நோக்கி, பூமியிலே மதுரையெனப் பெயர்கொண்ட ஒருசிவதலம் உண்டு. அது பூலோகசிவலோகமெனப்படும். அதுவே துவாதசாந்ததலம். சத்திபீடம் அறுபத்துநான்கு. அவற்றுள் முதற்பீடம் மதுரையே. அது போகமோக்ஷங்களையும் அவரவர்

வேண்டிய சித்திகளையும் கொடுப்பதென்றறிந்து, தேவர்கள் அல்லும் பகலும் அங்கே போய் உமாதேவியைப் பூசிப்பர்கள். நம்மவர்களுள்ளே என்பிதாவுடனே ஐவர்கள் அங்கே சென்று, மீனாக்ஷியம்மையை வழிபட்டுப் பல வரங்களைப் பெற்றார்கள். உலகமாதாவாகிய மீனாக்ஷியம்மை யாவரேயாயினும் தன்னை அன்போடு வழிபடுவோருக்குப் போகமோக்ஷங்களைக் கொடுத்துக்கொண்டு அங்கே பெருங்கருணையோடு வீற்றிருந்தருளுவள் என்றான். உடனே வித்தியாவதி பிதாவை வணங்கி, விடை பெற்றுக் கொண்டு, மதுரையை அடைந்து, பொற்றாமரைவாவியிலே ஸ்நானஞ்செய்து, சொக்கலிங்கமூர்த்திக்கு வலப் பக்கத்திலே எழுந்தருளியிருக்கும் மீனாக்ஷியம்மையை வணங்கினாள். தைமாசம் முதலாகக்கொண்டு, அம்மாசத்திலே மத்தியானத்திலே போசனஞ்செய்தும், மாசிமாசத்திலே இரவிலே போசனஞ்செய்தும், பங்குனிமாசத்திலே உதவப்பெற்றதைப் புசித்தும், சித்திரைமாசத்திலே இலை முதலியவற்றை உண்டும், வைகாசிமாசத்திலே எள்ளுப் பொடியை உண்டும், ஆனிமாசத்திலே சாந்திராயணவிரதம் அனுட்டித்தும், ஆடிமாசத்திலே பஞ்சகவ்வியத்தை உண்டும், ஆவணிமாசத்திலே, பாலை உண்டும், புரட்டாசி மாசத்திலே நீரை உண்டும், ஐப்பசிமாசத்திலே தருப்பை நுனிநீரை உண்டும், கார்த்திகைமாசத்திலே வாயுவை உண்டும், மார்கழிமாசத்திலே பட்டினியாயிருந்தும், இவ்வாறே பன்னிரண்டுமாசமும் பெருந்தவஞ்செய்தாள் மேல்வந்த தைமாசத்திலே சந்நிதியை அடைந்து, வணங்கி, நின்று, மீனாக்ஷியம்மையை இருதயகமலத்திலே தியானித்து, யாழ் கைக்கொண்டு, நரம்போசை பின்செல்லப் பாடுவாளாயினாள்:—

ஒளியா வுலகின் றுயிரனைத்து மீன்போற் செவ்வி யுறநோக்கி
அளியால் வளர்க்கு மங்கயற்க ணன்னே கன்னி யன்னமே
அளியா லிமவான் றிருமகளா யாவி யன்ன மயில்பூவை
தெளியா மழலைக் கிளிவளர்த்து விளையாட்டயருஞ்செயலெனனே

## ௫. தடாதகைப்பிராட்டியார்திருவவதாரப்படலம்.

அண்டக் குவைவெண் மணற்சிறுசோ றுக்கித் தனியே விளையாடுங்
கொண்டற் கோதாய் படியெழுத லாகா வுருவக் கோகிலமே
கொண்டற் குடுமி யிமையவரை யருவி கொழிக்குங் குளிர்முத்தால்
வண்டற் குதலை மகளிரொடும் விளையாட் டயரும் வனப்பென்னே.

வேத முடிமே லானந்த வுருவாய் நிறைந்து விளையாடு
மாத ரரசே முத்தநகை மானே யிமய மடமயிலே
மாத ரிமவான் றேவிமணி வடந்தோய் மார்புந் தடந்தோளும்
பாத மலர்சேப் புறமிதித்து விளையாட் டயரும் பரிசென்னே.

இப்படியே வித்தியாவதி பாடித் துதிசெய்ய, அன்பு வலைப்படும் பெருங்கருணைப் பெருமாட்டியாகிய மீனாக்ஷியம்மை மூன்றுபிராயத்தையுடைய ஒரு சிறுபெண்குழந்தை வடிவங்கொண்டு, ஆலயத்தில் வந்து நின்றாள். வித்தியாவதி அவளை நமஸ்கரித்து, எழுந்து, அஞ்சலிசெய்துகொண்டு, நின்றாள். உலகமாதாவாகிய மீனாக்ஷியம்மை அவள்மேலே தமது திருவருட்கண்சாத்தி, நீ யாது விரும்பினை என்று வினாவியருள, வித்தியாவதி அஞ்சலிசெய்து, தாயே, உன்னுடைய திருவடித்தாமரையிலே நிறைந்த பேரன்பு ஒருகாலும் நீங்காத பெருவாழ்வைத் தந்தருளுக என்று விண்ணப்பஞ்செய்தாள். அதுகேட்ட மீனாக்ஷியம்மை, இன்னும் வேண்டுவது யாது? சொல் என்றருளிச்செய்ய, வித்தியாவதி, இந்தப் பெண்ணுருவமாய் வந்து அடியாளிடத்து அருள்சுரந்திருக்கும்படி திருவுளங்கொண்டருளுக என்று பணிந்தாள். மீனாக்ஷியம்மை அதற்கிசைந்து, இந்நகரத்திலே மலயத்துவசபாண்டியன் என ஒருவன் பிறப்பான். நீ அவனுக்கு மனைவியாய் வருவாய், அப்பொழுது நான் உனக்குப் புத்திரியாய் வருவேன் என்று திருவாய்மலர்ந்தருளினாள். மீனாக்ஷியம்மை பாண்டியனுக்குப் புத்திரியாய்த் திருவவதாரஞ்செய்த காரணம் இதுவே.

இவ்வாறு அகத்தியமுனிவர் சொல்லக்கேட்டு, முனிவர்கள் பெருமகிழ்ச்சி அடைந்தார்கள்.

திருச்சிற்றம்பலம்.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR MADRAS-41

# திருமணப்படலம்.

திருவருள்வடிவாகிய தடாதகைப்பிராட்டி அரசு செய்துகொண்டிருக்கும் நாளிலே, அவளுக்குத் திருக்கல்யாணஞ் செய்யும் பருவம் வந்தடுப்ப, அதுகண்டு மாதாவாகிய காஞ்சனமாலை எம்பெருமாட்டியை நோக்கி, உனக்குக் கன்னிப்பருவம் வந்தும் இன்னமும் விவாகம் இல்லையே என்று, துன்பமுற்றாள். தடாதகைப்பிராட்டி, தாயே நீ நினைந்த எண்ணம் ஆம்பொழுது ஆகும்; நீ இரங்கவேண்டாம். நான்போய் இப்பூமண்டலத்திலும் எண்டிசைகளினும் என்வெற்றியை நாட்டி மீளுவேன்; நீ இங்கே இரு என்றாள்.

தடாதகைப்பிராட்டி சங்குகள் ஒலிப்பத் தேர்மேற்கொண்டு, பலவகைப்பட்ட வாத்தியங்களெல்லாம் முழங்க, யானை, குதிரை, தேர், காலாள் என்னும் நால்வகைச் சேனையுஞ் செல்ல, வெண்கொற்றக்குடை நிழற்ற, மகளிர்கள் சாமரை வீச, ஒருபுறத்திலே பிராமணர்கள் ஆசிகூற, ஒருபுறத்திலே மகளிர்கள் கீதம்பாட, கயற்கொடியும் புலிக்கொடியும் விற்கொடியும் மயிற்பீலிக்குஞ்சமும் தன்னுடைய தேர்க்கருகிலே செல்ல, பக்கத்திலே சுமதியென்னும் மந்திரி ஓர் தேர்மீதேறித் தனது திருக்குறிப்பின்படி நால்வகைச்சேனைகளும் செல்லும்வண்ணம் கையிற் பிரம்பை நீட்டிச் சேவகஞ் செலுத்திக்கொண்டு செல்ல, இவ்வாறு சென்று, வடதேசத்திலுள்ள கயபதி முதலிய அரசர்களை வென்று, யானை குதிரை தேர்களும் மாதர்கூட்டமும் திறையும் பெற்றாள். பின் இந்திரன் முதலிய திக்குப்பாலகர்களை வென்று, திறைகொண்டு, திருக்கைலாயமலையை நோக்கிச் சென்றாள். தடாதகைப்பிராட்டியுடைய படைவீரர்கள் திருக்கைலாயமலையை வளைந்துகொண்டார்கள். அது கண்ட திருமலைக்காவலாளர்கள் விரைந்து சென்று, திருநந்திதேவரை வணங்கி,

அதனை விண்ணப்பஞ்செய்தார்கள். திருநந்திதேவர் பூதகணங்களை ஏவினார். அக்கணங்கள் தடாதகைப்பிராட்டியோடு பொருது தோற்று, மீண்டார்கள். அது கண்டு, திருநந்திதேவர் கைலாசபதியாகிய சிவபெருமானுடைய திருவடிகளை வணங்கி, நிகழ்ந்தனவற்றை விண்ணப்பஞ்செய்தார். பரமசிவன் புன்னகைசெய்து, பினாகவில்லையும் படைக்கலங்களையும் திருக்கரத்தில் எடுத்துக்கொண்டு, இடபவாகனத்தின்மேலேறி யுத்தகளத்திற் சென்றார். அங்கே பெண்சிங்கம்போல நிற்கும் தமது தேவியாருடைய திருவுருவத்தையும் வீரத்தையும் எதிர்கண்டார். தடாதகைப்பிராட்டியும், ஒரு வீரக்கழல் கட்டிய திருவடியும், புலித்தோலுடையும், மழுப்படையேந்திய திருக்கரமும், திருவெண்ணீறணிந்த உபவீதம் பொருந்திய திருமார்பும், சடாமுடியும், தன்னையே நோக்குகின்ற பெருங்கருணைத்திருநோக்கும், பெற்ற தன்னுடைய வலப்பாதியை எதிர்கண்டாள். கண்டபொழுது நடுவிலுள்ள ஒருதனம் மறைந்தது. உடனே உள்ளத்தில் நாணமும் மடனும் அச்சமும் உதிக்க, முன்னையன்பு வந்து குடிகொள்ள, அளகம் பிடரியிலே தாழ, கண்கள் புறவடியை நோக்க, தலைகுனிந்து நின்றாள். முன்னாளிலே தோன்றிய அசரீரிவாக்கை அறிந்த சுமதி தடாதகைப்பிராட்டியை வணங்கி நின்று, தாயே, இந்தக்கைலாசபதியே உன்மணவாளன் என்றான். எம்பெருமாட்டி அது கேட்டு, பேரன்பு பெருக நின்றாள். கைலாசபதி பிராட்டியை நோக்கி, நீ திக்குவிசயத்தின்பொருட்டு எப்பொழுது புறப்பட்டாயோ, அப்பொழுது தொடங்கி நாமும் மதுரையை விட்டு, உன்னைப் பிரியாது தொடர்ந்து வந்தோம். இதற்கு எட்டாநாளாகிய சோமவாரத்திலே சுபலக்கினத்திலே உன்னை விவாகஞ்செய்ய வருவோம்; நீ மதுரைக்குப் போ என்று திருவாய்மலர்ந்தருளினார். அதுகேட்ட தடாதகைப்பிராட்டி மதுரையை அடைந்து, மகளிர்கள் அட்டமங்கலத்தோடும் எதிர்கொள்ளச் சென்று, திருமாளிகையிலே புகுந்தாள்.

மந்திரிமார்கள் திருக்கல்யாணவோலை எழுதி, எல்லாத்தேயங்களுக்கும் விடுத்து, மதுரைநகரமெங்கும் மணமுரசு அறைவித்தார்கள். மணமுரசொலி கேட்ட நகரத்தார் யாவரும் பெருங்களிப்படைந்து, இந்திரனுடைய அமராவதிநகரமும் நாணும்வண்ணம் மதுரைநகரமுழுதையும் அலங்கரித்தார்கள். தடாதகைப்பிராட்டியாருடைய சுற்றத்தார்கள் இரத்தினமயமாகிய ஒரு திருக்கல்யாணமண்டபமும், அதனுள்ளே குண்ட மண்டல வேதிகைகளும், உருத்திரர். தேவர், முனிவர் முதலியோருக்கு ஆசனங்களும், நடுவே ஒருவிமானமும், அதனடுவே சிவபெருமானும் தடாதகைப்பிராட்டியாரும் எழுந்தருளியிருக்கும்பொருட்டு ஒரு நவரத்தினசிங்காசனமும், செய்வித்தார்கள்.

தடாதகைப்பிராட்டியாருடைய திருக்கல்யாணத்திருமுகம் எழுந்தருளுதல் கேட்ட சகலதேயத்தரசர்களும் அத்திருமுகத்தை எதிர்கொண்டு வணங்கி இருகையாலும் வாங்கி, முடிமேலேற்றி, அதிலெழுதப்பட்ட வாசகத்தைக் கேட்டறிந்து, களிகூர்ந்து, அது கொணர்ந்த தூதருக்கு ஆபரணம் பீதாம்பரம் முதலியன கொடுத்து, தங்கள் தங்கள் நாடுகளின் உள்ள பலவகைவளங்களுங்கொண்டு, சேனைகளோடு விரைந்து வழிக்கொண்டு, மதுரையை அடைந்து, தடாதகைப்பிராட்டியாரைத் தரிசித்து வணங்கிக்கொண்டு, தங்கள் தங்கள் விடுதியிற் சேர்ந்தார்கள். அது நிற்க.

தடாதகைப்பிராட்டியார் மீண்ட பின்பு, சிவபெருமான் யுத்தகளத்தினின்றும் நீங்கி, திருக்கைலாசத்திற்சென்று, வீற்றிருந்துகொண்டு, சங்குகன்னர் முதலிய கணதிபர்களை விடுத்தருள, அவர்கள் உருத்திரர், தேவர்கள் முதலியோருடைய பதங்களிற்சென்று, கைலாசபதியினுடைய திருக்கல்யாணசோபனத்தைத் தெரிவித்தார்கள். அது கேட்டு மிக மகிழ்ந்து, காலாக்கினிருத்திரர் கூர்மாண்டேசர் ஆடகேசர் வீரபத்திரர் ஐயனார் முதலிய உருத்

திரர்களும், பிரமா விட்டுணு இந்திரன முதலிய தேவர்களும், வியாக்கிரபாதர் பதஞ்சலி அகத்தியர் முதலிய முனிவர்களும், பிறரும் திருக்கைலாசமலையை அடைந்து, திருக்கோயிலின் புறத்தே சென்றார்கள். அது கண்ட திருநந்திதேவர் உள்ளே புகுந்து, சிவபெருமானை வணங்கி, விண்ணப்பஞ்செய்து, அவருடைய அனுமதி பெற்றுக்கொண்டு வந்து, அவர்களை உள்ளே விடுத்தருள, அவர்கள் உள்ளே சென்று, கைலாசபதியுடைய திருவடிகளை வணங்கினார்கள். சிவபெருமான் தமது சந்நிதியில் வணங்கித் துதிப்பவர்களுள்ளே சிலருக்குத் திருவார்த்தையினாலும், சிலருக்குத் திருப்புன்முறுவலினாலும், சிலருக்குத் திருக்கடைக்கணோக்கத்தினாலும், சிலருக்குத் திருமுடியசைத்தலினாலும், அவரவர் தகுதிக்கேற்பத் திருவருள் சுரந்து, அங்குநின்றெழுந்து, திருமணக்கோலங் கொள்ளும்பொருட்டு ஒரு திருமண்டபத்துள்ளே புகுந்தார். அவருடைய திருவுளக்குறிப்பை அறிந்த குபேரன் மெய்யன்புடனே அங்கே சென்று, வேதங்களும் பிரமவிட்டுணுக்களும் முனிவர்களும் தீண்டற்கரிய அருமைத் திருமேனியைத் தன் கையினாலே தீண்டி, திருமணக்கோலஞ்செய்து, பெருந்தவப்பயனைப் பெற்றான்.

பின்பு சிவபெருமான் குண்டோதரருடைய முதுகின்மேலே திருவடியை வைத்து, இடபவாகனத்தின்மேலேறி எழுந்தருளியிருந்துகொண்டு, கற்பகப்பூமாரி பெய்ய, மங்கலவாத்தியம் முழங்க, தேவதுந்துபி ஒலிக்க, அரம்பையர்கள் நடிக்க, பாணுகம்பர் ஆயிரம் வாய்களினும் ஆயிரஞ்சங்குகளை வைத்து இரண்டாயிரங்கைகளானும் பிடித்துக்கொண்டு ஊத, வாணாசுரன் ஆயிரங்கைகளாலே குடமுழாவைத் தாக்க, முனிவர்கள் கைகுவித்து நெஞ்சநெக்குருகும் வண்ணம் துதிக்க, கணநாதர்கள் சிவானந்தபரவசர்களாய்க் கைகொட்டி ஆடிப் பாட, ஈசானர் அடைப்பையும், இந்திரன் களாஞ்சியும், அக்கினி தூபகலசமும், வருணன் பூந்தட்டும், நிருதி கண்ணாடியும் ஏந்த,

வாயு ஆலவட்டம் அசைக்க, குபேரன் திரவியங்களை முக ந்து முகந்து வீச, இயமன் சனம் விலக்க, வேதபுருடன் பாதுகையை முடியின்மேலே தாங்கிக்கொண்டு பின்னே செல்ல, கங்கை காவிரி முதலிய நதிகள் சாமரம் இரட்ட, குண்டோதரர் குடை பிடிக்க, ஆலாலசுந்தரர் திருவெண் ணீறும் திருமாலையும் ஏந்தி வர, வலப்பக்கத்திலே பிரம தேவரும் இடப்புக்கத்திலே விட்டுணும் கைகுவித்துத் தோத்திரஞ்செய்ய, இவ்வாறே சென்று, மதுரைநகர்ப்புற த்தை அடைந்தார். அப்பொழுது தடாதகைப்பிராட்டியா ருடைய மந்திரிமார்களும், சேனாதிபதிகளும், அரசர்க ளும் எதிர்கொண்டு, வணங்கினார்கள். சிவபெருமான் மதுரையுட்புகுந்து, பிராமணர்கள் கும்பத்திலே தருப் பையும் அரசிலையும் தோய்த்த நீரை வீச, அவர்களுடைய பன்னியர்கள் நீரார்சனஞ்சுற்ற, பெண்கள் அட்டமங்கல மேந்தி எதிர் வர, திருமாளிகைமுன் சென்றார். அப்போது அரம்பையர்கள் வாத்தியம் ஒலிக்கக் கருப்பூரதீபம் ஏந்தி, சிவபெருமானை மும்முறை வலஞ்செய்தார்கள்.

சிவபெருமான் திருநந்திதேவருடைய கையைப் பற் றிக்கொண்டு இடபவாகனத்தினின்றும் இழிந்து, விட்டுணு வும் பிரமாவும் இருபுறத்திலும் நீட்டுகின்ற கைகளைப் பற் றிக்கொண்டு, பாதுகையின்மேலே திருவடிகளைச் சாத்தி, நறுமலர்கள் பரப்பிய நடைப்பாவாடையின்மேலே தேவர் கள் பூமாரி பெய்ய நடந்து, உள்ளெழுந்தருளினார். அப் பொழுது காஞ்சனமாலை மகளிர்கள் சூழ வந்து, பொற்க ரகத்திலுள்ள கங்கைநீரை அவர்கள் வார்க்க, கைலாசப தியினுடைய திருவடிகளை விளக்கி, அத்தீர்த்தத்தைத் தன் சிரசிலே தெளித்து, உட்கொண்டாள். பின்பு திருவடிக ளில் ஈரம் புலரும்படி வெண்பட்டினாலே துடைத்து, பனி நீர்விட்டுக் கஸ்தூரி கலந்த சந்தனக்குழம்பை அணிந்து, கற்பகநறுமலர் சாத்தி, சிரசின்மேலே கைகுவித்து நின்று, பரமகருணாநிதியாகிய சுவாமீ, அடியேன் அருமையாகப் பெற்ற கன்னியை விவாகஞ்செய்து, இப்பாண்டிநாட்டைக்

கைக்கொண்டு அரசாளுக என்று விண்ணப்பஞ்செய்தாள். சிவபெருமான் அதற்குத் திருவுளம் இசைந்து, புன்னகைகொண்டு, திருக்கல்யாணமண்டபத்தைச் சேர்ந்து, இரத்தினசிங்காசனத்தின்மேல் எழுந்தருளியிருந்துகொண்டு, தம்மைச் சூழ்ந்துநின்ற உருத்திரர்களையும், பிரமவிட்டுணு முதலிய தேவர்களையும், முனிவர்களையும்,பிறரையும் தங்கள் தங்கள் ஆசனத்தில் இருக்கும்படி திருக்கடைக்கண் சாத்தினார். அது நிற்க.

மகளிர்கள் தடாதகைப்பிராட்டியைச் செம்பொனாசனத்தில் இருத்தி, கஸ்தூரி அணிந்து, குங்குமக்குழம்பு பூசி, முரசங்களும் சங்குகளும் ஒலிப்ப, வாசங்கலந்த நீரினாலே ஸ்நானஞ்செய்வித்து, வஸ்திரஞ் சாத்தினார்கள். தடாதகைப்பிராட்டி பிராமணருக்குத் தானங்கொடுத்தாள். இலக்குமியும் சரசுவதியும் தடாதகைப்பிராட்டியாருடைய அருமைத்திருமேனியைத் தீண்டி, திருமணக்கோலஞ்செய்து, அவளை வணங்கி, இனி உய்ந்தனம் உய்ந்தனம் என்று பேரானந்தப் பெருஞ்செல்வம் அடைந்தார்கள். விவாகமுகூர்த்தம் வந்தவுடனே, தடாதகைப்பிராட்டி, இலக்குமியும் சரசுவதியும் சோபனம் என்று வாழ்த்தி வந்து, இரண்டுபக்கத்திலும் தங்கள் கைகளை நீட்டத் தன்னுடைய திருக்கரங்களினாலே பற்றிக்கொண்டு, வேதங்கள் ஒலிக்க, மங்கலதூரியம் கலிக்க, சங்குகள் முழங்க, கற்பகப்பூமாரி பெய்ய, வெண்சாமரம் வீச, இந்திராணி அடைப்பையையும், அரம்பை களாஞ்சியைய்ம், திலோத்தமை கண்ணாடியையும், மேனகை பூந்தட்டையும் ஏந்த, வீரமடந்தை பொற்பிரம்பினாலே சனம் விலக்க, ஊர்வசி ஆலவட்டம் அசைக்க, மகளிர்கள் சோபனகீதம் பாட, பனிநீரோடு கலந்த சந்தனமும் மலர்களும் பரப்பிய நடைப்பாவாடையின்மேலே திருவடிகளைப் பையப்பைய வைத்துநடந்து சென்று, சிவபெருமானைக் கண்டவுடனே நாணி ஒதுங்கி, அவர் பக்கத்திலே எழுந்தருளியிருந்தாள்

அப்பொழுது மகாவிட்டுணு சிவபெருமானுடைய திருவடிகளைப் பொற்கரகநீரினாலே விளக்கி, சந்தனமும்

மலருஞ் சாத்தி, தூபதீபங்காட்டினார். சிவபெருமானுடைய பாததீர்த்தத்தை அங்குள்ளார் யாவரும் சிரசிலே தெளித்து, உட்கொண்டார்கள். பின்னு சிவபெருமானுடைய திருக்கரத்திலே தடாதகைப்பிராட்டியுடைய திருக்கரங்களை வைத்து, வேதமந்திரஞ்சொல்லித் தாராதத்தஞ்செய்தார். அப்போது தேவர்கள் பூமாரி பெய்தார்கள்; அரம்பையர்கள் நடித்தார்கள்; கின்னரர்கள் கீதம் பாடினார்கள்; முனிவர்கள் அரகர என்று தோத்திரஞ்செய்தார்கள்; தேவர்கள் உரோமஞ்சிலிர்ப்பப் பரவசரானார்கள்; சிவகணர்கள் சிரசின்மேற் கைகுவித்தார்கள். அங்குள்ளார் யாவரும் திருக்கல்யாண தரிசனத்தாலாகிய பேரின்பவெள்ளத்தில் மூழ்கினார்கள். சிவபிரானுடைய திருவடிக்கீழ் வீழும்வண்ணம் தேவர்கள் முனிவர்கள் முதலியோர் குங்குமங்கலந்த அக்ஷதையை வீசினார்கள். பால் தயிர் நெய் தேன் கனி என்பவை கூடிய மதுபர்க்கத்தைத் திருமுன்பு வைத்து, திருக்கை தொட்டருள்க என்று விண்ணப்பஞ்செய்ய, சிவபெருமான் திருக்கரத்தைவைத்து, திருவமுதுசெய்தாற்போலத் திருவுளமகிழ்ந்தருளினார். இலக்குமியும், சரசுவதியும், தேவமகளிர்களும், இருடிபத்தினிகளும் மங்கலம் பாடினார்கள். பிரமதேவர் தம்முடைய புத்திரர்களோடும் இருந்து அக்கினிகாரியஞ்செய்தார். சிவபெருமான் தடாதகைப்பிராட்டியாருக்குத் திருமங்கலியந் தரித்துப் பாணிக்கிரகணஞ்செய்தார். பின்பு தம்முடைய மனைவியாரோடு திருக்கரத்திலே பொரியை வாங்கி, ஓமஞ்செய்து, முனிவர்களுக்குத் தானங்கொடுத்து, அக்கினியை வலஞ்செய்து, பிராட்டியுடைய திருவடியைத் தமது திருக்கரத்தினாலே பற்றி அம்மிமேல் வைத்து, அருந்ததிபார்த்து, உலகத்தார் யாவரும் அறிந்து செய்யும்பொருட்டு, விவாகச்சடங்குகளெல்லாம் இவ்வாறே நிறைவேற்றிக்கொண்டு, மணவறையிலே புகுந்தருளினார். பின்பு மணவறையினின்றும் நீங்கி, திருக்கல்யாணமண்டபத்தை அடைந்து வீற்றிருந்து, திரு

மால் பிரமன்முதலிய தேவர்களுக்கும் பிறருக்கும் விடை கொடுத்தருளினர்.

அதன்பின், சிவபெருமான் ஆட்டுவோன் ஆடிக்காட்டுதல்போல அரசர்களுக்குத் தாம் அரசுசெய்து காட்டத் திருவுளங்கொண்டு, இடபக்கொடி கயற்கொடியாகவும், சர்ப்பாபரணம் பொன்னாபரணமாகவும், கொன்றைமாலை வேப்பமாலையாகவும், புலித்தோலாடை பொன்னாடையாகவும், சடாமுடி இரத்தினமுடியாகவும், தாம் சௌந்தரபாண்டியராகி, சங்குகன்னர்முதலிய கணநாதர்கள் முன்னைவடிவநீங்கி மானுடராகி ஏவல்செய்ய, அரசுசெய்தருளினர். உலகத்தைக் காக்கும் அரசர்கள் சிவனைப் பூசித்தல் வேதநெறியென்று அரசர்களெல்லாம் துணிந்து உய்யும்பொருட்டு, தாமும் அந்நகரத்திலே நடுவூரென்று ஒரு நகரஞ்செய்வித்து, அதிலே ஆலயங்கட்டுவித்து, இம்மையே நன்மைநல்குமிறை * எனப் பெயர்கொண்ட ஒரு சிவலிங்கந்தாபித்து, அதனைச் சிவாகமவிதிப்படி பூசைசெய்துகொண்டும், சோமசுந்தரக்கடவுளைத் திரிகாலமும் தரிசனஞ்செய்துகொண்டும், பூமிமுழுதுஞ் செங்கோல் நடாத்தினர்.

பிரமா விட்டுணு முதலிய தேவர்களும் முனிவர்களும் பிறரும் தம்மையே பூசித்து இம்மை மறுமைகளையடையநின்ற முதற்கடவுளாகிய சிவபெருமானே பூசித்த இந்தச்சிவலிங்கத்தின் பெருமையை யாவர் அளக்கவல்லர்!

திருச்சிற்றம்பலம்.

ஆறுவது

## வெள்ளியம்பலத்

## திருக்கூத்தாடியபடலம்.

சிவபெருமான், தடாதகைப்பிராட்டியாரைத் திருக்கல்யாணஞ் செய்தபின், தேவர்கள் முனிவர்கள் அரசர்

* இம்மையே நன்மை நல்குமிறை - இகாபீஷ்டப்பிரதேசுரன்.

கள் முதலிய யாவரையும் நோக்கி, போசனஞ்செய்ய வாருங்கள் என்று திருவாய்மலர்ந்தருளினார். அவர்கள் விரைந்து சென்று, பொற்றாமரைவாவியிலே ஸ்நானஞ்செய்து, தங்கள் தங்கள் நியமத்தை முடித்துக்கொண்டு, வந்தார்கள். வியாக்கிரபாதமகாமுனிவரும் பதஞ்சலிமகாமுனிவரும் எம்பெருமானை வணங்கிநின்று, பரமகருணாநிதியே, கனகசபையிலே நடிக்கின்ற உம்முடைய திருநடனத்தைத் தரிசனஞ்செய்து உண்பது அடியேங்களுக்கு நியமம் என்றார்கள். சிவபெருமான் அவர்களை நோக்கி, உலகமே வடிவமாகவுடைய விராட்புருடனுக்குச் சிதம்பரம் இருதயத்தானம், இம்மதுரை துவாதசாந்தத்தானம்; ஆதலால் சிதம்பரத்தினும் மதுரையே மிகமேலாயது. இங்கே நாம் செய்யும் நிருத்தம் மிகமுக்கியமாயும் அற்புதமாயும் இருக்கும்; அது போக மோக்ஷங்களையும் இட்டசித்திகளையும் கொடுக்கும். அந்நிருத்தத்தை இங்கே உங்களுக்குத் தரிசிப்பிப்போம் என்றருளிச்செய்தார். முனிவர்கள் சிவபெருமானை அஞ்சலிசெய்து, சீவன்முத்திபுரேசராகிய கருணாகரரே, விசுவரூபியாகிய பிரமாவுக்குப் புண்டரீகபுரமாகிய சிதம்பரம் இருதயகமலமென்றும், இம்மதுரை துவாதசாந்தமென்றும், அருளிச்செய்தீர்; திருக்கைலாசம் முதலிய மற்றைத்தலங்கள் எவ்வெவ்வங்கங்கள்? அருளிச்செய்க என்று விண்ணப்பஞ்செய்தார்கள். சோமசுந்தரக்கடவுள் முனிவர்களை நோக்கி, நீங்கள் கேட்டது உயிர்களுக்கெல்லாம் இதந்தருவது: ஆதலால் மகான்மாக்கள் பாவனைசெய்து உய்யும்பொருட்டுச் சொல்வோம், கேளுங்கள். பிரமாண்டம் பிரமாவின் சரீரம். கீழேழுலகமும் அரைக்குக் கீழ்ப்பட்டனவாகிய காற் பெருவிரல், புறவடி, பரடு, கணைக்கால், முழந்தாள், தொடைநடு, தொடைமூலம் என்பவைகளாம். மேலேழுலகமும் அரைக்கு மேற்பட்டனவாகிய மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞை, பிரமரந்திரம் என்பவைகளாம். சருவலோகங்களினும் உள்ள நம்முடைய இலிங்கங்கள் பத்தர்களுக்கு அருள்செய்யும்பொ

ருட்டு மூலாதாரமாகிய இப்பூலோகத்திலே நமது இச்சை யினாலே எந்நாளும் சாந்நித்தியமாயிருக்கும். குதத்துக் கும் இலிங்கத்திற்கும் நடுத்தானமாகிய மூலாதாரம் கம லாலயமாகிய திருவாரூர்; அங்கே நாம் தியாகராசரெனப் பெயர் பெறுவோம். இலிங்கத்தானமாகிய சுவாதிட்டா னம் திருவானைக்கா; அங்கே நாம் சம்புநாதரெனப் பெ யர்பெறுவோம். நாபித்தானமாகிய மணிபூரம் அருணாச லம்; அங்கே நாம் அருணாசலேசுரரெனப் பெயர் பெறு வோம். இருதயத்தானமாகிய அநாகதம் சிதம்பரம்; அங் கே நாம் சபாபதியெனப் பெயர் பெறுவோம். கண்டத் தானமாகிய விசுத்தி தக்ஷிணகைலாசமாகிய திருக்காள த்தி; அங்கே நாம் காளத்தீசுரரெனப் பெயர் பெறு வோம் புருவமத்தியத்தானமாகிய ஆஞ்ஞை காசி; அங்கே நாம் விசுவநாதரெனப் பெயர் பெறுவோம். பிரமரந்திரம் கைலாசம்; அங்கே நாம் ஸ்ரீகண்டபரமேசுரரெனப் பெ யர் பெறுவோம். ஆதாராதீதமாகிய துவாதசாந்தம் இம் மதுரை; இங்கே நாம் சுந்தரேச்ரெனப் பெயர் பெறுவோம். நம்முடைய பத்தர்கள் தங்கள் தங்கள் சரீரத்திலே மூலா தாரம் முதலிய தானங்களிலே அவ்வவ்விலிங்கங்களைப் பாவிக்கக்கடவர்கள். இத்துவாதசாந்தபுரம் மற்றைத்தா னங்களெல்லாவற்றிற்கும் முன்னே தோன்றியது; ஆத லால் இதுவே எல்லாத்தலங்களினும் உயர்ந்தது. நம்மு டையமூர்த்திகளுள்ளே தாண்டவமூர்த்தி மேலாயது. ஆதாரங்களெல்லாவற்றினும் மேலாகிய இந்தத் துவாதசா ந்தத்திலுள்ள தாண்டவமூர்த்தி மிக மேலாயது. இத்து ணைப் பெருஞ்சிறப்பினதாகிய இந்தத் தலத்திலே நம்மு டைய தாண்டவத்தை உங்களுக்கு விரைவிலே தரிசிப்பிப் போம் என்றருளிச்செய்து, முனிவர்களோடு திருக்கோ யிலினுள்ளே எழுந்தருளினர். அங்கே அவருடைய சங்க ற்பமாத்திரத்தினாலே விமானத்திற்குக் கீழ்த்திசையிலே ஒருவெள்ளியம்பலமும் அதனிடத்தே ஒரு மாணிக்கவே தினையும் தோன்றின.

சிவபெருமான் அவ்வேதிகையின்மேலே ஞானப்பேரொளிவடிவாய்த் தோன்றி, பூதகணங்கள் மொந்தையும் தண்ணுமையும் முழக்க, திருநந்திதேவர் முழவம் தாக்க, விட்டுணு இடக்கையார்க்க, தும்புரு நாரதர் இசை பாட, பஞ்சதுந்துபிகள் ஒலிக்க, சரசுவதி சுதி கூட்ட, பிரமா யாழ்கொண்டு சாமகீதம் பாட, தேவர்கள் கற்பகப்பூமாரி பெய்ய, முயலகன்மேலே வலப்பாதத்தை வைத்து, இடப்பாதத்தைத் தூக்கிச் சற்றே வளைத்து,* பத்துத்திருக்கரங்களும், வலக்கரம் ஐந்தனுள் அபயஹஸ்தத்திலே சூலமும், மற்றவைகளிலே டமருகம் பாணம் வாள் மழு என்பவைகளும், இடக்கரம் ஐந்தனுள் வரதஹஸ்தத்திலே பாம்பும், மற்றவைகளிலே அக்கினி வில் கேடகம் தண்டு என்பவைகளும், திருநீலகண்டமும், சங்கக்குண்டலம் அணிந்த திருச்செவியும், சந்திரகலையையும் கங்கையையுந்தரித்த செஞ்சடையும், திருவெண்ணீறணிந்த திருமேனியும், நாகயஞ்ஞோபவீதமும், மூன்று திருக்கண்களும், உமாதேவியார் ஒதுங்கி நிற்கும் பக்கமும், அவண்மேல் வைத்த திருநோக்கமும், திருநகையும், விளங்க, நிருத்தஞ்செய்தருளினார். உடனே வியாக்கிரபாதமகாமுனிவரும் பதஞ்சலிமகாமுனிவரும் சிரசிலே கைகுவித்தார்கள், திருவடியிலே அடியற்ற மரம்போல வீழ்ந்தார்கள், வேதங்களினாலே துதித்தார்கள், பரமானந்தசமுத்திரத்திலே மூழ்கினார்கள். இருடிகள், கந்தருவர், தேவர்கள் முதலிய யாவரும் நிருத்ததரிசனஞ்செய்து வணங்கி, அன்புருவமானார்கள். திருக்கல்யாணந்தரிசிக்க வந்த மனிதர்களுமன்றே பதஞ்சலி வியாக்கிரபாதமுனிவர்களினாலே திருநிருத்தந்தரிசிக்கப்பெற்றார்கள். பதஞ்சலிமகாமுனிவர், அளவில்லாதசிவானந்தம் ஊறி மனசிலே நிரம்பி மேலும் வழிவதுபோல மார்பில் அணியப்பட்ட திருவெண்ணீறு கரையும் வண்ணம் பொழியாநின்ற கண்ணீருண்மூழ்கி, இருகைகளுங்குவித்து நின்று சிவபெருமானைப் பாடுவாராயினார்:—

* இவ்வளைந்தபாதம் குஞ்சிதபாதமெனப்படும். குஞ்சிதம் = வளைந்தது.

பராபர முதலே போற்றி பத்தியில் விளைவாய் போற்றி
சராசர மாகி வேறாய் நின்றதற் பரனே போற்றி
கராசல வுரியாய் போற்றி கனகவம் பலத்து ளாடு
நிராமய பரமா னந்த நிருத்தனே போற்றி போற்றி. (௧)

ஒன்றாகி யைந்தா யையைந் தருவாகி வருவாய் போற்றி
பின்றாகிச் சென்ற நாளா யெதிர்நாளா யெழுவாய் போற்றி
நன்றாகித் தீய தாகி நடுவாகி முடிவாய் மன்று
ணின்றாடும் பரமா னந்த நிருத்தனே போற்றி போற்றி. (௨)

அடியரேம் பொருட்டு வெள்ளி யம்பலத் தாடல் போற்றி
பொடியணி தடந்தோள் போற்றி புரிசடை மகுடம் போற்றி
கடியவிழ் மலர்மென் கூந்தற் கயல்விழி பாகம் போற்றி
நெடியநற் பரமா னந்த நிருத்தனே போற்றி போற்றி. (௩)

இவ்வாறு துதிசெய்து, பதஞ்சலிமகாமுனிவர் பரவசராய்த் தண்டம்போல விழுந்தார். சிவபெருமான், எழும், எழும் என்று திருவாய்மலர்ந்தருள, பதஞ்சலிமகாமுனிவர் எழுந்து, அஞ்சலிசெய்துகொண்டு நின்றார். பின்பு சிவபெருமான் பதஞ்சலி வியாக்கிரபாதர் என்னும் இருவரையும் நோக்கி, நீங்கள் விரும்பியது யாது? சொல்லுங்கள் என்றருளிச்செய்ய, அவர்கள் வணங்கிக் கைகுவித்து நின்று, பரமகருணாநிதியாகிய சுவாமீ, பக்குவான்மாக்களுக்குப் பாசம் நீங்கும்வண்ணம் திருநிருத்தம் செய்தருளும் இத்திருக்கோலத்தோடு எந்நாளும் நின்றருளவேண்டும் என்று விண்ணப்பஞ்செய்தார்கள். அதற்குச் சிவபெருமான், இப்பாண்டிநாடு செய்த பெருந்தவத்தினாலே நீங்கள் கேட்ட வரம் தந்தோம் என்றருளிச்செய்தார். பதஞ்சலிமகாமுனிவர் வணங்கி நின்று, எம்பெருமானே, இந்தப் பரமானந்த தாண்டவத்தைத் தரிசித்தவர்கள் யாவரும் மீளப் பூமியில் வந்து பிறவாது முத்தி பெற்றுய்யும் பொருட்டு அருள் செய்க என்றார். சிவபெருமானும் அதற்கிசைந்தருளினார். சிவகணர்கள் ஆரவாரித்துக் கைகொட்டாடினார்கள். தேவர்கள் கற்பகப்பூமாரி பெய்தார்கள். முனிவர்கள் உரோமஞ்சிலிர்ப்ப ஆனந்த அருவி பொழிய அன்புருவமாகி, வியாக்கிரபாதர் பதஞ்சலி என்னும் இரு

வரையும் விழுங்குவோர் போலப் பார்த்துத் தழுவிக் கொண்டார்கள்.

மார்கழிமாசத்துத் திருவாதிரைநக்ஷத்திரந்தொடங்கி, மேல்வரும் மார்கழிமாசத்துத் திருவாதிரைநக்ஷத்திரம் வரையும் பொற்றாமரைவாவியிலே ஸ்நானஞ்செய்து, அத் திருவிருத்தத்தைத் தரிசித்து, அங்கிருந்துகொண்டு பஞ்சாக்ஷரத்திலே நூற்றெட்டுருச் செபிப்பவர்கள் தாம் தாம் நினைந்த வரங்களைப் பெறுவார்கள்.

திருச்சிற்றம்பலம்.

ஏழாவது

## குண்டோதரனுக்கு

## அன்னமிட்டபடலம்.

தடாதகைப்பிராட்டி, திருக்கல்யாணந்தரிசிக்க வந்த முனிவர்கள், தேவர்கள், அரசர்கள் யாவரையும் அமுது செய்வித்து, பூசுவனவும் உடுப்பனவும் பூண்பனவும் தாம் பூலமும் கொடுத்து, விடுத்தருளினாள். அப்பொழுது மடைத்தொழிலாளர்கள் தடாதகைப்பிராட்டி திருமுன் சென்று வணங்கி நின்று, அடியேம் சமைத்த போனகம் ஆயிரத்தொருகூறுயினும் தொலைந்திலது; அடியேங்கள் அதனை யாது செய்வோம் என்று விண்ணப்பஞ்செய்தார்கள். அதுகேட்ட தடாதகைப்பிராட்டி தன்கணவராகிய சௌந்தரபாண்டியர் திருமுன் சென்று, வணங்கி, ஒதுங்கி நின்று, சுவாமிகள் முப்பத்துமுக்கோடி கணங்களோடும் இங்கே எழுந்தருளுதலை நினைந்து, போனகம் அளவின்றிச் சமைக்கப்பட்டது; எஞ்சிய அன்னம் இமயமலையும் அதன் புறத்துள்ள மலைகளும் ஒருங்குசேர்ந்தாற்போலக் குவிந்து கிடக்கின்றது;கறிவர்க்கமும் அத்தன்மைத்தே என்று விண்ணப்பஞ்செய்தாள். சிவபெருமான் புன்னகை செய்து, நீ தமிழ்நாட்டு மூவேந்தருட் சிறந்த பாண்டியராசன் மகளன்றோ. உன்னால் அரிதிற் பெறற்பாலது யாது? தேவதரு

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY

வும் உன்னுடைய பணியைச் செய்துகொண்டு இங்கிருக்குமாயின், பிறர் செல்வமெல்லாம் உன்செல்வமன்றோ. அளவில்லாத உன்னுடைய செல்வப்பெருக்கை நாம் அறியும்வண்ணம் சமைப்பித்தாய்போலும். உன்னுடைய விருந்தை உண்ணும்படி பசியினாலே களையடைந்தவர் நம்முடைய கணத்தினுள்ளே காணோம்; நாம் செய்யத்தக்கது யாது என்றார். சமீபத்திலே நின்ற குண்டோதரருடைய வயிற்றிலே வடவாமுகாக்கினி மடுக்கும்வண்ணம் திருவுளங்கொண்டருளினார். அது வந்து உதராக்கினியாய்ச் சொலிக்க, குண்டோதரர் நஞ்சுண்டாற்போலச் சரீரஞ் சோர்ந்து, வேர்த்து, ஆவியொடுங்கி, சுவாமீ, பசியினால் வருந்துகின்றேன் என்றார். சிவபெருமான், இக்குண்டோதரனுக்கு ஒருபிடிசோறு கொடு, அப்புறஞ்சொல்லுவோம் என்றார். தடாதகைப்பிராட்டி வணங்கிக்கொண்டு போனாள். குண்டோதரரும் உடனே நடை தளர்ந்து, கண் புகைந்து, வாய் புலர, நடந்தார். தடாதகைப்பிராட்டியுடைய ஏவலினாலே, ஏவன்மீகளிர்கள் குண்டோதரரைக் கொண்டுபோய், அன்னத்தின்முன் விடுத்தார்கள். குண்டோதரர் அங்குள்ள அன்னத்தையும், பலவகைக்கறிகளையும், பால் தயிர் நெய் தேன்களையும், பண்ணியங்களையும், பழங்களையும், தேங்காய்களையும், வேவாத அன்னத்தையும் எடுத்தெடுத்து உண்டார், உண்டும், பசிநீங்காமையால் வருத்தமுற்றார். இது கண்ட சேடியர்களுள்ளே சிலர் கையை நெரித்து அதிசயமடைந்தார்கள். சிலர் வெருண்டார்கள், சிலர் கண்ணைப் பொத்திக்கொண்டு போய் விட்டார்கள். தடாதகைப்பிராட்டி அதிசயமடைந்து, தனது நாயகர் திருமுன்பு போய், நாணம் உள்ளே கிடப்ப, அளகம் பிடரிலே தாழ, ஒதுங்கி, நிலங்கிளைத்துக் கொண்டு நின்றாள். சிவபெருமான் அந்நிலையைக் கண்டு, அறியாதவர்போலப் பிராட்டியை நோக்கி, குண்டோதரன் உண்டு எஞ்சியுள்ளனவாயின், இன்னமும் பூதங்களை விடுத்து, உன் மனமகிழும்வண்ணம் உண்பிப்போம் என்றார். அது கேட்ட பிராட்டி, சுவாமீ, இன்னும் குண்டோ

தரனுடைய பசி அடங்கிற்றிலது; வேறு பூதங்களை விடுத்தருளுவீராயின், அவைகள் உலகங்களெல்லாவற்றையும் எடுத்து உட்கொண்டுவிடும்; அதனால் உமக்குச் சங்காரருத்திரர் என்னுந் திருநாமம் மெய்ப்படும்; குண்டோதரன் தன்செயலைத் தானே இங்குவந்து விண்ணப்பஞ்செய்ய நீர் அறிந்துகொள்வீர் என்றாள். அப்பொழுது குண்டோதரர் பசித்தீச்சுட வந்து, சுவாமீ, எம்பெருமாட்டி சமைப்பித்த அன்னம் முதலியவைகள் மலைகள்போலக் கிடந்தன; அவைகளை அடியேன் எடுத்து உண்ணவும், என்பசி தணியாது இட்டுண்ணாதவர்களுடைய வயிறுபோலக் காந்துகின்றது என்றார். பகைவருடைய முப்புரத்திலிட்ட தீ பசியுருவமாய் என் வயிற்றினுள்ளே குடிபுகுந்ததோ என்பார், கை எறிவார், அண்டங்கள் வெடிபடக் கதறுவார். ஐயோ ஐயோ என்பார், பெருமூச்செறிவார், ஆவி சோர்ந்து அயருவார்.

திருச்சிற்றம்பலம்.

எட்டாவது

## அன்னக்குழியும் வைகையுமழைத்தபடலம்.

கிருபாசமுத்திரமாகிய சோமசுந்தரக்கடவுள் தடாதகைப்பிராட்டியைப் பார்த்து, உள்ளே நகைத்து, பசியினால் வருந்துகின்ற குண்டோதரர்பொருட்டு அன்னபூரணியை நினைத்தருளினார். உடனே நான்கு குழியிலே தயிர் கலந்த அன்னந் தோன்றியது. அப்பொழுது சோமசுந்தரக்கடவுள் அத்தயிரன்னத்தைப் புசிக்கும்பொருட்டுக் குண்டோதரரைப் பணித்தருளினார். அவர் அதனைக் கையினால் எடுத்தெடுத்துப் புசிக்க, பசிநோய் நீங்கியது. உடனே சரீரம் வீங்கி, நிலங்கிழிபட மலைபோல விழுந்து புரண்டு, தாகத்தினால் வருத்தமுற்று, எழுந்து, வாவிகள், ஓடைகள், குளங்கள், கிணறுகள் முதலிய நீர்நிலைகளெல்லாவற்றினும் உள்ள நீரெல்லாங்குடித்தார். குடித்தும் தாகநீங்காமை

யால் வருந்தி, சோமசுந்தரக்கடவுளுடைய திருவடியிலே வீழ்ந்து, விண்ணப்பஞ்செய்தார்.

சிவபெருமான் தமது திருமுடியின்மேல் இருக்கும் கங்கையை நோக்கி, நீ இம்மதுரையின் புறத்து ஒருநதியாய் விரைந்து வருவாயாக என்று திருவாய்மலர்ந்தருளினார். கங்காநதி சிவபெருமானை வணங்கி, கருணாநிதியாகிய சுவாமீ, நீ பகீரதன்பொருட்டுச் சென்று ஒரு தீர்த்தமாகி உன்னிடத்தே ஸ்நானஞ்செய்வோருடைய பாவங்களைப் போக்குவாயாக என்று அன்றும் அடியேனைப் பணித்தருளினீர். இன்றும் ஓர் நதியாகப் பணித்தருளுவீராயின், அடியேனிடத்தே ஸ்நானஞ் செய்தவர்களுக்கும் அடியேனைத் தரிசித்தவர்களுக்கும் பரிசித்தவர்களுக்கும் பிறவித்தொடர்ச்சியின் பற்றை அறுத்து, பத்தியையும் ஞானத்தையும் அவைகளால் வரும் முத்தியையும் கொடுக்கும் பொருட்டுப் பணித்தருளும் என்று விண்ணப்பஞ்செய்து, வரங்கொண்டு வணங்கி, அளப்பில்லாத வேகத்துடனே மதுரையின்புறத்து ஓர் நதியாய் வந்தது. அது கண்டு, சோமசுந்தரபாண்டியர் குண்டோதரரை அந்நதியினிடத்து விடுத்தருள, அவர் நதியினிடையே புகுந்திருந்துகொண்டு, இரண்டு கைகளையும் கரையேற நீட்டித் தடுத்து, மலைபோல நிமிர்ந்த நீரை வாயங்காந்து குடித்து, மகிழ்ச்சியுற்று, எம்பெருமான்றிருமுன் சென்று, திருவடிகளை வணங்கி, ஆனந்தக்கூத்தாடி, அன்புருவாய் அளவில்லாத கீதங்களைப் பாடினார். சோமசுந்தரபாண்டியர் அதுகேட்டுத் திருவுளமகிழ்ந்து, கணங்கட்குத் தலைமை கொடுத்து, தடாதகைப்பிராட்டியாரோடும் பூமியை அரசுசெய்துகொண்டு எழுந்தருளியிருந்தார்.

இவ்வைகைநதி சிவகங்கையெனவும், சிவஞானநதியெனவும், வேகவதியெனவும், கிருதமாலையெனவும் பெயர்பெறும்.

திருச்சிற்றம்பலம்.

ஒன்பதாவது

## எழுகடலழைத்தபடலம்.

வேதங்களாலும் அளவிடப்படாத முழுமுதற்கடவுளாகிய சிவபெருமான் பாண்டியராகி, உலகமெல்லாம் வெண்குடைநிழற்றி, செங்கோல் செலுத்துநாளிலே, வேத வேதாங்கங்களை உணர்ந்த இருடிகள் முறையோடும் அவரைச் சந்தித்து வருவார்கள். கௌதமமுனிவர், ஒருநாள் சந்தித்துத் திரும்பும்பொழுது, காஞ்சனமாலையுடைய வீட்டுக்குப் போனார். அவள் அவரை எதிர்கொண்டு, அழைத்து, ஆசனத்தில் இருத்தி, அஞ்சலிசெய்து, வேதசிரசாகிய உபநிடதங்களிலே விளங்கும் பொருள் பரசிவமே என்று தெளிந்த முனிவரரே, அடியேனுடைய பிறவித் துன்பத்தை நீக்க வல்ல தவம் யாது? அருளிச்செய்யும் என்று விண்ணப்பஞ்செய்தாள்.

கருணைக்கு உறையுளாகிய கௌதமமுனிவர், திருமுகமலர்ந்து, மலயத்துவசபாண்டியனுக்கு வாய்த்த பெருங்கற்பினையுடைய பத்தினியே, நீ உலகமாதாவாகிய தடாதகைப்பிராட்டிக்கு மாதாவானாய், பிரமவிட்டுணுக்களாலும் அறியப்படாத சிவபெருமானை மருமகனாகப் பெற்றுக்கொண்டாய். நீ அறியாத தவம் இப்பூமண்டலத்திலே வேறு யாவர் அறிவார்! ஆயினும், சொல்வோம், கேள். மானதம், வாசிகம், காயிகம் எனத் தவம் மூவகைப்படும். அவற்றுள், மானதமாவது வாய்மை, இரக்கம், பொறை, ஐம்பொறியடக்கல், சிவத்தியானம், தருமதானங்களிலே சிந்தை வைத்தல் முதலியனவாம். வாசிகமாவது பஞ்சாக்ஷரசெபம், சதருத்திரபாராயணம், தோத்திரம், தருமங்களை எடுத்துச் சொல்லுதல் முதலியனவாம். காயிகங்களாவன சிவனைப் பூசித்தல், சிவாலயங்களை வலஞ்செய்து வணங்குதல், சிவதலங்களுக்குச் சென்று வணங்குதல், அங்கங்குத் திருப்பணிகளை நிறைவேற்றல், சிவ தீர்த்தங்களிலே ஸ்நானஞ்செய்தல் முதலியனவாம். இம்மூவகைத்தவங்களுள், காயிகங்களே சிறந்தன. அவைகளுள், தீர்த்தயாத்திரைகள் சிறந்தன. அவைகளுள் கங்கை

முதலிய நதிகளிலே தீர்த்தமாடுதல் சிறந்தது. அந்நதிகளிலே தனித்தனிபோய்த் தீர்த்தமாடுதல் அரிது. அந்நதிகளெல்லாம் வந்து சமுத்திரத்திலே நிறைதலினால், சமுத்திரத்திலே தீர்த்தமாடுதல் எல்லாவற்றினுஞ் சிறந்தது என்றார்.

அது கேட்ட காஞ்சனமாலை சமுத்திரஸ்நானத்திலே மிக்க விருப்புடையளாய், தன்கருத்தைத் தன்புதல்வியாகிய தடாதகைப்பிராட்டிக்குத் தெரிவித்தாள். எம்பெருமாட்டி திருவுள்ளஞ் சிறிது தளர்ந்து, இதனை என் பிராணநாயகருக்கு விண்ணப்பஞ்செய்வேன் என்று எம்பெருமான்றிருமுன்சென்று, கைகுவித்து ஒதுங்கி நின்று, குண்டோதரன்பொருட்டு அன்று அன்னக்குழியும் வைகையும் அழைத்த கருணைக்கடலே, இன்று என்மாதாச் சமுத்திர ஸ்நானஞ்செய்ய விரும்புகின்றாள் என்று விண்ணப்பஞ்செய்தாள். சுந்தரபாண்டியர், சமுத்திரம் ஒன்றோ ஏழுசமுத்திரங்களையும் ஒருங்குவர அழைப்போம் என்று, திருவுளங்கொண்டருளினார். உடனே ஏழுகடல்களும் கீழ்த்திசையிலுள்ள ஒருவாவியினிடத்தே ஏழுவண்ணத் தோடும் வந்தடங்கின.

திருச்சிற்றம்பலம்.

பத்தாவது

## மலயத்துவசனையழைத்தபடலம்.

சுந்தரபாண்டியர் தடாதகைப்பிராட்டியோடும் வந்து, ஏழுகடலும் நிறைந்த வாவிக்கரையில் இருக்கும் நந்தனவனத்திலே சிங்காசனத்தின்மேலே எழுந்தருளியிருந்தார். தம்முடைய மனைவியாரை நோக்கி, நாம் உன்பொருட்டு ஏழுகடல்களையும் இந்நகரத்திலே அழைத்தோம், நீ போய் உன்மாதாவை ஸ்நானம்பண்ணும்பொருட்டு அழைத்துக்கொண்டு வருவாயாக என்றார். பிராட்டி தன்மாதாவாகிய காஞ்சனமாலையை அழைத்துக்கொண்டு வாவிக்கரையை அடைந்தாள்.

காஞ்சனமாலை சிவபுராணங்களிலே வல்ல சற்பிராமணர்களைப் பார்த்து, சமுத்திரஸ்நானஞ்செய்யும் முறைமை எங்ஙனம்? சொல்லுங்கள் என்றாள். பிராமணர்கள் அவளை நோக்கி, கணவனுடைய கை, புத்திரனுடைய கை, பசுக்கன்றின் வால் என்னும் இம்மூன்றினுள் ஒன்றைக் கையினாலே பற்றிக்கொண்டு ஸ்நானஞ்செய்தலே முறை என்றார்கள். காஞ்சனமாலை அதுகேட்டு, தன்மகளை நோக்கி, முன்னே தவத்தைக் குறைவறச் செய்யாத கொடிய பாவியேனுக்குக் கணவனும் புத்திரனும் இல்லையே. இனி யான் பெறுவது கன்றல்லது பிறிதுண்டோ! ஆதலால், கன்றின்வாலைப் பற்றிக்கொண்டு ஸ்நானஞ்செய்யக்கடவேனோ என்றாள். எம்பெருமாட்டி தன்பிராணநாயகர் திருமுன் சென்று தன்மாதாவின் குறையை விண்ணப்பஞ்செய்ய, எம்பெருமான் சுவர்க்கத்திலே ஓராசனத்தில் இந்திரனோடு ஒருங்கிருந்த மலயத்துவசபாண்டியன்மேலே திருவுளஞ்செலுத்தினார்.

பாண்டியன் சிவபெருமானுடைய திருவுளத்தை அறிந்து, இந்திரனுடைய ஆசனத்தை நீத்து, விமானத்தின் மேல் ஏறிவந்து, எழ்கடலும் நிறைந்த வாவிக்கரையிலே மனோவாக்குக்கெட்டாத பரமானந்தப் பழங்கடலை யான் பெண்பேற்றினாற் பெற்ற பெரும்பேறு இது என்று எதிர் கண்டு, திருவடிகளை வணங்கும்பொருட்டு வந்தான். அவன் வணங்குமுன்னே, சுந்தரபாண்டியர் தமது மாமன் என்னும் முறையினாலே திருக்கரத்தினால் அமைத்து, அவனை எதிர்ந்து, தழுவி, திருவருணோக்கஞ்செய்து, நீ உன் மனைவியோடுபோய்த் தீர்த்தமாடுவாயாக என்று திருவாய்மலர்ந்தருளினார். பாண்டியன், தான் முன்னைப் பெருந்தவத்தினாலே பெற்ற தடாதகைப்பிராட்டி எதிர்வந்து தழுவ, தானுந்தழுவி, மலையரையன்போல எண்ணில்லாத பெருமகிழ்ச்சியை அடைந்தான், 'பிராட்டியுடைய திருக்கல்யாணத்தை என்றவக்குறையினாலே கண்டேனில்லையே, என்று உள்ளத்திலே கவலை உண்டன்றோ, அக்க

வலையை, இம்மகிழ்ச்சியாகிய தேனை உண்டு, மறந்துவிட்டான். காஞ்சனமாலை தன்கணவனெதிரே நாணத்தோடு சென்று வணங்கினாள். பின்பு தன்கையிலே பவித்திரஞ் சேர்த்தி, பிராமணர்முன்னே சங்கற்பஞ்செய்து, பஞ்சாக்ஷரத்தை உச்சரித்து, தன்கணவனாகிய மலயத்துவசபாண்டியனுடைய கையைப் பற்றிக்கொண்டு, பேருவகையோடு சமுத்திரஸ்நானஞ் செய்தாள்.

பாண்டியனும் காஞ்சனமாலையும், ஸ்நானஞ்செய்து கரையேறினவுடனே, சிவபெருமானுடைய திருவருளினாலே அவருடைய திருவுருவத்தைப் பெற்றார்கள். உடனே சிவலோகத்தினின்றும் ஒரு தேவவிமானம் இழிந்து வந்தது. இருவரும் சிவபிரானுடைய திருவருளினாலே அவ்விமானத்தின்மேல் ஏறி, தேவர்கள் கற்பகப்பூமாரி பொழிய, தேவதுந்துபிகள் ஒலிப்ப, அரகரவொலி தழைப்ப, சோமசுந்தரக்கடவுளுடைய திருக்கோயிலை அணுகி, தங்கள் மருமகனாகிய சுந்தரபாண்டியரும் மகளாகிய தடாதகைப்பிராட்டியாரும் அத்திருக்கோயிலினுள்ளே புகுந்து வீற்றிருக்கக் கண்டு, இருவினை வயத்தினாலே சரீரத்தைப் பொருந்தும் மனிதரைப்போல முன்னை வடிவம் மாறி உலகத்திற்கெல்லாம் மாதாவாகிய உமாதேவியே மகளும் பிதாவாகிய சிவபெருமானே மருமகனும் ஆகும் வண்ணம் நாம் என்ன தவஞ்செய்தேம்! இத்தவம் பிறரொருவராலே செய்தல் அரிது அரிது என்று வியந்தார்கள். பின்பு சிவபெருமானுடைய திருவடிகளிலே ஒன்றிய அன்பு ஈர்த்தெழச் சென்று, இருகண்களும் அடிக்கடி திரும்பி நோக்க, விமானத்தை அஞ்சலிசெய்துகொண்டு போய், புவர்லோகத்தையும் சுவர்லோகத்தையும் மகர்லோகத்தையும் சனலோகத்தையும் தபோலோகத்தையும் சத்தியலோகத்தையும் வைகுண்டலோகத்தையுங் கடந்து, சிவலோகத்தை அடைந்தார்கள்.

அதன்பின் தடாதகைப்பிராட்டி சுந்தரபாண்டியருடைய திருவடிகளை வணங்கித் துதித்து, எண்ணில்லாத

தேவர்களுக்கும் மற்றையாவருக்கும் பயன்சுரக்கும் காம தேனுவின் கன்றுக்குக் குறைவு யாது! என்னுடைய மாதா எண்ணியது கடலொன்றே; அவ்வாறாகவும், என் பொருட்டு ஏழுகடலையும் இங்கே அழைத்தருளினீர். அவள் கைப்பற்றி ஆடும்பொருட்டுத் தேவருலகத்திருந்த கணவனையும் அழைத்தருளினீர். இருவருக்கும் உம்முடைய சாரூப்பியத்தைக் கொடுத்தருளினீர்." பாண்டிய குலம் இறந்ததென்று பழிக்கப்படாவண்ணம் முடிசூட்டிச் செங்கோல் நடாத்தி வருகின்றீர் போலும். இனி இந்நிலைமைக்கு இடையூறு இன்றே என்று விண்ணப்பஞ்செய்தாள். சுந்தரபாண்டியர் தமது நாயகியுடைய உட்கோளைத் திருவுளங்கொண்டு மகிழ்ந்திருந்தார்.

திருச்சிற்றம்பலம்.

---

பதினொராவது

உக்கிரபாண்டியன்

# திருவவதாரப்படலம்.

கருணாநிதியாகிய சோமசுந்தரக்கடவுள் பூமண்டலத்திலே எண்ணில்லாத காலம் இன்பவடிவாகிய தமது திருவடி நிழல்போல யாவருக்கும் ஒற்றைவெண்குடை நிழல் செய்து, செங்கோல் நடாத்தி, முறைசெய்தொழுகுவாராயினர். தாம் பிரம விட்டுணுக்களாலும் வேதமுதலிய கலைகளாலும் காண்டற்கரிய பரம்பொருளாகவும், தம்முடைய அன்பர்களுக்கு எக்காலத்தும் எளியவராகும் தமது மேன்மையை எவ்வுயிர்களும் உணர்ந்து உய்யும் பொருட்டு, மெய்யன்பிற்சிறந்த மலயத்துவசபாண்டியனுக்கும் அவன் மனைவியாகிய காஞ்சனமாலைக்கும் உமாதேவியைப் புத்திரியாகக் கொடுத்து, அதற்கிசையத் தாமும் மருமகனாகி, பூமிமுற்றையும் அரசுசெய்தார். அதனால் தமிழ்நாட்டு மூவேந்தருள்ளும் பாண்டியனுடைய குடியே மிக மேன்மைபெற்றது. இன்னும் அக்குடிக்கு எய்தற்

பாலதாகிய குறைவை ஒழிக்கும்பொருட்டு, உலகமெல்லாவற்றையும் கருப்பமெய்தாது பெற்றருளிய மாதாவாகிய பிராட்டியாரிடத்தே தமது நெற்றிக்கண்ணினின்றும் உதித்த முருகக்கடவுள் தோன்றும் வண்ணம் திருவுளஞ் செய்தருளினர். அக்கருணைக்குறிப்புக்கேற்பத் தடாதகைப்பிராட்டி கருப்பவதிபோலாயினள்.

சோமவாரமும் திருவாதிரைநக்ஷத்திரமும் கூடிய சுபதினத்திலே குரு வந்து கேந்திரத்திற் சிறந்திருப்பச் சுபலக்கினத்திலே, நான்குவேதங்களும் முழங்க, கற்பகப் பூமாரி பெய்ய, பஞ்சதுந்துபிகள் ஒலிக்க, தேவமகளிர்கள் நடிக்க, வெற்றிமடந்தையும் இலக்குமியும் சரசுவதியும் வீறடைய, பிராமணர்கள் மகிழ்ச்சிகொள்ள, ஓமாக்கினிகள் வளர்க்குமுன்னே வலஞ்சுழித்தெழுந்து சொலிக்க, இந்திரனுக்கும் மேருவுக்கும் வருணனுக்கும் இடத்தோளாட, சோமசுந்தரக்கடவுளும் பிராட்டியாருங்கொண்டருளிய திருக்கோலத்துக்கு ஏற்ப அன்று உதித்த குழந்தைபோல அருட்கடலாகிய முருகக்கடவுள் பிராட்டியாரிடத்தே திருவவதாரஞ் செய்தருளினர். உடனே பிராட்டி அக்குழந்தையை எடுத்து மோந்து தழுவி, தம்முடைய நாயகரது திருக்கரத்திலே கொடுத்து, பின்பு வாங்கி, தன்முலையினின்றுஞ் சொரியாநின்ற பாலை ஊட்டினள். விட்டுணு பிரமன் இந்திரன் முதலிய தேவர்களும் முனிவர்களும் தங்கள் தங்கள் மனைவியர்களோடும் சுந்தரபாண்டியருடைய திருமாளிகையை அடைந்தார்கள். சேரனும் சோழனும் வடதேசத்தரசர்களும் குறுநிலமன்னர்களும், எண்ணில்லாத சேனைகள் சூழ வந்து, மதுரையை அடைந்தார்கள். அவர்களெல்லாரும் சுந்தரபாண்டியரையும் தடாதகைப்பிராட்டியாரையும் முறையினல் வணங்கித் துதித்து, மகிழ்ச்சிகொண்டாடினர்கள்.

சுந்தரபாண்டியர் அந்தப்பிள்ளைக்குச் சாதகர்மம் முதலியனவற்றை அரசருக்கு வேதத்தில் விதித்தபடி செய்தருளினர். வருணன் இந்திரன் மேருப்புத்தேள் என்னும்

பகைவர் மூவரும் தங்கள் வீரஞ் சிந்தித் தருக்கழியும்வண்ணம் அவர்களுக்கு அச்சத்தைத் தோற்றுவித்தற்குரிய காரணத்தினாலே உக்கிரவருமன் என்று நாமகரணஞ்செய்தருளினார். நான்காமாசத்திலே உபநிட்கிரமணமும், ஆறுமாசத்திலே அன்னப்பிராசனமும், மூன்றாம்வருடத்திலே சௌளகர்மமும், ஐந்தாம்வருடத்திலே உபநயனமும் முடித்தருளினார். பின்னர்த் தேவகுருவாகிய பிருகற்பதி பாண்டியர் பணித்தருளியவாறே வேதமுதலிய கலைகளையும் படைத்தொழில்களையும் உக்கிரவருமருக்குக் கற்பித்தார். உக்கிரவருமர் குருமுகத்தறியவேண்டும் என்னும் கொள்கையினாலே ஒருமுறை கேட்டவுடனே அறுபத்துநான்குகலைகளையும் ஒருங்கறிந்துகொண்டார். சிவபெருமானல்லாத பிறரொருவராலும் அறிவித்தலருமையால் பாசுபதாஸ்திரத் தொழின்மாத்திரம் சிவபெருமானிடத்தே தெளிந்துகொண்டார். எட்டுவயசினுள்ளே சகலகலைகளையும் நன்குணர்ந்த பண்டிதராயினார்.

பதினாறும்வயசிலே சோமசுந்தரபாண்டியர் உக்கிரவருமருடைய சரீரத்துள்ள இலக்கணங்களையும் குணங்களையும் நோக்கி, இவன் பூமண்டலமுழுதையும் பொறுக்கடிந்து அரசியற்ற வல்லன், வாழ்நாண்மிகப்பெறுவன், புகழ், நீதி, மெய்மை, சிவபத்தி, சீவகாருண்ணியம், கொடை, கல்வி, வெல்லுதற்கரியாரையும் வெல்லுதல், தேவர்களாலுஞ் செல்லுதற்கரிய தேசங்களினுஞ்சென்று திறைகொள்ளுதல் முதலிய குணங்களை உடையனாகி, உலகுக்கெல்லாம் ஒரேநாயகனாய் வாழ்வான். இவனுக்குப் பின்பு முடிசூட்டுவோம். முன்பு விவாகஞ்செய்தல் வேண்டும் என்று திருவுளங்கொண்டு, மந்திரிகளோடும் உசாவியருளினார்.

திருச்சிற்றம்பலம்.

பன்னிரண்டாவது

# உக்கிரகுமாரனுக்கு வேல் வளை செண்டு கொடுத்தபடலம்.

சுந்தரபாண்டியர் தம்முடைய அருமைத் திருக்குமாரராகிய உக்கிரவருமருக்கு விவாகஞ்செய்யக் கருதுந்திறத்தை மந்திரிகள் அறிந்து, அறிஞர்களோடுங்கூடி, மரபினும் குடியினும் செல்வத்தினும் புகழினும் நம்முடைய மகாராசாவுக்கு இசையத்தக்க குலத்தையுடைய அரசர் யாவர் என்று ஆராய்ந்து, வடதேசத்திலுள்ள மணவூரென்னு நகரத்துக்கு அரசனாகிய சூரியகுலத்துதித்த சோமசேகரனுடைய புதல்வியாகிய காந்திமதியை விவாகம்பேசக் கருதியிருந்தார்கள்.

அன்றிரவிலே சோமசுந்தரக்கடவுள் சோமசேகரராசாவுடைய கனவில் எழுந்தருளி, அரசனே, நாம் மதுரையில் எழுந்தருளியிருக்கின்ற சிவபிரான். நீ உன்புதல்வியாகிய காந்திமதியை மதுரையிற்கொண்டுபோய், சுந்தரபாண்டியனுடைய குமாரனாகிய உக்கிரவருமனுக்கு விவாகஞ்செய்து கொடுப்பாயாக என்று பணித்தருளினார். சோமசேகரராசா மனமும் முகமும் மலர்ந்து, கைகளிரண்டுங்குவிய விழித்தெழுந்து, சிவபெருமானுடைய கருணை தனக்கு எளிவந்தசெயலை நினைந்து நினைந்து, ஆனந்தவெள்ளத்தழுந்தி, பிராதக்காலத்திலே நித்தியகருமங்களை முடித்துக்கொண்டு, தன்புதல்வியைச் சேடியர்களோடு தேர்மேலேற்றி, மந்திரிகளும் நால்வகைச்சேனைகளும் சூழ விவாகத்திற்கு வேண்டுந் திரவியத்தோடு மதுரையை நோக்கி வழிக்கொண்டான்.

முன்னைநாளில் விவாகம்பேச நினைந்தபடியே மந்திரிகள் பாண்டியனுடைய சுற்றத்தாரோடு மணவூரை நோக்கி வழிக்கொண்டார்கள். வழியிலே அவர்கள் சோமசேகரராசாவைக்கண்டு, நமது பாண்டியமகாராசாவுடைய குமாரனுக்கு உன்புதல்வியை விவாகஞ்செய்து தருவாயாக என்றார்கள். அதுகேட்ட சோமசேகரராசா, தனக்குக் கனவிலே சிவபெருமான் எழுந்தருளிவந்து அருளிச்செ

ய்த வார்த்தையை அவர்களுக்குச் சொல்லி, விவாகத்து
க்கு உடன்பட்டான். அதுகேட்ட மந்திரிகள் மனமகிழ்
ந்து, அதனை முன்சென்று பாண்டியராசாவுக்கு உணர்த்
தும்பொருட்டுத் தூதர்களை விடுத்து, சோமசேகரராசா
வோடு மதுரையை அடைந்தார்கள். சோமசேகரன் சுந்த
ரபாண்டியரை வணங்க, அவர் அவனைத்தழுவி, முகமன்
கூறி, அவனுக்கு ஆசனங்கொடுத்தருளினார்.

அதன்பின் மந்திரிகள் விவாகதினம் நிச்சயித்துக்
கொண்டு, அரசர்கள் யாவருக்கும் திருமுகங்கள் விடுத்து,
மணமுரசறைவித்து, நகரமெங்கும் அலங்காரஞ்செய்வி
த்தார்கள். திருமுகம்பெற்ற அரசர்களும், முனிவர்களும்,
பிரமா விட்டுணு இந்திரன் முதலிய தேவர்களும், பிறரும்
மதுரையை அடைந்து, சுந்தரபாண்டியரையும் தடாதகை
ப்பிராட்டியாரையும் வணங்கித் துதித்தார்கள். பாண்டி
யர் அவரவருக்கு ஏற்ற வரிசை கொடுத்தருளினார். சோம
சேகரனுடைய புதல்வியாகிய காந்திமதியுடைய இலக்க
ணமனைத்தையும் பிருகஸ்பதிபகவான் நூல்வழியே ஆரா
ய்ந்து, அங்குள்ளார் யாவருக்கும் தெரிவித்தார். அதுகே
ட்ட யாவரும் மனமகிழ்ந்தார்கள்.

பின்பு உக்கிரகுமாரர் ஸ்நானஞ்செய்து, திருமணக்
கோலங்கொண்டு, மங்கலவாத்தியங்கள் ஒலிக்க வந்து,
ஆசனத்தின்மேல் எழுந்தருளியிருந்தார். மகளிர்கள் காந்
திமதியை நீராட்டி, மணக்கோலஞ்செய்து, அழைத்துக்
கொண்டுவந்து, உக்கிரகுமாரருக்கு வலப்பக்கத்தில் இரு
த்தினார்கள். அப்பொழுது சோமசேகரன் உக்கிரகுமார
ரையும் காந்திமதியையும் சிவபெருமானும் உமாதேவியு
மாக மதித்து, தன்மனைவி கரகநீர்வார்ப்ப, உக்கிரகுமார
ருடைய திருவடிகளை விளக்கி, பூமாலை சூட்டி, மதுபருக்
கம் ஊட்டி, காந்திமதியுடைய கையை உக்கிரபாண்டியரு
டைய கையிலேற்றி, வேதமந்திரத்தைச் சொல்லி, 'சூரிய
குலத்தரசனாகிய சோமசேகரன் என்னும் பெயரையு
டைய யான் சந்திரகுலத்தை விளக்கவந்த சுந்தரபாண்டி

யருடைய குமாரராகிய உக்கிரவருமனுக்கு என்புதல்வி யைக் கொடுத்தேன்' என்று தாராதத்தஞ் செய்தான். மங்கலவாத்தியங்களெல்லாம் ஆர்த்தன. கற்பகப்பூமாரி பொழிந்தன. அக்கினி வலஞ்சுழித்தெழுந்தது. மகளிர்கள் வாழ்த்தொலி யெடுத்தார்கள். உக்கிரகுமாரர் காந்திமதி யைத் திருமங்கலியந்தரித்து, பாணிக்கிரகணஞ்செய்து, விவாகச்சடங்குகளெல்லாவற்றையும் முடித்து, வீதிவலம் வருவாராகி, இம்மையே நன்மை நல்குமிறைவரையும் சொக்கநாதசுவாமியையும் மீனாக்ஷியம்மையையும் வணங்கி, மீண்டு, திருமாளிகையை அடைந்து, தாய்தந்தையர் இருவரையும் வணங்கினார். சுந்தரபாண்டியர் கலியாணத் தின்பொருட்டு வந்தவர் யாவரையும் அமுதுசெய்வித்து, நானாவரிசைகள் கொடுத்து, விடையீந்தருளினார்.

சிலநாளாயினபின் உக்கிரகுமாரரை நோக்கி, புத்திரனே, இந்திரனும் வருணனும் உனக்குப் பகைவராவர், மேருமலை தருக்கடையும், ஆதலால், இந்திரனுடைய முடி சிதறும்வண்ணம் இந்தவளையை எறிவாயாக, கடல் சுவறும்வண்ணம் இந்தவேலை விடுப்பாயாக, மேருமலை தருக் கொழியும் வண்ணம் இந்தச்செண்டினால் அடிப்பாயாக என்றுசொல்லி, அம்மூன்று படைக்கலங்களையும் கொடுத்தருளினார். உக்கிரகுமாரர் அம்மூன்றையுந் தொழுது வாங்கிக்கொண்டார்.

அதன்பின் சுந்தரபாண்டியர் உக்கிரகுமாரரை முடிசூட்டி, தம்முடைய ஆணையையும் அரசுரிமையையும் செங்கோலையும் அவருக்குக் கொடுத்து, சுமதி முதலிய மந்திரிகளை நோக்கி, மந்திரிகாள், இவனைக் கண்ணிமைபோலக் காப்பது உங்கள் கடன். இனி இவ்வரசு இவனுடையதே என்று அருளிச்செய்தார். பின் உக்கிரபாண்டியரை நோக்கி, புதல்வனே, நாம் இந்தப்பூமியை நெடுங்காலம் அரசியற்றினோம். இனி நீ இம்மந்திரிகள் சொல்லும் நீதிவழி ஒழுகி, செங்கோன்முறை செய்து, திருவோடும் பொலிக யக்கடவாய் என்று திருவாய்மலர்ந்து, தம்முடைய கண

ங்களெல்லாம் முனைவடிவமாக, தம்முடைய நாயகியாகிய தடாதகைப்பிராட்டியாரோடும் திருக்கோயிலிற்சென்று, எழுந்தருளியிருந்தார். உக்கிரபாண்டியர் தருமநூல் விதிப்படி அரசியற்றிக்கொண்டிருந்தார்.

திருச்சிற்றம்பலம்.

பதின்மூன்றாவது

## கடல்சுவறவேல்விட்டபடலம்.

உக்கிரபாண்டியர், பூமியெங்கும் வெண்குடை நிழற்ற வீற்றிருக்குநாளிலே, வேதவிதிப்படி எண்ணில்லாத யாகங்கள் செய்தார். அசுவமேதந் தொண்ணூற்றாறு செய்தபொழுது, சதமகனாகிய இந்திரன் அவர்மேற் பொறாமைகொண்டு, நாடெல்லாம் வளஞ்சுரந்து பொன்னுலகம் போலப் பொலிதலாலன்றோ இப்பாண்டியன் யாகஞ்செய்கின்றான் என்று நினைந்து, ஒரு சூழ்ச்சிசெய்து, வருணனை அழைத்து, கேளாய் வருணனே, நீ ஊழிக்காலத்திலே ஏழுலகங்களையும் ஒருங்கழிக்கும் கடலாய் உருத்துச் சென்று வளைந்து, மதுரையை அழிப்பாயாக என்றான்.

அது கேட்ட வருணன், தனக்கு மேல் விளைவதை அறியாமையால், அவ்வாறே செய்யத் துணிந்தான். அர்த்த ராத்திரியிலே சமுத்திரம் அண்டகூடத்தை எட்டிமுட்டிப் பெருக்கெடுத்து, மதுரையின் கீழ்த்திசையை நணுகும்பொழுது, சோமசுந்தரக்கடவுள் உக்கிரபாண்டியருக்குச் சொப்பனத்திலே சித்தராய்த் தோன்றி, பாண்டியனே, சமுத்திரம் உன் மதுரைநகரத்தை அழிக்கும்பொருட்டுப் பெருகி வருகின்றது; நீ விரைந்து எழுந்துபோய், உன் வேற்படையை எறிந்து, வெற்றிபெறுவாயாக என்று அருளிச்செய்தார். உடனே உக்கிரபாண்டியர், கைகளிரண்டுஞ் சிரசின்மேல் குவிய, நாத்துதிக்க, விழித்தெழுந்து, சயனத்தினின்று நீங்கி வாயில்கள் பல கடந்து, மந்திரிகளோடு விரைந்து போய், பேரொலியோடு வாராநின்ற சமுத்திரத்தைக் கண்டு, எண்ணிறந்த அதிசயத்தராய் நின்

ஞர். அப்பொழுது கனவில் வந்த சித்தர் நனவில் வந்து, அப்பனே, நீ காலந்தாழ்ப்ப நிற்பதென்னை? சமுத்திரம் போல வந்த இப்பகைவனை வலிகெடும்வண்ணம் வேற்படையை எறிந்து, பூமியைக் காப்பாயாக என்றார். உடனே உக்கிரபாண்டியர் வேற்படையை வலமாகச் சுழற்றி எறிந்தார். அவ்வேற்படை மடுத்தவுடனே சமுத்திரம் சுஃறென வறந்து, முன்னை வலிகெட்ட பகைவர் காலின் வணங்குமாறுபோலப் பாண்டியருடைய காலின் மட்டதாயிற்று. அப்பொழுது பூமியின்கண்ணே நின்ற சித்தர் மறைந்து, ஆகாயத்திலே உமாதேவியோடும் இடபாரூடராய் விளங்கி நின்றார். உக்கிரபாண்டியர் சிவபெருமானைத் தரிசித்து, அடியற்ற மரம்போலப் பூமியில் விழுந்து நமஸ்கரித்து, எழுந்து, அஞ்சலிசெய்து, துதித்துக்கொண்டு, பூமியின்மேலே நடந்து போவாராயினர். சிவபெருமான், பஞ்சதுந்துபிகள் ஒலிக்க, பூதங்கள் வணங்க, வேதகீதத்தினாலே திக்குக்களெல்லாம் செவிடுபட, தேவர்கள் துதிக்க, ஆகாயமார்க்கமாக வந்து, தமது திருக்கோயிலினுள்ளே புகுந்தருளினர். அஞ்சலிசெய்து சேவித்துக்கொண்டு அருகுற வந்த உக்கிரபாண்டியர் திருக்கோயிற்சென்று, சிவபெருமானை வணங்கி, விடைபெற்றுக்கொண்டு, மீண்டு, மகளிர்கள் அட்டமங்கலம் ஏந்த நோக்கி, தமது திருமாளிகையினுள்ளே புகுந்தார்.

மதுரைக்கும் சமுத்திரத்துக்கும் நடுவிலுள்ள வயல்கள் நகரங்களெல்லாம் சோமசுந்தரக்கடவுளுக்கே சேர்த்து, உலகுக்கெல்லாம் களைகண்ணாய் வீற்றிருந்தார்.

திருச்சிற்றம்பலம்.

பதினான்காவது

## இந்திரன்முடிமேல் வளையெறிந்தபடலம்.

உக்கிரபாண்டியர் அரசுசெய்துகொண்டிருக்குநாளிலே, கிரகநிலை பிழைத்தமையால் மழையில்லாதொழிய,

தமிழ்நாடுகண்மூன்றும் பஞ்சத்தினல் வருத்தமுற்றன. அது கண்ட சேரசோழபாண்டியரென்னும் தமிழ்வேந்தர் மூவரும் அது தீருமாறு நோக்கி, பொதியமலையிற்சென்று, அகத்திய முனிவரை அடைந்து, தங்கள் நாட்டிலே மழை வறந்தமையைச் சொன்னார்கள். அது கேட்ட அகத்திய முனிவர் கிரகநிலையை ஆராய்ந்து, அம்மூவரையும் நோக்கி, அரசர்களே, சூரியன் செவ்வாய்க்குமுன் செல்லச் சுக்கிரன் பின் செல்லுதலினலே இவ்வுலகத்தின்கண்ணே பன்னிரண்டு வருடம் மழை பெய்யாது. நீங்கள் மழை பெய்விப்போனகிய இந்திரனிடத்தே சென்று கேளுங்கள் என்றார். தமிழ்வேந்தர் மூவரும் அகத்தியமுனிவரை நோக்கி, நாம் இந்திரனிடத்தே செல்வது எங்ஙனம் என்றார்கள். அகத்தியமுனிவர் அவர்களை நோக்கி, நீங்கள் சோமவார விரதத்தை நோற்று, சிவபெருமானுடைய திருவருளைப் பெற்று, ஆகாயமார்க்கமாகச் செல்லக்கடவீர்கள் என்று, சோமவாரவிரதம் நோற்கும் முறைமையைச் சொல்லலுற்றார்:—

உத்தமதேவர்களுள்ளே உத்தமர் சிவபெருமான், உத்தமசத்திகளுள்ளே உத்தமி சிவசத்தி, உத்தமவிரதங்களுள்ளே உத்தமம் சோமவாரம் என்று உத்தமமாகிய வேத முதலிய நூல்களெல்லாம் சொல்லும். இத்துணைப் பெருஞ்சிறப்பினதாகிய சோமவாரவிரதத்தை மேரு மந்தரம் காசி முதலிய தலங்களில் இருந்து நோற்றலால் வரும் பயனினும் மதுரையிலிருந்து நோற்றலால் வரும் பயன் கோடிமடங்கு அதிகமாகும். சிவபெருமான் உமையோடு கூடுதலாற் சோமரெனப் பெயர்பெறுவர். சோமருக்கு உரிய வாரமாதலால், சோமவாரம் எனப்படும். இதுபற்றியே மதுரையினிருந்து நோற்றல் விசேடமெனப்பட்டது. இன்னும், அமாவாசியோடு கூடிய சோமவாரம் * மிக விசேடமாம். பாவத்துக்கு அஞ்சி நீதிவழியே ஈட்டிய பொருள்

* சோமவாரத்திலே உதயந்தொடங்கி இரவிலே கடையாமம் வரையும் அமாவாசி இருப்பின், அது மூன்றுகோடி சிவராத்திரியோடொக்கும். கடையாமத்தின் அரைநாழிகை இருப்பினும் நன்று.

கொண்டு நோற்கும் இவ்விரதப்பேறு ஒன்று அநந்தமாய் வளரும்.

இனி விரதவிதானஞ்சொல்வோம். கார்த்திகைமாசத்திலேனும் மார்கழிமாசத்திலேனும் மலமாசம் ஒழித்த மற்றைமாசங்களிலேனும் முதற்சோமவாரந் தொடங்கி நோற்றல்வேண்டும். பானுவாரத்தில் இரவிலே உணவின்றி நிலத்திலே நித்திரைசெய்து, வைகறையிலே எழுந்து, மீனுக்ஷியம்மையோடு கூடிய சோமசுந்தரக்கடவுளைத் திருவாலவாய்த் தானமாகிய துவாதசாந்தத்திலே தியானஞ்செய்து, சௌசம் தந்தசுத்தி முதலிய நித்தியகருமங்களெல்லாவற்றையும் முடித்து, காமமுதலிய குற்றங்களை முற்றக்கடிந்து, பொற்றாமரைவாவியை அடைந்து, விபூதி, வில்வத்தடிமண், குசை, கோமயம், திலம் என்பவற்றைச் சிரசிலே வைத்து, கையிலே பவித்திரஞ்சேர்த்தி, மனம் வாக்குக் காயமென்னும் மூன்றும் ஒருப்பாடு பொருந்தச் சங்கற்பஞ்சொல்லி, சோமசுந்தரக்கடவுளைத் தியானித்து, 'சுந்தரேசுரரே, இப்பூமியிலுள்ள தீர்த்தமெல்லாம் ஆடிய பயனை இங்கே தந்தருளும்' என்று ஸ்நானஞ்செய்து, தோய்த்துலர்ந்த வஸ்திரத்தினுலே ஈரந்துவட்டி, தோய்த்துலர்ந்தனவாய் வெண்ணிறத்தனவாய் உள்ள சுத்தவஸ்திரம் இரண்டு தரித்து, விபூதி உருத்திராக்ஷம் என்னும் சிவசின்னங்களிரண்டையும் விதிப்படி தரித்துக்கொண்டு, சோமசுந்தரக்கடவுளை வெள்ளைமந்தாரம், முல்லை, மல்லிகை, இருவாட்சி, வெள்ளெருக்கு, வெண்டாமரை முதலிய வெண்பூக்களினுலும் வில்வத்தினுலும் அறுகினுலும் அட்சதையினுலும் திலத்தினுலும் பஞ்சாக்ஷரங்கொண்டு பூசைபண்ணுக.

மந்திரங்களெல்லாவற்றுள்ளும் உயர்ந்தது பஞ்சாக்ஷரம். பத்திரபுஷ்பங்களெல்லாவற்றுள்ளும் உயர்ந்தது வில்வம். ஆதலால், இவ்விரண்டினுலும் சோமசுந்தரக்கடவுளைப் பூசைபண்ணுக. வில்வம் சிவபிரானுடைய இச்சாஞானக்கிரியை வடிவாய் உள்ளது. புழுக்கடி எச்சம் சில

ந்தி நூல் மயிர் என்னும் இவற்றோடு கூடியதும், இதழ் சுருங்கினதும், நெரிந்ததும், தானே விழுந்ததும், காற்றினால் விழுந்ததும் ஆகிய வில்வம் சாத்தலாகாது. வில்வமரத்தைத் தரிசித்து வலஞ்செய்து வணங்கின், இரவினும் பகலினுஞ் செய்த பாவம்போம். வில்வமூலத்தை அடைந்து மூன்றுநாள் ஊணும் உறக்கமும் இன்றி அரகரமுழக்கஞ் செய்பவர் பஞ்சமகாபாதகங்களினின்றும் நீங்குவர். அந்தியகாலத்திலே வில்வத்தடி மண்ணை உடம்பிலே பூசிக்கொண்டவர் சிவகதியை அடைவர்.

பூசைசெய்வோர் கைகால் சுத்திசெய்து, விபூதி ருத்திராக்ஷம் தரித்து, பிராணாயாமம் செய்து, சங்கற்பஞ்சொல்லி, புண்ணியாகம்பண்ணி, இடையூறு வாராமைப் பொருட்டு முன்னர் விநாயகரைப் பூசிக்க. அதன்பின், "சோமசுந்தரேசரே, உமது அநுஞ்ஞையினாலே சோமவாரவிரதத்தை அநுட்டிக்கின்றேன்" என்று விண்ணப்பஞ் செய்து, சத்தியஞானானந்தவடிவாகிய சோமசுந்தரக்கடவுளை, கோடிசூரியர்போலும் ஒளியையும், கோடிசந்திரர் போலும் குளிர்மையையும், பளிங்கு நிறத்தினதாய் வடகிழக்குநோக்கிய ஈசானமுகமும், பொன்னிறத்தினதாய்க் கிழக்குநோக்கிய தற்புருடமுகமும், கருநிறத்தினதாய்த் தெற்குநோக்கிய அகோரமுகமும், செந்நிறத்தினதாய் வடக்குநோக்கிய வாமதேவமுகமும், பானிறத்தினதாய் மேற்குநோக்கிய சத்தியோசாதமுகமும், ஆகிய ஐந்து திருமுகங்களையும், முகந்தோறும் மும்மூன்றாகப் பதினைந்துகண்களையும், பளிங்குநிறத்தையுடைய திருமேனியையும், பாலசந்திரனை முடித்த சடையினையும், பத்துத் திருக்கரங்களையும், அவற்றுள் வலக்கரங்களிலே சத்தி அபயம் சூலம் கட்டுவாங்கம் தமருகம் என்பனவற்றையும். இடக்கரங்களிலே வரதம் மாதுளம்பழம் சர்ப்பம் செபமாலை நீலோற்பலம் என்பனவற்றையும், இரண்டு திருவடிகளையும், முப்பத்திரண்டிலக்கணங்களையும், பதினாறுபிராயத்தையும் உடையவராகத் துவாதசாந்தத்திலே தியானித்து,

சிவலிங்கப்பெருமானை ஆசனமூர்த்திமூலத்தினாலே பூசித்து, எண்ணெய்க்காப்பு, மாக்காப்பு, மஞ்சற்காப்பு, பஞ்சகவ்வியம், பஞ்சாமிர்தம், நெய், பால், தயிர், தேன், சர்க்கரை, கருப்பஞ்சாறு, நாரத்தம்பழச்சாறு, எலுமிச்சம் பழச்சாறு, தமரத்தம்பழச்சாறு, குளஞ்சிப்பழச்சாறு, மாதுளம்பழச்சாறு, வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம், தேங்காய்த்துருவல், இளநீர், சந்தனக்குழம்பு, நவகடம் என்பவைகளாலே அபிஷேகஞ்செய்து, திருவொற்றாடை சாத்தி, சந்தனம் கஸ்தூரி புழுகு பச்சைக்கர்ப்பூரம் குங்குமப்பூ அட்சதை அறுகு வில்வம் வெண்பூக்கள் வெண்பட்டாடை இரத்தினாபரணங்கள் என்னுமிவைகளைச் சாத்துக. பஞ்சாக்ஷரத்தைப் பெண்பாலுக்கு இசைய உச்சரித்து, மீனாக்ஷியம்மையையும் இவ்வாறே பூசைபண்ணுக. பின்பு அன்னவகைகளும் கறிவகைகளும் பண்ணியங்களும் பானீயமும் நிவேதித்து, தாம்பூலமும் முகவாசமுங்கொடுத்து, தூபமும் தீபமுஞ்சுற்றி, கண்ணாடி குடை சாமரம் வெண்புடைவை ஆலவட்டம் என்பவற்றைக்காட்டி, சகத்திரநாமஞ்சொல்லி வில்வத்தினாலே அருச்சனை பண்ணுக. அருச்சனைசெய்தபின், "அடியேன் செய்யுங் குற்றங்களெல்லாவற்றையும் பொறுத்தருளும்" என்று விண்ணப்பஞ்செய்து, மும்முறை வலஞ்செய்து வணங்கித் துதித்து, விரும்பிய வரங்களை வேண்டுக.

இப்படி நோற்பவர் விவாகப்பேறு, மக்கட்பேறு, நல்வாக்கு, கல்வி, பொன், போகம், பகைவரை வெல்லுதல், நோய்நீக்கம், அகாலமரணமின்மை, அரசு முதலிய பயன்களைவேண்டிய வேண்டியபடியே பெறுவார்கள்.

பார்த்தலிங்கத்தைத் தீண்டற்கு உரியரல்லாத வைதிகப்பிராமணர் முதலியோர் இட்டலிங்கத்தை இவ்விதிப்படி பூசித்து விரதநோற்கக்கடவர். பூசைக்குரியரல்லாத சாதியார் பொருள்கொடுத்துச் சிவப்பிராமணரைக்கொண்டு சோமசுந்தரக்கடவுளை இவ்விதிப்படி பூசைசெய்வித்து விரதநோற்கக்கடவர்.

சோமவாரத்திலே சோமசுந்தரக்கடவுளுடைய சந்நிதியிலே திருவலகிடுதல், திருமெழுக்கிடுதல், சித்திரவஸ்திரங்களினாலே அலங்காரம்பண்ணுதல், சுகந்ததூபமிடுதல், நெய்விளக்கேற்றல், மாவிளக்கிடுதல் முதலிய சிவபுண்ணியங்களைச் செய்வோர் சகலபாவங்களினின்றும் நீங்கிப் போகமோக்ஷங்களைப் பெறுவர். சோமசுந்தரக்கடவுளுக்கு ஆட்டிய பஞ்சகவ்வியத்தையும் தீர்த்தத்தையும் உட்கொள்ளின், பாவங்களெல்லாம் நீங்கும், ஆகாரதோடங்கள் அற்றுவிடும்.

இச்சோமவாரவிரதம் ஐந்துவகைப்படும். அவ்வகைகளாவன, உச்சிப்பொழுதிலே உண்ணுதல், இரவிலே உண்ணுதல், உண்ணுதொழிதல், நித்திரைசெய்யாதிருத்தல், நான்குயாமமும் சிவபூசைசெய்தல் என்பவைகளாம். இவ்வைந்தும் ஒன்றுக்கொன்றதிகமாகும். இவற்றுள், முதல்வகைப்படி நோற்கச் சங்கற்பித்தோர் பிராதக்காலசந்தியும் மத்தியானசந்தியும் முடித்துக்கொண்டு, சிவபூசையும் சிவதரிசனமுஞ்செய்து, பகலிலே பதினைந்து நாழிகையின்பின் மாகேசுரபூசைசெய்து, சுற்றத்தாரோடும் புசிக்கக்கடவர். இரண்டாம்வகைப்படி நோற்கச் சங்கற்பித்தோர் பிராதக்காலசந்தி மத்தியானசந்தி சாயங்காலசந்தி என்னும் மூன்றும் முடித்துக்கொண்டு, சிவபூசையும் சிவதரிசனமுஞ்செய்து, இரவிலே மாகேசுரபூசை செய்து, சுற்றத்தாரோடும் புசிக்கக்கடவர். மூன்றாம்வகைப்படி நோற்கச் சங்கற்பித்தோர் மூன்றுசந்தியும் முடித்துக்கொண்டு, சிவபூசையும் சிவதரிசனமுஞ்செய்து, உபவாசமாகத் துயின்று, மற்றைநாட்காலையில் இரண்டுசந்தியும் முடித்துக்கொண்டு, சிவபூசையும் சிவதரிசனமுஞ் செய்து, மாகேசுரபூசைபண்ணி, சுற்றத்தாரோடு பாரணம்பண்ணக்கடவர். நான்காம்வகைப்படி நோற்கச் சங்கற்பித்தோர் மூன்றுசந்தியும் முடித்துக்கொண்டு, சிவபூசையும் சிவதரிசனமுஞ் செய்து, ஊணும் உறக்கமும் இன்றி, யாமந்தோறும் அர்ச்சனையாகஞ்செய்து, மற்றைநாட்காலையில் இரண்டு

சந்தியும் முடித்துக்கொண்டு, சிவபூசையும் சிவதரிசனமுஞ்செய்து, மாகேசுரபூசைபண்ணி, சுற்றத்தாரோடு பாரணம்பண்ணக்கடவர். ஐந்தாம்வகைப்படி நோற்கச் சங்கற்பித்தோர் மூன்றுசந்தியும் முடித்துக்கொண்டு, சிவபூசையும் சிவதரிசனமுஞ்செய்து, ஊணும் உறக்கமும் இன்றி, யாமந்தோறும் சிவபூசைசெய்து, மற்றைநாட்காலையில் இரண்டுசந்தியும் முடித்துக்கொண்டு, சிவபூசையும் சிவதரிசனமுஞ்செய்து, மாகேசுரபூசைபண்ணி, சுற்றத்தாரோடு பாரணம்பண்ணக்கடவர். பாரணம் பண்ணியபின் பகலிலே நித்திரைசெய்யாது சிவபுராணங்களைச் சிரத்தையோடு கேட்டுக்கொண்டிருக்கக்கடவர். நித்திரைசெய்தவர் சற்பிராமணர் நூற்றுவரைக் காரணமின்றிக் கொன்ற மகாபாதகத்தை அடைவர். இந்த ஐந்துவகையுள் எந்தவகைப்படி நோற்கச் சங்கற்பித்தாரோ அந்தவகைப்படி வழுவாமல் நோற்றல்வேண்டும்.

இவ்விரதநோற்குங்காலம் ஒருவருடம், இரண்டுவருடம், மூன்றுவருடம், பன்னிரண்டுவருடம், வாழ்நாளெல்லை என்பனவாம். விரதந்தொடங்கும்போது இக்காலவெல்லைகளுள் தாம் விரும்பிய காலவெல்லையைச் சுட்டிச் சங்கற்பித்துக்கொண்டு, மேற்சொல்லிய நியமம் வழுவாமல் அனுட்டிக்கவேண்டும். சங்கற்பித்துக்கொண்ட எல்லைமுடிவிலே விதிப்படி உத்தியாபனம் பண்ணல்வேண்டும். வாழ்நாளெல்லையளவும் சங்கற்பித்து நோற்பவருக்கு உத்தியாபனம் இல்லை. இடையே விடுவோரும் உத்தியாபனஞ்செய்யாதாரும் விரதபலத்தை அடையார்: ஆதலால், இடையே விடாது அனுட்டித்து, முடிவிலே உத்தியாபனம் பண்ணுக.

உத்தியாபனவிதானஞ் சொல்வாம். வெள்ளியினாலேனும் செம்பினாலேனும் சிவப்பிரதிமையும் தேவிப்பிரதிமையும் சிற்பியைக்கொண்டு செய்விக்க. பிரதிமைக்கு முப்பதுகழஞ்சு உத்தமம், இருபதுகழஞ்சு மத்திமம், பத்துக்கழஞ்சு அதமம். சிவப்பிரதிமை ஒருமுகமும், மூன்று

கண்களும், நான்குபுயங்களும், நான்குகைகளினும் மான் மழு அபய வரதங்களும், முடியிலே பாலசந்திரனும் உடையதாகச் செய்விக்க. தேவிப் பிரதிமை ஒருமுகமும், இரண்டுதோள்களும் உடையதாகவும், வலக்கை செங்கழுநீர் பிடித்ததாகவும், இடக்கை கீழே நீட்டினதாகவும் செய்விக்க. யாகமண்டபமும், அதிலே குண்டமண்டல வேதிகைகளும் விதிப்படி செய்விக்க. பானுவாரத்திலே ஒருபொழுது உண்டு, இரவில் உணவின்றித் தரையிலே துயின்று, சோமவாரத்திலே பிராதக்காலத்தில் நித்தியகருமத்தை முடித்து, மத்தியான்னந்தொடங்கிச் சாயங்காலம்வரையும் சிவபுராணங்கேட்டு, சாயங்காலந்தொடங்கி நான்குயாமமும் மண்டலத்திலும், கும்பத்திலும், சிவலிங்கத்திலும், சிவபெருமானைப் பூசைபண்ணுக. சந்நிதியிலே பிரதிமைகளையும் வைத்துப் பூசைபண்ணுக. அவ்வப்பூசைமுடிவிலே சிவமூலமந்திரத்தினாலே நூற்றெட்டாகுதி யாமந்தோறும் பண்ணுக. ஆயிரம் நாமஞ்சொல்லி ஆயிரம் வில்வஞ்சாத்துக. பஞ்சாக்ஷரத்தினாலே அருக்கியங்கொடுக்க. மூலமந்திரத்தினாலும் மற்றை மந்திரங்களினாலும் அக்கினியை வளர்த்துப் பூரணாகுதிசெய்து வேள்வியை முடிக்க. விடிந்தபின், நித்தியகருமங்களை முடித்து, பதின்மூன்று வாழையிலையின்மேலே அரிசியும் காய்கறிகளும் பரப்பி, பசுவின்பால் நிறைந்த வெள்ளைவஸ்திரத்தினால் அலங்கரிக்கப்பட்ட பதின்மூன்று குடங்களை அரிசிமேல் வைத்து, சிவார்ச்சனைக் குரிய சிவப்பிராமணர்களை வரித்து, காதணியும் மோதிரமும் கொடுத்து, சிவனாக மதித்துப் பூசித்து, தக்ஷிணையோடும் வெள்ளைப்பசு, பாதகுறடு, விசிறி, குடை, வஸ்திரம் முதலியவற்றைத் தானஞ்செய்க. பின்பு குருவை அவர்பத்தினியோடும் ஆசனத்திருத்தி, சிவபெருமானும் உமாதேவியுமாக மதித்து, அவர்களைப் பீதாம்பரம் காதணி மோதிரம் முதலியவற்றால் அலங்கரித்து, மலரினாலே பூசித்து, சிவபெருமானையும் உமாதேவியையும் ஆவாகித்துப் பூசைசெய்த வெள்ளிப்பிரதிமைகளோடும், பொன், பூமி, பசு முதலியவற்றைத்

தானஞ்செய்து, இவ்வாறே உத்தியாபனம் முடித்து, குருவினுடைய ஏவலினாலே சிவனடியார்களோடும் சுற்றத்தார்களோடும் அமுதுகொள்ளுக.

இச்சோமவாரவிரதத்தை விட்டுணு பிரமன் இந்திரன் முதலிய தேவர்களும் முனிவர்களும் பிறகணர்களும் அனுட்டித்தார்கள். மனிதரும் அனுட்டித்துப் போகத்தையும் மோக்ஷத்தையும் பெற்றார்கள். இவ்விரதத்தை அனுட்டிப்பவர் பகையும் மனத்துயரமும் நீங்கி, ஆயிரம்பிறவியிற் செய்த பாவங்கள் ஒழியப்பெற்று, எடுத்த சரீரத்திற்றானே சிவகதியை அடைவார்கள். இவ்விரதத்தை ஓதினவர்களும் கேட்டவர்களும் மனைவியரோடும் மக்களோடும் சுற்றத்தோடும் இனிது வாழ்ந்து, சுவர்க்கத்திலே பதினாலிந்திரபதத்தில் வீற்றிருப்பர்கள்.

இவ்வாறே அகத்தியமுனிவர் சொல்லக் கேட்ட தமிழ்வேந்தர் மூவரும் விடைகொண்டு, மதுரையை அடைந்து, பொற்றாமரைவாவியிலே ஸ்நானஞ்செய்து, சோமசுந்தரக்கடவுளை வழிபட்டு, சோமவாரவிரதம் அனுட்டித்தார்கள். அவ்வனுட்டானத்தினாலே வரம்பெற்று, ஆகாயமார்க்கமாகச் சென்றார்கள். இந்திரன் அதனை அறிந்து, அம்மூவரும் இருக்கும்பொருட்டுத் தன்னாசனத்திற்றாழ மூன்று சிங்காசனம் இடுவித்தான். ஆகாயமார்க்கமாகச் சென்ற அரசர் மூவரும் தேவருலகத்தை அடைந்து, இந்திரன்பக்கத்திற் சென்றார்கள். அவர்களுள், சேரனும் சோழனும் இந்திரன் காட்டிய ஆசனங்களில் இருந்தார்கள். உக்கிரபாண்டியர் இந்திரனுடைய சிங்காசனத்தில் ஏறி, ஒக்க வீற்றிருந்தார். இந்திரன் அவர்மேல் அழுக்காறடைந்து, பக்கத்திருந்த மற்றையரசரிருவரையும் பார்த்து, முகமன் கூறி, நீங்கள் வந்த காரணம் யாது என்று வினாவினான். அதற்கு அவர்கள், எங்கள் நாட்டிலே மழை மறுத்தமையால் வந்தேம் என்றார்கள். இந்திரன் அவர்கள் நாடுகளின்மாத்திரம் மழை சுரக்கும்வண்ணம் வரந்

கொடுத்து, இரத்தினுபரணங்களையும் பீதாம்பரங்களையும் கொடுத்து, நீங்கள் போங்கள் என்முன்.

அவர்கள் மீண்டபின்பு, இந்திரன், உக்கிரபாண்டியர் தன்னுசனத்தின்மேலே தருக்கினேடு ஒக்க வீற்றிருத்தலையும் பின்னும் மழை வேண்டாத பெருமிதத்தையும் நோக்கி, ஒரு சூழ்ச்சி செய்து, அவருக்கு மிகு உயர்வாகிய வரிசை செய்வான்போல, அளவில்லாதவர்கள் தாங்கி மிக மெலிந்து வருந்தும் ஒரு ஆரத்தை அவருக்குக் கொடுத்தான். உடனே அவர் அதனை வாங்கி, பூமாலைபோலத் தமது கழுத்திலே தரித்துக்கொண்டார். இந்திரன் அது கண்டு, அதிசயங்கொண்டு பாண்டியனே, இன்றுதொட்டு உன்னை ஆரந்தாங்குபாண்டியன் என்று உலகமெல்லாம் நன்குமதிக்கக்கடவது என்முன். உக்கிரபாண்டியர் அதனைச் சிறிதும் எண்ணுது, அங்கு நின்றும் இறங்கித் தமது மதுரைநகரை அடைந்தார்.

இப்பால் இந்திரனுடைய ஆணையினுலே சேரநாட்டிலும் சோழநாட்டிலும் மழை பெய்தது. பாண்டிநாடுமாத்திரம் முன்போல மழையில்லாதிருந்தது. ஒருநாள் உக்கிரபாண்டியர் தாம் பொதியமலையிற் சென்று வேட்டையாடும்பொழுது, புட்கலாவர்த்தம் முதலிய மேகங்கள் நான்கும் அம்மலைமேல் விழுந்து மேயக் கண்டு, அவைகளைப் பிடித்து விலங்கிட்டுக்கொண்டுபோய், சிறைச்சாலையில் இடுவித்தார். இந்திரன் அதுகேட்டு, மிகக்கோபங்கொண்டு, சமுத்திரம் வறக்கும்வண்ணம் வேல்விடுத்தமையையும், மிக வலிய ஆரத்தைத் தாங்கினமையையும், மேகத்தை விலங்கிட்டமையையும் நினைந்து நினைந்து, ஒரு மனிதனுக்கு இத்துணைவலி யாது என்று, மானஞ்செலுத்த, உக்கிரபாண்டியரோடு யுத்தஞ்செய்யும்பொருட்டுத் தேவர்களோடு மதுரையை வளைந்தான். அது கண்ட ஒற்றர்கள் ஓடிப்போய், உக்கிரபாண்டியருடைய திருவடிகளை வணங்கி, ஆடையொதுக்கித் தலைபணிந்து வாய்புதைத்து நின்று, மகாராசாவே, தேவசேனை நம்முடைய

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY

நகர்ப்புறத்தைச் சூழ்ந்தது என்று விண்ணப்பஞ் செய்தார்கள்.

உடனே உக்கிரபாண்டியர் கோபமும் மானமும் மிகவுடையராய், சிங்காசனத்தினின்றும் இறங்கி, நால்வகைச் சேனைகளுஞ்சூழ, யானைமேற்கொண்டு சென்றார். அவருடைய சேனைகள் நகரவாயிலை நீங்குமுன்,தேவர்கள் நெருங்கி ஆர்த்து, பல்படைக்கலங்களை விடுத்தார்கள். பாண்டியருடைய சேனைகள் படைக்கலங்களை விடுத்துத் தேவர்களைக் கொன்றார்கள். இந்திரன் அது கண்டு, அக்கினி சொரியுங் கண்ணையுடையனாகிப் பதைபதைத்து, சூரியாஸ்திரத்தை விடுப்ப, உக்கிரபாண்டியர் சந்திராஸ்திரத்தை விடுத்து அதனைத் தடுத்தார். இந்திரன் சிங்காஸ்திரத்தை விடுப்ப, பாண்டியர் சரபாஸ்திரத்தை விடுத்து அதனைத் தடுத்தார். இந்திரன் மோகாஸ்திரத்தை விடுப்ப, பாண்டியர் ஞானாஸ்திரத்தை விடுத்து அதனைத் தடுத்தார். பின்பு இருவரும் மற்போர் செய்தார்கள். இந்திரன் பாண்டியர் மேலே குலிசத்தை வீச, பாண்டியர் தமது கையிலிருந்த வளையைச் சுழற்றி வீசினார். அவ்வளை குலிசத்தை வீழ்த்தி, இந்திரனுடைய மகுடத்தைத் தள்ளிச் சிதைத்தது. உடனே இந்திரன் அஞ்சி ஓட்டெடுத்தான். முருகக்கடவுள்போல வலிய உக்கிரபாண்டியன் வீசிய வளை என்சிரசைச் சிதையாது என் முடியைச் சிதைத்தமை யான் சோமசுந்தரக்கடவுளைப் பூசித்தமையாலன்றோ என்று சிவபிரானுடைய திருவருளைப் பாராட்டினான்.

போருக்காற்றாது ஓட்டெடுத்த இந்திரன், பின்பு,உக்கிரபாண்டியருக்கு, 'தங்கள் நாட்டுக்கெல்லாம் மழைதருவேன், விலங்கை நீக்கி என்னுடைய மேகங்களைத் தருக' என்று ஓலைவிடுத்தான். ஓலைகொண்டு சென்ற தூதன் பாண்டியருடைய திருவடிகளை வணங்கி, ஒதுங்கி வாய் புதைத்து நின்று, ஓலையை நீட்ட, அங்குள்ளான் ஒருவன் வாங்கி,பாண்டியர்முன்னே வாசித்துக் காட்டினான்.பாண்டியர் அதுகேட்டு, இந்திரனுடைய வார்த்தையை நம்பா

மையால், சிறைநீக்கி மேகங்களை விடாது மறுத்தார். அப்பொழுது இந்திரனுக்கு நண்பனாகிய ஒருவேளாளன், மகாராசாவே, நான் பிணை என்று வணங்கினான். இடுக்கண் வந்து உயிருக்கு நாசம் விளையினும் வாய்மையைக் காத்துக் குற்றமற ஒழுகும் வேளாளமரபிற்பிறந்த அவனுடைய வார்த்தையை ஆப்த * வாக்கியமாகிய வேதத்தைப்போல நம்பி, உக்கிரபாண்டியர் மேகங்களைச் சிறைநீக்கி விடுத்தார். பின்பு இந்திரனுடைய ஏவலினாலே பாண்டிநாடு மாசமும்மாரி பெய்யப்பெற்று, மிகச் செழித்தோங்கியது.

திருச்சிற்றம்பலம்.

பதினைந்தாவது

## மேருவைச்செண்டாலடித்தபடலம்.

உக்கிரபாண்டியர் தமக்கு அகத்தியமுனிவர் சொன்ன சோமவாரவிரதத்தை அன்றுதொட்டு அனுட்டித்து வரலும், அவர் மனைவியாகிய காந்திமதியிடத்தே ஒரு சற்புத்திரன் அவதரித்தான். உக்கிரபாண்டியர் அப்புத்திரனுக்கு வீரபாண்டியனென்று நாமகரணஞ்செய்து, வேதமுதலிய கலைகளையும் படைத்தொழில்களையும் பயிற்றுவித்து, மகிழ்ச்சியடையுநாளிலே, கிரகநிலை திரிந்து மழை வறந்து, பருவம் மாறி, உயிர்களெல்லாம் உணவின்றிப் பசியால் வருத்தமுற்றன. உக்கிரபாண்டியர் சோதிடர்களை நோக்கி, மழை வறந்தது என்னை என்று வினவ, அவர்கள் பாண்டியரை நோக்கி, மகாராசாவே, கிரகங்கள் சூரியனை நோக்கி நிற்றலால் ஒருவருடம் மழை பெய்யாது என்றார்கள். உக்கிரபாண்டியர் குழந்தைகளுடைய நோயை நோக்கி வருந்துந் தாய்போல வருந்தி, சிவபெருமான் திருமுன் சென்று, வணங்கி, மனம் இரங்கிக் கண்ணீர் ததும்பி நின்று, பரமகருணாநிதியே, உயிர்களெல்லாம் பசியினாலே மிக வருந்துகின்றனவே என்று விண்ணப்பஞ்செய்தார்.

---

* ஆப்தன் - உள்ளதுசொல்வோன்,

MAHAMAHOPADHYAYA
DR. U. V. SWAMINATHA IYER LIBRARY.

சோமசுந்தரக்கடவுள் காலத்தின் செவ்வியை நோக்கி இரக்கமில்லாதவர்போல வாளாவிருத்தலும், உக்கிரபாண்டியர் கரையற்ற துன்பக்கடலில் வீழ்ந்து தமது திருமாளிகைக்குத் திரும்பினூர். சூரியன் அஸ்தமயமானுன்.

உக்கிரபாண்டியர் தமது குடைக்கீழ்த் தங்கும் உயிர்களுடைய பசிவருத்தம் நிறைந்த நெஞ்சினுலே முகச்செவ்வி குன்றப் பெருங்கொடுந்துயரத்தின் மூழ்கி, தரையிலே நித்திரைசெய்தார். சோமசுந்தரக்கடவுள் பாண்டியருக்குக் கனவிலே சித்தராய் எழுந்தருளிவந்து, அரசனே, இப்போது மழை பெய்யாது; நீ மழையை வேண்டி வருந்தாதொழி; மகாமேருமலையின் பக்கத்திலே ஒரு பெரிய முழையிலே எல்லையில்லாத திரவியம் இருக்கின்றது. நீ அங்கே சென்று, அம்மேருமலையை அதன் செருக்கடங்கும்வண்ணம் செண்டினுலடித்து, உன்னுணைவயத்ததாக்கி, பொன்னறையைப் பொதிந்த பாறையை நீக்கி, நீ வேண்டும்வரையும் எடுத்துக்கொண்டு, அதனை மீள அடைத்து, உன்குறியிட்டு, வருவாயாக என்று அருளிச்செய்தார்.

உடனே உக்கிரபாண்டியர் விழித்தெழுந்து, நித்தியகருமங்களை முடித்துக்கொண்டு, சோமசுந்தரக்கடவுளை வலஞ்செய்து வணங்கி, நால்வகைச்சேனைகளும் சூழ, வாத்தியங்கள் ஒலிக்க, பிராமணர்கள் ஆசி கூற, நாவலர்கள் துதிக்க, தேர்மீதேறிச் சென்று, பாண்டிநாட்டையும் சோழநாட்டையும் தண்டகநாட்டையும் தெலுங்கதேசத்தையும் கர்ணுடதேசத்தையும் மாளவதேசத்தையும் விராடதேசத்தையும் மத்தியதேசத்தையும் கடந்து, காசியை அடைந்தார். கங்காநதியிலே ஸ்நானஞ்செய்துகொண்டு, அங்குநின்று நீங்கி, அநேககாதங்கடந்தபின்னர், மனிதர் செல்லாத இடத்தைக் கடந்துசென்றூர். இவ்வாறே ஆயிரம்யோசனை அகலமுடைய இக்குமரிகண்டத்தைக் கடந்து, இதுபோல இன்னும் எட்டுக்கண்டங்கொண்ட பாரதவருடத்தைத் தள்ளி, இமாசலத்தை அடைந்து, அதனைத் தாவி, அப்புறம்போய்க் கிம்புருடவருடத்தை அடைந்து,

அதனைக்கடந்து ஏமகூடத்தை அடைந்து, அதனைக் கடந்து, அரிவருடத்தை அடைந்து, அதனைக் கடந்து அப் பாற்போய் நிடதமலையை அடைந்து, அதனைக் கடந்து, சம்புநதி பாயும் இளாவிருதவருடத்திற் சென்று, மகாமேருமலையைக் கண்டார். கண்டவுடனே, தம்முடைய சேனைகளைப் பிரிந்து போய், மகாமேருமலையை வலஞ்செய்து, தென்றிசையிலே வந்து நின்றுகொண்டு, அம்மலையை நோக்கி, "பருவதராஜாவே! நம் பிதாவாகிய சிவபெருமானுடைய வில்லே! பூமிக்குக் களைகண்ணே! கிரகங்களும் நக்ஷத்திரங்களும் வலஞ்செய்யும் மகாபருவதமே! தேவர்களுக்கு ஆலயமே!" என்றழைத்தார். அழைத்தலும், மகாமேருமலை வரவு தாழ்ப்ப, உக்கிரபாண்டியர் கோபங்கொண்டு, அம்மலையின் செருக்கடங்கும்படி அதனைச் சிகரத்திலே செண்டினால் அடித்தார். அடித்தலும், அசைவில்லாத மேருமலை அசைந்து, பொற்பந்துபோலத் துடித்தது; அதன்கொடுமுடிகளும் அவ்வக் கொடுமுடிகளிலே தேவர்கள் வசிக்கப்பெற்ற ஆலயங்களும் வெடித்தன.

உக்கிரபாண்டியர் அடித்தபின், மகாமேருபருவதம், எட்டுப்புயங்களையும் நான்கு சிரசுகளையும் ஒரு வெள்ளைக்குடையையுங் கொண்ட உருவத்தோடு எழுந்து வந்து, நாணிநின்றது. அது கண்ட உக்கிரபாண்டியர் கோபந் தணிந்து: "மேருபருவதமே! நீ இதுகாறும் வாராது தாழ்த்ததென்னை?" என்று வினவ, மேருமலை: "மகாராஜாவே! கேளும் அடியேன் நாடோறும் இவ்வுருவங்கொண்டு சென்று, மீனாக்ஷியம்மையையுஞ் சோமசுந்தரக்கடவுளையும் வழிபடு நியமம் பூண்டேன். இன்றைக்கு ஒருபெண்ணினிடத்துளதாகிய காமத்தினாலே சிவாலய சேவையை மறந்து, இதுகாறுந் தாழ்த்து நின்றேன். இப்பெருங்கொடும் பாவத்தினால் அடியும்பட்டேன். தமியேன் செய்த சிவாபராதத்தை நீர் தீர்த்தருளினீர். இதற்குத் தமியேன் செய்யுங் கைம்மாறியாது? அது நிற்க. நீர் இங்கு வந்த காரணம் யாது? சொல்லும்" என்று சொல்லிற்று.

அது கேட்ட உக்கிரபாண்டியர்: "நான் பொன்னை விரும்பி வந்தேன்" என்றார். என்றலும், மகாமேருபருவதம்: "நீர் விரும்பிய செம்பொன் அம்மாமரநிழலின்கணுள்ள அறையிலே கிடக்கின்றது" என்று கையினாலே சுட்டிக் காட்டியது. உக்கிரபாண்டியர், அப்பொன்னறையின் பக்கத்திற் சென்று, அதனை மூடிய பாறையை நீக்கித், தமது அவாவளவினதாகிய பொன்னை வாரிக்கொண்டு, முன்போல மூடி, அதன்மேலே தமது பெயரையுங் குறியையும் எழுதிவிட்டு, மீண்டு தம்முடைய சேனையை அடைந்து, தேர்மீதேறித் தென்றிசை நோக்கிச் சென்று, மலைகளையும் போகபூமிகளையும் பிறவற்றையுங் கடந்து, பரதகண்டத்தை அடைந்து, மத்தியம் விராடம் மாளவந் தெலுங்கம் என்னுந் தேசங்களிலுள்ள அரசர்களெல்லாருந் தங்கள் தங்கள் நகரங்கடோறும் வரவு நோக்கி எண்ணில்லாத சேனைகளோடும் எதிர்கொண்டெதிர்கொண்டு உபசரிக்கச் சென்று, பாண்டிநாட்டை அடைந்து, மதுராபுரிக்குச் சமீபித்தார்.

உக்கிரபாண்டியர், சோமசுந்தரக்கடவுளுடைய திருக்கோபுரத்தைக் கண்டவுடனே, விரைந்து தேரினின்றும் இறங்கி, நமஸ்கரித்து எழுந்து நடந்து, பிராமணர்களுந் துறவிகளுஞ் சைவர்களுந் திருக்கோயிற் றொண்டர்களுந் திரண்டெதிர்கொள்ள, வைகையாற்றைக் கடந்து, திருநகரத்தினுள்ளே போய்த், திருக்கோயிலிற் புகுந்து, சோமசுந்தரக்கடவுளை வலஞ்செய்து, வணங்கித் துதித்துக்கொண்டு, தமது திருமாளிகையினுள்ளே புகுந்தார்; மகாமேரு பருவதத்தினாற் கிடைத்த திரவியத்தினாலே குடிகளெல்லாவற்றையும் பாதுகாத்து, தேவர் தென்புலத்தார் சுற்றத்தார் விருந்தினர் என்னும் நால்வகையோரையும் ஓம்பிக், களிப்புற்றிருக்குநாளிலே, சிவபெருமானுடைய ஆணையினாலே நடக்குங் கிரகங்கள் தத்தந் தொழிலின் மாறுபாடொழிய, பாண்டிநாடெங்கும் மழை பெய்தது; அதனால் வளங்களெல்லாம் பெருகின; அதனால் உயிர்களெல்லாந் தழைத்தன.

இங்ஙனம் அரசாண்ட உக்கிரபாண்டியர், தம்முடைய குமாரனாகிய வீரபாண்டியனுக்கு முடி சூட்டித், தம்மரசை அவனுக்குக் கொடுத்துவிட்டு, அகண்டாகார நித்த வியாபக சச்சிதானந்தப் பிழம்பாய் நின்ற சிவத்தோடும் இரண்டறக் கலந்தனர்.

திருச்சிற்றம்பலம்.

பதினோராவது

## வேதத்துக்குப்பொருளருளிச்செய்தபடலம்.

பிரமாண்ட சிருட்டி யாரம்பகாலமாகிய கிருதயுகத்திலே, சிவபெருமானுடைய திருவாக்கினின்றும் பிரணவந் தோன்றிற்று; அதினின்றும் வேதங்களெல்லாந் தோன்றின. நைமிசாரணிய வாசிகளாகிய கண்ணுவர் கர்க்கர் முதலிய முனிவர்கள், அவ்வேதங்களை ஓதியும், அவற்றின் பொருளை அறியாது மயங்கிக், கவலையுற்றிருந்தார்கள். அப்பொழுது அரபத்தர் என்னும் ஒரு பிராமணர் வந்தார். அவரை முனிவர்கள் எதிர்கொண்டு வணங்கி, ஆசனத்திருத்தி வழிபட்டார்கள். அரபத்தர் அவர்களை நோக்கி: "முனிவிர்காள்! நீங்கள் மனம் வேறுபட்டு முகம் வாடியிருப்பதென்னை?" என்று வினாவ, முனிவர்கள்: "சுவாமீ! வேதங்களுக்குப் பொருள் உணர்த்த வல்ல ஆசாரியர் இன்மையால், மனக்கவலையுற்றேம். இதற்கு யாது செய்வேம்!" என்று விண்ணப்பஞ் செய்தார்கள்.

அது கேட்ட அரபத்தர்: "முனிவிர்காள்! வேதத்தின் பொருள், அவ்வேதத்தை அருளிச்செய்த சிவபெருமானே திருவுருக்கொண்டு வந்து உணர்த்தினன்றி, உணர்தல் கூடாது. யாதுந் தவத்தாலன்றிச் சித்தியாது. தவமும் புண்ணியதலத்தினன்றிப் பயன்படாது. புண்ணியதலங்களுள்ளுஞ் சிவதலங்களே தவத்துக்குச் சிறந்தன. சிவதலங்களுள்ளும் உத்தமோத்தம சிவதலத்திலேயே பெருந்தவம் எளிதிற் பயன்படும். உத்தமோத்தம சிவதலம்

விராட்புருடனுடைய பிரமரந்திரத்தின்றும் பன்னிரண்டங்குலம் மேற்பட்டு விளங்குஞ் சீவன்முத்தி புரமாகிய மதுரையேயாம். அம்மதுரையின்கண்ணே சோமசுந்தரக் கடவுளுடைய விமானத்துக்குத் தென்பக்கத்தில் எழுந்தருளியிருக்கும் பரமாசாரியராகிய தக்ஷிணாமூர்த்தியே உங்களுக்கு வேதப்பொருளை உணர்த்தியருள்வர். நீங்கள் சென்று அவர்சந்நிதியில் அருந்தவஞ்செய்யுங்கள்" என்றருளிச்செய்தார்.

கண்ணுவர் முதலிய முனிவர்கள், அதுகேட்டு மகிழ்ந்து, அரபத்தரை வணங்கி, அவரோடு சென்று, மதுரையை அடைந்து, பொற்றாமரைவாவியிலே ஸ்நானஞ் செய்து, சோமசுந்தரக்கடவுளையும் மீனாக்ஷியம்மையாரையும், நெஞ்சநெக்குருகக், கண்ணீர்வார, மெய்ம்மயிர் சிலிர்ப்ப, வணங்கித் துதித்துக்கொண்டு, வலஞ்செய்து, விமானத்துக்குத் தென்பக்கத்தில் வந்து, கல்லாலமரநிழலின்கண் எழுந்தருளியிராநின்ற பளிங்கு நிறமுடைய திருமேனியும், பளிங்குமலையிற் பதித்த பவளம்போலுந் திருவடிகளும், மூன்று திருக்கண்ணும், சிவந்த திருவாயும், செபமாலையையும் அமுத கும்பத்தையுஞ் சின்முத்திரையையும் வேத புத்தகத்தையுந் தரித்த நான்கு திருக்கரமும் உடைய தக்ஷிணாமூர்த்தியைத் தரிசித்து, வணங்கித் துதித்தார்கள். அமமூர்த்தியுடைய இருபத்திரண்டு பீஜரூபமாகிய மேதாவித்தையை அரபத்தரால் உபதேசிக்கப்பெற்றுக், கார்த்திகைமாசத்துப் பௌர்ணிமைமுதல் அடுத்த கார்த்திகை மாசத்துப் பௌர்ணிமைவரையும் நாடோறும் முப்பொழுதுஞ் செபித்துத், தருப்பணம் ஓமம் பிராமணபோசனஞ் செய்துகொண்டுவந்தார்கள்.

அப்பொழுது தக்ஷிணாமூர்த்தி, விபூதியும் உருத்திராக்ஷமுந் தரித்த திருமேனியும், திருப்புன்முறுவலையுடைய திருமுகமும், உத்தரீயந் தரித்த திருமார்பும், பதினாறுவயசுமுடைய ஒரு பிராமணகுருவடிவந்தரித்து, வேதத்தைச் சுரத்தோடும் உச்சரித்துக்கொண்டு, முனிவர்கள் காண

வெளிவந்து நின்றார். அது கண்ட முனிவர்கள், அவ்வாசாரியரை வணங்கித் துதித்துக்கொண்டு, ஆனந்தமாக்கடலின் மூழ்கி நின்றார்கள். அம்முனிவர்கண்மீது ஆசாரியர் திருக்கண்சாத்தி: "நம் பத்தர்களாகிய முனிவர்களே! உங்களுக்கு வேண்டுவது யாது?" என்று வினவியருள, முனிவர்கள் அஞ்சலிசெய்து: "எம்பெருமானே! அடியேங்களுஞ் சகலலோகத்தாரும் உய்யும்பொருட்டு, வேதங்களின் பொருளை இப்போது அடியேங்களுக்கு உபதேசித்தருளும்" என்று பிரார்த்தித்தார்கள். பரங்கருணைத் தடங்கடலாகிய ஆசாரியர், அம்முனிவர்களோடு திருவாலவாயுடையாராகிய சிவலிங்கப்பெருமான் சந்நிதானத்தை அடைந்து, வேதப்பொருளை அருளிச்செய்வாராயினார்:—

"முனிவிர்காள்! அதிரகசியமாயும் போகமோக்ஷமிரண்டையும் பயப்பதாயும் உள்ள வேதத்தின் பொருளை அருளிச்செய்வோம், கேளுங்கள். சுயம்புவாய், உத்தமோத்தமமாய், அநாதிகாரணமாய் விளங்காநின்ற இச்சிவலிங்கமே சகலவேதங்களுக்கும் பொருளாகும். ஒன்றேயாய், அத்துவிதமாய்ப், பரப்பிரமமாய்ப், பராற்பரமாய்ச், சத்தியஞானானந்த பரிபூரணமாய்ச், சுயம்பிரகாசமாய் உள்ளது அழிவில்லாத இச்சுந்தரலிங்கமே என்று வேதாந்தங்கள் சொல்லும். வேதமும் ஒன்றே; அதன்பொருளும் ஒன்றே. ஆயினும், சாகைகளின் பேதத்தினாலே வேதம் அனந்தபேதமாயிற்று. சோமசுந்தரக்கடவுளது மாயையினால் வேதப்பொருளும் அனந்தமாயிற்று. சிவபெருமான் ஆதியிலே பிரமாவைப் படைத்துத், தம்மிடத்தே தோன்றிய வேதங்களெல்லாவற்றையுங் கொடுத்தருளினார்; அதனாலே மூவுலகத்தும் வேதவிஞ்ஞானம் பரந்தது. சோதிமயமாய்த், தோற்ற நடு விறுதி இல்லாததாய் விளங்கும் மகாலிங்கம் எதுவோ, அதுவே பரமாகாச சரீரமாகிய பிரமமெனப்படும். அதுவே, சிருட்டி முதலிய காரணத்தினாலே, முப்பிரிவுடையதாயிற்று. கீழ்ப்பாகத்தில் ஆன்மதத்துவமும், நடுப்பாகத்தில் வித்தியாதத்துவமும், நுனிப்

பாகத்திற் சிவதத்துவமுந் தோன்றின; எல்லாப்பாகங்க ளினும் எல்லாத் தத்துவமுந் தோன்றின. பிரமா, விட்டுணு, உருத்திரர், சர்வகாரணேசுவரர் என்னும் இவர்கள் முறையே தத்துவாதிபர்கள் என்று சகலவேதங்களுஞ் சொல்லும். ஆன்மதத்துவத்தில் அகாரமும், வித்தியாதத்துவத்தில் உகாரமும், சிவதத்துவத்தில் மகாரமும், எல்லாத்தத்துவங்களிலும் விந்துவும் நாதமுந் தோன்றின. இதனாலே பிரணவோற்பத்தி சொல்லப்பட்டது. வியட்டியுஞ் சமட்டியுமாயுள்ள பிரணவத்தினின்றும், வியட்டி சமட்டியாகிய பூர் முதலிய ஏழு வியாகிருதிகளும், சிவாஞ்ஞையினாலே தோன்றின. பின் அவற்றினின்றும் வியட்டி சமட்டி ரூபிணியும், வேதஜனனியும், சிந்தித்தபொருளைத் தருவதுமாகிய முப்பதமுடைய காயத்திரி தோன்றிற்று. அதினின்றும் நான்குவேதங்களுந் தோன்றின. அவைகள் பின்னும் பலபேதங்களாக விரிந்தன. பிரணவமுதலிய மகாமந்திரங்களும், அகாரமுதலிய அக்கரங்களும், காமிகமுதலிய சிவாகமங்களும், திருவாலவாயுடையாருடைய உச்சிமுகமாகிய ஈசானத்தினின்றுந் தோன்றின. இருபத்தொருபேதமுடைய இருக்குவேதங் கிழக்குமுகமாகிய தற்புருடத்தினின்றும், நூற்றொருபேதமுடைய யசுர்வேதம் தெற்குமுகமாகிய அகோரத்தினின்றும், ஆயிரம் பேதமுடைய சாமவேதம் வடக்குமுகமாகிய வாமதேவத்தினின்றும், ஒன்பதுபேதமுடைய அதர்வவேதம் மேற்குமுகமாகிய சத்தியோசாதத்தினின்றுந் தோன்றின. வேதநான்காதலால், வர்ணாச்சிரமங்களும் நந்நான்காயின. பலவகைப்பட்ட தருமங்களும் யாகங்களும் வேதத்தின் வைபவத்தினாலே தழைப்பனவாம். வேதப்பொருளை அறிந்தவர்கள் அவைகளைச் செய்வார்கள். வேதங் கருமகாண்டமும் ஞானகாண்டமுமென இரண்டு பிரிவுடையது. அவைகளுள்ளே, கருமகாண்டம் இம்மகாலிங்க பூசாவிதியை உணர்த்தும்; ஞானகாண்டம் திருவாலவாயுடையாருடைய சச்சிதானந்தரூபத்தை உணர்த்தும். விட்டுணு முதலிய தேவர்கள் சிவபெருமானுடைய அம்சபூதர்கள்;

சர்வவியாபகராகிய சிவபெருமானே அம்சியென்று சொல்லப்படுகின்றார். எல்லாத் தேவர்களுக்குங் கொடுக்கப்படும் அவியனைத்தையும், அம்சியாகிய தாமே, ஏற்றுப் பலங் கொடுப்பர். வேதத்தில் விதிக்கப்படும் அக்கினிட்டோமமுதல் அசுவமேதம் இறுதியாகிய யாகங்களும், நித்திய நைமித்திக காமியகர்மங்களும், எல்லாத்தத்துவங்களுக்கும் உறைவிடமாகிய திருவாலவாயுடையாருடைய பூசாபேதங்களாம். இத்திருவாலவாயுடையாரைப் பூசித்தால், வேதத்தில் விதிக்கப்பட்ட கருமங்களனைத்தையும் அநுட்டித்தலால் எய்தும் பயன் கிடைக்கும். இத்திருவாலவாயுடையாரைத் தியானித்தால், வேதாந்த ஞானத்தால் எய்தும் பயன் கிடைக்கும். கருமத்தினாலே சித்தசுத்தியும், சித்தசுத்தியினாலே ஞானங்கமும், உண்டாகும். தருமமுஞ் சாந்தி தாந்தி முதலிய குணங்களும், இயமமுதலிய அட்டாங்க யோகமுமே ஞானங்கமெனப்படும். ஞானங்கங்களெல்லாவற்றுள்ளும், விபூதிதாரணம், உருத்திராக்ஷதாரணம், சிவலிங்கபூசை, சிவலிங்கப்பிரதிட்டை, சிவஸ்தலதரிசனம், குருவை வழிபடல், சிவனடியாரை வழிபடல் என்பவைகளே மிக உயர்ந்தன. அறிவுடையவர்,இவ்வுண்மையை அறிந்து, ஞானங்கங்களையே எப்பொழுதும் ஆசரிக்கக்கடவர். பிறநூல்களில் விதிக்கப்பட்ட தருமங்களினும் ஸ்மிருதியில் விதிக்கப்பட்ட தருமம் விசேடம்; ஸ்மிருதியில் விதிக்கப்பட்ட தருமத்தினும் வேதத்தில் விதிக்கப்பட்ட தருமமே விசேடம். சிவபெருமானிடத்தே தோன்றினமையால்,வேதமே பிரமாணம்; வேதத்தை முதனூலாகக் கொண்டமையால் ஸ்மிருதி பிரமாணம். சகமனைத்துஞ் சிவம் என்னு ஞானமே போகமோக்ஷங்களைக்கொடுக்கும்; அந்த ஞானத்துக்கு ஒப்பு வேறொன்றுமில்லை. நாமுணர்த்திய வேதப்பொருளனைத்தும் உங்களுக்கு நன்றாக விளங்குக" என்று திருவாய்மலர்ந்து, ஆசாரியர் சிவலிங்கத்தில் மறைந்தருளினார். கண்ணுவர் முதலிய முனிவர்களெல்லாரும் வேதப்பொருளை நன்குணர்ந்தார்கள்.

திருச்சிற்றம்பலம்.

பதினேழாவது

# மாணிக்கம்விற்றபடலம்.

வீரபாண்டியனுக்குக் காமக்கிழத்தியர்களிடத்தே தீக்குணமுடைய புதல்வர்கள் பலர் பிறந்தார்கள். குலபத்தினிக்குப் புதல்வன் இல்லாமையால், வீரபாண்டியன் கவலைகொண்டு, தானுங் குலபத்தினியுஞ் சோமசுந்தரக்கடவுளை நோக்கி, அட்டமிவிரதமுஞ் சதுர்த்தசிவிரதமுஞ் சோமவாரவிரதமும் அநுட்டித்தான். அநுட்டிக்கு நாளிலே, சிவபெருமானுடைய திருவருளினாலே, நற்குணமனைத்து நிறைந்த ஒரு சற்புத்திரன் பிறந்தான். அப்புத்திரனுக்கு ஐந்து பிராயமாயபொழுது, வீரபாண்டியன் வேட்டையாடப் போந்து, புலியால் இறந்தான். அஃதறிந்த நகரத்தார் யாவரும் அழுதார்கள். அப்பொழுது காமக்கிழத்தியர்களுடைய புதல்வர்கள், சமயம் பார்த்துப், பலவகைத்திரவியங்களையும் ஆபரணங்களையுங் கிரீடத்தையும் கவர்ந்துகொண்டு போய், மறைந்தார்கள். வீரபாண்டியனுக்கு அந்தியகருமமனைத்தும் அவன் புத்திரன் செய்து முடித்தான்.

மந்திரிமார்கள், வீரபாண்டியனுடைய புத்திரனுக்கு முடி சூட்ட நினைந்து, திரவியசாலையிலே புகுந்து தேடி, முடியையும் பல திரவியங்களையுங் காணாது திகைத்துக், கவலை கூர்ந்து, அவைகளெல்லாங் காமக்கிழத்தியர்களுடைய புதல்வர்களே கொள்ளைகொண்டு போயினார்கள் என்றறிந்து: "வேறு முடி செய்துமெனின், விலையுயர்ந்த இரத்தினங்களில்லை; அரசியல் இல்லையாயின் உலகந் துன்பமடையும். இதற்கு யாது செய்யத் தக்கது!" என்று தங்களுள்ளே ஆலோசித்துச், "சோமசுந்தரக்கடவுளுடைய திருவருளை அறிவோம்" என்று தெளிந்து, இராசபுத்திரனை அழைத்துக்கொண்டு, திருக்கோயிற் றிருக்கோபுரவாயின்முன் வருவாராயினார்கள். வருமுன், சோமசுந்தரக்கடவுள், இரத்தினப் பொதி முதுகிலே தூங்க ஒரு வைசிய வடிவங்கொண்டு, அவர்களெதிரே வந்து தோன்றினார். அங்ஙனந் தோன்றிய வைசியர், எதிர்வருவார்களை நோக்கி: "நீங்கள் கவலை கொண்ட மனத்தர்களாய் வருவ

தென்னை!" என்று வினுவினர். வினுவுதலும், மந்திரிமார்கள் முன் விளைந்தனவெல்லாம் அவருக்குச் சொல்லினர்கள். அது கேட்ட வைசியர்: "நீங்கள் கவலைகொள்ளாதொழிமின்கள். என்னிடத்தே நவரத்தினங்களும் இருக்கின்றன; அவை 'பதினுயிரகோடி பொன் பெறும்'' என்று சொல்லி, இருந்துகொண்டு நவரத்தினங்களின் இலக்கணங்களை உணர்த்தி, ஒரு கரிய வஸ்திரத்தை விரித்து, அதினடுவே மாணிக்கரத்தினத்தையுங் கிழக்கு முதலிய எட்டுத்திக்கினும் முத்து முதலிய எட்டிரத்தினத்தையும் வைத்து, வடக்கு நோக்கியிருந்து அருச்சித்து, அவைகளைக் கையாலெடுத்துக்கொண்டு, சோமசுந்தரக்கடவுளை நோக்கி: "இக்குமாரனுக்கு அளவிறந்த ஆயுளுஞ் செல்வமும் பெருகுக" என்று சொல்லிக் கொடுத்தருளினர். கொடுத்தருளலும், இராசபுத்திரன், சோமசுந்தரக்கடவுளுடைய விமானத்தை நோக்கி நமஸ்கரித்தெழுந்து, இரண்டு கையையும் விரித்து வாங்கினன். வைசியர் இராசபுத்திரனையும் மந்திரிமார்களையும் நோக்கித் திருமுகமலர்ந்து: "இவ்விரத்தினங்களினலே முடி செய்வித்து இக்குமாரனுக்குச் சூட்டி, இவனுக்கு அபிடேக பாண்டியன் எனப் பெயரிடுங்கள்" என்றருளிச்செய்தார். இரத்தினத்துக்கு விலை கொடுக்கவரு மந்திரிமார்கள், இராசபுத்திரன்மீது திருவருணேக்கமுந் திருப்புன்முறுவலுஞ் செய்துகொண்டு நின்ற வைசியரை அங்கே காணுது திகைத்தார்கள்; வைசியர், நாற்புயமும் முக்கண்ணுங் காளகண்டமுங் காட்டி, உமாதேவியாரோடு தமது திருக்கோயிலினுள்ளே புகுந்தருளக் கண்டு: "வைசியராய் வந்தவர் இச்சிவபெருமானே" என்று அவரைப் பின்றெடர்ந்து சென்றார்கள். இராசபுத்திரன் சிவசந்நிதியிலே நமஸ்கரித்தெழுந்து, கை கூப்பி நின்று: "எம்பெருமானுக்கு அடியேன் செய்யுங் கைம்மாறென்றுண்டோ! என்னுடல் பொருள் ஆவி மூன்றும் எம்பெருமானுடையனவே" என்று துதித்து, வலஞ்செய்து, விடை பெற்றுக்கொண்டு, முனிவர்கள் ஆசி கூறச் சென்று, தன்னுறைவிடம் புக்கான்.

மந்திரிமார்கள், சிவபெருமான் அருளிச்செய்த இரத்தினங்களினாலே முடி செய்வித்து, இராசகுமாரனுக்குச் சூட்டினார்கள். அவன் சிவபெருமான் அருளிச்செய்தபடியே அபிடேகபாண்டியன் எனப் பெயர் பெற்று, அவர் திருவடிகளை மறவாத சிந்தையோடு அரசு செய்துகொண்டிருந்தான். இருக்குநாளிலே, தன் பிதாவின் காமக்கிழத்தியர்களுடைய புதல்வர்களாய்த், தனக்கு மூத்தவர்களாய்த், தன் பிதாவினது திரவியசாலையைத் திறந்து முடி முதலிய பொருள்களைக் கவர்ந்து சென்று வேற்றுத் தேசத்தில் ஒளித்திருந்த பகைவர்களைச், சிலர் தன்னெதிரே கொண்டு வந்து விடுப்ப, அவர்கள் கவர்ந்த திரவியமெல்லாந் திரும்ப வாங்கிக்கொண்டான்.

திருச்சிற்றம்பலம்.

பதினெட்டாவது

## வருணன்விட்டகடலை வற்றச்செய்தபடலம்.

சித்திரைமாசத்துச் சித்திரைநக்ஷத்திரத்திலே, அபிடேகபாண்டியன், சோமசுந்தரக்கடவுளுக்கு விசேடபூசை செய்யத் தொடங்கி, நெய்முதற் சந்தனக்குழம்பீறாக அபிடேகஞ் செய்தபின்பு, பச்சைக்கர்ப்பூரசலம் அபிடேகித்து, அக்கடவுளை வியந்து நோக்கி: "எம்பெருமானே! நீர் என் கர்ப்பூரசுந்தரரேயோ!" என்றான்.

சோமசுந்தரக்கடவுளை வருடந்தோறுஞ் சித்திரைமாசத்துச் சித்திரை நக்ஷத்திரத்திலே பூசிக்கு நியமம் பூண்ட தேவேந்திரன், பாண்டியன் பூசை செய்தலைக் கண்டு, அது முடியும் வரையுந் தாழ்த்து நின்று, முடிந்தபின் பூசை செய்து, தன் சுவர்க்கத்துக்கு மீண்டான். அன்று வருணன் இந்திரனுடைய சபையை அடைந்து, அவனை நோக்கி, "இன்று நீ சிறிது வாட்டம் அடைந்திருக்கின்றாய்

இஃதென்னை!" என்றான். அதற்கு இந்திரன் "மதுரையில் எழுந்தருளியிருக்கின்ற அன்பின் வலைப்படுஞ் சிவலிங்கப் பெருமானை இன்று பூசைசெய்யத் தாழ்த்தது. அதனால் இப்போது என்னுள்ளஞ் சிறிது வியாகுலமடைந்ததுண்டு" என்றான். அதுகேட்ட வருணன்: "அச்சிவலிங்கம் மகாலிங்கமோ?" என்று வினாவினான். வினாவலும், இந்திரன்: "அச்சிவலிங்கம் முன்னே என்னுடைய பிரமப்பழியையும் வெள்ளையானையின் சாபத்தையும் நீக்கியருளினதன்றோ! அதை நீ அறிந்திலைபோலும்" என்றான். அதற்கு வருணன்: "அங்ஙனமாயின், தேவமருத்துவர்களாலுந் தீர்க்கப்படாததாய் என்னை வருத்துகின்ற பெருவயிற்றுநோயை அச்சிவலிங்கந் தீர்க்குமா?" என்று வினாவினான். இந்திரன் புன்னகை செய்து: "நீ சந்தேகங் கொண்டு வினாவியதென்னை! பிரம விட்டுணுக்களாலுந் தீர்க்கப்படாத பிறவிநோயைத் தீர்க்கவல்ல சிவபெருமான் இச்சரீரநோயைத் தீர்த்தற்கு அரியவரோ! எம்பெருமான் செய்யுந் திருவிளையாட்டை இப்போது நீ சோதி" என்றான்.

வருணன் இந்திரனை நோக்கி: "இங்கே நான் வரும்பொழுது காமதேனுவும் அதன் கன்றும் எதிர்ப்பட்டன; அப்போது கண்ட நல்ல சகுனத்தினாலே இந்த நல்லவார்த்தை கேட்டேன்" என்று சொல்லிக்கொண்டு சென்று, சோமசுந்தரக்கடவுள் செய்யுந் திருவிளையாடலைக் கண்டு தன் வயிற்றுநோயைத் தீர்க்க நினைந்து, சமுத்திரத்தை அழைத்து, "நீ மதுரைநகர முழுதையும் விரைந்து அழிக்கக்கடவாய்" என்று ஏவினான்.

உடனே சமுத்திரங் கொதித்தெழுந்து, பருவதங்களெல்லாவற்றையும் பிடுங்கித், திகந்தங்களிலே செல்லும் வண்ணம் எறிந்து, பிரளயகாலத்து வருதல்போலப் பெருக்கெடுத்து வந்தது. அது கண்ட தேவர்களெல்லாரும் அது வருணன்செயல் என்பதை அறியாதவர்களாய்: "பிரமகற்பத்தும் அழியாத இம்மதுரைத் திருநகரத்துக்கு இடையூறு வந்தது; எமது நகரத்துக்கும் இனி இடையூறு

வந்தது" என்று சோமசுந்தரக்கடவுளை வந்து வணங்கிக் கொண்டு, மனங் கலங்கி நின்றார்கள். மதுரைநகரத்துள்ளாரெல்லாரும்: "இது சோமசுந்தரக்கடவுளுடைய திருவிளையாட்டோ! நாஞ் செய்த தீவினையோ! பேருழிக்காலம் வந்ததோ!" என்று கலங்கி நடுநடுங்கினார்கள். பூமியுந் திக்குக்களும் புதையும் வண்ணம் பேரிருள்போல் வருஞ் சமுத்திரம் மதுரைத்திருநகரின் புறத்தே வரும்போது, அபிடேகபாண்டியன் கண்டு, நடுநடுங்கிச், சிவபெருமானுடைய திருவடியே புகலிடம் என்று துணிந்து, அவருடைய திருவடியில் விழுந்து: "ஓலம் ஓலம்" என முறையிட்டான். சிவபெருமான் திருப்புன்முறுவல் கொண்டு: "அஞ்சாதே அஞ்சாதே" என்று திருவாய் மலர்ந்து, தமது திருச்சடையிலுள்ள நான்கு மேகங்களையும் நோக்கி: "இந்நகரத்தை அழிக்க வருகின்ற சமுத்திரத்தைச், சுவறும்வண்ணம், நீங்கள் விரைந்து போய்ப், பருகக்கடவீர்கள்." என்று பணித்தருளினார். உடனே அந்நான்கு மேகங்களும்போய், அச்சமுத்திரத்தை வாரி உறுஞ்சின. உறுஞ்சுதலும், அச்சமுத்திரம், சிவபெருமானே முழுமுதற்கடவுள் என்று தெளிந்த மெய்யன்பர்களுடைய எழுவகைப் பிறவிக்கடல்போலப், பசையற வறந்தது. அப்பொழுது நகரத்தார்களுந், தேவர்கண் முதலியோர்களும், அபிடேகபாண்டியனும், எம்பெருமானுடைய திருவிளையாடலை நோக்கிப், பெருமகிழ்ச்சியுற்றுப், பலதரம் புகழ்ந்து பாடி, முடிவில்லாத இன்பக்கடலின் அமிழ்ந்தினார்கள்.

திருச்சிற்றம்பலம்.

பத்தொன்பதாவது

## நான்மாடக்கூடலானபடலம்.

வருணன், தன்செய்கை இழுக்கடைந்தமையால் நாணங்கொண்டு, இரண்டு கண்களுஞ் சிவப்பக் கோபாக்கினியற்றுச் சரீரம் வெம்பிச், சமுத்திரங்களும் நதிகளும்

வெந்து வற்ற வெகுண்டு நின்று, சிவபெருமானுடைய திருவிளையாடலைத் தெளியானாகி, ஏழுமேகங்களையும் அழைத்து: "நீங்கள் சமுத்திரங்களெல்லாவற்றையுங் குடித்தெழுந்து, இடித்துப் பெய்து, மதுரைநகரமுழுதையும் விரைவில் அழித்துவிடக்கடவீர்கள்" என்று பணித்தான்.

உடனே மேகங்களேழும், புகுந்து, பூமி தெரியும் வண்ணஞ் சமுத்திரமுற்றையுங் குடித்து, உடம்பு கருகி மின்னின; திக்குகளும் ஆகாயமுஞ் செவிடுபடப், பூமியும் பிலமும் பிளக்க, அட்டகுல பருவதங்களும் வெடிபட, மகாமேருமலை சாய, ஊழிக்காலத்தில் வெடிக்கும் அண்டகடாகத்தின் ஒலிபோல முழங்கின; ஆதிசேடன் தன் படங்களிலுள்ள இரத்தினங்களைச் சிந்தி உடம்பு நெளிய, அட்டதிக்கயங்களுந் தங்கள் தங்கள் நிலைகெட்டு நடுநடுங்க, இடியிடித்தன; சாம்பர்ப் பூசனிக்காய்போல ஆலங்கட்டிகளைச் சிந்தின; திரண்ட பளிங்குத் தூண்கள்போலத் தாரைகளைச் சொரிந்தன; ஆகாயமும் பூமியுந் திக்குகளுந் தெரியாவண்ணம் பரந்து இருளைக் கான்றன. அவை மதுரைத்திருநகரத்தைச் சூழ்ந்து இவ்வாறு பெய்தலும், அபிடேகபாண்டியனும் பிரசைகளும்; "உலக மழியுநாள் இதுவே" என்று மயங்கி வாடினார்கள். பாண்டியன்: "சிவபெருமானே இன்னமுங் காத்தருள்வார்" என்று தெளிந்து, விரைந்து, திருக்கோயிலிலே புகுந்து, சோமசுந்தரக்கடவுளுடைய திருவடிக்கீழ் வீழ்ந்து: "எம்பெருமானே! அடியேங்களுடைய துன்பத்தை நீக்கி அடியேங்களைக் காத்தருளுக" என்று விண்ணப்பஞ்செய்தான். செய்தலும், சோமசுந்தரக்கடவுள் முன்போலவே தமது திருச்சடையிலுள்ள நான்கு மேகங்களையும் நோக்கி: "நீங்கள் இம்மதுரைநகரத்தின் நான்கெல்லைகளையுஞ் சூழ்ந்து நான்கு மாடங்களாகி, ஏழுமேகங்களையும் விலக்குங்கள்" என்று பணித்தருளினார். உடனே அம்மேகங்களுநான்கும், நான்கு மாடங்களாகி வளைந்து, நான்கு திக்குகளையுஞ் சூழ்ந்து, சந்துவாய் தெரியாவண்ணம் ஒன்றி, ஒரு

குடிலாகி, மாடங்களுங் கோபுரங்களுஞ் செய்குன்றுக ளுங் கால்கள்போலத் தாங்கத், தாங்கள் மதுரை நகரமுழுதையும் மூடிக்கொண்டன. அந்த நான்கு மாடங்களுள்ளும், நகரத்தார்களும் மந்திரிமார்களும் பாண்டியனும் அவன்சேனைகளும் இயங்கியற்பொருள் நிலையியற்பொருள்களாகிய பிறவற்றோடுந் தாழ்ந்து, முன்னையினும் இன்பத்துள் மூழ்கிக்கொண்டிருந்தார்கள். சத்தமேகங்களும், தாங்கள் சமுத்திரம் வறப்பப் பருகிப்பருகி, அம்மாடங்கண்மேலே பெய்யுந் துளிகளெல்லாம் மலைகளிற் பெய்யுந் துளிகள்போல் உடைந்து துள்ளப் பெய்து பெய்து, தங்கள் உடல் வறப்பக் கண்டு, வெட்கி நின்றன. அது கண்ட வருணனும் வெட்கி நின்றான்.

வருணன் நடுநடுங்கி, மிக்க அச்சமு நாணமும் மேலிட, மானம் ஒடுங்க, உள்ளத்துள்ளே ஒருமகிழ்ச்சி வந்தெய்தப், பொற்றாமரைவாவிக் கரையை அடைந்தான். அடையுமுன், அவனுடைய வயிற்றுநோய் நீங்கிற்று. பின்பு அதிலே ஸ்நானஞ் செய்துகொண்டு, சோமசுந்தரக்கடவுளைப் பூசிக்கக்கருதி, விபூதியும் உருத்திராக்ஷமுந் தரித்துக், கங்கை முதலிய மகளிர்கள் பொற்கும்பங்களிலே நறுமணம் கலந்த திருமஞ்சனங் கொண்டுவந்து நீட்டக், கற்பகதரு மலர்களையுஞ் சந்தனத்தையுஞ் சுகந்தவர்க்கங்களையும் இரத்தினாபரணங்களையும் பொற்பரிவட்டங்களையும் இவைபோல்வன பிறவற்றையும் ஈன்று விடுப்பக், காமதேனு பஞ்சபலத்தையும் பஞ்சகவ்வியத்தையுந் திருவமுதையுந் தூபத்தையுந் தீபத்தையுங் கொடுப்பப்பெற்றுச், சோமசுந்தரக்கடவுளை விதிப்படி பூசித்துச், சகச்சிரநாமஞ் சொல்லி முத்துக்களைச் சாத்திப், பிரதக்ஷிணஞ் செய்து, நமஸ்கரித்து, எழுந்து நின்றான்.

சிவபெருமான் திருவுளமகிழ்ந்து: "வருணனே! நீவிரும்பியதியாது? சொல்" என்று பணித்தருளினார். வருணன் விரைந்து தாழ்ந்து: "எம்பெருமானே! தமியேன், ஒன்றினாலும் நீங்காத வயிற்றுநோய், உமது பொற்றாம

ரைவாவியின்கண்ணே ஸ்நானஞ்செய்து, இப்பொழுதே நீங்கப் பெற்றேன். வேதமுதலிய நூல்களுக்கும், பிரத்தியக்ஷம் அனுமானமுதலிய பிரமாணங்களுக்கும், பிரமன்முதலிய தேவர்கள் செய்யுஞ் சோதனைகளுக்கும் அகப்படாத பரஞ்சோதியே! ஐயோ! உம்மைச் சோதிக்கத் துணிந்தேனே. அறிவிலாதேனிடத்து யாது குணங் கண்டு என்பிணியைத் தீர்த்து யாதுபயன் பெற்றீர்! குற்றமே குணமாகக்கொள்வது உமதுகுணமோ! எம்பெருமானே! இந்திரன் காலந் தாழ்த்து உம்மைப் பூசித்து அயர்ச்சியோடு மீண்டதும், இஃதென்னை என்று தமியேன் வினவியதும், இந்திரன் அதற்கு விடைதந்ததும், அவ்விடைக்குப்பின் தமியேன் வினவியதும், அவன் சொல்லியபடியே தமியேன் உம்மைச் சோதித்ததும், எம்பெருமானே! உமது திருவருளினாலே தமியேனுடைய பிணிக்கு மருந்தாய் முடிந்தன. பெருங்கருணைக்கடலே! தமியேனுடைய உடற்பிணியாகிய வயிற்றுநோயன்றி உயிர்ப்பிணிகளாகிய மலமாயாகர்மங்களும் நீங்க, முத்திநெறியையும் பெற்றுக்கொண்டேன். இனித் தமியேனுக்கு மணியும் மந்திரமும் மருந்தும் வேறியாவையுள! மெய்ம்மையாக விசுவசிப்போருக்கு இப்பொற்றாமரைவாவியே பிணியனைத்தையுந் தீர்ப்பதன்றோ! அடியேன் முன்செய்த அபராதமிரண்டையும் பொறுத்தருளும்'' என்று விண்ணப்பஞ்செய்து, பலமுறை துதித்து வணங்கிச், சிலவரங்களைப் பெற்றுக்கொண்டு, தன்னகரத்தை அடைந்தான்.

வருணன் விடுத்த மேகங்களை விலக்கும்பொருட்டுச் சிவபெருமானது சடையினின்று நீங்கிய நான்கு மேகங்களும் நான்குமாடங்களாய்க் கூடுதலினாலே, அம்மதுரை நகரம் நான்மாடக்கூடல் எனப் பெயர்பெற்றது.

திருச்சிற்றம்பலம்.

இருபதாவது

எல்லாம்வல்லசித்தர்

# திருவிளையாடற்படலம்.

அபிடேகபாண்டியனுக்கும் பாண்டிநாட்டார்களுக்கும் போகமோக்ஷங்களைக் கொடுக்கத் திருவுளங்கொண்டு, சோமசுந்தரக்கடவுள் ஒருசித்தவடிவங் கொண்டருள்வாராயினர். வட்டமாகிய குஞ்சிச்சடையும், விபூதி தரித்த திருநெற்றியும், படிககுண்டலந் தரித்த திருச்செவியும், படிகமாலை தரித்த திருமிடறும், பூணூல் அணிந்த திருமார்பும், விபூதிப் பொக்கணந் தூக்கிய வலத்தோளும், யோகபட்டந் தரித்த இடத்தோளும், கட்டுவாங்கத்தையும் இடையிடையே பொன் கட்டிய பிரம்பையும் தரித்த திருக்கைகளும், புலித்தோலரைஞாணும், புலித்தோற் கௌபீனமும், புலித்தோலுடையும், உதர பந்தனமும், கிங்கிணியையுஞ் சிலம்பையுந் தரித்துப் பாதுகை மாட்டப்பெற்ற திருவடிகளும், திருப்புன்முறுவலோடு குறுவேர்வை அரும்புந் திருமுகமும் உடையராகிக், கடைவீதி, தெரு, நாற்சந்தி, சூளிகை, உபரிகை, மாளிகை முதலிய இடந்தோறுஞ் செல்வாராயினர். தெற்கே யிருப்பவர்போல வடக்கே போயிருப்பார்; கிழக்கே இருப்பவர் போல மேற்கே போயிருப்பார்; யாவருந் தேடிக்காணவண்ணம் மறைவார்; அதிதூரத்துள்ள பருவதத்தை அதிசமீபத்தில் வருவிப்பார்; அதிசமீபத்துள்ள பருவதத்தை அதிதூரத்திலே போக்குவார்; முதியோரை இளையோரும் இளையோரை முதியோருமாக்குவார்; ஆணைப் பெண்ணும் பெண்ணை ஆணுமாக்குவார்; மலடியைப் பிள்ளை பெறுவிப்பார்; கூன் செவிடு ஊமை குருடு முடங்களைத் தீர்ப்பார்; வெள்ளி செம்பு இரும்பு ஈயம் என்னு நான்கு லோகங்களையும் பொன்னுக்குவார்; செல்வர் வீட்டுப் பொருளெல்லாம் வறியர் வீட்டில் எய்துவிப்பார்; ஒருவரோடொருவர் சினேகிதராயுள்ளவர் தம்முள்ளே பகைத்துப் போர் செய்யப் பண்ணுவார்; எட்டிமரத்திலே நறுங்கனிகள் பழுக்கச் செய்வார்; நீர் வாராக் காலத்தில் வைகையாற்

றிலே நீர் வருவித்து, மீள வற்றச் செய்வார்; ஓடை பொய்கைகளில் உள்ள நன்னீரை உவர்நீருங் கடலிலுள்ள உவர்நீரை நன்னீரு மாக்குவார்; மாத்திரைக்கோலை ஆகாயத்திலே வீசி நிறுவி, அதன்மேல் ஊசியை நாட்டி, அதன் மேற் காற்பெருவிரலை யூன்றி ஆடுவார்; அவ்வூசிமேலே தலையும் ஆகாயத்திலே திருவடிகளுமாகச் சுழல்வார்; ஆகாயத்திலே கருடனைப்போலப் பறந்து, மேகத்தைப் பிடித்து இடியோடு நீரைப் பிழிந்து காட்டி, மீட்டும் ஆகாயத்தில் விடுப்பார்; இரவிலே தோன்றும் பொருளைப் பகலிலும் பகலிலே தோன்றும் பொருளை இரவிலுங் காட்டுவார்; அக்கினித்தம்பஞ் சலத்தம்பம் வாயுத்தம்பஞ் செய்வார்; பிரம்பினாலே தடவிக் கிழவர்களைக் குமாரர்களுங் கிழவிகளை மங்கையர்களுமாக்கிக், கருப்பமுண்டாக விபூதி கொடுப்பார்; வசிய முதலிய அட்டகருமங்களைச் செய்வார்; கல்வியில்லாதவருக்கு நாக்கிலே விபூதியைச் சிதறி, எல்லா நூல்களும் விளங்கச் செய்வார்; மிருகங்களுள்ளும் பறவைகளுள்ளும் மரங்களுள்ளும் ஒன்றை மற்றொன்றாக்குவார்; பாதாளத்துஞ் சுவர்க்கத்துமுள்ள பொருள்களனைத்தையும் மதுரையிலே காட்டுவார்.

மதுரைநகரத்தார் யாவரும், சித்தவடிவங்கொண்ட சோமசுந்தரக்கடவுள் இவ்வாறே செய்தருளிய திருவிளையாடலிலே சென்ற தத்தங் கண்ணையும் மனத்தையும் திருப்பிக்கொள்ள மாட்டாது, திகைத்துத், தத்தஞ் செய்தொழிலை மறந்திருந்தனர். இந்நிகழ்ச்சியெல்லாம், அபிடேக பாண்டியன், ஏவலாளரால் அறிந்து, சித்தசுவாமியைத் தன்னிடத்து அழைத்துக்கொண்டு வரும்பொருட்டுச், சிலரை விடுத்தான். அவர்கள் சென்று, சித்தசுவாமியை அடுத்துத், தாங்களும் அவருடைய திருவிளையாடலைப் பார்த்து வியந்துகொண்டிருந்தார்கள். பின்பு பாண்டியன் மந்திரிமார்களை விடுத்தான். மந்திரிமார்கள் சித்தசுவாமியை அடைந்து வணங்கி, அரசன்முன் எழுந்தருளும் பொருட்டுப் பிரார்த்தித்தார்கள். அதற்குச் சித்தசுவாமி:

MAHAMAHOPADHYAYA

"எமக்கு அரசனால் எய்தும் பயன் யாது!" என்று மறுத்துவிட, மந்திரிமார்கள் தொழுது மீண்டு, சித்தசுவாமி மறுத்தமையை அரசனுக்கு விண்ணப்பஞ்செய்தார்கள். அரசன்: "சர்வலோகைக நாயகராகிய சிவபெருமானுடைய திருவருளைப் பெற்று இம்மை மறுமையின்பங்களை வெறுத்த யோகிகள், இந்திரன் பிரமன் விட்டுணு முதலாயினாரையும் மதியாரே! இப்பூமியையாளும் அரசரையா மதிப்பார்!" என்று சொல்லிக்கொண்டிருந்தனன்.

திருச்சிற்றம்பலம்.

இருபத்தொராவது

## கல்லானைக்குக் கரும்பருத்தியபடலம்,

பின்பு அபிடேகபாண்டியன், தன்னுள்ளத்திலே அன்பும் அச்சமும் பெருக: "நான் பெரியவரை நன்கு மதியாது, எளியவரென அவமதித்து, இங்கே வரும்படி சொல்லியதென்னை! அவருக்கு என்ன குறை! நானே அவரைத் தேடிப் போய்த் தரிசிக்கத்தகும்" என்று உட்கொண்டான், பாண்டியனுடைய குறிப்பைச் சித்தசுவாமி அறிந்து, அதற்கு முன்னே தமது பொன்விமானத்துக்கு வடமேற்றிசையில் வந்து, எழுந்தருளியிருந்தார்.

அன்று தைச்சங்கிராந்தி புண்ணியகாலமாகப், பாண்டியன் திருக்கோயிலிற் சென்று, சோமசுந்தரக்கடவுளை வணங்கிக்கொண்டு வலம் வரும்பொழுது, அவன்முன் வருங் கஞ்சுகிமாக்கள், யோகபட்டத்தையுடையராய்க் கட்டுவாங்கத்தின் மேலே கையை வைத்துக்கொண்டு, புலித்தோலாசனத்தின்மேல் இருமாந்திருக்கும் சித்தசுவாமியைப் பார்த்து, அவர் சமீபத்தில் வந்து, பிரம்பினாலே நீக்கி: "எழுந்துபோ" என்றார்கள். பின் வரும் பாண்டியன் அப்பெரியவரைப் பார்த்து: "உமது நாடியாது? உமதூரியாது? உமது பெயரியாது? உமக்கு யாது வரும்? யாது வேண்டும்? சொல்லும்" என்றான். அதற்குச் சித்த

சுவாமி: "அப்பா நாம் எந்நாட்டினும் எந்தவூரினுந் திரிவோம், ஆயினும், இப்போது நாமிருக்குந் தலங் காசுமீர நாட்டிற் காசிநகரம். பிச்சைப்பெருவாழ்வுடையவர்களே நம்மவர்கள். நாடோறும் வித்தை செய்துகொண்டு திரிகின்ற சித்தர் நாம். இங்குள்ள சிவஸ்தலங்கள் பலவற்றையும் வணங்க வந்தோம். இந்நகரம் இம்மையிலே சீவன்முத்தியையும் மறுமையிலே பரமுத்தியையுங் கொடுக்கும். இங்குள்ளவர்களுக்கு நமது விளையாட்டைக் காட்டி, அவர்கள் விரும்பும் பல சித்திகளையுங் கொடுப்போம். வேதமுதலிய கலைகளெல்லாவற்றினும் வல்லேம், எல்லாம் வல்ல சித்தர் நாம். பாண்டியனே! உன்னிடத்தே நாம் பெறவேண்டுவதொன்றுமில்லை" என்று சொல்லி, உண்ணாமை செய்தருளினார்.

பாண்டியன்: "இவருடைய இறுமாப்பை நான் அளவிட்டறிவேன்" என்றெண்ணி, அதற்கு வேண்டுந் திறத்தை ஆலோசிப்பானாயினன். அப்பொழுது ஒரு வேளாளன், கமுகுபோற் பருத்த ஒருகரும்பைக் கொண்டு வந்து வணங்கப், பாண்டியன், அதை வாங்கிக்கொண்டு, சித்தசுவாமியைப் பார்த்து: "எல்லாம் வல்ல சித்தரென்று உம்மை மதித்தநீர், இந்தக் கரும்பை இந்தக் கல்லானை உண்ணும்படி செய்வீராயின், எல்லாம் வல்லவரும் நீரே: சோமசுந்தரக்கடவுளும் நீரே. நீர் விரும்பியது தருவேன்" என்றான். அதுகேட்ட சித்தசுவாமி திருப்புன்முறுவல் செய்து: "பாண்டியனே! வா. உன்னிடத்தே யாம் பெறவேண்டுவதியாது! உன்னுடைய நீரும் வண்ணம் நாமே உனக்கு வேண்டுவனவற்றைத் தருவேம். செல்லாவுலகத்துஞ் சென்று ஒருவித்தையைக் கற்றவர், பலரும் நன்குமதிக்கப், பயன் பெறுவர். எல்லாமறிந்த நமக்கு ஒன்றினும் ஆசையில்லை. இந்தக் கல்லானை இந்தக்கரும்பைக் கறித்தலைப்பார்" என்று சொல்லிவிட்டு, அந்தக்கல்லானையின் மீதே சிறிது கடைக்கண் சாத்தியருளினார். உடனே அக்கல்லானை, மூன்றுமதமும் பொழிந்து, வாய்திறந் தார்த்

து த், துதிக்கையை நீட்டிப், பாண்டியன்கையிலுள்ள கரும்பைப் பறித்துக் கறித்துச், சாறு கடைவாயால் வழியப் பருகித், துதிக்கையை ஆட்டித், தருக்குற்று நின்றது. சித்தசுவாமி மீண்டுங் கடைக்கண் சாத்தியருளக், கல்லானை பாண்டியன் கழுத்திலுள்ள முத்துமாலையை எட்டிப் பறித்தது. அது கண்ட கஞ்சுகிமாக்கள் கோபித்து, யானையைக் கிட்டி, அடிக்கும்படி கோலை யோங்க; சித்தசுவாமி கண் சிவந்து யானையைக் கோபித்துப் பார்த்தார். கல்யானை முத்துமாலையை உண்டது. பாண்டியன் கலங்கி வந்து, சித்தசுவாமிமீது கோபங்கொண்டான். அவன் ஏவலாளருட் சிலர் கோபித்துச் சித்தசுவாமியை அடிக்க வந்தார்கள். அப்பொழுது சித்தசுவாமி திருப்புன்முறுவல் செய்து, கையமைத்து: "நில்லுங்கள்" என்றார். அவர்கள் அடிபெயர்க்கலாற்றாது பாவைபோல நின்றார்கள். பாண்டியன், அதுகண்டு கோபமாறி, அன்பும் அற்புதமும் பொங்க: "சுவாமீ! அடியேன் செய்த பிழையைப் பொறுத்தருளும்" என்று விண்ணப்பஞ்செய்து, சித்தசுவாமியுடைய திருவடியில் வீழ்ந்தான். அன்பிற் கிரங்கும் பரங்கருணைத் தடங்கடலாகிய சித்தசுவாமி: "வேண்டும் வரத்தைக் கேள்" என்று பணித்தருள, பாண்டியன் வணங்கி: "புத்திரபாக்கியந் தந்தருளும்" என்று விண்ணப்பஞ்செய்தான். சித்தசுவாமி அது கொடுத்துத், தமது திருக்கரத்தை யானையின்மேல் வைத்து, அருட்பார்வை செய்தார். உடனே யானை பாண்டியனுக்கு முத்துமாலையைத் துதிக்கை நீட்டிக் கொடுத்தது. பாண்டியன் கைநீட்டி வாங்கினான். வாங்குமுன் சித்தசுவாமி மறைந்தருளினார். யானை முன்போலாயிற்று.

இவை கண்ட பாண்டியன், அஞ்சி, உயிர்க்குயிராகிய சோமசுந்தரக்கடவுளே இப்படி வந்து திருவிளையாடல் செய்தார் என்று தெளிந்து, திருக்கோயிலிற் சென்று, சிவலிங்கப்பெருமானுடைய சந்நிதியை அடைந்து: "எம்பெருமானே" தமியேன் உமது திருவிளையாட்டை அறியாத

ளந்தேன்" என்று அழுது வணங்கி, அபராதங் கொடுத்துக், கைகுவித்து நின்று, துதிப்பானாயினான்:—

வேதியாய்வேதவிளைபொருளாய்வேதத்தின்
நீதியாய்நீதிநெறிகடந்தநீளொளியாய்
ஆதியாயீறாய்நடுவாயவைகழிந்த
சோதியாய்நின்றாயென்சோதனைத்தோநின்னியல்பே.

நின்னான்மொழிந்தமறைநின்னடிகள்வந்திக்கும்
பன்னாளருச்சிக்கும்பாதந்தலைசுமந்தும்
உன்னாமம்வாசிக்குமுன்னையறியேனென்று
சொன்னாலடியனேன்சோதனைத்தோநின்னியல்பே.

பெரியதினும்பெரியதுமாய்ச்சிறியதினுஞ்சிறியதுமாய்
அரியதினுமரியதுமாயெளியதினுமெளியதுமாய்க்
கரியதுமாய்க்காண்பானுங்காட்சியுமாயவைகடந்த
துரியமுமாய்நின்றாயென்சோதனைத்தோநின்னியல்பே.

இப்படித் துதித்து வணங்கிக்கொண்டு, பாண்டியன் தன்கோயிலிற் சென்று, வீற்றிருந்தான். பின்பு விக்கிரம பாண்டியனைப் பெற்றுப், பலகாலம் அரசியற்றி, அவனுக்கு முடிசூட்டித், தன்னரசை அவனிடத் தொப்பித்துவிட்டுச், சிவத்தோடு கலந்தான்.

திருச்சிற்றம்பலம்.

இருபத்திரண்டாவது

## யானையெய்தபடலம்.

விக்கிரமபாண்டியன், திக்குகளினும் பூமியினும் உள்ள அரசர்களாலே திறையாகத் தரப்படுஞ் செல்வம் நிறைவெய்தக், கலியாகிய பகை ஓட்டெடுப்பச், செங்கோலோச்சி, முறைசெய்வானாயினான்; பௌத்தம் ஆருகத முதலிய புறச்சமயங்களாகிய களைகளைக் களைந்து, வேதத்தாலுஞ் சிவாகமத்தாலும் உணர்த்தப்படுஞ் சைவசமயமாகிய பயிரை வளர்ப்பானாயினான்; தன்கீழ் வாழ்வோர் யாவரும் விதிமார்க்கத்தினும் பத்திமார்க்கத்தினும் வழு

வாதொழுகி அவைகளாலே பெறற்பாலனவாகிய பயன்களைப் பெற்றுய்யும்பொருட்டு, அவர்களைத் தருமநூல்வழியே நடாத்துவானாயினான்; சோமசுந்தரக்கடவுளுடைய விமானத்தருகே வடபக்கத்திலே ஒரு திருக்கோயில் செய்வித்து, அதிலே சித்தசுவாமியுடைய திருவுருவத்தைப் பிரதிட்டை செய்து, அவருக்குத் தொண்டுசெய்வானாயினான்.

இப்படி யொழுகுநாளிலே, சூரியகுலத்துதித்த சோழராசனொருவன் காஞ்சிநகரத்துள்ளவன் சமணர்கள் போதிக்கும் புறச்சமயமாகிய ஆருகதமதத்திலே நின்றுகொண்டு பாண்டியனுக்குப் பகைவனாயினான். அவன், தான் சிவபெருமானுக்கு மெய்யடியானாகிய பாண்டியனை எதிர்த்து,பொருது வெல்லுதற்கு இயலாமையால், அவனை வஞ்சனையினாலே கொல்ல நினைத்து, அஞ்சனம், கிரவுஞ்சம், கோவர்த்தனம், திரிகூடம், காஞ்சி, யானைமலை, ஏமகூடம், விந்தம் என்னும் எட்டுமலைகளினுமுள்ள சமணகுரவர்கள் எண்ணாயிரவரையும், ஓலை விடுத்துத், தன்னிடத்துக்கு அழைப்பித்து, அவர்களை நோக்கி: "நீங்கள் அபிசாரவோமஞ் செய்து பாண்டியனைக் கொன்றீர்களாயின், எனது நாட்டிலே உங்களுக்குப் பாதி தருவேன். போய்ச் செய்யுங்கள்" என்றான். தவத்தின் மறைந்து கொலையே செய்தொழுகுஞ் சமணகுரவர்கள் அதற்குடன்பட்டுப் போய்ப், பாலியாற்றங்கரையிலே மூன்றுகாதமளவினதாகிய ஓர் வேள்விச்சாலை அமைப்பித்து, ஒருயோசனை அகலந் தோண்டி, எட்டுக் கோணமுடைய ஓரோமகுண்டஞ் செய்து, நச்சுவிறகினாலும், வேப்பெண்ணெயினாலும், நச்சுப்பிராணிகளினது மாமிசத்தினாலும், மிளகுபொடி யூறிய எண்ணெயினாலும், அபிசாரவோமஞ் செய்தார்கள். அப்பொழுது அக்குண்டத்தினின்றும் ஒரு பெரிய யானை எழுந்தது. அதைச் சமணகுரவர்கள் பார்த்து: "நீ விரைந்துபோய்ப் பாண்டியனை மதுரையோடும் அழித்துவிடக் கடவாய்" என்று சொல்லித், தென்றிசைக்குச் செல்ல ஏவிவிட்டுத், தாங்களுஞ் சோழனுடைய சேனைகளோடு அவ்வியானையைச் சூழ்ந்து சென்றார்கள்.

யானை, இடிபோலார்த்து, ஏழுகடல்போல் மதம் பொழிந்து, வடவாமுகாக்கினிபோலக் கண்ணினின்றும் அக்கினிசிந்தி, இயமனுந் திக்கியானைகளும் அஞ்சி நடுநடுங்கச் சென்று, மதுரையிற் புக்கது. அதைக் கண்டவர்கள், விரைந்து ஓடிப்போய், விக்கிரமபாண்டியனுக்கு விண்ணப்பஞ்செய்தார்கள். உடனே பாண்டியன் மனங் கலங்கித் திருக்கோயிலை அடைந்து, சோமசுந்தரக்கடவுளை வணங்கி: "எம்பெருமானே! இவ்வியானையைக் கொன்று தமியேனைக் காத்தருளும்" என்று பிரார்த்தித்தான். அப்பொழுது ஆகாயத்தினின்றும் "பாண்டியனே! நாம் ஒரு வில்வீரனாகி உன் பகைவர்கள் விடுத்த யானையைக் கொல்வேம். அதற்குமுன்னே இந்நகரத்துக்குக் கிழக்குத்திக்கிலே ஒரு அட்டாலைமண்டபஞ் செய்விக்கக்கடவாய்" என்று ஓரசரீரிவாக்கெழுந்தது. பாண்டியன் அது கேட்டு, மனமகிழ்ந்து, விரைந்து சென்று, பதினாறுதூண்களையுடைய ஓரட்டாலைமண்டபஞ் செய்வித்தான்.

சோமசுந்தரக்கடவுள், இரண்டு திருச்செவிகளினுஞ் சங்கக்குண்டலங்களிட்டுக், குடுமியிலே மயிற்றோகை சூட்டி, அரையிலே செந்நிறக்கச்சை கட்டி, உடைவாள் கட்டித், திருவடிகளிலே செருப்பு மாட்டி, முதுகிலே அம்பறாத்தூணி கட்டிப், புயத்தினிட்ட வில்லினோடுங் கருநிறமுங் காளைப்பருவமுமுடைய ஒரு வில்வீரராய்த் தோன்றி, அவ்வட்டாலைமண்டபத்தின் மீதேறிப், பாண்டியனுடைய இடுக்கணை நீக்கும்பொருட்டு அவ்வியானையின் வரவை நோக்கிக்கொண்டு நின்றார்; ஐந்து கூப்பிடுதூரத்தில் அவ்வியானை வருதலைக் கண்டு, தங்கை வில்லை வளைத்து, நாண்பூட்டித் திருவிரலினாலே தெறித்துப் பேரொலி செய்து, நாரசிங்காஸ்திரத்தைத் தொடுத்துவிட்டார்; அது விரைந்து சென்று, அவ்வியானையின் மத்தகத்தைக் கிழித்தது; யானை அலறிக்கொண்டு விழுந்திறந்தது. அது கண்ட விக்கிரமபாண்டியன், மனமிக மகிழ்ந்து, யானையோடு வந்த சமணர்களையுஞ் சேனைகளையுங் கண்டு கோபிக்க, அவன்

குறிப்பின்வழி ஒழுகும் அரசர்கள், விரைந்து போய்ச், சமணர்களை முடுக்கிக், கையிற்றண்டங்களால் அவர்களை அடித்தும், அவர்களுடைய கையிற் கரகங்களைத் தூளாகத் தகர்த்தும், அவர்கள் உடுத்த பாய்களைத் துணிபடக் கிழித்தும், பலரைக் கால்வாயில் விடுத்தும், சிலரை மானம்போக்கியும் விட்டார்கள்.

விக்கிரமபாண்டியன், அட்டாலை மண்டபத்திருந்த வில்வீரருடைய திருவடிகளைக் கையினாலே பற்றிக்கொண்டு: "எம்பெருமானே! நீர் இங்கே இப்படியே எக்காலமும் எழுந்தருளியிரும்" என்று பிரார்த்தித்தான்; சிவபெருமான் அதற்குடன்பட்டருளினார். பாண்டியன் பின்னுஞ் சில வரங்களைப் பெற்றுக்கொண்டு சென்றான். அவன், சோமசுந்தரக்கடவுளை வந்து வழிபட்டுக்கொண்டு வருநாளிலே, இராசசேகரன் என்னும் புத்திரனைப் பெற்று, அரசு செய்துகொண்டிருந்தான்.

சிவபெருமான் யானையின்மீது தொடுத்த அஸ்திரம், அங்கே நரசிங்கரூபமாக எழுந்தருளியிருந்தது. உருத்திரமூர்த்தியுடைய வீரசத்தியிலே சிலதரித்து இரணியனுடையமார்பைக் கிழித்த அந்நரசிங்கத்தை, உரோமசமுனிவர் அங்கு வந்தடைந்து, தம்பெயரால் ஒரு தீர்த்தமுண்டாக்கி, வழிபட்டு, வரம்பெற்றார். பிரகலாதனும் அங்கே தவஞ்செய்து, ஈறில்லாத வரத்தை யடைந்தான்.

திருச்சிற்றம்பலம்.

இருபத்துமூன்றாவது

## விருத்த குமார பாலரானபடலம்.

விக்கிரமபாண்டியன் அரசியற்று நாளிலே, மதுரையில் விருபாக்கன் என்னும் ஒரு பிராமணன் இருந்தான். அவன் மனைவி பெயர் சுபவிரதை. அவர்கள், நெடுங்காலம் பிள்ளையின்றி எண்ணில்லாத தருமங்களைச் செய்து, சத்தமாதர்களை வழிபட்டுத் தவம்பண்ணி, ஒரு பெண்

பெற்றார்கள். அப்பெண் பெயர் கௌரி. கௌரி, ஐந்து வயசிலே பிறவிப்பிணிக்கு அஞ்சி, அதனை நீக்கக் கருதித், தன் பிதாவை வணங்கி: "ஐயா! இப்பிறவிநோயை நீக்க வல்ல மந்திரம் யாது?" என்று வினவினாள். பிராமணன், அதிசயித்து மனமகிழ்ந்து, அப்பெண்ணுக்கு உமாதேவியாருடைய மந்திரத்தை உபதேசித்தான். முற்பிறப்பிற்றவக்குறையை முடிக்க வந்த கௌரி, அம்மந்திரத்தைச் சிரத்தையோடு நாத்தழும்பேறச் செபித்துக்கொண்டு வந்தாள். விரூபாக்கன்: "நாம் பெற்ற தவக்கொழுந்துக்கிசையக் குலசிரேட்டனாய்ப் பிரமசாரியாய் வேதவித்தாய் மகாசைவனாய் உள்ளவனொருவன் எப்போது வருவானோ!" என்று தன்னெஞ்சோடு சொல்லிக்கொண்டிருந்தான்.

கௌரிக்கு எட்டுவயசாகும் பொழுது, ஒருநாள், அயலூரின் உள்ள ஒரு வைணவப் பிரமசாரி, அங்கே வந்து பிச்சை கேட்டான். விரூபாக்கன், அவனுடைய கோத்திரமுதலியவற்றை வினவாது, தான், தவத்தினால் வருந்திப் பெற்ற கௌரியை அவனுக்குக் கொடுக்கத் துணிந்து, சலத்தை எடுத்து அவன் கையிற் பெய்தான். கௌரியினுடைய மாதாவுஞ் சுற்றத்தாரும் அதைக் கேட்டு, மனந் தளர்ந்து: "இப்பிராமணனுடைய ஊர் குலங் கோத்திரங் குடிமை சூத்திரங் கல்வி ஒழுக்கம் என்பவைகளை அறியாது, கன்னியைத் தானஞ்செய்தானே! இதற்கு யாது செய்வோம்!" என்று கலங்கி, அவனுடைய கோத்திர முதலியனவெல்லாம் ஆராய்ந்தறிந்து: "இவன் நம்மரபுக்குச் சமமாயுள்ளவனே; ஆயினும், வைணவனென்னுங் குற்றமொன்றுண்டு. தானஞ் செய்தபின் இனி மறுப்பதெங்ஙனம்! விவாகஞ்செய்துகொடுப்பதே தகுதி" என்று இசைந்தார்கள். இசைந்த பின்பு, விரூபாக்கன், வேதத்துள் விதிக்கப்பட்ட எட்டுவகை மணங்களுள்ளும் முதலாவதாகிய பிரமமணத்துக்குக் கூறிய விதிப்படி, தன் கன்னியைப் பொன்னினாலே புதைத்து, அக்கினிமுன்பு அந்தப் பிர்மசாரிக்கு விவாகஞ் செய்து கொடுத்தான்;

MAHAMAHOPADHYAYA

பின் ப்றபல வரிசைகள் செய்து, கௌரியை மணமகனோடும் அவனது நகரத்துக்கு விடுத்தான்.

வைணவப்பிராமணன் மணமகளோடு தன் வீட்டிற் புகும்பொழுது, அவனுடைய தாய் தந்தையர்கள், அம்மணமகளுடைய சிவவேடத்தையுஞ் சிவசிந்தையையும் பார்த்துப், பொறாமையினாலே தங்களுடல்போல மனமும் வெந்து, அவளை வெறுத்து, வேறாக ஒதுக்கி, நிந்தை செய்தொழுகுவாராயினார்கள்; ஒருநாள், அயலூருக்குத் தங்கள் சுற்றத்தாருடைய கலியாணத்துக்குப் போக நினைந்து, கௌரியைத் தனியே வைத்துவிட்டு, வீட்டைப் பூட்டிக்கொண்டு, தாங்கள் போனார்கள்.

மனமாசை ஒழிப்பது விபூதியே என்று உபநிடதங்கள் சொல்லக் கேட்டும் மண்ணைப் பூசும் வடிவத்தையுடைய வைணவர்கள் அகன்ற பின்பு, வீட்டிலே தனித்திருக்குங் கௌரியானவள், சிவனடியார்களைக் காணப்பெறாமையால் மனக்கவலைகொண்டு, இப்படியே சிந்திப்பாளாயினாள்: "சிவனடியாரிடத்து அன்பில்லாத மனமே இரும்பு; சிவனடியாருக்கு நாடோறுந் தொண்டு செய்யாத சரீரமே மரம்; காது கண் முதலிய ஐந்திந்திரியங்களையுஞ் சிவனடியாரிடத்துச் செலுத்தாத வடிவமே பாவை; வேதத்தினாலே துதிக்கப்படுஞ் சைவநெறியல்லாத நெறிகளே பிறவிநெறிகள்; எல்லாவுயிர்களுக்கும் உறுதிகளாயுள்ளவை இம்மை மறுமை யின்பங்களே. அவைகளைக் கொடுக்க வல்லவர், எல்லாந் தாமேயாய் உயிர்க்குயிராயுள்ள சிவபெருமானே; அவர் தம்மன்பர்களுக்கு மனம் வாக்குக் காயம் என்னும் மூன்றாலுஞ் செய்யப்படும் மெய்ப்பத்தி வழியே வந்தருள் செய்வர். அப்பத்தி வழி நிற்பவருக்குப் பிறவித்துன்பத்தை நீக்கும்பொருட்டு எடுத்த வடிவம், அவருடைய அடியாரது திருவேடமன்றோ!" என்றிப்படிச் சிந்தித்துக் கவலைகொண்டிருந்தாள்.

அப்பொழுது பெருங்கருணாநிதியாகிய சிவபெருமான், நரைதிரை முதிர்ந்த ஒரு விருத்தப் பிராமணவடி

வங்கொண்டு, விபூதி தரித்துச், சிரசினுங் காதுகளினுங் கழுத்தினும் மார்பினும் புயங்களினுங் கைகளினும் உருத்திராக்ஷமாலை தரித்துக், கையிலே ஒரு பழைய பெரிய புத்தகந் தாங்கிச், சரிந்த கௌபீனவுடையும் உத்தரீயம் இட்ட தோளும் பூணூலணிந்த மார்புந் தலை நடுக்கமுங் குனிந்தசைகின்ற திருமேனியும் ஒரு கையிற் பிடித்த குடையும் ஒருகையாலூன்றிய தண்டும் உடையவராகிப், பலநாட் போசனஞ் செய்யாத பெரும்பசியினர்போல மிக வாடி வந்து, கௌரி இருக்கும் வீட்டிற் புகுந்தார். கௌரி, அது கண்டு, மிக்க அன்போடெழுந்து, அவரை ஆசனத்திருத்தி, நமஸ்கரித்தெழுந்து, அஞ்சலி செய்து நின்று: "எம்பெருமானே! உம்மை இங்கே தரிசிக்கத் தமியேன் என்ன மாதவஞ் செய்தேனோ!" என்றாள். விருத்தப்பிராமணர்: "பசித்து நாம் உன்னிடத்துக்கு வந்தேம்" என்றார். அதற்குக் கௌரி: "நம்மவர்கள் வீட்டைப் பூட்டிக்கொண்டு போய்விட்டார்களே" என்றாள். விருத்தப் பிராமணர்: "நீ உன் கையினாலே தொடுமுன், பூட்டிய பூட்டு விடும். நீ திறந்து விரைந்து சமைக்கக்கடவாய்" என்றார். தவக்கொழுந்தாகிய கௌரி அப்படியே செய்து, மடைப்பள்ளியினுள்ளே புகுந்து, சமையல் பண்ணிப், புறத்து வந்து: "எம்பெருமானே! திருவமுதுசெய்ய எழுந்தருளும்" என்று விண்ணப்பஞ்செய்து, அவருடைய் திருவடிகளை விளக்கி, அந்தத் தீர்த்தத்தைத் தன்சிரசின் மீது தெளித்து, அவரை உள்ளே புகுவித்து, ஆசனத்திருத்தி, அன்னங் கறி முதலியவற்றைப் படைத்து நறுமலர்களினால் அருச்சித்துத், தூபதீபங்களுங் கர்ப்பூராராத்திரிகமுங் காட்டி, நமஸ்கரித்து, இன்சொற்களைச் சொல்லித், திருவமுது செய்வித்தாள்.

விருத்தப் பிராமணர், திருவமுது செய்தருளியவுடனே, மூப்பும் விபூதிதாரணமும் உருத்திராக்ஷதாரணமும் நீங்கிப், பதினாறு பிராயமும் மன்மதனையும் வென்ற அழகும் உடையதாய்க் கலவைச்சாந்தணிந்து இரத்தினாபரணங்கள் தரித்ததாயுள்ள ஒரு காளைவடிவங் கொண்டிரு



MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY

ந்தார். கற்பினிற்சிறந்த கௌரி, அது கண்டு, நடுநடுங்கிக், கை நெரித்துத், திகைத்து, வேர்த்துக், கூசி, ஒருபுறத்தே ஒதுங்கி நின்றாள். அப்பொழுது கலியாணத்தின்பொருட்டு அயலூருக்குச் சென்ற வைணவர்கள், மீண்டு வந்து, வீட்டிற் புகுந்தார்கள். புகுதலும், காளைவடிவினராய் இருந்த அந்தப்பிராமணர், நெற்றியில் விபூதியணிந்த ஒரு குழந்தை வடிவங்கொண்டு, காற்பெருவிரலைச் சுவைத்துக், கண்ணீர் ததும்ப வாய்விட்டழுதுகொண்டு, ஆடையின் மீது கிடந்தருளினார். கௌரியினுடைய மாமி, அது கண்டு, கௌரியை நோக்கி: "இக்குழந்தை ஏது" என்று கேட்டாள். அதற்குக் கௌரி: "தத்தனுடைய மனைவி, இங்கு வந்து, 'இக்குழந்தையைச் சிறிதுபோது பார்த்துக்கொள்' என்று வைத்துவிட்டுப் போனாள்" என்றாள்; என்னுமுன், மாமியும் மாமனும், மனங்கலங்கக் கண்கள் சேப்பக் கோபித்து: "எலும்புகளைப் பூண்டு சுடுகாட்டில் ஆடுகின்ற உருத்திரனிடத்தே அன்பு பூண்டவனுடைய குழந்தையின்மேலே நீ பிரீதியுடையவளாய் இருக்கின்றாய். நீயும் எமக்காகாய்" என்று சொல்லிக், கௌரியைக், குழந்தையையுங் கொண்டு வீட்டை விட்டுப் போம்படி, துரத்தினார்கள். தாயில்லாப் பிள்ளைமுகத்தைப் பார்த்துத் தெருவினிடத்தே தளர்கின்ற கௌரி, சோமசுந்தரக்கடவுளைத் தன்மனசினுள்ளே தியானித்துக்கொண்டு, உமாதேவியாருடைய மந்திரத்தை உச்சரித்தாள். உச்சரித்தலும், அழுத குழந்தை, ஆகாயத்திலே இடபவாகனத்தின்மேலே சிவபெருமானைத் தோன்றக் கண்டாள். சிவபெருமான், தமதிடப்பாகத்துள்ள உமாதேவியாருடைய மந்திரத்தைச் செபித்த அந்தக் கௌரியை, அவ்வுமாதேவியின் வடிவாக்கிப், பலருங் கண்டு வணங்க, இடபத்தின்மேலேற்றித், தேவர்கள் பூமாரி பொழிய, ஆகாயமார்க்கமாக எழுந்தருளினார். பூமியிலுள்ளோர்கள் களிப்புற்று அதிசயித்தார்கள்.

திருச்சிற்றம்பலம்.

## இருபத்துநான்காவது

# மாறியாடின படலம்.

விக்கிரமபாண்டியன், தன்புத்திரனாகிய இராசசேகர பாண்டியனுக்கு முடி சூட்டிவிட்டுத், தான் சிவலோகத்தை அடைந்தான். இராசசேகரபாண்டியன், சிவபெருமான் ஆனந்தவடிவமாய் வெள்ளியம்பலத்தின்கண் நின்று செய்தருளுந் திருநிருத்தத்தில் வைத்த அன்பு மிகுதியினாலே பரதநூலொன்றொழித்து, மற்றை யறுபத்துமூன்று கலைகளையுங் கற்றுச், செங்கோலோச்சி அரசியற்றுவாராயினான்.

அந்நாளிலே, சோழநாட்டிலே, கரிகாற்சோழனென்பவன், அறுபத்துநான்கு கலைகளும் பயின்றுகொண்டு, திருவானைக்காவில் எழுந்தருளியிருக்கின்ற சிவபெருமானுக்கு அன்பு பூண்டவனாய், அரசு செய்வாராயினான். அச்சோழனுடைய வாயிலிலுள்ள ஒரு புலவன் வந்து, இராசசேகர பாண்டியனைக் கண்டு: "மகாராசாவே! எம்முடைய கரிகாற்சோழனுக்கு அறுபத்துநான்கு கலைகளும் வரும்; உனக்கு அவைகளுள் ஒன்று வராது; அது பரதநூல்" என்றான். அவ்வார்த்தை மானத்தை மிக மூட்ட, இராசசேகரபாண்டியன், ஆகுலத்தின் மூழ்கிய மனத்தனாகிச்: "சிவபெருமானுடைய நடனத்தை நானும் ஆடுதற்கு மனம் விரும்பியதே; இதுவும் எம்பெருமானுடைய திருவருளே" என்று நினைந்து, பரதநூலைக் கற்று அவ்வழியே பரதமும் பயின்று வல்ல புலவர்களை வருவித்து, அவர்களுக்கு வேண்டுவனவற்றையெல்லாம் வெறுப்ப வெறுப்பக் கொடுத்துப், பரதநூலுங் கசடறப் பயின்றான்.

பாண்டியன், இக்கூத்துப் பயிலும்பொழுது தன்னுடம்பிலே மிக வருத்த நோயடைந்து: "இந்த வருத்தம் வெள்ளியம்பலத்தாடுஞ் சிவபெருமானுக்கும் உண்டே. பிரம விட்டுணுக்களாலுங் காணப்படாத திருவடிகளுள் ஒன்றே நோவும்வண்ணம் நெடுங்காலம் நிற்கின்றதே. ஐயையோ! இக்கூத்தைக் கற்று வருத்தமுற்றறிந்தும்,

இதை நான் பார்த்துக்கொண்டிருப்பதா தருமம்! பிறவிக் கடற் கரைகாணுநாள் வந்தடுப்பவர் யாவராயினும், அவருக்கெல்லாம் போகமோக்ஷங்களைக் கொடுத்தருளும் எம்பெருமான் செய்யும் இந்தக்கூத்தை நான் எப்படிப்போய்த் தடுப்பது! இது தகாது; ஆயினும், அருமைத் திருவடி வருந்துமே" என்று சிந்தித்து வருத்தமுற்றான். பின்பு: "இதற்கிதுவே துணிவு" என்று நினைந்து எழுந்து போய்ச், சிவராத்திரியிலே திருக்கோயிலை அடைந்து, சிவபெருமானுக்கு நான்கு யாமமும் விசேடபூசை செய்வித்து, வெள்ளியம்பலத் திருக்கூத்தைத் தரிசித்து வணங்கிக், கண்ணீர் சோரச் சிரசின்மீது கை கூப்பி நின்று: "எம்பெருமானே! நின்ற திருவடியை எடுத்து வீசி, எடுத்த திருவடியைக் கீழே யூன்றி, இன்றைக்கு அடியேன் காணும்படி மாறியாடித், தமியேனுடைய வருத்த முழுதையுந் தீர்த்தருளும்; அங்ஙனஞ் செய்யாதொழிவீராயின் அடியேன் இறந்துவிடுவேன்" என்று விண்ணப்பஞ் செய்துகொண்டு, சிவபெருமானெதிரே தன் உடைவாளை நாட்டி, அதின்மேலே குப்புற விழப் புகுந்தான். புகுமுன், அன்பிற்கெளியராகிய சிவபெருமான், தமதிடப்பாதத்தை யூன்றி, வலப்பாதத்தை எடுத்து வீசி, மாறியாடிக் காட்டினார்: பாண்டியனுடைய மனக்கவலையையும் மும்மலத்தையும் ஓட்டினார்; அவனைப் பரமானந்தக் கடலிலே வீழ்த்தினார். பேரின்பக் கடலுள் வீழ்ந்த பாண்டியன், தன் மனம் வாக்குக்காயம் என்னும் மூன்றுஞ் சிவபெருமானுடையனவேயாக, அன்பே வடிவமாய் நின்று, இங்ஙனந் துதிப்பானாயினான்:—

பெரியாய்சரணஞ்சிறியாய்சரணங்
கரியாகியவங்கணனேசரணம்
அரியாயெளியாயடிமாறிநடம்
புரிவாய்சரணம்புனிதாசரணம். (க)

நதியாடியசெஞ்சடையாய்நகைவெண்
மதியாய்மதியாதவர்தம்மதியிற்
பதியாய்பதினெண்கணமும்பரவுந்
துதியாய்சரணஞ்சுடரேசரணம். (உ)

பழையாய்புதியாய்சரணம்பணிலக்
குழையாய்சரணங்கொடுவெண்மழுவாள்
உழையாய்சரணம்முருகாதவர்பால்
விழையாய்சரணம்விகிர்தாசரணம். (௩)

இருளாய்வெளியாய்சரணம்மெனையும்
பொருளாகநினைந்துபுரந்தரன்மால்
தெருளாதநடந்தெரிவித்தெனையாள்
அருளாய்சரணம்மழகாசரணம். (௪)

அயனத்தனெனப்படுமாடரவச்
சயனத்தவனைத்தருதத்துவநால்
வயனத்தவவானவர்வானவசேல்
நயனத்தவணாயகனேசரணம். (௫)

இப்படித் துதித்து வணங்கி: "இந்தத் திருநடம் யாவரும் தரிசிக்கும்படி எக்காலத்தும் இப்படியே நின்றருளல் வேண்டும்; அடியேன் வேண்டும் வரம் இது" என்று விண்ணப்பஞ்செய்து, வணங்கினான். சிவபெருமான், அன்று தொடங்கி இன்றுவரையும் அம்மாறியாடுந் திருக்கோலத்தினராயே, நின்றருளுகின்றார்.

திருச்சிற்றம்பலம்.

இருபத்தைந்தாவது

## பழியஞ்சினபடலம்.

சிலகாலஞ் சென்றபின்பு, இராசசேகரபாண்டியன், தன் புத்திரனாகிய குலோத்துங்கபாண்டியனுக்குத் தன்னரசைக் கொடுத்துவிட்டுத், தான் வெள்ளியம்பலத்தின் கண்ணே திருநிருத்தஞ் செய்தருளுஞ் சிவபெருமானுடைய திருவடி நிழலிற் கலந்து, பேரின்பமுற்றான்.

குலோத்துங்கபாண்டியன், நாடோறுஞ் சோமசுந்தரக்கடவுளை அன்போடு வழிபடு நியமம் பூண்டான். அவனுக்கு மனைவியர் பதினாயிரவர். அப்பதினாயிரவருக்கும், ஒவ்வொருத்திக்கு அவ்வாறு குமாரராக, அறுபதினாயிரங் குமாரர்கள் பிறந்தார்கள். அவர்களுள்ளே முதற் பிறந்தவன் பெயர் அனந்தகுணன்.

அக்குலோத்துங்கபாண்டியன் அரசியற்றுநாளிலே, திருப்புத்தூரினின்றும் ஒரு பிராமணன், தன் மனைவியோடுங் குழந்தையோடுந் தன் மாமனிடத்துக்கு மதுரையை நோக்கிக், காட்டுமார்க்கமாக வருவானாயினான். வரும்பொழுது, தண்ணீர்த்தாகங்கொண்டு வருந்துகின்ற மனைவியை, வழியிலே நிற்கும் ஓராலமரநிழலின் கீழே, குழந்தையுடன் இருத்திவிட்டுத், தான் சலந்தேடிப் போயினான். அவ்வாலமரத்தின்மேலே முன்னாளில் எய்யப்பட்ட ஒரு கூரிய பாணங் கோப்புண்டு கிடந்தது. காற்று வீசுதலினாலே அப்பாணம் விழுந்து, அங்கிருந்த பார்ப்பனியுடைய வயிறுருவத் தைத்தது. தைத்தலும், அவளிறந்தாள். அப்பொழுது அம்பு தொடுத்த வில்லையுடைய ஒரு வேடன், வெய்யிலுக்கொதுங்கு நிழல் தேடி, அவ்வாலமர நிழலில் வந்து, பக்கத்தில் இளைப்பாற நின்றான். தண்ணீருக்குப் போன பிராமணன், தண்ணீர் கைக்கொண்டு திரும்பி வந்த பொழுது, இரத்தம் பெருக இறந்து கிடந்த பார்ப்பனியைக் கண்டு, சமீபத்திற் சென்று, மனங் கலங்கி அறிவழிந்து: "இவளைக் கொன்றவர் யாவரோ!" என்று தேடினான்; அப்பொழுது அம்மரத்தின் ஒருபக்கத்திலே நின்ற வேடனைக் கண்டு: "இவ்வேடன் அம்பு தொடுத்த வில்லோடு நிற்கின்றான். இவனே என் மனைவியைக் கொன்றவன்" என்று நினைந்து: "அடா! என் மனைவியைக் கொன்றவன் நீயே" என்று சொல்லிப் பாண்டியன்மே லாணையிட்டு, அவ்வேடனை வலிந் தழைத்துக்கொண்டும், பிரேதத்தைத் தன் முதுகிலிட்டுக்கொண்டும், குழந்தையைத் தன்னரையில் அணைத்துக்கொண்டும், தாய்முலைப்பாலை விரும்பி அழுகின்ற குழந்தையைக் காணுந்தோறுங் கண்ணீர் சோர விம்மி விம்மி அழுதுகொண்டும், சீக்கிர நடந்து, மதுரையை அடைந்தான்.

பிராமணன், பாண்டியனுடைய வாயிலிற் சேர்ந்து, வேடனை முன் விட்டுப், பிரேதத்தைக் கீழே போட்டு, வாயிற்காவற்காரர்கள் கேட்கக் கண்களினின்றும் அக்கினி

சிந்தக் கையோங்கி நின்று: "மகாராசாவே! முறையோ முறையோ! அரசனுறங்கும் பொழுதும் அவனுடைய ஆணையினால் உலகமெல்லாந் தருமநெறி வழுவாமற் காக்கப்படும் என்பர்கள் பெரியோர்கள். இவ்வேடன் செய்த கொலையைக் காவாதபோது அது எப்படிப் பொருந்தும்" என்றான்.

வாயிலாளர்கள் பாண்டியன் முன்பு போய்: "மகாராசாவே! நங்கோயில் வாயிலிலே, ஒரு பிராமணன், தன் மனைவியைக் கொன்றவன் இவனென்று ஒரு வேடனை முன்னே விட்டுப், பிரேதத்தைப் போட்டு முறையிடுகின்றான்" என்று விண்ணப்பஞ்செய்தார்கள். உடனே பாண்டியன் அஞ்சி: "என் செங்கோன்முறைமை நன்று நன்று" என்று சொல்லி, மனந் தளர்ந்து, புறத்தில் வந்து, பிராமணனைப் பார்த்து: "ஐயா! நீ ஏன் வருந்துகின்றாய்? சொல்" என்றான். பிராமணன்: "மகாராசாவே! நான் இவளை ஓராலமர நிழலில் இருத்திவிட்டுப் போய்த் தண்ணீர்கொண்டு வருமுன், இவ்வேடன் இவளைக் கொன்றுவிட்டு அயலிலே நின்றான்" என்றான். பாண்டியன், அது கேட்டவுடனே, வேடனைப் பார்க்க, வேடன் வணங்கி நின்று: "அடியேன் இளைப்பாறும்பொருட்டு அந்த மர நிழலின் ஒருபக்கத்திலேபோய் நின்றேன்; நான் இவளைக் கொன்றவனல்லேன்; கொன்றவரைக் கண்டவனுமல்லேன்" என்றான். அதற்கு எதிர் நின்றவர்கள்: "இவளுடைய உடம்பிலே அம்பேறுண்ட தென்னை!" என்றார்கள். வேடன்: "மெய்யாகவே நானொன்றும் அறியேன்" என்றான். அது கேட்ட மந்திரிமாரும் பிறரும்: "இவன், நானிக்கொலை செய்தவனல்லேன் என்று சொல்வதன்றிச், செய்தேன் என்று ஒப்புவானா? இவனைத் தண்டித்தாலன்றி உண்மை சொல்லான்" என்றார்கள். பாண்டியனும்: "அப்படியே செய்யுங்கள்" என்றான். தண்டஞ்செய்வோர்கள் வேடனைத் தண்டித்துக் கேட்க, அவன் முன்னே சொல்லிய சொற் பெயராமலே சொல்லி: "இன்னும் நன்றாக ஆராயுங்கள்" என்றான். அப்பொழுது பாண்டியன்: "இவன் கடுந்தண்டத்துக்கும்

அஞ்சுகின்றானில்லை; ஒருவார்த்தையாக்வே பேசுகின்றான்; இவன் முகத்திலே கொலைக்குறிப்புச் சிறிதுந் தோன்றிற்றிலது. பகைவரா! மிருகமா! பறவையா! வழிவந்த இப்பெண்ணைக்கொன்றதனால் இவனுக்கு வரும் பயன் யாது! வேட்டைக்காரர் மிருகத்துக்கெய்த அம்பு இலக்கிற்றப்பி இவளுடம்பில் ஏறுண்டதோ!-ஒன்று மறியேனே" என்று நினைந்து, பிராமணனை நோக்கி: "இதனுண்மையை நன்றாக ஆராய்ந்து, உன் கவலையை ஒழிப்பேன்; நீ அஞ்சாதே; உன் மனைவியினுடைய மயான கிருத்தியத்தை முடித்துக் கொண்டு வா" என்றேவிவிட்டு, வேடனைச் சிறையிடுவித்தான்.

பின்பு பாண்டியன், மயானகிருத்திய முடித்து வந்த பிராமணனைத் தன் கோயில் வாயிலில் இருத்திவிட்டுத், தான் போய்ச், சோமசுந்தரக்கடவுளை வணங்கி: "எம்பெருமானே! பார்ப்பனி கொலையுண்டது இவ்வேடனாலோ பிறராலோ என்பது தருமநூலாலே சிறிதும் அறிவரிதாயிருந்தது. நீர் உமது திருவருளினாலே தமியேனுக்கு இதனுண்மையை உணர்த்தியருளும்" என்று பிரார்த்தித்தான். அப்பொழுது ஆகாயத்தினின்றும்: "பாண்டியனே! இந்த நகரத்துக்குப் புறத்திலுள்ள செட்டித்தெருவில் ஒருவீட்டிலே இன்றிரவு கலியாண நடக்கும்; அங்கே நீ பிராமணனுடனே வா. இதனுண்மையை உனக்கு அறிவிப்பேம்" என்று ஓரசரீரிவாக்குத் தோன்றியது. அத்திருவாக்கைச் செவிமடுத்த பாண்டியன் அன்றிரவு வேறுவேடம் பூண்டு, பிராமணனுடனே அக்கலியாணவீட்டிற் போய், ஒருபக்கத்திலிருந்தான். அப்பொழுது இயமனால் அங்கு விடுக்கப்பட்ட தூதரிருவருள் ஒருவன், மற்றவனைப் பார்த்து: "இன்றைக்கே இம்மணமகனுடைய உயிரைக் கொண்டுவரும்படி இயமன் ஆஞ்ஞாபித்தானே. இவனுடம்பில் ஒரு வியாதியும் இல்லையே. யாதொரு காரணமுமின்றி இவனுயிரைக் கொள்வதெப்படி! இதற்கு யாதுசெய்வேம்!" என்றான். அதற்கு மற்றவன்: "இற்றைப்பகலிலே ஆலமரத்தில் ஏறுண்டு கிடந்த அம்பு அதன்கீழிருந்த பார்ப்பனி

மீது காற்றினால் விழும்படி செய்து, அவளுடைய உயிரைக் கவர்ந்தே மன்றோ. அப்படியே இப்பொழுது கலியாணவாரவாரத்தினாலே புறத்து நின்ற பசுவொன்று வெருண்டு, கயிற்றை அறுத்துக்கொண்டு, ஓடிவந்து இம்மணமகனை முட்டும்படி செய்து, இவனுயிரைக் கவர்வேம்" என்றான். அது கேட்ட பாண்டியன் பிராமணனைப் பார்த்து: "இந்த வார்த்தையைக் கேட்டாயா!" என்றான். அதற்குப் பிராமணன்: "இவன் இப்படியே இறந்தால், என் மனைவி இறந்ததும் அப்படியே என்று தெளியலாம்; இருந்து பார்ப்பேம்" என்றான். கலியாணம் ஆரம்பிக்கும்பொழுது, வாத்தியவோசையினாலே, ஒரு பசு, வெருண்டு கயிற்றை அறுத்துக்கொண்டோடிப் போய், மணமகனை முட்ட, அவன் இறந்தான். மணமகனே பிணமகனும் மணப்பறையே பிணப்பறையாயும் வாழ்த்தொலியே அழுகையொலியாயுங் கழியும்படி, கணப்பொழுதினுள்ளே பிறந்திறக்கின்ற இச்சரீரத்தினாலே பெறற்பாலதாகிய பிரயோசனத்தை அறிவுடையவரே பெறுவர்; அறிவில்லாதவருக்கு இச்சரீரத்தினால் ஒரு பிரயோசனமுமில்லை,

பிராமணன் அதைக் கண்டு: "என்ன காரியஞ் செய்தேன்" என்று சொல்லித், தன்மனைவி இறந்ததனால் உண்டாகிய துக்கத்தினும் அதிக துக்கங்கொண்டான். பாண்டியன், பிராமணனோடுந் தன்கோயிலிலே புகுந்து, மந்திரிமாருக்கும் பிறருக்கும் இதைச் சொன்னான். பின்பு பிராமணனைப் பார்த்து: "நீ இன்னும் ஒருகலியாணமுடித்துக் கொள்ளக் கடவாய்" என்று சொல்லி, அவனுக்கு வேண்டும் பொருள் கொடுத்து, அவனையனுப்பிவிட்டு, வேடனைச் சிறையினின்று நீக்குவித்து: "நாம் அறியாமையினாலேசெய்த கொடுந்தண்டத்தைப் பொறுத்துக்கொள்ளக் கடவாய்" என்று சொல்லி, அவன்மேல் அருள் சுரந்து, அவனுக்கு வேண்டுவன கொடுத்து, அவனையும் அனுப்பிவிட்டான். அதன்பின் திருக்கோயிலையடைந்து, சோமசுந்தரக் கடவுளை வணங்கி: "எம்பெருமானே! நீர் பாவியேன்பொருட்டுப் பழியஞ்சுநாதராயிருந்தீர்" என்று சொல்லித் துதி

த்து, விசேடபூசை செய்வித்து, உலகிலுக்கு உயிராயிரு ந்து, அரசியற்றினன்.

திருச்சிற்றம்பலம்.

## இருபத்தாருவது

## மாபாதகந்தீர்த்தபடலம்.

குலோத்துங்கபாண்டியன் அரசியற்று நாளிலே, அவந்தி நகரத்தில் ஒரு பிராமணன் இருந்தான். அவன் பனைவி இரதியையும் வென்ற அழகுடையவள். அவளிடத்தில் ஒரு கொடியபாவி பிறந்தான். அவன் காமமிகுதியினுலே தன் மாதாவை விரும்பினன்; அவளும் அதற்குடன்பட்டாள். அப்பெருங் கொடும்பாவி மாதாவைக் கலந்தொழுகும் ஒழுக்கத்தைப், பிதாக், குறிப்பினல் அறிந்து, பிறர் செவிப்படாவண்ணம் உள்ளத்தடக்கினன். வேருெருநாளிரவில் வெளிப்படக் கண்டும், யாதொன்றும் பேசானுயினன். அப்பொழுது மகன் அவனைக் கொல்லவெழுந்தான். மாதா: "நீ மாதிருகமனம் பண்ணினய். பிதிர்கத்தியும் பண்ணினையாயின், என்னபாடுபடாய்" என்று சொல்லித் தடுத்தாள். அதற்கு அப்பாவி: "காமிகளுக்குப் பிதாமாதாக்களால் என்ன பயன்! இரக்கமாவதென்னை! தருமமாவதென்னை!" என்று சொல்லிவிட்டு, ஒருமண்வெட்டியை யெடுத்துத், தன் பிதாவை வெட்டிக் கொன்ருன்.

அப்பாதகன், அவ்விரவிற்ருனே பிதாவைத் தகனஞ்செய்துவிட்டுக், கைக்கடங்கிய பொருளோடும், மாதாவோடும், மலைகள் பொருந்திய காட்டிற் புகுந்தான். அது கண்ட வேடர்கள், அவனையடைந்து, அவன் கைப்பொருளையும் அப்பார்ப்பனியையுந் தாங்கள் கொண்டுபோயினர்கள். தூரத்தே சென்று நன்ருக வாழலாம் என்று அவனெண்ணிய எண்ணமொன்று, அவனுக்கு நிகழ்ந்த வண்ணமொன்று. "நாமொன்றெண்ணத் தெய்வமொன்றெண்ணியது" என்னும் பழமொழி அவனிடத்தே பலித்தது,

பிரமகத்தியானது பேயுருவாய் வந்து, அவனைப் பிடித்தது: அது "ஆவா" என்றழும்; "ஐயகோ! பாவம் பாவம்" என்னும்; கைகுலைத் தெறியும்; நிழல்போல அவனை விடாது பின்பற்றும்; புண்ணிய தீர்த்தத்தினும் புண்ணிய தலத்தினும் பெரியோர் பக்கத்தினும் அவனைச் செல்லவொட்டாது; சிவநாமமுஞ் சிவகீர்த்தியும் அவன் செவிப்புகவொட்டாது; அவன்மனம் புகவொட்டாது; அவனுக்குச் சொல்லவொட்டாது; நித்திரை செய்யவொட்டாது; அவனை முற்பக்கத்தினும் பிற்பக்கத்தினும் வலப்பக்கத்தினும் இடப்பக்கத்தினுஞ் சூழ்ந்து, அவன் கொடுக்கைப் பிடித்து நின்றிழுக்கும். இப்படியே மாபாதகத்தினால் அலைந்து: "என்செய்வேன் என்செய்வேன்!" என்று பெருந்துயருழந்து நெடுநாள் உலகெங்கும் அலைந்து திரிந்தான். சிவபெருமானுடைய திருவருளினாலே, தன் பாதக நீங்குநாள் அணுக, மதுரையை அணுகினான்.

அப்பொழுது பெருங்கருணைக்கடலாகிய சோமசுந்தரக்கடவுள், வேடவடிவங்கொண்டு, வேட்டுவிச்சி வடிவங்கொண்ட மீனாட்சியம்மையாரோடு, திருக்கோபுரத்தின் பக்கத்திலே சூதாடிக்கொண்டிருந்தார். பெருந்துன்பத்துடனே அங்கே வரும் பாதகனது வரவைப் பார்த்து, மீனாக்ஷியம்மையாரை நோக்கி: "ஒருவரும் மனத்தாலும் நினைத்தற்கரிய கொடியபாவி வருவதைப் பார். காமத்தால் விழுங்கப்பட்டவருடைய மனம், இது செல்லத்தகுமிடம் இது செல்லத் தகாதவிடம் என்னும் பேதமறிந்து, செல்லாது; குலமுங் குணமும் ஒழுக்கமுங் குன்றுமென்பதையும், பழியும் பாவமும் வருமென்பதையும், பாராது; உயிருக்கு உடனே இறுதி வந்து சேருமென்பதையுஞ் சிந்தியாது; அறிவைக் கெடுப்பவை கள்ளுங் காமமுமென்பர். அவைகளுள்ளே, காமமானது, நினைப்பினுங் காணினுங் கேட்பினும், விஷந் தலைக்கொண்டாற்போல அறிவைக் கெடுத்துவிடும்; கள்ளோ அப்படிக் கெடுக்காது, உண்டபோது மாத்திரமே கெடுக்கும். கொலைகளுக்கெல்லாங்

காரணங் காமமே; களவுகளுக்கெல்லாங் காரணங் காமமே; கள்ளுண்டலுக்குங் காரணங் காமமே; ஆதலினால், நரகபூமியைக் காணியாகக் கொடுப்பது காமமே'' என்று திருவாய்மலர்ந்தருளினார்.

கொலைப்பழியினாலே பெருந்துயருழந்து அங்கு வந்த பாதகனுடைய முகத்தைச் சிவபெருமான் பார்த்து: "அடா பார்ப்பானே! நீ வருந்தி மெலிவதென்னை'' என்று வினாவியருளினார். சிவபெருமானுடைய திருநோக்கத்தினாலே சிறிதுபாவந் தீர்ந்து, தன்னறிவு தோன்றப், பார்ப்பான், தான் மாதிருகமனமும் பிதிர்கத்தியுஞ் செய்ததும், அந்தப் பாவந் தன்னைப் பிடித்தலைத்து எங்குந் தீராதாகத் தான் இந்நகரம் புகுந்ததும், எடுத்துச் சொல்லி, அழுது கொண்டு நின்றான். வேட்டுவ வடிவங்கொண்டும் எல்லையில்லாத பேரருள் சுரந்து நின்ற பரமகருணாமூர்த்தியாகிய சிவபெருமான், அப்பார்ப்பானைப் பார்த்து, "இந்தப் பாவம் எங்கேபோனாலும், இங்கேயன்றித் தீராது. உன் பெயரைச் சொன்னவரன்றி அவர் குலமும் நரகத்தில் விழும்வண்ணம் நீ செய்த இக்கொடும்பாவத்தை நீக்க வல்லவர் யாவர்! நாம் உன்மீது திருநோக்கஞ் செய்தலினால் இப்பாவம் எளிதினீங்கும்வண்ணம் ஒருறுதி சொல்வோம், கேள். சூரியன் உதிக்குமுன்னே நித்திரைவிட்டெழுந்து, அறுகம்புல்லுக் கொய்து, பசுக்களுக்குக் கொடுக்கக்கடவாய். திரிகாலத்தினுந் திருக்கோயிற் புறத்தொட்டித் தீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்து, சிவபெருமானை நூற்றெட்டுத்தரம் அங்கப்பிரதக்ஷிணஞ் செய்யக்கடவாய். சிவனடியார்களுக்குத் தொண்டு செய்யக்கடவாய். பிச்சையேற்று ஒருபொழுது புசிக்கக்கடவாய். நீ இத்தவநெறியிலே நின்றாயாயின், இப்பாவம் நீங்கும்'' என்று திருவாய்மலர்ந்தருளினார். அதுகேட்ட மீனாக்ஷியம்மையார்: "எம்பெருமானே! அளவில்லாத காலம் இருபத்தெட்டுக்கோடி நரகத்தினும் விழுந்தானாயினும், உய்வகையில்லாத இக்கொடும் பெரும்பாவிக்கு, உய்வகையருளிச்செய்ததென்னை!'' என்

றுவினுவினர். அதற்குச் சிவபெருமான்: "எத்துணைப் பெருங்கொடும் பாவத்துக்கும் அஞ்சாத நீசரேயாயினும், நினைப்பினும் அவருக்கு அச்சம் விளைக்கும் இம்மிகப்பெருங் கொடும்பாவத்துக்கு அஞ்சாதவனுய்ச் செய்த பாதகத்தினுலே தொடக்குண்டு எங்குந் தீர்வின்றி வேறுகளைகணுமின்றி வந்தடுத்தவனைக் காப்பதன்றே காப்பு" என்று திருவாய்மலர்ந்தருளினுர். மீனுக்ஷியம்மையார்: "நீர் யாதொன்று செய்தற்குஞ் செய்யாமைக்கும் வேருென்று செய்தற்கும் ஆற்றலுடைய கருணைவள்ளல். நீர் விரும்பினுல் எத்துணைப்பாவிகளும் உய்யும்வண்ணஞ் செய்வது உமதருள்விளையாட்டன்றே" என்று மகிழ்ச்சியோடு விண்ணப்பஞ்செய்தார். உடனே சிவபெருமான் தேவியாரோடு மறைந்தருளினுர்.

பார்ப்பான் அது கண்டு, ஆச்சரியமடைந்து, சிவபெருமான் அருளிச்செய்தபடியே தவவொழுக்கத்தை அனுட்டித்து, மூன்று மாதத்திலே மகாபாதக நீங்கித், தெய்வப்பிராமணவடிவமானுன். சோமசுந்தரக்கடவுளுடைய திருவடிகளிலே பற்பல வடமொழி மாலைகளைப் பத்தியோடு தொடுத்துச் சாத்தி, அத்திருவடிகளிற் சேர்ந்து, பேரின்பமுற்றுன். இத்தீர்த்தம், மாதாவைப் புணர்ந்து பிராமணனும் பிதாவுங் குருவுமாயுள்ளவனைக் கொன்ற பாவத்தை நீக்கி முத்தியைக் கொடுத்ததென்ருல், நீரிழிவு குட்டம் பெருவயிறு ஈளை வெப்பு முதலிய நோய்களைத் தீர்க்குந் தீர்த்தமென்பதோ இதற்கு மேன்மை! இப்பார்ப்பானுடைய மகாபாதகத்தைத் தீர்த்தருளினமையை அறிந்து, குலோத்துங்கபாண்டியனும், மந்திரிமாரும், பாண்டிதேசத்தாரும், ஒழிந்த தேசத்தாரும், மேலுலகத்தாரும், ஆச்சரியமடைந்து: "உரையுணர்வு கடந்த பேரருளை இக்கயவன்மேல் வைத்த காரணம் யாதோ" என்று கண்ணீர் பொழிந்து, சோமசுந்தரக்கடவுளைத் துதித்துப், பேரானந்தப் பெருங்கடலின் மூழ்கினுர்கள்.

திருச்சிற்றம்பலம்.

இருபத்தேழாவது

# அங்கம்வெட்டினபடலம்.

குலோத்துங்கபாண்டியன் செங்கோலோச்சுநாளிலே, வேறுதேசத்துள்ள முதிர்ந்த வயசையுடையானொருவன், மதுரையில் வந்திருந்து, வாள்வித்தை பயிற்றிச் சீவனஞ் செய்தான். அவன் நாடோறுஞ் சோமசுந்தரக்கடவுளை அடைந்து, அன்போடு வழிபடு நியமம் பூண்டான். அவனை வழிபட்டு வாள்வித்தை கற்கும் மாணாக்கர்களுள்ளே, உய்வகையறியாப் பாவியாகிய சித்தனென்பவன் ஒருவனுளன். அவன் ஊழ்வலியினால் அவ்வித்தையை நிரம்பக் கற்றுக்கொண்டான். அதனால் அவன் செருக்கடைந்து, தன்னாசிரியனுக்கு மாறாய்த், தானும் ஒரு வித்தியாகூடஞ் சமைத்து, அதில் அநேகருக்கு வாள்வித்தை பயிற்றித், தன்னாசிரியனிலும் அதிகமாகிய ஊதியத்தைப் பெறுவானாயினான். இருவருடைய வாள்வித்தையின் ஊதியத்தையுந் தானொருவனே ஒருங்கு பெற விரும்பி, அவ்விருத்தனை ஊரினின்றும் ஓட்டக் கருதி, அவனிடத்தே கற்கும் மாணாக்கர்களைத் தன்னிடத்து வரும்படி மனந்திரித்து, நாடோறும் அவனுக்கு இடையூறே செய்வானாயினான். தன்னாசிரியன் இல்லாத பொழுது அவனுடைய மனைவியிடத்தே போய்: "இடமுண்டோ இடமுண்டோ" என்று அடுத்தடுத்து, அஞ்சாது எப்பொழுதுங் கேட்கக் கேட்க, அவள் சும்மா இருந்தாள். பின்னொருநாட்போய் அவள் கையைப் பிடித்திழுப்ப, அவள் அவனைத் தள்ளி விட்டு, உள்ளே போய்க், கதவைப் பூட்டிக்கொண்டு, தன்கற்பைப் பாதுகாத்தாள். சித்தன் காமத்தீ வெதுப்பப் போயினான்.

கற்பினிற் சிறந்த அப்பெண்ணானவள், பாவிகளெல்லாருள்ளும் பெருங்கொடும்பாவியாகிய சித்தன் செய்த இழிதொழிலைத் தன் கணவனுக்கும் வெளிப்படுத்தாது, உள்ளத்தடக்கிக்கொண்டு, உயிர்க்குயிராகிய சோமசுந்தரக்கடவுளை நினைந்து, நொந்தாள். சோமசுந்தரக்கடவுள், வாள்வித்தை பயிற்றும் ஆசிரியனைப்போல் வேடங்கொண்டு, சித்தனிடத்தே போய்: "சித்தா! காளையாகிய நீயும்,

மிகுந்த மூப்படைந்த நாமும், வாட்போர் செய்து, நமது வலிமையை அளந்தறிவேம். பட்டணத்தின் புறத்திலே நாளைக்கு வா; நாமும் வருவேம்" என்றார். அதற்குச் சித்தன் மகிழ்ந்து: "நல்லது" என்று உடன்பட்டான். வாளாசிரியர் மீளும்பொழுது சூரியன் அத்தமயனமடைந்தான். மற்றநாள், செய்ந்நன்றி கொன்றவனாகிய சித்தன், வீரமடந்தையை வழிபட்டுத் துதித்துக், கச்சுக்கட்டி, வாளும் பரிசையும் எடுத்துக்கொண்டு போய், ஆசிரியர் சொல்லிய போர்க்களத்தை அடைந்தான். வாளாசிரிய வேடங்கொண்ட சிவபெருமானும், விபூதி தரித்துக், கச்சுக் கட்டி, வாளும் பரிசையுந் தாங்கிக்கொண்டு, சித்தனுக் கெதிரே வந்தார். சிவபெருமானுஞ் சித்தனும், எண்ணில்லாத சனங்கள் காண, இருபதுநாழிகை யெல்லை நின்று. வாட்போர் செய்தார்கள். பின்பு சிவபெருமான், அங்குள்ளார் அனைவருங் கேட்க: "உன் குருபன்னியை நினைத்த நெஞ்சையும், குறித்துப் பேசிய நாக்கையும், தொட்ட கையையும், பார்த்த கண்ணையுங் காத்துக்கொள் காத்துக்கொள்" என்று சொல்லிச் சொல்லி, அவ்வுறுப்புக்களுக்கெல்லாந் தண்டஞ் செய்து, தலையை வெட்டி விழுத்திவிட்டு, மறைந்தருளினார்.

போர்க்களத்தில் நின்றவர்களுள்ளே, வாள்வித்தை பயிலும் மாணாக்கர்கள், ஆசிரியனைக் காணாது, வீட்டிலே போய்த் தேடி, அவன் மனைவியை நோக்கி: "ஆசிரியர் எங்கே?" என்று வினவ, அவள்: "கோயிலுக்குப் போயினார்" என்றாள். என்ற அப்பொழுதே, கோயிலுக்குப் போன ஆசிரியன், திரும்பி வந்தான். அவர்கள் அவனைப் பார்த்து: "நீர் போர்க்களத்திலே சித்தனோடு போர் செய்து, அவனுடைய அங்கங்களை வெட்டினீரே. பின்பு நாங்கள் அந்தப்போர்க்களமெங்கும் உம்மைத் தேடிக் காணாது, இங்கே வந்தேம்" என்றார்கள். அது கேட்ட ஆசிரியன்: "நான் அங்கம் வெட்டினேனல்லேன். நீங்கள் சொல்வதென்னை! என்போல் வந்து சித்தனைக் கொன்றவர் யாவர்? இது சோமசுந்தரக்கடவுளுடைய திருவிளையா

டல் போலும்" என்றான். மனைவியும் அவனை நோக்கித், தன்னைச் சித்தன் பலநாளும் வந்து கேட்டதும், முதனாள் வந்து தன் கையைப் பிடித்திழுத்ததும், தான் அவனைத் தள்ளிவிட்டு உள்ளேபோய்க் கதவைப் பூட்டிக்கொண்டிருந்ததுஞ் சொன்னாள். அது கேட்ட மாணாக்கர்கள்: "சித்தனை, வாள்வீரர், கொல்லும்பொழுது, இவ்வம்மை யார் சொல்லியபடியெல்லாஞ் சொல்லியே, கொன்றார். இது மெய்ம்மை" என்றார்கள். ஆசிரியன்: "இது சோமசுந்தரக்கடவுளுடைய திருவிளையாட்டே" என்று சொல்லிக்கொண்டு, தன் மனைவியோடும் மாணாக்கர்களோடுந் திருக்கோயிலையடைந்து, சோமசுந்தரக்கடவுளை வணங்கி: "எம்பெருமானே! பிரமாவினாலும் அறியப்படாத உமது திருவிளையாடல் சிறிய ஏழையாகிய அடியனேனளவினதே" என்றான்.

குலோத்துங்கபாண்டியனும், மதுரைநகரத்துள்ளோரும், சிவபெருமானுடைய திருவிளையாடலை நோக்கிக் கண்ணீர் வெள்ளத்தாழ்ந்து, அவருடைய திருவடிகளை வணங்கிக், கீதம் பாடி, ஆனந்தக்கூத்தாடித், துதித்தார்கள். குலோத்துங்கபாண்டியன்: "இவர் அடியவருக் கெளியவர்; பரதேசி காவலர்." என்று சிவபெருமானுடைய திருவடிகளில் வீழ்ந்து துதித்து, வாளாசிரியனையும் அவன் மனைவியாகிய மாணிக்கமாலையையும் யானைமீதேற்றி நகர் வலஞ்செய்வித்தான். பின்பு தன் புத்திரனாகிய அனந்தகுணபாண்டியனுக்கு முடி சூட்டித், தன்னரசை அவனிடத்தொப்பித்தான்.

குலோத்துங்க பாண்டியன், நித்தப்பொருள் இதுவெனவும் அநித்தப்பொருள் இதுவெனவும் அறிந்து, அநித்தப் பொருளிலுள்ள பற்றை முற்றக் கடிந்து, ஐம்பொறிவழிச் செல்லாது அருள்வழிச் சென்று, தன்னைப் பந்தித்த மலசத்தியினின்று நீங்கி, இராகு உமிழ்ந்த சந்திரன் போல் விளங்கிச், சிவபெருமானுடைய திருவடிநிழலைப் பிரியாத பேரின்பமயமாகிய பரகதியை அடைந்தான்,

திருச்சிற்றம்பலம்.

# இருபத்தெட்டாவது

# நாகமெய்தபடலம்.

அனந்தகுணபாண்டியன், விபூதி உருத்திராக்ஷம் பஞ்சாக்ஷரமென்னும் மூன்றுமே மெய்ப்பொருள் என்று தெளிந்து, அவைகளில் அளவிறந்த பத்திமை பூண்டு, தன்றந்தை முதலிய முன்னையரசர்களினும் மிகச்சிறந்தவனாயினான் மன்னனெப்படி மன்னுயிரப்படி. ஆதலினாலே, பாண்டிநாடெங்குஞ் சிவவேடமே பரவிற்று. எண்ணாயிரஞ் சமணரும் அதனை யறிந்து, மானத்தீச்சுடப் பொருமைகொண்டு, பாண்டியனைக் கொல்லக் கருதி, ஒருகாதவளவினதாகிய ஒரு வேள்விச்சாலை அமைப்பித்து அதில் ஒருவேள்வி செய்தார்கள். செய்தலும், வேள்விக்குண்டத்தினின்றும் ஓரசுரன் வந்து தோன்றி, அச்சமணர்களை நோக்கி: "நீங்கள் எனக்கு விதிக்கும் பணி யாது?" என்று வினாவினான். சமணர்கள்: "நீ விரைந்து போய்ப், பாண்டியனை மதுரையோடு எடுத்து விழுங்கிவிட்டு வா" என்று ஏவினார்கள்.

அது கேட்ட அசுரன், ஆகாயத்தைத் தீண்டும் பெரிய வுடலையும், விஷத்தைச் சொரிகின்ற பெரும் பற்களையும், வடவாமுகாக்கினிபோலச் சுவாலிக்கின்ற கண்களையும் மலைமுழைபோலும் வாயையும், உடைய ஒருபெரிய சருப்பவடிவங் கொண்டு, சந்திரசூரியர்களும் இயமனும் ஆதிசேடனும் திக்கியானைகளும் அஞ்சி நடுநடுங்கும்படி, மதுரை நகாத்துக்கு மேற்குத்திக்கில் வந்தான். அப்பொழுது அதனைக் கண்டவர்கள் விரைந்தோடிப் போய், அனந்தகுணபாண்டியனை வணங்கி, விண்ணப்பஞ்செய்தார்கள். அது கேட்ட பாண்டியன் சிறிதும் அஞ்சாதவனாகி: "முன்னே யானையை விடுத்தவர்களே இதையும் விடுத்தார்கள்போலும். அதைப்போலவே இதையுங் கொல்லுதற்கு எம்முடையவர் இருக்கின்றார்" என்று நினைந்து, திருக்கோயிலை யடைந்து, சோமசுந்தரக்கடவுளை வணங்கி: "எம்பெருமானே! அடியேன் ஒருபோதும் உம்மை மறவாது வழிவழி அடிமை செய்யுமியல்பினேன். நீர்

அருளிச்செய்த நூல்வழியே முறை செய்து வருவேன். இந்நகரமுழுதையும் அழிக்கக்கருதிச் சமணர்கள் விடுத்த சருப்பம் வருகின்றது. அது உமது திருவருளினாலே சாதல் வேண்டுமெனக் கருதிய தமியேனுக்குக் கருணை செய்தருளும்" என்று விண்ணப்பஞ்செய்தான்.

அவ்வாறு விண்ணப்பஞ்செய்த பாண்டியன், சிவபெருமானிடத்தே அநுமதி பெற்று வணங்கி, அவருடைய திருவடிகளைச் சிந்தையிற் கொண்டு, புறத்து வந்து, அம்பும் வில்லும் எடுத்துக்கொண்டு, மதுரைத் திருநகரத்தின் மேலைவாயிலை யடைந்து, பெருமலைபோலுஞ் சர்ப்பத்தை எதிரே கண்டான். அப்பொழுது சர்ப்பவடிவத்தையுடைய அவ்வசுரன் படத்தைப் பரப்பி, எட்டுத்திக்கினும் ஆகாயத்தினும் பேரிருள் செறித்துப், பல்லையதுக்கிப் பெருமூச் செறிந்து, வாயைப் பிளந்து, அப்பட்டண முழுதையும் ஒருங்கே கௌவி விழுங்கும்படி சீறினான். பாண்டியன், இடியேறும் அஞ்சும்படி ஆரவாரித்து, வில்லை வளைத்துப், பாணங்களைத் தொடுத்து விடுத்தான். விடுத்த பாணங்களெல்லாவற்றையும், அசுரன், துகள் படும்படி கறித்து, உமிழ்ந்தான். பாண்டியன், அது பொறாது, சிவபெருமானுடைய திருவடிகளைச் சிந்தித்துக்கொண்டு, ஓர் அர்த்த சந்திர பாணத்தை விடுத்து, அப்பாம்பினுடைய உடம்பைத் துண்டஞ்செய்தான். அப்பாம்பு, இடிபோலார்த்து, இரத்தம் அருவிபோற் பெருக, உடம்பு புரள, இறக்கும்போது ஆலாகல வெள்ளம் போல நஞ்சைக் கக்கிற்று. அந்த நஞ்சு மதுரைத்திருநகரமெங்கும் இடையீடின்றிப் பரந்தது. அதனால் அந்நகரத்துள்ளாரெல்லாரும் நிலை தளர்ந்து, சரீரம் வெயர்த்து, இந்திரியங்களும் அந்தக்கரணங்களுந் தலைதடுமாறி, உரை குழறி, நாக்கு வரண்டு, கபமேலிட்டு, அறிவழிந்து மயங்கி, மூச்சொடுங்கிக்கிடந்தார்கள்.

பாண்டியன், விரைந்துபோய்த், திருக்கோயிலையடைந்து, சிவபெருமானை வணங்கிச்: "சருவான்மாக்களுக்கும் நாயகரே! அன்பர்களுக்கெளியவரே! இந்நகரத்துக்கு

என்றும் மகாராசாவே! தமியேன் உம்மிடத்திலே அடைக்கலம் புகுந்தேன். முன்னே கடலை வற்றுவித்தும், மேகங்களைத் தடுத்தும், யானையை எய்தும், இந்நகரத்தைக் காத்தருளினீர். இன்றும் விடத்தினால் வருந்தும் வருத்தத்தையும் நீக்கியருளும்'' என்று விண்ணப்பஞ்செய்தான். அருட்கடலாகிய சிவபெருமான் தமது திருச்சடையிலுள்ள பாலசந்திரனுடைய அமிர்தத்திலே சிறிது துளியைச் சிந்தியருளினார். அச்சிறுதுளி, அந்நகரமெங்கும் பாலிற் பிரைபோலக் கலந்து, அதனை முன்போலவே மதுராநகரமாகச் சுத்திசெய்தது; அதனால் யாவரும் விடநீங்கி இன்பமுற்றார்கள். பாண்டியன், சிவபெருமானுக்கு அன்புறுத்தானேயாகி, அரசுசெய்துகொண்டிருந்தான்.

திருச்சிற்றம்பலம்.

இருபத்தொன்பதாவது

## மாயப்பசுவைவதைத்தபடலம்.

அனந்தகுணபாண்டியன் பாம்பைத் துணித்தபின்பு, அப்பாம்பின் பின் வந்த சமணர்கள், காற்றினாற்றள்ளுண்டு செல்லும் மேகங்கள்போல், உடைந்து கலங்கி ஓடினார்கள். ஓடின சமணர்களெல்லாரும் ஓரிடத்து ஒருங்குகூடி: "நாம் முன் விடுத்த யானையைப்போல இன்று விடுத்த பாம்பையுங் கொன்றுவிட்டார்கள்: இனி யாது செய்வோம்!'' என்று ஆலோசித்து: "பசுவுக்கு ஊறு செய்யார்கள்; பழிக்கஞ்சுவார்கள்; ஆதலாற் பசுவை விடுப்பேம்; இதுவே உபாயம்'' என்று துணிந்து, முன்போல அபிசாரவோமஞ் செய்தார்கள். ஓமகுண்டத்தினின்றும் பசுவுருவாகி ஓரசுரன் வந்து தோன்றினான். அப்பசுவைச் சமணர்கள் முன்போல் விடுத்தார்கள். அது, யாவரும் அஞ்சும் வண்ணம் இடிபோல் ஆரவாரித்துப், பலரைத் தொடர்ந்து கொன்று சென்று, மதுரையை அணுகியது. அதனையறிந்த அனந்தகுணபாண்டியனும், நகரத்தார்களும், விரை

ந்து திருக்கோயிலையடைந்து, சோமசுந்தரக்கடவுளை வணங்கி முறையிட்டார்கள். சிவபெருமான், அவர்கண்மீது திருவருள் சுரந்து, இடபத்தை நோக்கிச்: "சமணர்கள் விடுத்த பசுவை, நீ போய், வென்றுவரக் கடவாய்" என்று பணித்தருளினார்.

அவ்விடபம், இரண்டு கண்களினின்றும் அக்கினி சிந்த, இடிபோல் ஆரவாரித்துக்கொண்டு விரைந்து சென்று, அப்பசுவைக் கிட்டிச், சமணர்கள் நினைந்தபடியே அதற்கு மாறுசெய்யாது, தனது பேரழகைக் காட்டிற்று. உடனே பசு அவ்விடபமீது இச்சை கொண்டு, உயிரோடும் வீரியத்தை விடுத்து, வீழ்ந்து. மலைவடிவாயிற்று. அது கண்ட பாண்டியனும் நகரத்தார்களும் மகிழ்ச்சியடையச், சமணர்களெல்லாரும் ஓட்டெடுத்தார்கள். இடபம், உலகத்தார் அறியுஞ் சான்றாகத் தனது தூலசரீரத்தை இடபமலையாக அங்கே நிறுத்திவிட்டுச், சூக்குமசரீரத்தோடு சோமசுந்தரக்கடவுளை அடைந்து வணங்க, அவர் திருவருள்சுரந்து: "முன்னையுருவாகி இங்கே இரு" என்று இருத்தியருளினார். அப்பொழுது பாண்டியனும் நகரத்தார்களும் மகிழ்ச்சியடைந்து, சந்நிதியில் இருந்த இடபத்தை வணங்கிக்கொண்டு போயினார்கள்.

சீராமர், இலங்கைக்குப் போகும்பொருட்டு, வானரசேனை சூழ, இலக்குமணர் அநுமான் சுக்கிரீவன் முதலிய வீரர்களோடும் அங்கு வந்து, அவ்விடபமலையின்மீது தங்கினார். அகத்தியமகாமுனிவர், அதையறிந்து, அங்குவந்து, அவருக்குச் சோமசுந்தரக்கடவுளுடைய மான்மியத்தை அருளிச்செய்தார். சீராமர் அதுகேட்டு, அன்புகொண்டு, அகத்தியமுனிவரோடு சென்று, பொற்றாமரைவாவியிலே ஸ்நானஞ்செய்து, சோமசுந்தரக்கடவுளைச் சிவாகமவிதிப்படி பூசித்துத் துதித்து நின்று: "சீவன்முத்திபுர வாசரே! இப்பூமண்டலத்தின்கண் உமக்கு அநேகதலங்கள் இருக்கின்றன. அவைகளுள் இத்திருவாலவாயே மிகுந்த அற்புதமுடைய தலம். அது யாதினாலெனின், சகலலோகத்தா

ரும் உம்மிடத்து அன்புவைத்து உய்யும்பொருட்டு நீர் செய்த கருணை பருவத வடிவங்களாய் இத்திருநகர்ப்புறத்து நின்று விளங்குதலினுலாம். தரிசித்தமாத்திரத்திலே சகல துக்கங்களையும் போக்குதற்கும், சகல பாக்கியங்களையும் ஆக்குதற்கும், கருணைகொண்டு நீர் அதிட்டித்திருக்குஞ் சிறப்பினுல் இவ்விலிங்கத்திற்குச் சமானம் வேறில்லை. ஸ்நானஞ்செய்தவுடனே சகல பாவங்களையும் போக்கி உம்முடைய மங்கலபோகங்களைக் கொடுத்தலால், இப்பொற்றாமரைவாவிக்குச் சமானம் வேறில்லை. மற்றையிடங்களிலெல்லாம் தலம் மூர்த்தி தீர்த்தம் என்னு மூன்றனுள் ஒவ்வொன்றே சிறந்திருக்கும்; இங்கே இம்மூன்றுஞ் சிறந்திருக்கின்றன. ஆதலால், இந்தத் தலத்தை அடைந்தவர்களெல்லாருக்குஞ் சித்தசுத்தியும் பலவிதசித்தியும் உண்டாகும். அடியேன் எண்ணுங்கருமம் உண்மையாக முடிவதரிது. அது எப்படி முடிதல்வேண்டுமோ அப்படி விரைந்து முடியும்பொருட்டருள்செய்யும்'' என்று விண்ணப்பஞ்செய்து, வணங்கினுர். அதற்குச் சிவபெருமான்: "இராமா! கேள். நீ நமக்குத் தென்கிழக்குத்திக்கிலே போய்ச், சமுத்திரத்திலே சேதுக் கட்டி, இலங்கையிற் சென்று, இராவணன் முதலாயினேரைக் கொன்று, சீதையைச் சிறையினின்று நீக்கி, உன்னயோத்திநகரத்துக்குத் திருப்பிப், பலகாலம் அரசுசெய்துகொண்டிருந்து, பின் வைகுண்டமடையக் கடவாய். கவலை கொள்ளாதே'' என்று அசரீரிவாக்காக அருளிச்செய்தார். ஸ்ரீராமர் அது கேட்டு, மனமகிழ்ந்து, வணங்கி, விடைபெற்றுக்கொண்டு போய்ச், சேதுபந்தனஞ் செய்து, இலங்கையிற் சென்று, இராவணனைக் கொன்று, அவனுடைய அரசை அவன் தம்பியாகிய விபீஷணனுக்குக் கொடுத்துச், சீதையோடு மீண்டு வந்து, சேதுவிலே சிவலிங்கப்பிரதிட்டை செய்து, பிரமகத்தியினின்று நீங்கிச், சோமசுந்தரக்கடவுளை மீளவும் வந்து வணங்கிக்கொண்டு, அயோத்திநகரத்தை அடைந்தார். அது நிற்க,

அனந்தகுணபாண்டியன் குலபூடணபாண்டியனைப் பெற்று, அவனுக்குத் தன்னரசைக் கொடுத்துவிட்டுத், தான் சிவலோகத்தை அடைந்தான்.

திருச்சிற்றம்பலம்.

முப்பதாவது

## மெய்க்காட்டிட்டபடலம்.

குலபூடணபாண்டியனுக்குச் சுந்தரசாமந்தன் எனப் பெயர் கொண்ட சேனாபதியொருவன் இருந்தான். அவன், சிவனடியாரைச் சிவனெனக் கொண்டு பூசிக்கும் கடப்பாட்டு நெறியிலே, நின்றான். அவன் பாண்டியனுக்கு இருமைக்குந் துணையாய் ஒழுகுநாளிலே, வேடர்களுக்கதிபதியாகிய சேதிராயனென்பவன் ஒருவன் மேலிட்டுப் பாண்டியன்மேற் படையெடுத்துச் செல்ல நினைந்தான். அதைப் பாண்டியன் அறிந்து, தன்சேனாபதியாகிய சுந்தரசாமந்தனைப் பார்த்து: "சேதிராயனென்பவன் நமக்கு விரோதமாகப் படையெடுக்க எண்ணியிருக்கின்றான். அவன் மிக வலியவன்; ஆதலால் நீ நமது பொன்னறையைத் திறந்து, வேண்டுந்திரவியங்களை எடுத்து, நானாசாதியாருள்ளும் இன்னுஞ் சிலசேனைகள் சம்பாதிக்கக்கடவாய்" என்றான்.

அது கேட்ட சுந்தரசாமந்தன், பாண்டியனுடைய ஆஞ்ஞை பின்றள்ளச், சிவபெருமானுடைய திருவருள் முன்னிழுப்ப, விரைந்து போய்ப், பொன்னறையைத் திறந்து, தன்னவா அமையத்தக்க திரவியங்களைக் கைக்கொண்டு, எண்ணிறந்த களிப்போடு திருக்கோயிலையடைந்து, பொற்றாமரைவாவியிலே ஸ்நானஞ்செய்து, சிவபெருமானை வணங்கி நின்று; "அடியார்கள் எண்ணிய கருமமெல்லாம் முடிக்கும் எம்பெருமானே! இத்திரவியங்களெல்லாம் உமக்கும் உம்முடைய மெய்யடியார்களுக்குமே ஆகக்கடவன" என்று வேண்டிக்கொண்டு, அவைகளைச் சிவபுண்ணியங்களிலே செலவழிப்பானாயினான். சிவபெருமா

னுக்குத் திருக்கோபுரங்களும், ஆயிரக்கான்மண்டபமும், இரத்தினுபரணங்களும், குடைகளும், கொடிகளுஞ் செய்வித்தான். யாவராயினும் விபூதியும் உருத்திராக்ஷமுந் தரித்தவரைக் கண்டால்: "இவரே நம்பிறப்பறுக்க வடிவெடுத்த சிவபெருமான்" என்று அவரை விரைந்தெதிர்கொண்டு வணங்கி, அழைத்து வந்து, திருவமுது செய்வித்து, அவர் புசித்து எஞ்சியதே புசிப்பான். இன்றைக்காயிரம் நாளைக்கிரண்டாயிரம் என்று இப்படி அன்றைக்கன்று இருமடங்காக, அரசனுடைய பொருள்களெல்லாவற்றையுஞ் சிவபெருமான்பொருட்டுஞ் சிவனடியார்பொருட்டுஞ் செலவழித்துக்கொண்டு வந்தான். இந்தச் சமாசாரத்தைச் சிலர் போய்ப் பாண்டியனுக்குத் தெரிவித்தார்கள்.

சுந்தரசாமந்தன், தன்மேலே பாண்டியன் ஐயுறுவண்ணம், அவன் சபையிலே போய்ப், பிறதேசத்து வீரர்களுக்குத் திரவியம் அனுப்பி ஓலை விடுத்து அவர்களை அழைப்பவன்போலப் பாவகஞ்செய்து, காரியகாரர்களை நோக்கி: "தெலுங்கர்களுக்கு ஓலை எழுதுங்கள்; கலிங்கர்களுக்கு ஓலை யெழுதுங்கள்; விராடர்களுக்கு ஓலை யெழுதுங்கள்; மராடர்களுக்கு ஓலை யெழுதுங்கள்; கொங்கர்களுக்கு ஓலை யெழுதுங்கள்; வங்கர்களுக்கு ஓலை எழுதுங்கள்; துருக்கர்களுக்கு ஓலை எழுதுங்கள்" என்று சொல்லிப் பொய்யோலை எழுதுவித்து அனுப்பினுன். சுந்தரசாமந்தன் இப்படியே எங்கும் ஓலை யனுப்பிவிட்டிருப்ப, ஆறுமாசம் வரையுஞ் சேனைகளுடைய வரவைக் காணுது, பாண்டியன், சுந்தரசாமந்தனை யழைத்து: "நாளைச் சூரியன் படுமுன் சேனைகளெல்லாவற்றையும் அழைக்கக்கடவாய்" என்றுன். அதற்கேற்பச் சுந்தரசாமந்தன் இசைந்துபோய்ச் சோமசுந்தரக் கடவுளை வணங்கி: "எம்பெருமானே! பாண்டியன் தந்த திரவியங்களெல்லாவற்றையுங் கொண்டு தமியேனைப் பணிகொண்டருளினீரே. இனிச் சேனைகளுக்கு யாது செய்வேன்!" என்று விண்ணப்பஞ்செய்துகொண்டு நின்றுன். அப்பொழுது "அடியவர் குறைவு தீர்த்தாண்டருள்வதே

விரதம் பூண்ட" சிவபெருமானுடைய திருவருளினாலே, ஆகாயத்தினின்றும்: "நாளைக்கு நாஞ் சேனையோடும் வந்து தோன்றுவேம். நீ பாண்டியன் சபையிலே போயிரு" என்று ஓரசரீரிவாக்குத் தோன்றிற்று. அது கேட்ட சேனாபதி உவகைவெள்ளத் தாழ்ந்தான். சூரியன் அத்தமித்தான்.

மற்றைநாட் காலையிலே, சுந்தரசாமந்தன் எழுந்து, திருக்கோயிலையடைந்து பொற்றாமரைவாவியிலே ஸ்நானஞ்செய்து, சோமசுந்தரக்கடவுளை வணங்கிக்கொண்டு, பாண்டியனுடைய கோயிலுக்குச் செல்வானாயினான். அப்பொழுது சிவபெருமான், சங்குகன்னர் முதலிய பிரமதகணர்களுங் குண்டோதரர் முதலிய பூதவீரர்களுஞ் சேனைவீரர் வடிவங்கொண்டு, பதினெண்படைக்கலங்களையுந் தரித்துப் புறங்காப்ப, நந்தி மகாகாளர் பிருங்கி நிகும்பர் கும்போதரர் முதலிய கணநாதர்களெல்லாரும் நெற்றியிற் றிரிபுண்டரந் தரித்துச் சட்டையிட்டு வாளேந்திக் குதிரைச்சேவகர்களாய்ச் சூழச், சாமரைகளும் பீலிக்குஞ்சங்களுங் குடைகளுங் கொடிகளும் நெருங்கப், பலவித வாத்தியங்கள் ஒலிக்கத் தமதிடபத்தையே குதிரையாக்கி, அதன்மேல் ஏறிக்கொண்டு, ஒற்றைச் சேவகராய் எழுந்தருளி வந்தார். சேனையின் வரவைக் கண்ட சுந்தரசாமந்தன் பாண்டியனுக்குப் போய் விண்ணப்பஞ் செய்யப், பாண்டியன் மனமகிழ்ந்து, தலைக்கடைவாயிலில் வந்து, அங்குள்ள மண்டபத்திலே சிங்காசனத்தின்மீது வீற்றிருந்துகொண்டு, சேனைச்சிறப்பை நோக்கிப் பெருங்களிப்புற்று: "இவர்கள் எவ்வெத்தேசத்திலுள்ளவர்கள்" என்று வினாவினான். சுந்தரசாமந்தன் பாண்டியனெதிரே நின்று, அவ்வத்தேசத்தாரெல்லாரையும் அணியணியாக நிறுத்திக்கொண்டு, கையிற் பிரம்பை நீட்டி: "மகாராசாவே! இவர்கள் கொங்கதேசத்தார்; இவர்கள் குருதேசத்தார்; இவர்கள் கங்கதேசத்தார்; இவர்கள் கன்னடதேசத்தார்; இவர்கள் அங்கதேசத்தார்; இவர்கள் ஆரியதேசத்தார்; இவர்கள் வங்கதேசத்தார்; இவர்கள் மாளவதேசத்தார்; இவர்கள்

குலிங்கதேசத்தார்; இவர்கள் கொங்கணதேசத்தார்; இவர்கள் தெலுங்கதேசத்தார்; இவர்கள் சிங்களதேசத்தார்; இவர்கள் கலிங்கதேசத்தார்; இவர்கள் கௌடதேசத்தார்; இவர்கள் ஒட்டியதேசத்தார்; இவர்கள் கொல்லதேசத்தார்; இவர்கள் கூர்ச்சரதேசத்தார்; இவர்கள் பல்லவதேசத்தார்; இவர்கள் பப்பரதேசத்தார்; இவர்கள் சேரதேசத்தார்; இவர்கள் விதேகதேசத்தார்; இவர்கள் கடாரதேசத்தார்; இவர்கள் கேகயதேசத்தார்; இவர்கள் மகததேசத்தார்; இவர்கள் மராடதேசத்தார்; இவர்கள் காஞ்சிதேசத்தார்; இவர்கள் நம்முடைய தேசத்தார்" என்று மெய்காட்டி அறிவித்தான். "இத்துணைத் தூரதேசங்களினுள்ளவர்களை இங்கே அழைத்த தெங்ஙனம் என்று வினவியருளற்க. உம்முடைய திரவியங்களெல்லாவற்றையும் வரையாது செலுத்தினதினால், இவர்களெல்லாரும் வந்தார்கள்" என்றான்.

பாண்டியன், அந்தச் சேனையினுள்ளே தூரத்திலே குதிரையேறிக்கொண்டு பின்னின்ற ஒற்றைச் சேவகரைப் பார்த்து: "இவர் யாவர்?" என்றான். சுந்தரசாமந்தன் வணங்கி: "இந்தச்சேனைவெள்ளத்தினுள்ளே இவரை யாவரென்றறியலாம்" என்றான். பாண்டியன்: "அவரை இங்கே அழை" என்றான். உடனே அவ்வொற்றைச் சேவகர் அப்பாண்டியனெதிரே சென்றார். பாண்டியன் மகிழ்ந்து, இரத்தினுபரணங்களையும் பீதாம்பரங்களையும் கொடுத்தான். ஒற்றைச் சேவகர், தம்மன்பனாகிய சுந்தரசாமந்தன்பொருட்டு வாங்கித் தரித்துத்; தம்முடைய தமர்களுக்குங் கொடுத்துக், குதிரையைத் தூண்டி ஐங்கதி நடத்திக் காட்டித், தமது சேனைவெள்ளத்தினுள்ளே போயினார்.

அப்பொழுது "சேதிராயன் வேட்டைக்குப் போய்ப் புலியினால் இறந்துவிட்டான்" என்று ஒரொற்றன் வந்து, பாண்டியனுக்குச் சொன்னான். பாண்டியன் சுந்தரசாமந்தனுக்கு அளவில்லாத வரிசைகளையுந் தலைமையையுங் கொடுத்து: "இந்தச்சேனைகளைத் தங்கள் தங்கள் ஊருக்குப் போகும்படி செலுத்தக்கடவாய்" என்றான். சுந்தரசாம

ந்தனும் அப்படிச் செலுத்துவான் போசன்று நிற்பச், சிவ பெருமான், மனிதவேடங்கொண்ட வீரர்களோடும்,அங்கு நின்றபடியே மறைந்தருளினார். பாண்டியன் அது கண்டு அற்புதமடைந்து: "இது சிவபெருமானுடைய திருவிளை யாடல்" என்று நினைந்து, கண்ணீர் பொழிய, உரோமஞ் சிலிர்ப்ப, மெய்யன்பு வடிவமாயினான். தனக்கு உயிர்த்து ணையாய் நின்ற சுந்தரசாமந்தனை நோக்கி: "உனக்குச் சிவ பெருமான் எளிவந்தாரென்றால், எனக்கு அச்சிவபெரு மான் நீயே" என்று அவனுக்கு யாவுங் கொடுத்து, மனக் கவலையின்றி வாழ்ந்திருந்தான்.

திருச்சிற்றம்பலம்.

முப்பத்தொராவது

## உலவாக்கிழியருளியபடலம்.

குலபூடணபாண்டியன், சோமவாரமுதலிய சிவவிரத ங்களெல்லாவற்றையும், வழுவாது அனுட்டித்துக்கொ ண்டு வந்தான். அவ்வனுட்டான வலியினாலே, தன்னாட்டி லுள்ள பிராமணர்களை அவமதித்தான்; அதனால் மழை பெய்யாதொழிந்தது; அதனாலே பாண்டிநாடெங்கும் வி ளைவு குன்றியது; அதனாலே பிராமணர்களெல்லாரும் வறி யவர்களாய் வேதாத்தியயனம் யாக முதலிய கருமங்களை இழந்து, இழிந்த தொழில்களைச் செய்து, ஆற்றாமையால் வயிறு வளர்க்கும்பொருட்டு அன்னியதேசங்களுக்குப் போயினார்கள். குடிகளெல்லாம் பசியினால் மிக வருந்தி: "எந்தத்தேசத்துக்குப் போவேம்" என்று இரங்கலுற்றன.

பாண்டியன், அது கண்டிரங்கிச், சோமவாரத்திலே பொற்றாமரைவாவியிலே ஸ்நானஞ்செய்து, சித்திவிநாயக ரைப் பூசித்து, ஆயிரந் தேங்காயுடைத்துச், சோமசுந்தரக் கடவுளைப் பூசை செய்து வணங்கிக், கைகுவித்து நின்று: "எம்பெருமானே! உயிர்களுக்கெல்லாம் உயிர் நீரேயாக வும், அவ்வுயிர்கள் பசியினால் வருந்தும் வருத்தம் அடி

யேனை வருத்துவதென்னை! தமியேன் சம்பாதித்த பொருள்களெல்லாந் தருமத்தின்வழியே சென்றன. இனி நீர் திருவுள மலர்ந்து தமியேனுடைய இடும்பையைத் தீர்த்தருளும்'' என்று விண்ணப்பஞ்செய்தான். சிவபெருமான், பாண்டியனுடைய பிழையைச் சிறிது திருவுளங்கொண்டு, அதனைத் திருச்செவியிற் கேளாதவர்போலச் சும்மாவிருந்தார். பாண்டியன், தன் வீட்டுக்குப் போய்ச், சிவபெருமானைச் சிந்தித்துக்கொண்டு, தரையிலே படுத்து நித்திரை செய்தான்.

அப்பொழுது சிவபெருமான், பாண்டியனுக்குச் சொப்பனத்திலே ஒரு சித்தராய் எழுந்தருளி வந்து: "பாண்டியனே! நீ நம்மிடத்து மிக்க அன்புடையை; பூமியைச் செங்கோலோச்சியாளும் நீதியை யுடையை. இவ்வியல்புடைய உனக்கு ஓர் குறையுளது. உன்னாட்டிலே இந்நாளில் யாகங் குன்றியது. வேதமே நமதாசனம்; வேதமே நமது பாதுகை; வேதமே நமது வாகனம்; வேதமே நமது சிலம்பு; வேதமே நமது கௌபீனம்; வேதமே நமது திருக்கண்; வேதமே நமது திருவாக்கு; வேதமே நமது திருமேனி; வேதமே நமது ஆஞ்ஞாசத்திவடிவமாய் ஆன்மாக்களுக்கு விதிவிலக்குக்களை யறிவித்துப் போகமோக்ஷங்களைக் கொடுப்பது; வேதமே நமது செங்கோல். இத்துணைச் சிறப்புடைய வேதங்களுக்கு உறுதியாவார் பிராமணர்கள்; அவர்கள் அவ்வேதத்தின் வழியே யாகங்கள் செய்து நம்மிடத்தே சிந்தை செலுத்தும் பெருமையுடையவர்கள்; அவர்கள் செய்யும் யாகமே மழைக்குக் காரணம். பிள்ளாய்! இத்துணைச் சிறப்பினையுடைய பிராமணர்களை நீ இகழ்ந்து கைவிட்டாய்; அதனால் மழை பெய்யாதொழிந்தது. இனி உலகம் உய்யும்வண்ணம் முத்தீ வேட்கும் பிராமணர்களை நம்மைப்போலவே பாவித்தொழுகி, நாடோறும் பல தருமங்களைப் பெருக்கிச், செங்கோலோச்சி வாழக்கடவாய். நாம் உனக்கு ஒருலவாக்கிழி தருகின்றோம், இந்தக்கிழியில் எத்துணைப்பொன் எடுத்

துச் செலவழிக்கினும், நாங் தந்தவளவிற் சிறிதுங் குறை யாது. இதை வைத்துக்கொண்டு, உன்னுட்டில் வந்த வறுமையை ஓட்டக்கடவாய்" என்று திருவாய்மலர்ந்து, அதனை அவன் கையிற் கொடுத்து, அவன் மனக்கவலை தீரும்படி அவனெற்றியிலே விபூதிசாத்தி, மறைந்தருளினார்.

பாண்டியன், விழித்தெழுந்து, உலவாக்கிழியைச் சிரமேற்கொண்டு, மகிழ்ச்சியோடு ஒரு முகூர்த்தகாலங் கூத்தாடி, மந்திரிமார்களுக்குஞ் சேனுதிபதிகளுக்கும் அதைக் காட்டிச், சொப்பனத்தை அறிவித்தான். அவ்வுலவாக்கிழியை இரத்தின சிங்காசனத்திலேற்றிப், பலவித வாத்தியங்களொலிக்க, அதற்குச் சந்தனம் பூசித், திருமாலை சாத்தித், தூபதீபங் காட்டிச், சிவபெருமானுகப் பாவித்துப், பூசை முடித்து, வலஞ்செய்து வணங்கி, அதனைப் பொதி நீக்கியெடுத்துப், பிராமணர்களுக்கும் யாகங்களுக்கும் பிறருக்குஞ் செலவிட்டான். இப்படியே நாடோறும் வரையாது கொடுக்கக் கொடுக்க, அக்கிழி சிறிதுங் குறையாதிருந்தது.

பாண்டியன், அப்பொதியிற் பொன்னினுலே, சோமசுந்தரக்கடவுளுடைய விமானம், மீனுக்ஷியம்மையுடைய விமானம், அறுகாற்பீட முதலியவைகளை, அழகு பொருந்த வேய்ந்தான். பாண்டியனுகிய மேகம், உலவாக்கிழியாகிய கடலை முகந்து முகந்து, நாடோறும் பொழிந்து, தருமப்பயிரை வளர்க்கும்பொழுது, மேகங்கள் கடலைப் பருகி, மழை பொழிந்து, நென் முதலிய பயிர்களை வளர்த்தன. அதனுலே பாண்டிநாடு அளகாபுரிபோலச் செல்வந்தழைத்தோங்கப் பெற்றது. அதனுல், வேதத்தில் வல்லவர்களும், சிவாகமத்தில் வல்லவர்களும், உபநிடதத்தில் வல்லவர்களும், மிருதியில் வல்லவர்களும், வியாகரணத்தில் வல்லவர்களும், தருக்கநூலில் வல்லவர்களும், யாகஞ்செய்பவர்களும், சந்நியாசிகளும், பாண்டிநாடெங்கும் விருத்தியடைந்தார்கள்.

திருச்சிற்றம்பலம்.

## முப்பத்திரண்டாவது

# வளையல்விற்றபடலம்.

சிவபெருமான், தேவதாருவனத்துள்ள இருடிகளுடைய பன்னியர்களது கற்பை அளந்து காட்டும்பொருட்டுத் திருவுளங்கொண்டு, கௌபீனமும், விபூதிப் பூச்சும், கீதம்பாடுங் கனிவாயும், திருப்புன்முறுவலும், கிங்கிணி பொருந்திய திருவடிகளும், திருவடிகளிற் பாதுகைகளும், பிக்ஷாபாத்திரத்தையும் தமருகத்தையும் ஏந்திய திருக்கைகளும் உடைய மிக அழகிய ஒரு பிக்ஷாடனவடிவம் உடையராகித், தேவதாருவனத்துக்கு எழுந்தருளினார். அவருடைய திருச்சிலம்பொலியுங் கீதவொலியுந் தமருகவொலியுஞ் செவிவாய் மடுத்தவுடனே, இருடிபத்தினிகள் விரைந்து பிக்ஷை கொண்டு, வீட்டின் புறத்து வந்தார்கள். வந்தவுடனே, பிக்ஷாடனமூர்த்தியுடைய பேரழகைக் கண்டு, எல்லையின்றி வளர்ந்த காமத்தால் விழுங்கப்பட்டுக், கூந்தல் சோரப், புடைவை யவிழ, வளையல் கழலப், பசலை நிறங் கொண்டு, பரவசர்களாய் நின்றார்கள். சிவபெருமான் அவர்களை இவ்வாறே மோகிப்பித்துக், கருமமே கருத்தா என்று பிதற்றும் மீமாஞ்சகர்களுடைய செயலை உலகத்தார்களுக்கு உணர்த்திவிட்டு, மறைந்தருளினார்.

இருடிகள், தங்கள் பன்னியர்கள் நிற்கு நிலையைக் கண்டு, அவர்களுடைய கற்பையும் நாணையும் வேரோடே களைந்துகொண்டு போனவர் மதுரைச் சோமசுந்தரக்கடவுள் என்று தெளிந்து, அவர்களை நோக்கி: "நீங்கள் கற்பின் வழுவினமையால் மதுரைநகரத்து வைசியப்பெண்களாய்ப் பிறக்கக்கடவீர்கள்" என்று சபித்தார்கள். அதற்கு அவர்கள்: "எங்களுக்கு இந்தச்சாபம் நீங்குவது எப்போது" என்று வினவ, இருடிகள்: "அம்மதுரைநகரத்துக்கு அரசாகிய சோமசுந்தரக்கடவுள் வந்து உங்களைக் கைதீண்டும் போது இச்சாபம் நீங்கும்" என்றார்கள்.

இருடிபன்னியர்கள், மதுரைத்திருநகரத்தில் வைசியப் பெண்களாய்ப் பிறந்து வளர்ந்து, பெதும்பைப்பரு

வம் அடைந்தபொழுது, சிவபெருமான், வளையல் விற்கும் வணிகவேடங் கொண்டு, வைசிய வீதிக்கு வளையல் விலை கூறிக்கொண்டு, எழுந்தருளிவந்தார். உடனே அவ் வைசியப் பெண்களெல்லாரும், வீதியிற் புறப்பட்டு வந்து, அவ் வணிகரது பேரழகைக் கண்டு, காமத்தினாலே மயங்கி, அவரைச் சூழ்ந்து, தங்கள் கைகளை நீட்டி, வளையல் இடுவித்தார்கள். வணிகர் வளையல் இட்டுவிட்டு, மறைந்தருளினார். மறைந்த வணிகர், அப்பெண்களும் பிறருங் காணத், திருக்கோயில் விமானத்து உள்ளொளியாகிய திருவுருவாய்த் தோன்றியருளினார். அது கண்ட நகரத்தாரெல்லாரும், வளையல் விற்ற வணிகர் சோமசுந்தரக்கடவுளே என்று வியந்து, கண்ணீர் பொழிந்து, உவகை வெள்ளத் தாழ்ந்தார்கள். சிவபெருமான் தமது திருக்கையினாலே தொட்டு வளையலிட்டமையினாலே, அவ் வைசியப் பெண்களெல்லாருங் கருக்கொண்டு, அளவில்லாத புதல்வர்களைப் பெற்றார்கள். அப்புதல்வர்கள், அளவில்லாத வலிமையும் வீரமும் பெருமையும் பெற்று, வாழ்ந்தார்கள். வைசியப்பெண்கள், சிவபெருமானுடைய அருளைப் பெற்றுச், சிலநாள் இருந்து, சிவலோகத்தை அடைந்தார்கள்.

திருச்சிற்றம்பலம்.

முப்பத்துமூன்றாவது

## அட்டமாசித்தி உபதேசித்தபடலம்.

சிவபெருமான், திருக்கைலாசமலையிலே ஆலமரநிழலிலே உமாதேவியார் தமது திருத்தொடையின்மீதிருந்து கொண்டு வெற்றிலை மடித்துக் கொடுப்பப், போககுருவாய் வீற்றிருந்துகொண்டு, நந்தி பிருங்கி மகாகாளர் முதலிய கணர்களுக்குஞ் சனகர் முதலிய நான்கு முனிவர்களுக்குஞ் சிவதருமங்களை உபதேசித்தருள்வாராயினார். அப்பொழுது, முருகக்கடவுளுக்குப் பால் கொடுத்த இயக்கப்பெண்கள் அறுவரும், விபூதி ருத்திராக்ஷந் தரித்து

வந்து, சிவபிரானை வணங்கி நின்று: "எம்பெருமானே! அடியேங்களுக்கு அட்டமகாசித்திகளை உபதேசித்தருளும்" என்று விண்ணப்பஞ்செய்தார்கள். அப்பொழுது சிவபெருமான், தமது மடியில் எழுந்தருளியிருக்கும் உமாதேவியாரைத் தமது திருக்கரத்தினலே, சுட்டி: "இப்பார்ப்பதி எங்கு நிறைந்த பராசத்தியும் மகேசையுமாய் உள்ளவள்; அணிமா முதலிய அட்டசித்திகளும் பாங்கியர்களாய்த் தன்னைச் சூழ்ந்து குற்றேவல் செய்ய இருப்பவள்: இவளை நீங்கள் சிந்தித்தீர்களாயின், இவள் உங்களுக்கு அட்டமகாசித்தியையுந் தருவாள்" என்று திருவாய்மலர்ந்து, எட்டுச் சித்திகளையும் அவ் வியக்கிமார் அறுவருக்கும் உபதேசித்தருளினர். அவர்கள் முன்னை யூழ்வினையினால் அதனை மறந்தார்கள். சிவபெருமான் அக்குற்ற நோக்கி அவர்களைக் கோபித்து: "நீங்கள் பட்டமங்கை என்னுந் தலத்தில் ஆலமரத்தடியிலே கருங்கல்லாய்க் கிடக்கக்கடவீர்கள்" என்று சபித்தருளினர். இயக்கிமார்கள் மனந் தளர்ந்து: "எம்பெருமானே! இச்சாபம் எப்போது நீங்கும்?" என்றார்கள். சிவபெருமான்: "நீங்கள் கருங்கல்லாய்க் கிடவுங்கள். ஆயிரம் வருடஞ் சென்றபின், நாம் மதுரையினின்றும் அவ்விடத்துக்கு எழுந்தருளிவந்து, உங்கள் சாபத்தைப் போக்கி, உங்களுக்குப் பழைய உருவத்தைத் தந்து, எட்டுச்சித்திகளையும் உபதேசித்தருள்வோம்; போங்கள்" என்று திருவாய்மலர்ந்தருளினர்.

இயக்கிமார்கள் அறுவரும், பட்டமங்கையினுள்ள ஆலமரத்தினடியிலே, கருங்கல்லாய்க் கிடந்தார்கள். ஆயிரம் வருடஞ் சென்றபின், சோமசுந்தரக்கடவுள் ஓராசாரிய வடிவங்கொண்டு எழுந்தருளிவந்து, அக்கருங்கற்களின்மீது திருநோக்கஞ்செய்தருளினர். உடனே இயக்கிமார்கள் அறுவரும், கருங்கல் வடிவ நீங்கி, முன்னை வடிவங்கொண்டு எழுந்துவந்து, அவ்வாசாரியரை வணங்கினர்கள். ஆசாரியர் அவர்கள் சிரமீது தமது திருக்கையை வைத்து, எட்டுச் சித்திகளையும் இங்ஙனம் உபதேசிப்பாராயினர்.

"எட்டுச் சித்திகளாவன அணிமா, மகிமா, லகிமா, கரிமா, பிராப்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்பவைகளாம். அவைகளுள், அணிமாவாவது மிகச் சிறிய உயிர்தோறுந் தான் பரமாணுவாய்ச் சென்றிருக்குஞ் சிறுமையாம். மகிமாவாவது பிருதிவி முதற் சிவதத்துவம் ஈறாக உள்ள முப்பத்தாறு தத்துவங்களின் உள்ளும் புறமும் நிறைந்திருக்கும் பெருமையாம். லகிமாவாவது மேருமலையைப்போலப் பாரமாயிருக்கும் யோகியை எடுத்தால் இலகுவாயிருப்பதாம். கரிமாவாவது அணுவைப்போல் இலகுவாயிருக்கும் யோகியை எடுத்தால் மேருமலையைப்போலப் பாரமாயிருப்பதாம். பிராப்தியாவது பாதாளத்தினின்றும் பிரமலோகத்திற் புகுதலும் மீண்டும் பாதாளத்தை யடைதலுமாம். பிராகாமியமாவது பரகாயத்திற் பிரவேசித்தலும் ஆகாயத்தில் இயங்குதலுந் தான் இச்சித்தபோகமனைத்தையுந் தானிருக்குமிடத்தில் வருவித்தலுமாம். ஆகாயத்துள்ள சூரியனது உடம்பின் வெய்யிலினால் எல்லாம் விளங்குதல்போல மண்ணுலகத்துப் பொருள்களையும் விண்ணுலகத்துப் பொருள்களையும் முக்காலங்களையுந் தன் சரீரத்தொளியால் அறிதலும் பிராகாமியம் என்று வேதஞ் சொல்லும். ஈசத்துவமாவது முத்தொழில்களையுந் தன்னிச்சைப்படி செய்து சூரியன் முதலிய கிரகங்கள் தன்னேவல் கேட்ப வாழ்தலாம். வசித்துவமாவது இந்திராதி தேவர்களையும் அசுரர்களையும் மனிதர்களையும் பூதங்களையும் மிருகங்களையும் பறவைகளையுந் தன்வசமாக்கிக் கொள்ளுதலாம். நம்மையறிந்த யோகிகள் இவைகளை விரும்பார்கள்; ஆயினும், இவைகள், அவர்களை நிழல்போலடைந்து, அவர்கள் பெருமையை உலகத்தாருக்கு அறிவிக்கும்" என்று உபதேசித்தருளினார்.

அது கேட்ட இயக்கிமார்கள், உமாதேவியாரைத் தியானிக்குந் தியானபலத்தினாலே அச்சித்திகளை நன்கு பயின்று, ஆகாயவழிக்கொண்டு சென்று, திருக்கைலாசமலையை அடைந்தார்கள்.

திருச்சிற்றம்பலம்.

முப்பத்துநான்காவது

## விடையிலச்சினையிட்டபடலம்.

காஞ்சீபுரத்தில் ஒரு சோழராசன் இருந்தான். அவன், அக்காஞ்சியிலுள்ள காடு முற்றும் வெட்டுவித்ததினாலே, காடுவெட்டிய சோழன் எனப் பெயர்பெற்றான். அவன் உத்தமசிவபத்தர்களெல்லாரினும் உத்தமன்; வேதங்களையும் வேதாங்கமாறையும் ஓதியுணர்ந்தவன்; சிவபுராணங்களை நாடோறும் நியமமாகக் கேட்பவன்; கலவைச்சாந்தினும் இரத்தினாபரணங்களினுஞ் சிறிதும் விருப்பின்றி விபூதியையும் உருத்திராக்ஷத்தையுமே தரிப்பவன்.

அவன், மதுரைச் சோமசுந்தரக்கடவுளுடைய திருவிளையாடலைக் கேட்டுணர்ந்து, அவரைத் தரிசிக்க விரும்பி, ஒருநாளிராத்திரி: "சோமசுந்தரக்கடவுளை எப்போது தரிசிப்பேன்" என்று கவலையுற்று நித்திரைசெய்தான். அப்பொழுது சிவபெருமான் சோழனுக்குச் சொப்பனத்திலே ஒரு சித்தசுவாமியாய்த் தோன்றி: "சோழனே! அஞ்சாதே. நீ இன்றைக்கு உருவமாறி, ஒருத்தனாய்த் தனித்து வந்து, தரிசனஞ்செய்துகொண்டு போ" என்று திருவாய்மலர்ந்து, மறைந்தருளினார். சோழன் விழித்தெழுந்து, வியந்து, மந்திரிமாருஞ் சேனைகளும் பிறருமின்றி, அவ்விரவிலே சிவபெருமானுடைய திருவருளை முன்னிட்டுக்கொண்டு, தனித்து நடந்துபோய், வைகைக்கரையை அடைந்தான். வைகைநதி மிகப் பெருக்கெடுத்துப் பாய்ந்தது. அது கண்ட சோழன், மனங் கலங்கிச்: "சோமசுந்தரக்கடவுளைத் தரிசித்தற்கு இடையூறு விளைந்ததே! விடிந்தால், விக்கினம் உண்டாகுமே" என்று வருந்தினான். அப்பொழுது சிவபெருமான், முன்னைச் சித்தர்போல் எழுந்தருளி வந்து, வைகைநதி வற்றும்படி திருநோக்கஞ்செய்தார். அது வற்றுதலும், சித்தர், சோழனை அழைத்துக்கொண்டு, வடக்குவாயிலைத் திறந்துபோய், வீதிகளைக் கடந்து, பொற்றாமரைவாவியிலே ஸ்நானஞ்செய்வித்துத், திருக்கோயிலினுள்ளே புகுவித்து, விமானத்தில் எழுந்தருளியிருக்கின்ற தம்மை வணங்குவித்துப், பின்பு மீனாட்சியம்மையை

யும் வணங்குவித்தார். சோழன் சோமசுந்தரக்கடவுளை வணங்கி, இவ்வாறு துதிப்பானாயினன்:—

எண்ணியவெண்ணியாங்கேயான்பெறமுடித்தாய்போற்றி
பண்ணியன்மறைகடேருப்பான்மொழிமணாளபோற்றி
புண்ணியர்தமக்குவேதப்பொருளுரைபொருளேபோற்றி
விண்ணிழிவிமானமேயசுந்தரவிடங்கபோற்றி. (க)

எவ்வுடலெடுத்தேன்மேனுளெண்ணிலாப்பிறவிதோறும்
அவ்வுடலெல்லாம்பாவமறம்பொருட்டாகவன்றோ
தெவ்வுடல்பொடித்தாயுன்றன்சேவடிக்கடிமைபூண்ட
இவ்வுடலொன்றேயன்றோவெனக்குடலானதையா. (உ)

இப்படிச் சோழன் துதித்து வணங்கிப், பலவரங்களையும் வேண்டிக்கொண்டான். சித்தசுவாமி சோழனை நோக்கி: "நீ வந்த சமாசாரம், பாண்டியன் அறிந்தால், உனக்குத் துன்பஞ் செய்வான்" என்று சொல்லிச், சோழனை உத்தரவழிக்கொண்டு சென்று, வைகையாற்றின் வடகரையளவும்போய், அவனெற்றியிலே விபூதி சாத்தி: "உன் கருத்துக்கேற்க உனக்கு நல்லதுணை யுண்டாகக்கடவது" என்று சொல்லி, அவனை விடுத்துத், திரும்பிவந்து, வடக்குவாயிற் கதவைப் பூட்டி, அதில் இடபக் குறியை இட்டுத், தமது விமானத்தில் எழுந்தருளியிருந்தார்.

சூரியன் உதிக்கும்பொழுது, வாயில் திறப்பவர்கள், வடக்குவாயிற் கதவிலே இடபக்குறி இட்டிருப்பதைப் பார்த்து, ஐயங்கொண்டு, மற்றைவாயில்கண் மூன்றினும் விரைந்துபோய்ப் பார்த்து, முதனாளிலே தாங்கள் இட்ட கயற்குறியே இருத்தல் கண்டு, குலபூடணபாண்டியனெதிரே சென்று வணங்கி: "மகாராசாவே! வடக்குவாயிற் கதவிலே கயற்குறி மாற்றி, இடபக்குறி இடப்பட்டிருக்கின்றது. இட்டவர் யாவர் என்றறியேம்" என்றார்கள். உடனே பாண்டியன் வந்து பார்த்து: "இஃதோர் அற்புதம்! இம்மாயையைச் செய்ய வல்லவர் யாவர் என்றறிகின்றிலேன்" என்று ஐயங்கொண்டு, தன் மாளிகையை அடைந்து, போசனஞ் செய்யாது, தரையிலே படுத்து நித்திரை செய்தான். அன்றிரவு சோமசுந்தரக்கடவுள் பாண்டியனு

க்குச் சொப்பனத்திலே தோன்றி: "பாண்டியனே! நம்மேல் வைத்த அன்பினாலே, காஞ்சியிற் காடெல்லாம் வெட்டிய சோழராசன், நம்மை வந்து தரிசிக்க விரும்பினான். நாம் அவனை வடக்குவாயிலைத் திறந்து அழைத்துக் கொண்டு வந்து தரிசனஞ் செய்வித்து, மீள விடுத்துக், கத்வைப் பூட்டி, நமது இடபக்குறியை இட்டோம்" என்று திருவாய் மலர்ந்து, மறைந்தருளினார்.

பாண்டியன் விழித்தெழுந்து, அஞ்சி, வெயர்த்து, விம்மி, அன்புக் கெளிவந்த சிவபெருமானுடைய கருணையை நினைந்து நினைந்து, அற்புதவெள்ளத்திலும் ஆனந்தவெள்ளத்திலும் அழுந்தினான். அழுந்தி, மாளிகையினின்று நீங்கிச், சிவபெருமானுடைய திருவிளையாடலை எல்லாருக்குந் தெளிவித்து, அவர்களையுந் தன்னைப்போல் ஆனந்தவெள்ளத் தழுத்தினான். பின்பு தன்குமாரனாகிய இராசேந்திரபாண்டியனுக்குத் தன்னரசைக் கொடுத்துவிட்டுத், தான் சிவபதத்தை அடைந்தான்.

திருச்சிற்றம்பலம்.

முப்பத்தைந்தாவது

## தண்ணீர்ப்பந்தல்வைத்தபடலம்.

இராசேந்திரபாண்டியன் அரசியற்று நாளிலே, காடு வெட்டிய சோழன், சோமசுந்தரக்கடவுளை வெளிப்படையாகவந்து வந்து தரிசனஞ்செய்துகொண்டு போகக் கருதிப், பாண்டியனுடைய சிநேகத்தைப் பெறற்பொருட்டு, அவனுக்கு இரத்தினாபரணம் பீதாம்பரம் முதலிய வரிசைகளை அனுப்பினான். பாண்டியன், அவைகளைக் கைக்கொண்டு, தானுஞ் சோழனுக்கு வரிசைகளை அனுப்பினான். இருவரும் நண்புகலந்திருக்கும் பொழுது, சோழன் தன் மகளைப் பாண்டியனுக்குக் கொடுக்க உடன்பட்டான். இராசேந்திரபாண்டியனுடைய தம்பியாகிய இராசசிங்கனென்பவன், அதைக் கேள்வியுற்றுத், தன்றமையனுக்

குப் பேசப்பட்ட பெண்ணைத் தானே விவாகஞ்செய்யக் கருதி, அவனை வஞ்சித்துக் காஞ்சிபுரத்தை அடைந்தான். அதுகேட்ட சோழன், சேனையோடு வந்து இராசசிங்கனை அழைத்துக்கொண்டு போய்த், தன்மகளை அவனுக்கு விவாகஞ்செய்து கொடுத்தான்.

காடுவெட்டிய சோழன், பாண்டிநாட்டைத் தன் மருமகனாகிய இராசசிங்கனுக்காக்க விரும்பி, இராசேந்திரபாண்டியனைப் பிடிக்க நினைந்து, அம்மருமகனோடு எண்ணில்லாத சேனை சூழப் புறப்பட்டு வந்து, மதுரைநகரத்துக்கு இரண்டியோசனை தூரத்திலே தங்கினான். அதனை ஒற்றரால் அறிந்துகொண்ட இராசேந்திரபாண்டியன், திருக்கோயிலையடைந்து, சோமசுந்தரக்கடவுளை வணங்கி: "எம்பெருமானே! முன்னே பாதியிராத்திரியிலே தனித்துவந்து உம்மைத் தரிசனஞ்செய்துகொண்டு போன உமது பத்தனாகிய சோழன், பின்பு தமியேனுக்கு வரிசைகள் விடுத்து நண்பனாயினான். இப்பொழுது தமியேனுக்கு விரோதமாகப் படையெடுத்து வந்திருக்கின்றான். முன்னே அவன் செய்த தருமத்துக்குள்ளாகி அவன் பக்கநின்ற நீர், இப்பொழுது அவன் செய்யும் மறத்துக்குள்ளாகி அவன் பக்கநின்றருள்வீரோ!" என்று விண்ணப்பஞ்செய்தான். அப்பொழுது சிவபெருமானது திருவருளினாலே, ஆகாயத்தினின்றும்: பாண்டியனே! நீ நாளைக்கு உன்சேனையோடு போய் உன்பகைவர்களை எதிர்த்து யுத்தஞ்செய்யக் கடவாய். வெற்றி உனக்குக் கிடைக்கும்படி செய்வேம்" என்று ஓரசரீரிவாக்குத் தோன்றியது. பாண்டியன் அதுகேட்டு, மனமகிழ்ந்து, வணங்கி, விடைபெற்றுக்கொண்டு, தன்னிருக்கையை அடைந்தான்.

பாண்டியன், சூரியோதயத்தில் எழுந்து, சந்தியாவந்தனமுஞ் சிவபூசையுமுடித்துக்கொண்டு, தன்சேனையோடு போர்க்களத்தை அடைந்தான். சமுத்திரமீது நதி செல்லுதல்போலச் சோழனது பெருஞ்சேனைமீது பாண்டியனுடைய சிறுசேனை சென்றெதிர்த்தது. சோழனுடைய

சேனைகட்கெல்லாம், பாண்டியனுடைய சேனைகள், சிவபெருமானுடைய திருவருளினாலே, ஒன்று அனந்தமாகத் தோன்றின. இருவர் சேனைகளும் கலந்து இடைவிடாது பெரும்போர் செய்தார்கள். உடம்பு நிழல் அடியிலொதுங்க உச்சியிலே சூரியன் வந்தபொழுது, வெய்யின் மிகுதியால் இருவர் சேனைகளுந், தண்ணீர்த்தாகங்கொண்டு, குடிக்கத் தண்ணீரும் ஒதுங்க நிழலுமின்றி, மிக வருத்தமடைந்தன. அப்பொழுது சோமசுந்தரக்கடவுள், பாண்டியன் சேனைநடுவே ஒரு தண்ணீர்ப்பந்தலைப் பரப்பி, அதன் கீழே, திரிபுண்டரந் தரித்த நெற்றியுந் திருவடியிலே தரித்த ஒற்றைக்கிங்கிணியோசையும் புலித்தோலுடையுந் திருப்புன்முறுவலுந் திருவருட்பார்வையுமுடைய ஒருதவவேடங்கொண்டு எழுந்தருளியிருந்து, ஒரு கெண்டியைத் தாங்கி, ஒருவருக்கு ஒன்றேயாய் இலக்ஷம்பேருக்கு இலக்ஷமாய் உள்ள துவாரத்தினாலே, தண்ணீர் வார்த்துத், தாகத்தைத் தணித்தருளினார்.

பாண்டியனுடைய சேனைவீரர்கள், சிவபெருமானது தண்ணீர்ப்பந்தரினுள்ளே புகுந்து, தண்ணீர் குடித்து, இளைப்புநீங்கி, வலிமை பெற்றுச், சோழனுடைய சேனைவீரரோடு பொருது, வென்றார்கள். சிலவீரர்கள், சோழனையும் அவனுடைய மருமகனையும் பிடித்துப், பாண்டியன் முன்னே கொண்டுவந்து விடுத்தார்கள். பாண்டியன் அவ்விருவரையுஞ் சோமசுந்தரக்கடவுளுடைய சந்நிதியிலே கொண்டுபோய் விடுத்து: "எம்பெருமானே! உமது திருவுளம் யாது!" என்றான். அப்பொழுது ஆகாயத்தினின்றும்: "பாண்டியனே! நீ தருமமுடையை, உன் கருத்துக்கிசைந்தபடி செய்" என்று ஓரசரீரிவாக்குத் தோன்றிற்று. பாண்டியன் அதுகேட்டுச், சோழனைச், சில யானைகளுங் குதிரைகளும் ஆபரணங்களும் பிறவுங் கொடுத்து, அனுப்பிவிட்டான். பின்பு, தன்றம்பியாகிய இராசசிங்கனுடைய செருக்கடங்கும்வண்ணம், அவன் அநுபவிக்குஞ் செல்வங்களுள்ளே சிலவற்றை மாற்றி, அவனை வேறாக ஒதுக்கி

வைத்துவிட்டு, எல்லாவுயிர்களையுந் (தாய்போலப் பாது காத்துக்கொண்டு, வாழ்ந்திருந்தான்.

திருச்சிற்றம்பலம்.

முப்பத்தாறாவது

## இரசவாதஞ்செய்தபடலம்.

பாண்டிநாட்டிலே திருப்பூவணமெனப் பெயர்கொண்ட ஒரு சிவதலமுண்டு. அதிலுள்ள இயங்கியற்பொருள் நிலையியற்பொருளெல்லாஞ் சிவலிங்கவடிவம். இந்திரன் சூரியன் முதலிய தேவர்கள் பலர், அங்கே சிவபூசை செய்து, வேண்டிய வரங்களைப் பெற்றார்கள். அந்தத்தலத்தினுள்ள திருக்கோயிலிலே பணிசெய்யும், உருத்திரகணிகையர்களுள்ளே பொன்னனையாளென்பவள் ஒருத்தி யிருந்தாள். அவள் ஆடல் பாடல்களினாலும் அழகினாலுந் தெய்வப்பெண்களுக்குச் சமமானவள்; தருமநூல்வழியொழுகும் நல்லொழுக்கத்தினாலோ அவர்களுக்கு மேலானவள். அவள், நாடோறுந் தன் பரிவாரத்தோடு சூரியோதயத்துக்கு முன் எழுந்து ஸ்நானஞ்செய்து, சிவபூசை முடித்துத் திருக்கோயிலை அடைந்து, சிவலிங்கப்பெருமானைச் சேவித்துச், சுத்தநிருத்தமாடி, மீண்டு வந்து, சிவனடியார்களைச் சிவனெனப் பாவித்துப் பூசைசெய்து, திருவமுது செய்வித்து, அவர்கள் புசித்து எஞ்சியதையே புசிப்பவள். அது அவளுடைய நியமம்.

பொன்னனையாள் இப்படி யொழுகு நாளிலே, அவளுடைய அன்பை உலகத்தாருக்கு அறிவிக்கும்பொருட்டுச், சிவபெருமான், தமது திருவுருவார்ப்பிக்கும் ஆசையை அவளுக்குக் கொடுத்தருளினார். அன்புருவாகிய பொன்னனையாள், சிவபெருமானுடைய திருவுருவைக் கருவினாற் செய்வித்தும் தினந்தோறும் வரும் பொருளெல்லாம் மாகேசுரபூசைக்கன்றி எஞ்சாமையினாலே, திருவுருவார்ப்பிப்பது எப்படி என்று வருத்தமுற்றாள்.

சிவபெருமான் விபூதியணிந்த திருமேனியும், செம்பவளச் சடையும், கௌபீனவுடையும், கட்டுவாங்கம் பிடித்த திருக்கரமும், யோகபட்டமும், விபூதிப்பையுமுடைய ஒரு சித்தவேடம் பூண்டு, பொன்னனையாளுடைய வீட்டுக்கு அமுது செய்யும் அடியார்களோடு கூடி வந்து, உள்ளே புகாது, புறக்கடையில் ஒரு பக்கத்தே எழுந்தருளியிருந்தார். சிவனடியார்களெல்லாருந் திருவமுதுசெய்துகொண்டு போனபின், வேறிருந்த சித்தரைப் பொன்னனையாளுடைய அடிச்சியர்கள் கண்டு; "ஐயரே! திருவமுது செய்ய உள்ளே எழுந்தருளும்" என்றார்கள். அதற்கு அவர்: "உங்கள் தலைவியை இங்கே அழையுங்கள்" என்றார். அவர்கள் உள்ளே போய் அதனைப் பொன்னனையாளுக்குத் தெரிவிக்க, அவள் போய்ச் சித்தரைப் பூசை செய்து வணங்கி: "எம்பெருமானே! நீர் இங்கெழுந்தருளுதற்குத் தமியேன் யாது தவஞ் செய்தேன்! உள்ளே எழுந்தருளுக. தமியேன் உய்யும்பொருட்டு நீர் பணித்தருளும் பணிகளைத் திருவுளத்திற்கிசையச் செய்வேன்" என்று விண்ணப்பஞ்செய்தாள்.

சித்தசுவாமி உண்ணகை செய்து, பொன்னனையாள் மீது திருநோக்கம் வைத்து: "நீ பேரழகுடையை. சற்றே இளைத்திருக்கின்றாய்" என்றார். அதற்குப் பொன்னனையாள்: "எம்பெருமானே! அடியேனுக்கு வேறொரு குறையுமில்லை. சிவபெருமானுடைய திருவுரு வார்ப்பிக்க ஆசைகொண்டு கருச் செய்வித்தேன். திருவுரு வார்ப்பித்தற்குப் பொருளில்லை. நாடோறுந் தமியேன் கையில் வரும் பொருளெல்லாம் மாகேசுரபூசைக்கே செல்கின்றன. சிறிதும் எஞ்சுகின்றதில்லை" என்றாள். சித்தசுவாமி அவ்வின் சொல்லாகிய தேனைத் தமது திருச்செவிவாய் மடுத்து: "பெண்ணே! நீ சரீரமும் இளமையுஞ் செல்வமும் நீர்க்குமிழிபோலச் சிறிதும் நிலையில்லாதவை என்று கண்டாய்; தருமமொன்றே நிலையுடையதென்று துணிந்தாய்; தருமத்துள்ளுஞ் சிவதருமமே விசேடம் என்றும், சிவதருமத்

தாள்ளுஞ் சிவைபூசையே விசேடம் என்றும், சிவபூசையு ள்ளும் மாகேசுரபூசையே விசேடம் என்றுந் தெளிந்து, மாகேசுரபூசை செய்கின்றாய்; ஆதலினாலே, நீ இருமைக் கும் உறுதியைப் பெற்றுக்கொண்டாய். நீ உன் கருத்தின் படி திருவுருப் பொன்னினாலே வார்ப்பிப்பாய்; உன் வீட் டிலுள்ள பித்தளைப்பாத்திரம் ஈயப்பாத்திர முதலியவை எல்லாவற்றையும் இங்கே கொண்டுவா" என்றார். உடனே பொன்னனையாள், வெள்ளி செம்பு இரும்பு ஈயம் பித் தளை வெண்கலந் தரா முதலிய உலோகங்களெல்லாவற் றையுங் கொண்டுவந்து, சித்தசுவாமிமுன் வைத்தாள். சித் தசுவாமி அவைகளின் மீதே விபூதியைச் சிதறி: "நீ இன் றிரவு இவைகளை அக்கினியில் இட்டெடுக்கின், இவைகள் பொன்னாய் விடும். அதுகொண்டு சிவபெருமானுடைய திருவுரு வார்ப்பிக்கக்கடவாய்" என்றார். பொன்னனை யாள்: "எம்பெருமானே! நீர் இன்றைக்கு இங்கிருந்து, இரவிலே திருவமுது செய்துகொண்டு, இக்காரியத்தை யும் முடித்துவிட்டு, விடியுமுன் போம்" என்றாள். சித்த சுவாமி: "நாம் மதுரையிற் சித்தர்" என்று சொல்லி மறை ந்தருளினார்.

பொன்னனையாள், சித்தராய் வந்தவர் சோமசுந்தரக் கடவுளே என்று தெளிந்து, மறைந்து போயினார் என்று சிறிது துக்கமும், தன் கவலையை நீக்கினார் என்று பெரு மகிழ்ச்சியும் அடைந்து, அவ்வுலோகங்களெல்லாவற்றை யும் அவர் அருளிச்செய்த படியே அக்கினியில் இட்டெடு த்துப், பொன்னானமை கண்டு, அதுகொண்டு சிவபெரு மானுடைய திருவுரு வார்ப்பித்தாள். அத்திருவுருவினது பேரழகைப் பார்த்து: "அழகிய பிரானோ" என்று சொ ல்லி, அள்ளி முத்தங்கொண்டு, அதனைப் பிரதிட்டைசெய் வித்து, அதற்கு இரதோற்சவ முதலியவை நடத்துவித் துச், சிலநாள் சென்றபின் முத்தியை அடைந்தாள். அத் திருவுருவம், தன் கபோலத்திலே பொன்னனையாள் இட்ட கை நகக்குறியையும் ஏம்நாதர் என்னுங் காரணக்குறி

யையுங் கொண்டு, கலியுகத்திலே பொன்னூருவேருகி, அந்தயுகத்தாருக்குத் தக்க உருவாகி, எழுந்தருளியிருக்கும்.

திருச்சிற்றம்பலம்.

---

முப்பத்தேழாவது

## சோழனை மடுவில் வீட்டியபடலம்.

இராசேந்திரபாண்டியன் சிவபதத்தை அடைந்தான். அவன் குமாரன் இராசேசபாண்டியன்; அவன் குமாரன் இராசகம்பீரன்; அவன் குமாரன் பாண்டிவமிசதீபன்; அவன் குமாரன் புரந்திரசித்து; அவன் குமாரன் பாண்டிவமிசபதாகன்; அவன் குமாரன் சுந்தரேசபாதசேகரன்.

அந்தச் சுந்தரேசபாதசேகரபாண்டியன், சோமசுந்தரக்கடவுளுக்கு மெய்யன்பனுகி அரசியற்று நாளிலே, பத்துத் தேரும் நூறு யானையும் ஆயிரங் குதிரையும் பதினுயிரங் காலாளு மாத்திரமே வைத்துக்கொண்டு, இத்துணைச் சேனைக்குமாத்திரஞ் சிறிது பொருள் செலவிட்டு, எஞ்சிய பொருள்களெல்லாவற்றையுஞ் சோமசுந்தரக்கடவுளுக்கே செலுத்துவாஞயினன்; சிவபெருமானுக்கு முடி கண்டிகை முதலிய இரத்தினுபரணங்களைச் செய்வித்தான்; கோபுரம் மாட முதலியவைகளை இரத்தினம் இழைக்கப்பெற்ற பொன்னினுல் வேய்வித்தான்.

ஆயிரம்பரிக்கோர்சேவகன் என்னுஞ் சோழனெருவன், பாண்டியனுடைய சேனைச் சுருக்கத்தை அறிந்து, அவனை வெல்லக் கருதி, எண்ணில்லாத சேனைகளோடும் மதுரையை நோக்கிச் சென்றுன். அவன் வரவை யறிந்த பாண்டியன், திருக்கோயிலை யடைந்து, சோமசுந்தரக்கடவுளை வணங்கி: "எம்பெருமானே! உமது வலிமையினுல் இப்பூமியை யரசாளுந் தமியேனுடைய வலிமையை நோக்காது, என் சேனையின் சிறுமையை நோக்கிச், சோழன் தனது வலிமையினுல் எனது தேசத்தைக்கொள்ள நினைந்

தான்போலும். சோழன் அளவில்லாத சேனையோடு வந்து இந்நகரத்தை அணுகினான்" என்று விண்ணப்பஞ் செய்தான். அப்பொழுது சிவபிரானது திருவருளினாலே, ஆகாயத்தினின்றும்: "பாண்டியனே நீயே வெற்றியடையும்படி நாம் வந்து யுத்தஞ் செய்வேம்" என்று ஓரசரீரிவாக்குத் தோன்றிற்று.

அது கேட்ட பாண்டியன், மனமகிழ்ந்து, புறம் போந்து. குதிரை யேறிக்கொண்டு, சேனை சூழச், சோழனது சேனையை எதிர்த்தான். சோழன் சேனைக்குப், பாண்டியன் சேனை, சிவபிரானது திருவருளினாலே ஒரு பெருங் கடல்போலத் தோன்றிற்று. சோமசுந்தரக்கடவுள், ஒரு வேடவடிவங்கொண்டு, ஒரு வேலாயுதத்தை ஏந்திச், சோழனுக்கு ஒரு யமன்போலப் பாண்டியன் சேனைக்கு முன் போய் நின்றார். சோழன் அது கண்டு, கோபித்து: "ஆயிரங்குதிரைக்கோர் சேவகன் வந்தேன்" என்று சொல்லிக் கொண்டு போய் எதிர்த்தான். வேடவடிவங் கொண்ட சிவபெருமான்: "ஆயிரங் குதிரைக்கோர் சேவகன் நீயன்றோ! அனந்தங் குதிரைக்கு ஒற்றைச்சேவகன் நானே" என்று சொல்லிச், சோழனெதிரே போய்க், கோபத்தோடு வேலாயுதத்தைச் சுழற்றினார். அது கண்ட சோழன்: "நாம் இனி இவ்வேலாயுதத்தினால் இறப்பதற்கையமில்லை" என்று நினைந்து, குதிரையோடும் ஓடினான். உடனே வேடவடிவங் கொண்ட சிவபெருமான் மறைந்தருளினார். பாண்டியன் சோழனைத் துரத்திக்கொண்டு போனான். சோழன் திரும்பிப் பார்த்து, வேடுவனைக் காணாமையால் அச்சந்தீர்ந்து, பாண்டியனை மதுரைவரையுந் துரத்திக்கொண்டு வந்தான். பாண்டியன் ஓடி வந்து, மதுரைநகரத்துக்கு மேற்குத்திக்கிலுள்ள மிக ஆழமாகிய ஒரு மடுவில் விழச் சோழனுந் தன் குதிரையுடன் அதில் வீழ்ந்தான். பாண்டியன் சிவபிரானது திருவருளினால் எழுந்து விட்டான். சோழன் அதிலாழ்ந்து இறந்து விட்டான். பாண்டியன், சோழனுடைய படைகளையும், குதிரைகளையும், யானைகளையும்,

தேர்களையும், ஆடபரணமும் வஸ்திரமும் வைத்த பெட்டிகளையுங் கைக்கொண்டு, சோமசுந்தரக்கடவுள் அணியத்தக்க ஆபரணங்களையும் வஸ்திரங்களையுங் கொடுத்து, அவருடைய திருவருட்கடலுக்கு அன்புநதியெனப் பெருகி, வீற்றிருந்தான்.

திருச்சிற்றம்பலம்.

முப்பத்தெட்டாவது

## உலவாக்கோட்டை அருளியபடலம்.

மதுரைத்திருநகரத்தில் வேளாளர் குலத்திலே அடியார்க்கு நல்லான் எனப் பெயர் பெற்ற ஒருவன் இருந்தான்; அவன் சிவபத்தி அடியார்பத்திகளில் மிகச்சிறந்தவன். அவன் மனைவி பெயர் தருமசீலை; அவள் கற்பின் மிகச் சிறந்தவள்; தன்னாயகனுக்கு முத்திநெறியிலே தனித்துணைபோன்றவள்.

அவ்வடியார்க்கு நல்லான் வேளாண்மை செய்து, அதனால் வரும் ஊதியத்திலே அரசனுக்குக் கொடுக்கற்பாலதாகிய இறையைக் கொடுத்து, எஞ்சிய பொருளெல்லாம், தன் குறிப்புவழி யொழுகுந் தருமசீலையுடைய துணையினாலே, மாகேசுரபூசையிற் செலவிடுவானாயினான். மணற்கேணியைத் தோண்டுந்தோறும் ஊற்றுநீர் பெருகுதல் போல, மாகேசுரபூசையிற் செலவிடுந்தோறும் அவனுக்குச் செல்வம் பெருகிற்று. அவன் தன்செல்வங் குன்றினுந் தன் மாகேசுரபூசை நியமங் குன்றான் என்னும் உண்மையைப் பிறருக்கு உணர்த்தும்பொருட்டுச், சோமசுந்தரக் கடவுள், அவனுக்கு விளைவில்லாதொழியும் வண்ணஞ் செய்தருளினார். விளைவு குன்றியவழியும், அதனைச் சிறிதும் பாராட்டாது, அவ்வேளாளன் கடன் வாங்கி, மாகேசுரபூசையை முன்போலச் சிறப்பாக நடத்தினான். பின்பு அவனுக்குக் கடனுங் கிடையாவண்ணஞ் சிவபெருமான் தடைசெய்தருளினார்.

சிவனடியாரைத் திருவமுது செய்வித்தன்றிப் போசனஞ் செய்யாமையை நியமமாகக் கொண்ட அவ்வடியார்க்கு நல்லான், தன்னுயிர்த்துணையாகிய பத்தினியோடும் பட்டினியிருந்து, கவலையினால் உள்ளமும் பசியினால் உடம்பும் புழுங்கப்பட்டான். பின்பு: "இனி நிலையில்லாத உடம்பினாற் பெறும் பயன் யாது! இனி என் மனைவியோடு போய்ச் சோமசுந்தரக்கடவுளுக்கு இதனை விண்ணப்பஞ் செய்துவிட்டு உயிர் துறத்தலே துணிவு" என்று துணிந்து கொண்டு, தன் மனைவியோடு சென்று, திருக்கோயிலையடைந்து, சிவபிரானை வணங்கி: "எம்பெருமானே! அடியேனுக்கு வயல் விளைவு குன்றியது; அதனால் உமதடியார் பூசைக்கு இடையூறு விளைந்தது. கடனுங் கிடைக்கின்றிலது; கடன்தர வல்லவரைக் காட்டியருளும். காட்டாதொழிவீராயின், இப்பொழுதே பிராணனை விடுவேன்" என்று தன் மனைவியோடு விண்ணப்பஞ்செய்தான். அப்பொழுது ஆகாயத்தினின்றும்: "அப்பனே! அஞ்சாதே. நாம் இன்றைக்கு உன் வீட்டிலே வெண்மையாகிய அரிசிக்கோட்டை யொன்று வைத்தேம். அது எப்பொழுதும் எடுக்குந்தோறுஞ் சிறிதுங் குறைவில்லாதிருக்கும். நீ அதை நாடோறும் பூசை செய்து, அதில் வேண்டியதை எடுத்து, மாகேசுரபூசை செய்து, யாவருக்கும் அன்னதான முதலிய நானாவித தருமங்களுஞ் செய்துகொண்டு, வாழ்ந்திருக்கக்கடவாய். முத்தியையும் பின்பு தருவேம்" என்று ஓரசரீரிவாக்குத் தோன்றிற்று. அடியார்க்கு நல்லான், அது கேட்டு, மனமகிழ்ந்து, வியந்து, மனையாளோடு வீட்டிற்சென்று, அங்கிருந்த உலவாக்கோட்டையைத் தனது முன்னைத் தவப்பேறுபோலக் கண்டான். அவன் அவ்வுலவாக்கோட்டையை நாடோறும் புட்பஞ் சந்தனந் தூபந் தீபம் என்பவைகளினாலே பூசைசெய்து, அன்னத்தின்பொருட்டும் அதற்கு வேண்டுங் கருவிகளின்பொருட்டும் வேண்டு மட்டும் எடுத்துச், சிவனடியார்கள், வித்துவான்கள், பிராமணர்கள், பிதிரர்கள், தேவர்கள், விருந்தினர்கள், சுற்றத்தார்கள், சினேகிதர்கள் முதலிய யாவர்

பொருட்டுஞ் செலவு செய்துகொண்டு, குபேரன்போல நெடுங்காலம் வாழ்ந்திருந்தான். பின்பு தன் பன்னியோடுஞ் சுற்றத்தாரோடுஞ் சிவசாரூப்பியம் பெற்றுச், சிவலோகத்தில் வாழ்ந்திருந்தான்.

திருச்சிற்றம்பலம்.

முப்பத்தொன்பதாவது

## மாமனாக வந்து வழக்குரைத்தபடலம்.

மதுரைத்திருநகரத்தில், வைசியர் குலத்திலே தனபதி எனப் பெயர்கொண்ட ஒருவன் இருந்தான். அவன் மனைவி பெயர் சுசீலை. அவ்விருவரும் நெடுங்காலம் புத்திரபாக்கியம் இல்லாமையால் வருத்தமுறும்பொழுது, தனபதி, தன் மருமகனையே தனக்குப் புத்திரனாகக் கொண்டு, மனையாள் கைக்கொடுக்க, அவள் தொழுது வாங்கி, அன்போடு வளர்த்தாள். தனபதி, தன்றங்கை வருந்திப் பெற்ற பிள்ளையைத் தனக்குத் தந்த நன்றியைப் பாராட்டாது, தன் மனைவிமேல் வைத்த ஆசை மயக்கத்தினாலே, அத் தங்கையோடு நித்தமுந் தீராச் சண்டையிட்டுக்கொண்டு வந்தான். ஒருநாள் இளையாள் கோபித்து: "உனக்குப் பெருமிதம் ஏன்! நீ பிள்ளைப் பேறற்ற பாவி. நீ என்னருமைப் பிள்ளையினாலன்றோ இருமைப்பயனையும் அடைவாய்" என்றாள். தனபதி அது கேட்டு மிக நாணி; "மேலைக்காயினும் பிள்ளைப்பேற்றைத் தரவல்ல தவத்தைச் செய்யவேண்டும்" என்று துணிந்து, தன் செல்வமெல்லாவற்றையும் மருமகனுக்கே யாக்கிவிட்டு, மனையாளோடு தவஞ்செய்யப் போயினான்.

பின்பு, தனபதி வரவு தாழ்த்தமையால், அவன் மருமகனுக்குக் கொடுத்த வீடு விளைநிலம் அடிமை ஆபரணந் திரவியம் பசுக்கண் முதலிய செல்வங்களெல்லாவற்றையும், தாயத்தார்கள், வல்வழக்குப் பேசிக் கவர்ந்துகொண்டார்கள். அதனாலே, தனபதியுடைய தங்கை, தன் புதல்

வனோடு தளர்வடைந்து: "சார்பில்லாதவர்களெல்லாருக்கும் ஓர் களைகண்ணுயுள்ளவர் சோமசுந்தரக்கடவுளே, ஆதலால் அவரே எமக்குப் புகலிடம்" என்று துணிந்துகொண்டு, திருக்கோயிலையடைந்து, சோமசுந்தரக்கடவுளை வணங்கி: "எல்லாருக்குந் தந்தையுந் தாயுமாகிய சுவாமீ! நீரே அடியேங்களுக்குத் தந்தையுந் தாயும். அடியேனுடைய தமையன், தனக்குப் புதல்வன் இல்லாமையால், அடியேனுடைய இந்தப் புதல்வனையே தனக்குப் புதல்வனுகக்கொண்டு, தன் செல்வமெல்லாவற்றையும் இவனுக்கே கொடுத்துவிட்டு, அன்றே போயினுன். பின்பு தாயத்தார்கள் அவைகளெல்லாவற்றையும் வலியினுற் கவர்ந்துகொண்டார்கள். நான் ஒருத்தி. ஒருத்திக்கு இவ்வொருமகனேயுள்ளவன். இவனும் அறிவிலாச்சிறுவன். அடியேங்களுக்கு வேறு துணையில்லை. அருட்பெருங்கடலே! எங்கும் நிறைந்திருக்கின்ற நீர் இவையெல்லாம் அறியீரோ" என்று விண்ணப்பஞ்செய்து, பூமியில் விழுந்து, சிவபெருமானது திருவருளினுலே சிறிது நித்திரையடைந்தாள்.

அப்பொழுது சிவபெருமான், அவளுக்குச் சொப்பனத்திலே ஒரு பிராமணராய்த் தோன்றி: "கேளாய், பெண்ணே! விடிந்தபின், தாயத்தார்களை அரசனுணையினுலே தருமசபையில் வருவித்து, மறித்துக்கொண்டிரு. நாம் வந்து வழக்குத் தீர்த்துத் தருவேம். போ" என்றருளிச்செய்தார். உடனே தனபதி தங்கை விழித்தெழுந்து, வியந்து: "யாருமில்லாதவருக்குத் தெய்வந்துணையென்பதறிந்தேன்" என்று சிவபெருமானை வணங்கிக்கொண்டு, மகனேடு வீட்டிற்சென்றுள். சென்றவள், விடிந்தபின் எழுந்து, திருக்கோயில் வாயிலில் வந்து, சிவபெருமானை வணங்கிக்கொண்டு, தாயத்தார்களுடைய வீட்டுக்குப்போய்ப், பலருங் கேட்க, அவர்களைப் பார்த்து: "மடைப்பள்ளியிலே நெருப்பிடாதொழிமின்கள். வேறெங்கும் ஓரடியும் எடுத்துவையாதொழிமின்கள். பொய்வழக்கால் வென்று போகவிடேன். பலருங் கேட்க அரசனு

ணையிட்டேன். தருமசபைக்கு வந்து, பெரியோர்கள் பண்ணிய தீர்ப்பைக் கேட்டு, எங்களுரிமைப் பொருளைத் தந்துவிட்டுப், போங்கள்" என்று சொல்லி மறித்தாள். மறித்தலும், தாயத்தார்கள், அவளை வைது, தள்ளியடித்தார்கள். அவள், மகனுடனே: "முறையோ முறையோ" என்று சொல்லிக்கொண்டு, தருமசபையை அடைந்து, சபையாருக்குத் தன்வழக்கைச் சொன்னாள். அது கேட்ட சபையார் ஏவலாளர்களை விடுப்பத், தனபதி தங்கை, அவர்களோடு போய்த், தாயத்தாரை மறித்துச், சபையிற் கூட்டி வந்தாள்.

அப்பொழுது சிவபெருமான், தனபதிபோலத் திருவுருக்கொண்டு, திருச்செவிகளிலே இரத்தினகுண்டலங்களும், திருப்புயங்களிலே தோளணிகளும், திருமார்பிலே கண்டிகையும் பிரகாசிக்க,மோதிரம் இட்ட திருக்கரத்தை வீசிச், சிங்கேறுபோலப் பெருமிதத்தோடு நடந்து: "இங்கே அரசன் இல்லையோ! பெரியோர்கள் இல்லையோ! அரசன் செங்கோல் கொடுங்கோலாயிற்றே! தெய்வமும் இல்லையோ! தருமமும் ஒளித்ததோ!" என்று சொல்லிக்கொண்டு, தருமசபையை அடைந்தார். அது கண்ட தாயத்தார்கள் மனந்தளர்ந்து ஆச்சரியம் அடைந்து: "வெல்வோம்" என்னும் மனவலியிழந்து, முன் பொய்வழக்கால் வென்றதை நினைந்து நினைந்து, அச்சமும் நாணுங் கொண்டு,நின்றார்கள். தனபதியாய் வந்த சிவபெருமான், மருமகனையுந் தங்கையையுந் தழுவிக்கொண்டு: "ஐயையோ! வறியவர்களானீர்களே" என்று சொல்லி அழுதார். தங்கையும் புதல்வனுந் தனபதியார் பாதத்தில் விழுந்தழுதார்கள்.

தனபதியார், அவர்களை யெடுத்துத் தழுவித், தமது கண்ணீர்வெள்ளத் தாழ்த்திப், புதல்வனைப் பார்த்து:"மார்பிலே பஞ்சாயுதத்தைக் காணேன்; காலிலே சிலம்பைக் காணேன்; தோளிலே தோளணியைக் காணேன்; முகத்திலே சுட்டியைக் காணேன்; காதிலே குண்டலங்களைக் காணேன்; வெற்றுடம்பை மாத்திரங் கண்டேன். யாது

பெறும் என்று பிள்ளைப்பணிகளையுங் கவர்ந்துகொண்டார்கள்" என்று சொல்லி, வாய்விட்டழுது, தங்கையையும் மகனையுங் கண்ணீர் மாற்றி, முதுகைத் தடவி: "நீங்கள் உங்கள் கவலையை விடுங்கள். தாயத்தார்கள் வழக்குத் தோற்றுப்போம், பாருங்கள்" என்றார். சினேகிதரை வஞ்சித்தும், நம்பினவரைக் கெடுத்தும், யாசகருக்கு இம்மியுங் கொடாது உலோபஞ்செய்தும், கடுவட்டி வாங்கியும், சம்பாதித்ததா! தருமவழியினாலே சம்பாதித்த என் பொருள் அழியுமா!" என்றார். சோமசுந்தரக்கடவுள் எழுந்தருளியிருக்குந் திக்கைநோக்கிச் சிரமேற் கை குவித்து: "மாணிக்கம் விற்ற நமது வைசியகுலத் தலைவரே! நமது தாயத்தார் வழக்கை இச்சபையாரிடத்து நின்று தீர்த்துத் தந்தருளும்" என்றார். பின்பு சபையாரை நோக்கி: "அரசனது செங்கோலாகிய நூல் கட்டிய தருமமாகிய தட்டிலே உங்கள் நாக்காகிய துலாக்கோலையிட்டு, நமது வழக்கையுந் தாயத்தார் வழக்கையுஞ் சீர்தூக்கித் தீர்ப்புச் சொல்லுங்கள்" என்றார்.

அது கேட்ட சபையார்கள், இருபக்கத்தாருடைய வழக்கையுங் கேட்டு நன்றாக ஆராய்ந்து: "தாயத்தார் வழக்குப் பொய் வழக்கு" என்றார்கள். தாயத்தார்கள், அது கேட்டு அச்சமுற்று: "நமது தனபதிச்செட்டியார் இவரல்லர்" என்றார்கள். அப்பொழுது தனபதியார் கைகொட்டிச் சிரித்து, அவரவர் குடிப்பெயரும் பட்டமுங் காணியுந் தந்தைதாய் மாமன் மாமி தாயத்தார் அவர்களைப் பெற்றவர் பிள்ளைகள் உடன்பிறந்தார் மனைவியர் சுற்றத்தார் என்பவர்களுடைய பெயர்களும், அவரவர் குணங்களுஞ் செய்கைகளும், பிறவுஞ் சிறிதும் வழுவாவண்ணஞ் சொன்னார். அது கேட்ட பெரியோர்களெல்லாரும்: "தனபதிச்செட்டியார் இவரே" என்றார்கள். உடனே தாயத்தார்கள்: "நம் வழக்குத் தோற்றது. பாண்டியன் அறிந்தால் நம்மைத் தண்டிப்பான்" என்று நினைந்து: "வீட்டுக்குப் போய் வருகிறேன்" என்றும், "குளத்துக்குப் போய் வருகிறேன்" என்றும், ஒவ்வொரு வார்த்தையிட்டுப் போய்வி

ட்டார்கள். போய்விடுதலும், தருமசபையார்கள், தனபதிச்செட்டியாருடைய செல்வமெல்லாம் அவர் புதல்வனுக்கென்று தீர்ப்பெழுதிக் கொடுத்தார்கள். உடனே தனபதியுருவங் கொண்ட சிவபெருமான் எல்லாருங் காண மறைந்தருளினார்.

சுந்தரேசபாதசேகரபாண்டியன், அதைக் கேள்வியுற்றுத், தனபதியுருவங் கொண்டு வந்து மறைந்தவர் சோமசுந்தரக்கடவுள் என்று அறிந்து, வியந்து, தனபதியுடைய புதல்வனுக்குப் பலவரிசைகளைக் கொடுத்துச், சோமசுந்தரக்கடவுளுடைய திருக்கோயிலைப் பொன்னினாலே புதுக்குவித்தான். சிலகாலஞ் சென்றபின்பு, தன் புத்திரனாகிய வரகுணபாண்டியனுக்குத் தன்னரசைக் கொடுத்துவிட்டுத், தான் சிவபிரானது திருவடிநீழலை யடைந்தான்.

திருச்சிற்றம்பலம்.

நாற்பதாவது

## வரகுணனுக்குச்சிவலோகங்காட்டியபடலம்.

வரகுணபாண்டியன், செங்கோலோச்சி அரசியற்றுநாளிலே, ஒருநாள் வேட்டை விருப்பினனாய்க், காட்டிற்சென்று, சூரியன் அத்தமிக்கும் வரையும் வேட்டையாடிக்கொண்டு, மதுரைநகரத்துக்குத் திரும்பினான். திரும்பிவரும்பொழுது, அதிவேகத்தோடு செல்லும் அவன் குதிரை, அக்காட்டிற் படுத்து நித்திரை செய்யும் ஒருபிராமணன் மேலே கால் வைக்க, அவன் இறந்து விட்டான். பாண்டியன், அதனை அறியாது சென்று, தன் கோயிலிற்புகுந்தான். இறந்த பிராமணனுடைய பிரேதத்தை, அவன் சுற்றத்தார், எடுத்துக்கொண்டு போய்ப், பாண்டியனுடைய கடைத்தலைவாயிலிலே போட்டு, நிகழ்ந்ததைச் சொல்லப், பாண்டியன், வேண்டும் பொருள் கொடுத்து, அவர்களைக்கொண்டு மயானகிருத்தியத்தை முடிப்பித்தான். அவனைப் பிரமகத்தி பிடித்தது.

கசுசு வரகுணனுக்குச்சிவலோகங்காட்டியபடலம்.

வரகுணபாண்டியன், தன்னை வருத்தும் பிரமகத்தி நீங்கும்பொருட்டுப், புரோகிதர்கள் விதித்தபடியே, பிராமணபோசனஞ் செய்வித்தும், அரசமரத்தைப் பிரதக்ஷிணஞ் செய்தும், அறுகு கொய்து பசுக்களுக்குக் கொடுத்தும், அகமருடணமந்திரத்தால் ஓமம் பண்ணியும், பஞ்சகவ்வியமும் பசுக்கொம்பு தோய்ந்த தீர்த்தமும் உட்கொண்டும், கோதானம் பூதான முதலிய நானாவித தானங்கள் செய்தவிடத்தும், பிரமகத்தி நீங்காது, நெய் சொரிந்த அக்கினிபோல மேலிட்டு, அவனை வளைந்துகொண்டது. அது எங்கும்; பெருமூச்செறியும்; கை தட்டும்; மலைபோலப் பெருக்கும்; சிறுகும்; கோபித்து ஆரவாரிக்கும்; முன்னும் பின்னும் பக்கமுந் தொடரும்; சிரிக்கும்; பிளந்த வாயை மெல்லும்; பிரியும்; திரும்பி வரும்; "பழி தா" என்று வந்து பிடிக்கும்; பாண்டியன் இவ்வியல்புடைய பிரமகத்தியினால் வருந்தும்பொழுது, பிராமணர்கள் பின்னும் அவனை நோக்கி: "மகாராசாவே! நீ விரதநியமத்தோடு நாடோறுஞ் சோமசுந்தரக்கடவுளை ஆயிரத்தெட்டுத்தரம் பிரதக்ஷிணஞ் செய்யக்கடவாய். இப்படிப் பத்துத் தினஞ் செய்து வரின், இப்பிரமகத்தி நீங்கும் வண்ணஞ் சிவபெருமான் உனக்கு வழி காட்டியருள்வார்" என்றார்கள்.

அது கேட்ட வரகுணபாண்டியன், திருக்கோயிலையடைந்து, சோமசுந்தரக்கடவுளை வணங்கி: "எம்பெருமானே! நீர் இந்திரனுடைய பழியைத் தீர்த்தருளினீர். பிராமணனுடைய மகாபாதகத்தைத் தீர்த்தருளினீர். தமியேனுடைய பழியையுந் தீர்த்தருளும்" என்று விண்ணப்பஞ் செய்து, அடியற்ற மரம்போல வீழ்ந்தான். பின் எழுந்து, பிராமணர்கள் சொல்லியபடியே ஆயிரத்தெட்டுப் பிரதக்ஷிணஞ்செய்து, வணங்கினான். சிவபெருமானது திருவருளினாலே, ஆகாயத்தினின்றும்: "கேளாய் பாண்டியனே! ஒவ்வோரடிக்கு ஒவ்வோரசுவமேத யாகபலங் கொடுப்பது பிரதக்ஷிணம். அத்துணைச் சிறப்புடைய பிரதக்ஷிணந் தினம் ஆயிரத்தெட்டுச் செய்துவந்தாய். இதனாலே நாம்

மிக மகிழ்ந்தேம். இனி நீ அஞ்சாதே. சோழராசன் உன்னோடு போர் செய்ய வருவான்; நீயும் அவனோடெதிர்ப்பாய். போரிலே அவன் உனக்குப் புறங்காட்டி யோடுவான்; நீயும் அவன் பின்னோடி அவனை எட்டிப் பிடிப்பவன்போலத் துரத்தும்பொழுது, நம்மை நாம் பூசித்துக்கொண்டிருக்குந் தலமாகிய திருவிடைமருதூரிலே போய்ச் சேருவாய். அங்கே உன் பிரமகத்திப்பழியை நீக்கியருள்வோம்" என்று ஓரசரீரிவாக்குத் தோன்றிற்று. வரகுணபாண்டியன், அது கேட்டு மனமகிழ்ந்து, சிவபிரானுடைய திருவருளைத் துதித்துக்கொண்டு, அரண்மனையை அடைந்தான்.

சிலநாள் கழிந்தபின், சோழராசன், வரகுணபாண்டியனோடு போர்செய்யக் கருதித், தன் சேனையோடு வந்து, மதுரையை அணுகினான். வரகுணபாண்டியன், அஃதறிந்து, தன்சேனையோடு எதிர்ந்து பொருதான். போரிலே சோழன்சேனை பாண்டியன் சேனைக்குத் தோற்றோடிற்று. சோழனும் நாணிப் புறங்காட்டி ஓடினான். வரகுணபாண்டியன், சோழனைப் பிடிக்கும்பொருட்டுத் துரத்திக்கொண்டோடும்பொழுது, காவேரிநதியை அடைந்தான். அடைந்து, பூசத்துறையிலே ஸ்நானஞ்செய்து, அக்காவேரிக்குத் தென்பக்கத்துள்ள திருவிடைமருதூரிற் சென்று, திருக்கோயிலினது கீழைவாயிலைக் கடந்து சென்றான். செல்லுதலும், அவனைப்பிடித்த பிரமகத்திப் பழியும் பாசமும் புறத்தே நின்றுவிட்டன. வரகுணபாண்டியன், உள்ளேபோய்ச் சிவலிங்கப்பெருமானைத் தரிசித்து, அக்கினிவாய்ப்பட்ட வெண்ணெய்ப் பாவைபோல உருகிச், செயலும் வாக்கும் அற்று, அறிவுருவாகி, நெடுநேர நின்று, பின்பு அளவில்லாத தோத்திரங்களைச் செய்தான். அப்பொழுது சிவபெருமான்: "பாண்டியனே! உன் பிரமசாயை கீழைவாயிலிலே நிற்கின்றது; ஆதலால் அந்தவழியாலே போகாதே. மேல்வாயிலினாலே போய், நம்மதுரையை அடைதி" என்று திருவாய்மலர்ந்தருளினார். வரகுணபாண்டியன்,

அது கேட்டுச், சிவபெருமானைப் பிரிதலாற்றுமையால் வாயிறோறும் அடிக்கடி வீழ்ந்து வீழ்ந்து; மேலைவாயிலி ஞலே போவானாயினான். அவன் மேலைக் கோபுரத்தைத் தன் பெயரினாற் செய்து, வேறுஞ் சில திருப்பணிகளை நடத்திக்கொண்டு, அங்கே சிலநாள் வசித்துப், பின் மது ரையை அடைந்தான்.

வரகுணபாண்டியன், தன்னைப் பிரமகத்திப் பழிநீக்கி யாண்டருளிய சோமசுந்தரக்கடவுளை நாடோறும் அடை ந்து தரிசனஞ்செய்து கொண்டும், உலகத்தை நீதி வழு வாது பரிபாலித்துக்கொண்டும், சிவபுராணங் கேட்டுக் கொண்டும், வாழ்ந்திருந்தான். ஒருநாள், வேதம் ஆகமம் புராணம் மிருதி முதலிய நூல்களனைத்தும் உலகங்களெ ல்லாவற்றினும் உயர்ந்தது சிவலோகம் என்று சொல்வதை உட்கொண்டு, அந்தச் சிவலோகத்தைக் காண்டற்கு ஆசை கொண்டு, அன்றிராத்திரியிலே திருக்கோயிலையடைந்து, சோமசுந்தரக்கடவுளை வணங்கி: "எம்பெருமானே! உம் முடைய திருவடியைப் பெற்ற மெய்யன்பர்கள் சூழ, நீர் சிவலோகத்தில் எழுந்தருளியிருப்பதைத் தரிசித்து வணங் கத் தமியேன் ஆசை கொண்டேன்" என்று விண்ணப்பஞ் செய்தான். உடனே சிவபெருமான் அப்பாண்டியனு டைய அன்புக்கு எளியராகி: "நாம் இன்றைக்கு நம்முல கத்தை இவ்வுலகத்தில் வருவித்து, இவனுக்குக் காட்டு வோம்" என்று திருவுளங்கொண்டார். அப்பொழுது சிவ லோகம், கோடிசந்திரர்கள் பேரொளிபரப்பி ஒருங்குதித் தாற்போல, அங்கே வந்து தோன்றியது.

சிவபெருமான் திருநந்திதேவரை அழைத்து: "நமது மெய்யன்பனாகிய வரகுணபாண்டியன் நம்முலகத்தைக் காண விரும்பினான். அவனுக்குக் காட்டு" என்று பணித் தருளினார். அது கேட்ட திருநந்திதேவர், சிவபெருமானை வணங்கிக்கொண்டு, புறத்து வந்து, வரகுணபாண்டியனை அழைத்துக்கொண்டு போய், நதிகளையும், ஓடைகளையும், அமுதவாவிகளையும், பொற்றாமரைத் தடாகங்களையும்,

பூஞ்சோலைகளையும், அமுதமயமாகிய அகழையும், திருமதிலையும், திருக்கோபுரங்களையும், திருவீதிகளையும், திருமாளிகைப் பந்திகளையும், திக்குப்பாலகர்களுடைய புரங்களையும், பிரமாவுடைய புரத்தையும், விட்டுணுவுடைய புரத்தையும், உருத்திரர்களுடைய புரத்தையுங் காட்டினார். பின்பு சிவனடியார் கூட்டத்தைப் பிரம்பினாற் சுட்டிக் காட்டுவாராயினார்:—

“சூரியன் உதிக்கு முன்னே ஸ்நானஞ்செய்து சந்தியாவந்தன முடித்துக்கொண்டு சிவபெருமானுடைய திருக்கோயிலைத் திருவலகிடுதலும், திருமெழுக்கிடுதலும், திருநந்தனவனப்பணி செய்தலும், புட்பங்கொய்து திருமாலை கட்டிக் கொடுத்தலும், சுகந்ததூபமிடுதலும், திருவிளக்கேற்றலும், சிவஸ்தோத்திரஞ் செய்தலும், சிவபிரானது புகழைக் கேட்டலுமாகிய திருத்தொண்டுகளைச் செய்து சிவசாலோக்கிய பதத்தைப் பெற்றவர்கள் இவர்கள். புட்பஞ் சந்தனந் தூபந் தீபந் திருமஞ்சனந் திருவமுது முதலிய உபகரணங்களைத் தேடி வைத்துக்கொண்டு, பஞ்சசுத்தி செய்து, சிவலிங்கப்பெருமானைச் சிவாகம விதிப்படி மெய்யன்போடு பூசைசெய்து, சிவசாமீப்பிய பதத்தைப் பெற்றவர்கள் இவர்கள். மூலாக்கினியை வாயுவினால் எழுப்பிப் பிரமரந்திரம் வரையுங் கொண்டு போய் அங்குள்ள சந்திரமண்டலத்தை இளகப்பண்ணி அதினின்றும் இடை பிங்கலை சுழுமுனை நாடிவழியாக ஒழுகும் அமுதத்தை உண்டு சிவபெருமானைப் புருவநடுவிற்றியானித்துச் சிவசாரூப்பிய பதத்தைப் பெற்றவர்கள் இவர்கள். இருபிறப்பாளர்களாகி யாகங்களைச் சிவபெருமான் பொருட்டுச் செய்தவர்கள் இவர்கள். புகழையும் பயனையுங் குறியாது தண்ணீர்ப்பந்தல் வைத்தல் முதலிய தருமங்களை நிராசையினாலே செய்தவர்கள் இவர்கள். வேதவிதிப்படிக்குஞ் சிவாகமவிதிப்படிக்கும் விபூதி ருத்திராக்ஷதாரணமும் ஸ்ரீபஞ்சாக்ஷரசெபமுஞ் செய்தவர்கள் இவர்கள். வேதத்தில் உள்ள சதருத்திரமந்திரத்தை உச்சரித்

தவர்கள் இவர்கள். விபூதி ருத்திராக்ஷந் தரித்தவர் யாவ ரேயாயினும் அவருடைய குணத்தையுங் குலத்தையும் பாராது அவரைச் சிவபெருமானாகவே பாவித்தவர்கள் இவர்கள். நிருவாணதீக்ஷிதர்களுக்குச் சிவஞானநூல்களைத் தானஞ்செய்தவர்கள் இவர்கள். சிவாலயங் கட்டுவித்துச் சிவலிங்கப் பிரதிட்டை செய்வித்தவர்கள் இவர்கள். சிவபூசை செய்பவர்களுக்கு அதற்கு வேண்டுந் திரவியங்களை உதவித் தொண்டுசெய்தவர்கள் இவர்கள். மாகேசுரபூசை செய்தவர்கள் இவர்கள். சிவனடியார்களுக்குத் தொண்டு செய்வதே தவமெனக் கொண்டு செய்து உயர்ச்சியடைந்தவர்கள் இவர்கள். சோமசுந்தரக்கடவுளுக்கு ஆலய முதலியவைகளைக் கட்டுவித்து, அபிஷேகம் பூசை திருவிழா முதலியவைகளைக் குறைவறச் சிவாகமவிதிப்படி செய்வித்து, விபூதியும் ருத்திராக்ஷமுமாகிய சிவசின்னங்களை பாண்டிநாடெங்கும் பரவும்படி அரசு செய்து, இங்கு வந்த உன் குலத்தவர்கள் இவர்கள்" என்று இப்படித் திருநந்திதேவர் வரகுணபாண்டியனுக்குச் சிவனடியார் கூட்டத்தைக் காட்டி, அவன் நின்று விழுந்து விழுந்து அஞ்சலிசெய்துகொண்டு வர, அவனை அழைத்துக் கொண்டு போய்ச், சருவலோகைக நாயகராகிய சிவபெருமான்றிருமுன்பு விடுத்தார்.

வேதமுஞ் சிவாகமமும் வடிவெடுத்து இருபக்கத்தும் நின்று வாழ்த்தத், தும்புருநாரதர்கள் இசை பாடத், தேவரம்பையர்கள் கூத்தாடக், குறை வேண்ட வந்த தேவர்கள் சமயம் பெறாது தூரத்தே நிற்க, விநாயகக்கடவுளுஞ் சுப்பிரமணியக்கடவுளும் வீரபத்திரக் கடவுளும் வணங்கி நின்று ஏவிய பணிகளைக் கேட்கப், பிரம விட்டுணுக்கள் வஸ்திரத்தை யொதுக்கி வாய் பொத்தி ஒதுங்கி நின்று தத்தங்குறைகளைச் சொல்ல, இந்திரன் முதலிய அட்டதிக்குப் பாலகர்கள் தாங்கள் தாங்கள் செய்யுங் காரியக்குறைகளை நடுநடுங்கி நின்று விண்ணப்பஞ்செய்ய, அமரர் சித்தர் அசுரர் சாரணர் முதலிய பதினெண்கணங்களுந்

துதிக்க, முனிவர்கள் அரகர சங்கர சிவ சிவ என்று ஏத்தெடுப்ப, ஆயிரகோடி சூரியப்பிரகாசத்தையுடைய இரத்தின சிங்காசனத்தின்மீது உமாதேவியாரோடு சிவபெருமான் எழுந்தருளியிருத்தலை வரகுணபாண்டியன் கண்டு வணங்கினன். உரை தடுமாற, உரோமஞ் சிலிர்ப்பத், தனதன்பாகிய திரையிறந்த நதி சிவபெருமானது திருவருளாகிய கரையிறந்த கடலினிழப்பத், தான் மிதந்துபோய்ப், பரமானந்தமாகிய திவ்வியாமிர்தத்தை வாய்மடுத்தான்.

பின்பு சோமசுந்தரக்கடவுள், அவ்வரகுணபாண்டியனெதிரே சிவலோகம் முன்போல மதுரையாகத், தாமும் உமாதேவியாரும் முன்னிருந்த படியே எழுந்தருளியிருந்தார். வரகுணபாண்டியன் சோமசுந்தரக்கடவுளை வணங்கி நின்று, கண்ணீர் சொரிய, நாக்குக் குழற, இவ்வாறு துதிப்பானாயினன்:—

நாயினேனென்னை நடுக்கும்பழியகற்றித்
தாயினேராகித்தலையளித்தாய்தாள்சரணஞ்
சேயினேன்காணச்சிவலோகங்காட்டிப்பின்
கோயினேர்நின்றவருட்குன்றேநின்றாள்சரணம். (க)

மாழாந்துசெய்யும்வினைவழிபோய்வன்னரகிற்
றுழாதடியனேற்கன்புதந்தாய்தாள்சரணம்
ஏழாகிநான்குவகையாயெழுபிறப்பும்
பாழாகவென்னைப்பணிகொண்டாய்தாள்சரணம். (உ)

வெங்கட்பழியின்வினையேனைவேருக்கித்
திங்கட்குலக்களங்கந்தீர்த்தாய்நின்றாள்சரணம்
அங்கட்சிவபுரமுண்டன்புடையார்க்கென்பதையின்
றெங்கட்குக்காட்டியிசைவித்தாய்தாள்சரணம். (ந)

இப்படி வரகுணபாண்டியன், துதிசெய்து, சோமசுந்தரக்கடவுளுக்குப் பூசை முதலியவைகளை விசேடமாக நடத்துவித்துச், செங்கோலோச்சி அரசியற்றிக்கொண்டிருந்தான்.

இப்படிச் சொல்லிய அகத்தியமகாமுனிவரை இருடிகள் நோக்கிச்: "சுவாமீ! சோமசுந்தரக்கடவுள் இந்திரனு

டைய பழியையும் வெள்ளையானையினுடைய சாபத்தை யும் பிராமணனுடைய மகாபாதகத்தையும் மதுரையிலே நீக்கியருளினாரன்றோ! அவ்வாறாகவும், வரகுணபாண்டிய னுடைய பிரமக்கொலைப்பழியை மதுரையிலே நீக்காது, திருவிடைமருதூரிலே நீக்கியருளினமை என்னை? அடியே ங்களுக்குச் சந்தேக நீங்கச் சொல்லியருளும்" என்றார் கள். அது கேட்ட அகத்தியமகாமுனிவர்: "முனிவர்க ளே! சோமசுந்தரக்கடவுள் புண்ணியமூர்த்தியாதலால், தமது மதுரைநகரத்துள்ள அடியார்கள் வேண்டியபடியே பாதகஞ் செய்து கெட்டுப்போகாது பயந்து நடக்கும்படி திருவுளங்கொண்டே, வரகுணபாண்டியனுடைய பழியை மதுரையிற்றீராது, திருவிடைமருதூரிற் றீர்த்தருளினார்" என்றார். அப்பொழுது முனிவர்கள் தலையசைத்துச், சோ மசுந்தரக்கடவுளுடைய திருவருளை நினைந்து வியந்து, பேரானந்தக்கடலின் மூழ்கினார்கள்.

அம்மதுரைநகரம், அன்று தொடங்கி இன்று வரை யுந் தனக்கொப்பில்லாததாய்த் தவசிகாமணியாகிப், பதி னான்குலகங்களினும் பூலோக சிவலோக மெனப்பட்டு, விளங்கும்.

திருச்சிற்றம்பலம்.

நாற்பத்தொராவது

## விறகுவிற்றபடலம்.

வரகுணபாண்டியன் அரசியற்று நாளிலே, வடதேசத் தினின்றும், ஏமநாதனென்னும் பெயரையுடைய ஒருயா ழ்ப்பாணன், வெகு விருதுகளோடு மதுரையை அடை ந்து, அப்பாண்டியன் கோயிலிற் புகுந்து, அவனை வணங்கி, அவன் புகழைக் கொண்டாடி, யாழ் வாசித்தான். பாண் டியன், அவ்விசைத்தேனைத் தன் செவிவாய் மடுத்துத், தலையசைத்துப், பீதாம்பரங்களும் இரத்தினாபரணங்க ளுங் கொடுத்து, அவனுக்கு ஒரு வீடமைப்பித்து, அங்கே செல்ல விடுத்துப், போசனபதார்த்தங்களும் அனுப்பினான்.

ஏமநாதன், தனக்குப் பாண்டியன் செய்த வரிசையினாலே மிகக் களிப்புற்றுத், தன்னோடிசை பாட வல்ல யாழ்ப்பாணர்கள் மதுரையில் வேறில்லை என்று செருக்கடைந்தான். பாண்டியன் அதனை யறிந்து, பாணபத்திரனை அழைப்பித்து: "நீ வடதேசத்தினின்று வந்த யாழ்ப்பாணனோடு இசை பாடுவாயா?" என்றான். பாணபத்திரன் வணங்கி நின்று: "மகாராசாவே! சோமசுந்தரக்கடவுளுடைய திருவருளினாலும் உனது கருணையினாலுந் தமியேன் அவனோடு பாடி வென்று, அவனுடைய விருதுகளை வாங்கி, அவன் செருக்கை அடக்குவேன்" என்றான். பாண்டியன்: "நாளைக்குப் பாடு; போ" என்றான்.

ஏமநாதன் வீட்டிற்போயிருந்த பின்பு, அவனிடத்தே இசை கற்கும் மாணாக்கர்கள், கடைத்தெருக்களினும், கவர்வழிகளினும், அம்பலங்களினும், மாடங்களினும், வீதிகளினும், இசை பாடிக்கொண்டு திரிந்தார்கள். பாணபத்திரன் அவ்விசையைக் கேட்டு வியந்து: "ஏமநாதனுடைய மாணாக்கர்கள் பாடும் முறையிது. ஏமநாதன் பாடு முறை எத்தன்மையதோ! நான் நாளைக்கு இசை பாடி அவனை வெல்வது எப்படி!" என்று நினைந்துகொண்டு, திருக்கோயிலை யடைந்து, சோமசுந்தரக்கடவுளை வணங்கி: "எம்பெருமானே! அடியேனுக்குத் துணைசெய்தருளல்வேண்டும்" என்று பிரார்த்தித்துக்கொண்டு, வீட்டுக்குத் திருப்பினான்.

அடியார்க்கெளியராகிய சிவபெருமான், வயசின் முதிர்ந்திளைத்த ஒரு மானுடவடிவங்கொண்டு, அழுக்கு நிறைந்த துணியை யுடுத்துக், கொடுவாளை வலப்பக்கத்திலே செருகித், தேய்ந்த செருப்பைப் பாதத்தின் மாட்டிப், பழைய உறையில் இட்ட யாழைத் தோளில் இட்டுக், குடுமி சரியும்படி தலையிலே சும்மாடு தாங்கி, அதன்மீது விறகுசுமையை வைத்துக்கொண்டு, திருமுகத்திலே வியர்வை யரும்ப, வருந்தி நடந்து, ஏமநாதன் இருந்த வீட்டு வாயிலில் வந்தார். அப்பொழுது மாலைக்காலம் வந்தது. சிவபெருமான் விறகுசுமையை இறக்கி, அங்கே ஒரு புறத்

தில் ஊன்றிவிட்டு, அவ்வீட்டுப் புறந்திண்ணையில் இருந்து இளைப்பாறிக்கொண்டு, சிறிதே இசை பாடினார். ஏமநாதன் அது கேட்டு: "அங்கே இசை பாடுகிறவன் யாவன்?" என்று சொல்லிக்கொண்டு, விறகு சுமையாளர் முன் வந்து: "நீ யார்?" என்றான். விறகு சுமையாளர்: "நான் பாணபத்திரருடைய அடிமை. அவரிடத்தே இசை கற்கும் மாணாக்கர்கள் பலர். நானும் அவர்களுள் ஒருவனாய் இசை கற்றுக்கொண்டிருந்தேன். பாணபத்திரர் என்னை நோக்கி: 'நீ தசையெல்லாம் ஒடுங்க வயசிலே மிக முதிர்ந்துவிட்டாய். இனி நீ இசை கற்பதற்கு வல்லையல்லை' என்று சொல்லி, என்னைத் தள்ளிவிட்டார். அதனால், விறகு வெட்டி விற்றாயினும் வயிறு வளர்க்கலாம் என்று, இத்தொழில் பூண்டேன்" என்றார். ஏமநாதன்: "நீ முன் பாடின இராகத்தை இன்னும் ஒருதரம் பாடு" என்றான். விறகுசுமையாளர் யாழை இடத்தோளிலே சாத்திச், சுதிகூட்டி, உடற்றொழிற் குற்றங்களும் பாடற்றொழிற் குற்றங்களும் இல்லாவண்ணம், எழுது சித்திரம்போல் இருந்து, யாழோசையும் மிடற்றோசையும் ஒற்றுமைப்பட, இவ்வாறு சாதாரி ராகம் பாடுவாராயினார்:—

விரைசார்மலரோனறியாவிகிர்தன்
அரசாய்மதுரையமர்ந்தானென்னே
அரசாய்மதுரையமர்ந்தானவனென்
புரைசார்மனனும்புகுந்தானென்னே.

பாடன்மறையுந்தெளியாப்பரமன்
கூடல்கோயில்கொண்டானென்னே
கூடல்போலக்கொடியேனகமும்
ஆடலரங்காவமர்ந்தானென்னே.

நீலவண்ணன்றேறுநிமலன்
ஆலவாயிலமர்ந்தானென்னே
ஆலவாயானலரில்வாசம்
போலென்னுளமும்புகுந்தானென்னே.

விறகுசுமையாள் வடிவங்கொண்ட சிவபெருமான் இங்ஙனம் பாடிய இசைத்தேன், சர்வான்மாக்களுக்குந்

காதாகிய கால்வாய் வழியாக ஓடி, உரோமத்துவாரத்தினால் வழியும்படி நிறைந்து, அவர்கள் சரீரத்தை இசைமயமாக்கியது. அவ்விசை கேட்டபொழுது மரங்களும் அசையவில்லை; கடலும் ஒலிக்கவில்லை; நதிகளும் பாயவில்லை: எல்லாஞ் சித்திரம்போலாயின. விஞ்சையர்கள், வீணை கை வழுக்கிச் சோர்வாரும், யாழோசையும் மிடற்றோசையும் வேறாக வேர்ப்பாரும், நாணமும் உவகையுந் தள்ள நாக்கு நடுங்கி மனைவியர்மேல் வீழ்வாருமாயினார்கள். சிவபெருமானுடைய தேவகீதம், உலகத்துள்ள இயங்கியற்பொருள் நிலையியற்பொருள்கள் எல்லாவற்றையும் விழுங்கித், தன்மயமேயாக்கி, ஏமநாதனுடைய உயிரையும் உடம்பையும் உருக்கியது. ஏமநாதன் அவ்விசை வசப்பட்டிருப்பப், பத்திரனடிமையாய் வந்து இசைபாடிய சிவபெருமான் விறகுசுமையோடு மறைந்தருளினார்.

ஏமநாதன்: "இது நான் அறிந்த சாதாரியன்று. இவ்வுலகத்தாருள் ஒருவராயினும் இதைப் பாட நான் கேட்டிலேன். இது தேவகானம். இதை இவனுக்கு உணர்த்தக் கடவுளேயன்றி மனிதர் வல்லவரா! இது ஆச்சரியம். பாணபத்திரனாலே தள்ளப்பட்ட இந்தக்கிழவனுடைய இசை இதுவாயின், அப்பாணபத்திரனுடைய இசை எத்தன்மையதோ!" என்று நினைந்தான். நினைந்தவுடனே எழுந்து, தன் மாணாக்கர்களுங் குலைகுலைய, வஸ்திரப்பெட்டிகளும் ஆபரணப்பெட்டிகளும் யாழும் அங்கங்கே கிடக்க, மானமும் பயமும் முன்னே இழுத்துச் செல்லப், பல்லக்கு ஒருவழியும், குடையொருவழியும், பாடன்மகளிர்கள் ஒருவழியும், மாணாக்கர்கள் ஒருவழியும், பாடற்கீழ்மக்கள் ஒருவழியும், வேலைக்காரன் ஒருவழியுஞ் செல்ல, அன்றிரவிற்றானே வடதிசையை நோக்கி, ஓட்டெடுத்தான்.

அன்றிரவு, சிவபெருமான், பாணபத்திரனுக்குச் சொப்பனத்திலே தோன்றி: "நாம் இன்று ஏமநாதனிடத்தே விறகாளாய்ப் போய் நாம் பாணபத்திரனுக் கடிமை என்று சொல்லி, இசை பாடி வென்று, உன் வேண்டு

கோளை முடித்தோம்" என்று திருவாய்மலர்ந்தருளினர். பாணபத்திரன் விழித்தெழுந்து, அச்சமும் உவகையும் அன்புங்கொண்டு, சூரியன் உதிக்குமுன் போய்ச், சோமசுந்தரக்கடவுளை வணங்கி, அஞ்சலிசெய்து நின்று: "எம்பெருமானே! அடியேன் உம்மிடத்து வந்து குறையிரந்தது காட்டுக்குப் போகவா! திருமுடிமேல் விறகு சுமக்கவா! அருமைத் திருவடி நோவ வந்து அடியேன்பொருட்டு அடாத வார்த்தை சொல்லவா! ஐயையோ! அடியேனிடத்துக் குற்றம் விளைந்ததே. விட்டுணு முதலிய தேவர்களுடைய நெஞ்சத்தையும் வேதசிரசுகளாகிய உபநிடதங்களையுங் கடந்த உம்முடைய அருமைத் திருவடிகள் எளியேன்பொருட்டு இப்பூமியைத் தீண்டினவே. உமது பெருமை தமியேனுக்கு எளிதாயிற்றே! உமது திருவுருவம் நாதாந்தத்தையுங் கடந்த சத்திய ஞானனந்தமயமாமென்பர்கள் பெரியோர்கள். அது இன்றைக்கு ஒரு மனிதவடிவாய் வெய்யிலிலே விறகுசுமந்து பேதையேனுடைய அன்பளவாயிற்றே! பிரமனுலுங் காணப்படாது மேலேழுலகமுங் கடந்து அப்பாலுள்ள அண்டங்களுங் கடந்து நின்ற உமது திருமுடி சிறியேன்பொருட்டு விறகு சுமந்ததோ!" என்று இப்படித் துதிசெய்து, வலம் வந்து வணங்கிக்கொண்டு போய், வரகுணபாண்டியனை வணங்கினன்.

வரகுணபாண்டியன், பாணபத்திரனைக் கண்டவுடனே, "ஏமநாதனை அழைத்து வாருங்கள்" என்று ஏவலாளர்களை விடுப்ப, அவர்கள் போய், ஏமநாதனை அவன் இருந்த வீட்டிற் பார்த்துக் காணுது தேடினர்கள். அது கண்டு, அயல்வீட்டார் சிலர், அவர்களை நோக்கி: "ஏமநாதன் நேற்றிங்கிருந்தான். ஒருகிழவன், விறகு சுமந்துகொண்டு ஏமநாதனிடத்து வந்து, தான் பாணபத்திரனுக்கு அடிமையென்று சொல்லி, இசை பாடினன். ஏமநாதன் அர்த்தராத்திரியில் ஓடிவிட்டான்" என்றனர்கள். அதுகேட்ட ஏவலாளர்கள் போய், அவர்கள் சொல்லியபடியே வரகுணபாண்டியனுக்கு விண்ணப்பஞ்செய்தார்கள். வர

குணபாண்டியன், வியப்படைந்து, தன்னெதிர் நின்ற பாணபத்திரனை நோக்கி: "ஏமநாதன் ஓடியவகை என்னை! நீ நேற்று இங்குநின்றும் போனபின் யாது செய்தாய்?" என்றான். பாணபத்திரன் வணங்கி நின்று: "மகாராசாவே! அடியேன் நேற்று இங்குநின்றும் போனபின் சோமசுந்தரக்கடவுளை வணங்கிக் குறையிரந்து கொண்டு, வீட்டுக்குப் போய்விட்டேன். சோமசுந்தரக்கடவுள் தமியேனுக்குச் சொப்பனத்திலே தோன்றி: 'நாம் உன்பொருட்டு விறகெடுத்துச் சென்று, உன் பகைவனாகிய ஏமநாதனுடைய புறங்கடையை அடைந்து சாதாரி பாடி அவனை வென்று துரத்திவிட்டேம்' என்று திருவாய்மலர்ந்தருளினார். தமியேன் விழித்துவிட்டேன். இதுவே நிகழ்ந்த சமாசாரம்" என்றான். அப்பொழுது வரகுணபாண்டியன்; ஏவலாளர்கள் போய் அறிந்து வந்து சொல்லியதும் பாணபத்திரனுடைய கனா நிகழ்ச்சியும் ஒத்தலினால், இது சோமசுந்தரக்கடவுளுடைய திருவிளையாட்டே என்று தெளிந்து, பாணபத்திரனுடைய அன்பையுஞ் சிவபிரானுடைய திருவருளையும் வியந்து புகழ்ந்து, திருக்கோயிலையடைந்து, சிவபெருமானை வணங்கிக்கொண்டு, பாணபத்திரனை யானைமேலேற்றி, நகர்வலஞ் செய்வித்து, அவனுக்குப் பல வரிசைகளைக் கொடுத்து, அவனை நோக்கி: "தேவர்கண் முனிவர்கள் முதலாயினோர்கள் யாவருந் தமக்காட்செய்ய இருக்குஞ் சிவபெருமான், தம்முடைய அருமைத்திருவடிகள் நோவவந்து, உமக்காட்செய்து உமது குறையை முடித்தருளினாராயின், உமக்கு எல்லாரும் ஏவலாளர்களன்றோ! ஆதலால், நீர் எனக்குடையவர்; நான் உமக்கடியவன். இதுவன்றி, உம்மோடு எனக்கு வேறு வழக்கில்லை. நான் உம்மிடத்தே குறையிரப்ப தொன்றுண்டு. இன்று தொட்டுச் சோமசுந்தரக்கடவுளைப் பாடுதலே உமக்குக் கடன்" என்று சொல்லி விடுத்தான்.

பாணபத்திரன், தனக்கு வரகுணபாண்டியன் தந்த திரவியம் ஆபரணம் வஸ்திரமுதலியவைகளை வித்துவான்

களுக்கும் தன் மாணாக்கர்களுக்கும் பிறருக்கும் பகிர்ந்து கொடுத்து, வெகு வரிசையோடு தன்பாடற்கீழ்மக்கள் சூழ, வீட்டிற்போய்ச் சேர்ந்து, மகிழ்ச்சியுற்றிருந்தான்.

திருச்சிற்றம்பலம்.

நாற்பத்திரண்டாவது

## திருமுகங்கொடுத்தபடலம்.

பாணபத்திரன், வரகுணபாண்டியனுடைய வேண்டுகோளின்படியே, அவனுடைய கோயிலில் இசைபாடுதலை விடுத்துச், சோமசுந்தரக்கடவுளுடைய திருக்கோயிலிலே முப்பொழுதும் போய், இசைபாடு நியமம் பூண்டான். தனக்கு இத்தொழிலன்றி வேறு தொழிலின்மையால், வறுமையடைந்தான். சோமசுந்தரக்கடவுள், அது பொறுக்கலாற்றாது, பாண்டியனுடைய பொன்னறையிலுள்ள திரவியங்களைக் கவர்ந்து கவர்ந்து, பாணபத்திரன் காணவைப்பாராயினர். சிலநாட் பொற்காசும், சிலநாள் இரத்தினாபரணமும், சிலநாட் பீதாம்பரமும், சிலநாட் சாமரையின் பொற்காம்பும், சிலநாட் சிங்காசனத்தின் பொற்றகடும், சிலநாள் இரத்தினமுங் கொடுப்பக் கொண்டுபோய்ப், பிறரறியாவண்ணம் உருக்கவேண்டியவற்றை உருக்கியும், துண்டஞ் செய்யவேண்டியவற்றைத் துண்டஞ்செய்துஞ் செலவழித்தான். சிலகாலஞ் சென்றபின், சிவபெருமான் ஒன்றுங் கொடாதொழியப்,பாணபத்திரன்போய்ப் போய் வணங்கிக்கொண்டு, சும்மா வந்தான். ஒருநாள், தன்சுற்றத்தாரோடு பசியினால் மிக வருந்தி நித்திரைசெய்யும் பொழுது, சிவபெருமான், அவனுக்குச் சொப்பனத்திலே தோன்றி: "நாம் இதுவரையும் பாண்டியனுடைய பொன்னறையினின்றுங் கவர்ந்து உனக்குத் தந்தேம். பாண்டியன் அறிந்தாற் சந்தேகங்கொள்ளுவான். உட்காப்பும் புறக்காப்புங், கயற்குறியும் இருக்கக் கவர்ந்தது அற்புதம்; இக்கள்வன் உயிர்தொறுமொளித்த கள்வனோ அறியேன்'

என்பான். அஃதன்றியும், பொன்னறைக் காவலாளர்களுக்குந் தண்டங் கிடைக்கும். நம்மேல் உன்போல் அன்பு வைத்த சேரமானுக்கு இப்பொழுது ஓரோலையெழுதித் தருவேம். கொண்டு போ” என்று திருவாய்மலர்ந்து, திருமுகப்பாசுரத்தை எழுதிக் கொடுத்து மறைந்தருளினார். அத்திருமுகப்பாசுரம் இது:—

மதிமலி புரிசை மாடக் கூடற்
பதிமிசை நிலவு பாணிற வரிச்சிற
கன்னம் பயில்பொழி லால வாயின்
மன்னிய சிவன்யான் மொழிதரு மாற்றம்
பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்
குரிமையி னுரிமையி னுதவி யொளிதிகழ்
குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச்
செருமா வுகைக்குஞ் சேரலன் காண்க
பண்பா லியாழ்பயில் பாண பத்திரன்
தன்போ லென்பா லன்பன் றன்பாற்
காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே.

பாணபத்திரன், அத்திருமுகத்தை வாங்கிப், பட்டு வஸ்திரத்தினாலே சுற்றித், திருக்கோயிலை வலஞ்செய்து வணங்கிக்கொண்டு, மேற்றிசையை நோக்கி நடந்து, மலைகாட்டிற் சென்று, திருவஞ்சைக்களத்தை அடைந்து, அங்கே ஒரு தண்ணீர்ப்பந்தலில் இருந்தான். அன்றிரவு, சோமசுந்தரக்கடவுள், சேரமான்பெருமாணாயனாருக்குச் சொப்பனத்திலே தோன்றி: “நாம் மதுரையிற் சித்தர். உன்னைக் கண்டு திரவியம் வாங்கும்பொருட்டு, நம்முடைய பாணபத்திரன், நம்முடைய ஓலைகொண்டு, இங்கே வந்திருக்கின்றான். அவனுக்கு வேண்டுந் திரவியங் கொடுத்தனுப்பிவிடு” என்று சொல்லி, மறைந்தருளினார்.

சேரமான்பெருமாணாயனார், விழித்தெழுந்து, தாங்கண்ட கனவைத் தம்மவர்களுக்குச் சொல்லிப், பாணபத்திரனைத் தேடும்பொருட்டு ஏவலாளர்களை விடுத்தார். ஏவலாளர்கள், பாணபத்திரனை எங்குந் தேடித், தண்ணீர்ப்ப

ந்தலில் இருக்கக் கண்டு, விரைந்து போய்ச், சேரமான்பெருமாணாயனாருக்குத் தெரிவித்தார்கள். உடனே சேரமான்பெருமாணாயனார், சேனையோடு சென்று, பாணபத்திரனைக் கண்டு, சிரசின்மீது கை கூப்பிப், பாடியாடித், தண்டுபோல் விழுந்து வணங்கினார். திருமுகத்தை வாங்கிக் கண்ணிலொற்றி, முடிமேல் வைத்துக், கண்ணீர் பொழிய, உடம்பு பூரிக்க, உரோமஞ் சிலிர்க்க, அத்திருமுகத்தை வாசித்து, எல்லையில்லாத இன்பக்கடலின் முழுகி, அதனைப் பொற்றளிகையில் வைத்து, யானைமே லேற்றிப், பாணபத்திரனை முன்னிருத்தித், தாம் பின்னிருந்து, வெண்சாமரை வீசிக்கொண்டு, நானாவித வாத்தியங்கள் ஒலிப்ப, நகர்வலஞ்செய்து, பெண்கள் மங்கலங் கொண்டு எதிர்வரச் சென்று, தமது திருமாளிகைக்கு அழைத்துக்கொண்டு போயினார். அங்கே பாணபத்திரரை ஸ்நானஞ்செய்வித்து, ஆசனத்திருத்தி, அருச்சித்துத், திருவமுது செய்வித்துக், கலவைச்சாந்து பூசி, வெற்றிலை பாக்கும் முகவாசமுங் கொடுத்தார். பின்பு பொன்னறையைத் திறந்து, பாணபத்திரனை அழைத்துக் காட்டி: "எம்பெருமானுடைய திருத்தொண்டரே! இத்திரவியமெல்லாவற்றையும் நீர் கொண்டுபோம்" என்று சொல்லப், பாணபத்திரன் எதிர் வணங்கி: "நீர் தருவது தமியேனுக்குப் போதும்: என்றான். சேரமான்பெருமாணாயனார் கொடுப்பக் கொடுப்பப், பாணபத்திரன், ஆபரணந் திரவியம் பொற்சிவிகை பீதாம்பரம் யானை குதிரை முதலிய பலவற்றையும், வேண்டுமளவும், வாங்கிக்கொண்டான். சேரமான்பெருமாணாயனார், பாணபத்திரனை ஏழடி பின்சென்று விடுத்து, மீண்டார். பாணபத்திரன், மதுரையை அடைந்து, சோமசுந்தரக்கடவுளை வணங்கிப், பிராமணர்களுக்கும் வித்துவான்களுக்கும் பிறருக்கும் வேண்டுவன கொடுத்துக், குபேரன் போல வாழ்ந்திருந்தான்.

திருச்சிற்றம்பலம்.

நாற்பத்துமூன்றுவது

# பலகையிட்டபடலம்.

முன்னே முப்பொழுதும் போய்ச் சோமசுந்தரக்கடவுளை வணங்கி இசை பாடி வந்த பாணபத்திரன், திரவியம் பெற்றபின்பு, அர்த்தயாமத்திலும் போய் வணங்கி, இடபதேவருக்குப் பின்புறத்திலே நின்று இசைபாடி வரும் நியமம் பூண்டான். ஓரிரவிலே, சோமசுந்தரக்கடவுள் முத்துச்சிவிகைமேற் கொண்டு திருப்பள்ளியறைக்கு எழுந்தருளும்போது, பாணபத்திரன் எவ்விடையூறடுத்தாலுந் தன்னியமந் தவறுனென்பது உலகத்தாருக்கு விளங்கும் பொருட்டுப், பெருமழை பெய்தது. பாணபத்திரன், அம்மழையிலே நனைந்து வந்து, இடபதேவருக்குப் பின்னின்று, யாழை இடத்தோளிற் கிடத்தி, நரம்பெறிந்து, மிடற்றொலி செய்து, நரம்பு நனைந்து இசை மழுங்கச், சரீரம் நனைந்து நடுக்குற, விரல் மிறைத்து வலிக்க, மயிர் சிலும்பக், கால் சேற்றிலே புதைய, நின்றுகொண்டு, எலும்பையும் உருக்காநின்ற அமுதவிசையை இவ்வாறு பாடுவானாயினுன்:—

மாதர்நகையாய்மதுரேசருண்பலிக்கெம்மனைவாய்வந்து
காதன்முகத்தரும்பிக்காட்டியென்சிந்தைகவர்ந்தார்போலுங்
காதன்முகத்தரும்பக்கையறவுதீரக்கலப்பேன்பாதி
பேதையுருவாயிருந்தார்நாணிவிழித்தாவிபிழைத்தேன்போலும்.

ஒண்ணுதலாய்வெண்டலைகொண்டுண்பலிக்குநம்மனையினூடேகூடற், கண்ணுதலாருள்ளாளக்கானமிசைத்தென்னுள்ளங்கவர்ந்தார் போலுங், கண்ணுதலார்பாடுமவினயங்கண்டாகங்கலப்பேன்பாதி, பெண்ணுருவமாயிருந்தார்வெள்கிவிழித்தாவிபெற்றேன் போலும்.

ஐயரியுண்கண்ணுய்திருவாலவாயுடையாரையங்கொள்வான்,மையனைகைசெய்தென்வனமுலைமேற்செங்கைவைத்தார் போலும், மையனைகைசெய்தென்வனமுலைமேற்கைவைப்பமாழ்கிச் சோர்வேன், தையலிடங்கண்டுநடுநடுங்கிவிழித்தாவிதரித்தேன்போலும்.

இங்ஙனம் பாடிய பாணபத்திரனுடைய தொண்டைக் கண்டருளிய சிவபெருமான்: "பாணபத்திரா! இந்தப் பலகை உனக்கே; இதன்மேல் நின்று பாடு" என்று ஆகாயத்தில் அருளிச்செய்து, ஒரு பலகையை இட்டருளி

ஞர். பாணபத்திரன், அவ்வாணைக்கஞ்சி, அப்பலகைமேலேறி நின்று, இசை பாடி முடிந்தபின், பலகையையுங் கையிற்கொண்டு, வீட்டுக்குத் திரும்பினான். திரும்புதலும், மழை நின்று விட்டது.

மற்றநாட் காலையிலே, வரகுணபாண்டியன், அந்தச் சமாசாரத்தைக் கேள்வியுற்றுப், பாணபத்திரனை அப்பலகைமீதிருத்தி: "இவரே எமது சிவபெருமான்" என்று நினைந்து, இரத்தினாபரணமும் விலைநிலமுந் திரவியங்களுங் கொடுத்து, வரிசையால் நடத்திவந்தான். பாணபத்திரன், நாடோறும் நான்கு காலமும் போய்ச், சோமசுந்தரக்கடவுளை வழிபட்டுக்கொண்டு வந்தான். சிலநாள் கழிந்தபின், வரகுணபாண்டியன் சிவசாரூப்பியம் பெற்றான்.

திருச்சிற்றம்பலம்.

நாற்பத்துநான்காவது

## இசைவாதுவென்றபடலம்.

வரகுணபாண்டியன் சிவசாரூப்பியம் பெற்றபின், அவன் குமாரனாகிய இராசராசபாண்டியன் அரசியற்றுவானாயினான். அவனுக்கு மனைவியர்கள் பலர். காமக்கிழத்தியர்களும் பலர். அந்தக் காமக்கிழத்தியர்களுள் ஒருத்தி அவ்வரசனுக்கு உயிர் போன்றவள். அவள் கீதத்தில் வல்லவள்; அவளுக்கும் பாணபத்திரனுடைய மனைவிக்குங் கீதத்தினாலே பகை மூண்டது. காமக்கிழத்தி, அது பொறாது, பாணபத்திரனுடைய மனைவிக்கெதிராக ஒரு பாண்மகளைப் பாடவிட்டு அவளுடைய செருக்கை அடக்கல் வேண்டும் என்று நினைந்து, அதனைப் பாண்டியனுக்குத் தெரிவித்தாள்.

பாண்டியன் ஈழநாட்டினின்றும் ஒரு விறலியை அழைப்பித்தான். அவ்விறலி, பாடன்மகளிர்கள் இருபுறமுஞ் சூழப், பாண்டியனெதிர் சென்று வணங்கி, இசைபாடினாள். பாண்டியன் அவளை நோக்கி: "நீ நாளைக்குப் பத்தி

ரன் மனைவியை நம்மெதிரே பாட அழை. அதற்கு அவள் மறுபபினும், நாம் அவள் சார்பாகி உன்னை விலக்கினும், நீ விடாது தொடர்ந்து சபதமிட்டு: 'போகாதே நில்' என்று தடுத்துக்கொள். போய், நாளை வா" என்று சொல்லி விடுத்தான். பின்பு பாணபத்திரனுடைய மனைவியை அழைப்பித்து: "என்னோடு இசைபாட வல்லவர் உண்டோ என்று இங்கே ஒருவிறலி வந்திருக்கிறாள். நீ அவளோடு இசை பாட வல்லையோ!" என்றான். அதற்கு அவள்: "மகாராசாவே! அடியேனுக்குச் சோமசுந்தரக்கடவுளுடைய திருவருளுங் கற்பும் இருத்தலினாலே, அவளோடு பாடி வெல்வேன். ஒருபோதும் பின்னில்லேன்" என்றாள். பாண்டியன் அவளையும்: "நாளை வா, போ" என்று அனுப்பிவிட்டான்.

மற்றைநாள், பாண்டியன், அவ்விருவரையுந் தன் சபையில் அழைப்பித்து, இசை பாடும்படி பணித்தான். ஈழநாட்டு விறலி, பாணபத்திரனுடைய மனைவியை வைது: 'இசைபாடலிலே குற்றங்கள் எத்தனை? குணங்கள் எத்தனை? யாழுக்குத் தெய்வம் யாது? உயிரெழுத்துக்கு மாத்திரை எத்தனை? மெய்யெழுத்துக்கு மாத்திரை எத்தனை? இவைகளுக்கு உத்தரஞ் சொல்லிவிட்டு, என்னோடு பாடு; இல்லையேல் உனக்கு வசை" என்றாள். பாணபத்திரனுடைய மனைவி: "இவள், தன்கல்வியின் பெருமையையும், வாதின்பெருமையையும், பலரால் விரும்பப்படுந் தன்பெண்மையின் செருக்கையும் இராசசபை அறியும்படி, வாய் திறக்கவேண்டாவோ! பெண்ணே! நான் உன்னோடு வாது செய்யுஞ் சண்டைக்கு எதிரன்றித், தீயவாயைத் திறந்து வையுஞ் சண்டைக்கு எதிரல்லேன். உன்னைப்போல மானம் விற்றுப் பிழைக்கும் பெண்களே அதற்கெதிர்" என்றாள். பாண்டியன் விலக்குவான்போல விலக்கி: "பெண்களே! பாடுங்கள். தோற்றவர் வென்றவருக்கு அடிமையாய்விடுவதே சபதம்" என்று மானம் உண்டாக்கினான். உண்டாக்கலும், முன்பு ஈழநாட்டு விறலியும், பின்பு பாணபத்திரனுடைய மனைவியும், யாழ்வாசித்துப் பாடினா

ர்கள். சபையார்கள், பாண்டியனுடைய உட்கிடையை அறியாமையினாலே, பாணபத்திரனுடைய மனைவியின் பாடலை வியந்தார்கள். பாண்டியனோ ஈழநாட்டு விறலியின் பாடலை வியந்தான். சபையார்கள், அவனுடைய உட்கிடையை அறிந்துகொண்டு, அவன்போல ஈழநாட்டு விறலியையே புகழ்ந்தார்கள். பாண்டியன், சபையார்களை நோக்கி: "இன்றொருநாளில் அறியத்தக்கதோ இது?" என்று சொல்லி, விறலியர் இருவரையும் "போங்கள்" என்று விடுத்தான். ஈழநாட்டுவிறலி, இருக்கை சேர்ந்து, தன்பாட்டைப் பாண்டியன் புகழ்ந்தமைபற்றிப் பெருமிதந் தலைக்கொண்டு, பெருங் களிப்புற்றிருந்தாள். பாணபத்திரனுடைய மனைவி, சோமசுந்தரக்கடவுளை அடைந்து வணங்கிக், கண்ணீர் சொரிய ஒதுங்கி நின்று: "எம்பெருமானே! பாண்டியன் ஓரவழக்குப் பேசுவானாயினான். அவன் கருத்துக்கிசையச் சபையாரும் அவ்வியல்பினர்களாயினார்கள். இனி நடுவுநிலைமை தூக்கிப் பேசுவார் யாவர்! நீர் தமியேன்மீது திருவருள் சுரந்து, தமியேனுடைய துன்பத்தை நீக்கியருளும்" என்று விண்ணப்பஞ்செய்தாள். அப்பொழுது, ஆகாயத்தினின்றும்: "பெண்ணே! நாளைக்கு நீயேவெல்லும்படி அருள்செய்வோம். அஞ்சாதே" என்று ஓரசரீரிவாக்குத் தோன்றிற்று. பாணபத்திரனுடைய மனைவி, அது கேட்டு, வீட்டுக்குப் போயினாள்.

பாண்டியன், அன்றுபோல மற்றைநாளும் அழைப்பித்துப், பாட்டுக் கேட்டு, முதனாட் சொல்லியபடியே சொல்லச், சபையார்களும் அப்படியே சொன்னார்கள். பாணபத்திரனுடைய மனைவி: "மகாராசாவே! நீ ஓரவழக்குச் சொல்லுதலினாலே, சபையார்களும் அப்படியே சொல்லத் துணிந்தார்கள். சோமசுந்தரக்கடவுளுடைய சந்நிதியிலே போய்ப் பாடுவோம். அங்கே இருவரேமுடைய பாட்டையுங் கேட்டு, இவள் வென்றாள் என்றாற் போதும்" என்றாள். பாண்டியன்: "அப்படியே செய்யுங்கள் செய்யுங்கள்" என்றான்.

மற்றநாள், பாண்டியன், மந்திரிமார்களோடும் வித்துவான்களோடுஞ் சோமசுந்தரக்கடவுளுடைய சந்நிதியிலே போய் இருந்துகொண்டு, விறலியர் இருவரையும் அழைத்துவரும்படி ஏவலாளர்களை விடுத்தான். ஈழநாட்டு விறலி: "பாணபத்திரனுடைய மனைவி இன்றைக்கு எனக்கு அடிமையாய்விடுவாள்; சந்தேகமில்லை" என்று கொடுஞ்செருக்கோடு கடுமையாக வந்தாள். பாணபத்திரனுடைய மனைவி, கற்புஞ் சிவபத்தியும் மிக்கோங்க, மெல்ல வந்தாள். சோமசுந்தரக்கடவுளும், இரத்னாபரணங்கள் தரித்துக்கொண்டு, அங்குள்ள வித்துவான்கள் கூட்டத்தினடுவே, ஒரு வித்துவான்போல் வந்து, எழுந்தருளியிருந்தார். அச்சபையிலே முன்னே ஈழநாட்டுவிறலி இசை பாடினாள். சபையார்கள் அதனை விரும்பி யாதொன்றும் பேசாதிருந்தார்கள். பின்பு பாணபத்திரனுடைய மனைவி, யாழ்கொண்டு, இவ்வாறு இன்னிசை பாடுவாளாயினாள்:

குடங்கைநீரும்பச்சிலையுமிடுவார்க்கிமையாக்குஞ்சரமும்
படங்கொள்பாயும்பூவணையுந்தருவாய்மதுரைப்பரமேட்டீ
படங்கொள்பாயும்பூவணையுந்தருவாய்கையிற்படுதலைகொண்
டிடங்கடோறுமிரப்பாயென்றேசுவார்க்கென்பேசுவனே.

தேனார்மொழியார்விழிவழியேசெல்லாதவர்க்கேவீடென்று
நானாவேதப்பொருளுரைத்தாய்நீயேமதுரைநம்பரனே
நானாவேதப்பொருளுரைத்தாய்நீயேபாதிநாரியுரு
ஆனாயென்றுபிறர்பழித்தாலடியேன்விடையேதறைவேனே.

வரதனாகியெவ்வுயிர்க்குமாயாவிருத்திவலியடக்கிச்
சரதமானவீட்டின்பந்தருவாய்மதுரைத்தனிமுதலே
சரதமானவீட்டின்பந்தருவாய்வீடுபெறுவார்போல்
விரதயோகநிலையடைந்தாயென்பார்க்கென்னான்விளம்புவனே.

பாணபத்திரனுடைய மனைவியினது யாழிசையையும், கழுத்து வீங்காமலுங் கண்ணிமையாலும் பல் வெளிப்படாமலும் புருவம் நிமிராமலுங் கதுப்புத் துடியாமலும் பாடிய மிடற்றிசையையுங் கேட்டுச், சபையார்களெல்லாருங் குதூகலமடைந்தார்கள். பாண்டியன், தான் இசை வல்லவனாகியும், முன்போலவே சொல்லுதற்கு ஒருப்படும்

பொழுது, சிவபிரானது திருவருளினாலே தன் மனக்கோட்டம் நீங்கிவிடப்: "பாணபத்திரனுடைய மனைவியே வென்றாள்" என்றான். அப்படியே சபையாரெல்லாருஞ் சொன்னார்கள். பின்பு, பாண்டியன், ஈழநாட்டு விறலியுடைய கழுத்திலே பாணபத்திரனுடைய மனைவியை இருத்துவித்தான். அப்பொழுது வித்துவான் வடிவங்கொண்டு வந்து எழுந்தருளியிருந்த சிவபெருமான்; "இது அற்புதம்; இது அற்புதம்" என்று சொல்லிக்கொண்டு, எல்லாருங் காண மின்போல மறைந்தருளினார். அது கண்ட யாவரும் வியந்து: "இது சிவபெருமானுடைய திருவிளையாடல்" என்றே தெளிந்து, சிவபிரானுடைய திருவருளையும் அடியவளுடைய அன்பையும் நினைந்து, பேரானந்தக் கடலின் மூழ்கினார்கள்.

பாண்டியன், தான் முன் ஓரவழக்குச் சொன்னதை நினைந்து பயந்து, ஈழநாட்டு விறலியுடைய கழுத்தில் இருந்த பாணபத்திரன் மனைவியை இறக்குவித்து, முன் அவளுக்குப் பற்பல வரிசைகளைக் கொடுத்துப், பின் மற்றவளுக்குஞ் சிலவரிசைகளைக் கொடுத்தான்; சபையில் வந்து ஒருங்கிருந்து பின்பு திருக்கோயிலிற் புகுந்து வீற்றிருந்த பெரும் புலவருக்கும் இரத்தினாபரண முதலியவைகளைக் கொடுத்தான். "அரசர்களுடைய வலிகளெல்லாந் தெய்வங்களின் வலிக்கு முன்னில்லா: அத்தெய்வங்களின் வலிகளெல்லாஞ் சிவபிரான் வலிக்கு முன்னில்லா" என்று பலர் சொல்வதெல்லாம் இப்பாணபத்திரன் மனைவியிடத்தே காணப்பட்டது என்று ஆச்சரியமடைந்து, சிவபெருமானை வலஞ்செய்து வணங்கிக்கொண்டு போய்த், தன் மாளிகையை அடைந்தான். அவன் சுகுணபாண்டியன் என்னும் புத்திரனைப்பெற்று, வாழ்ந்திருந்தான்.

திருச்சிற்றம்பலம்.

நாற்பத்தைந்தாவது

# பன்றிக்குட்டிக்குமுலைகொடுத்தபடலம்.

வைகையாற்றுக்குத் தெற்கே குருவிருந்ததுறை எனப் பெயர் கொண்ட ஓரூர் இருக்கின்றது. அவ்வூரிலே, தேவகுருவாகிய பிருகற்பதி, இருந்து தவஞ்செய்தார். சிவபெருமான், அவருக்கு வரங்கொடுத்துக், குருநாதர் என்னும் பெயரோடு அங்கே எழுந்தருளியிருக்கின்றார்.

அவ்வூரிலே சுகலன் என்னும் பெயரையுடைய ஒரு வேளாளன் இருந்தான். அவன் மனைவி பெயர் சுகலை. அவள் பன்னிரண்டு புதல்வர்களைப் பெற்றாள். அவர்களைத், தாய் தந்தையர்கள், செல்வச் செருக்கினாலே, கண்டியாது, மிகுந்த அன்பினால் வளர்த்தார்கள். வளர்க்குநாளிலே, தாய் தந்தையர்கள் இறந்துவிடப், பிள்ளைகள் வேடரோடு கூடிக், காட்டிலே வேட்டையாடிக்கொண்டு திரிந்தார்கள். ஒருநாள், அக்காட்டிலே வெய்யில் புகாத செடியின் கீழே தவஞ்செய்துகொண்டிருந்த பிருகற்பதியைக் கண்டு, கைகொட்டிச் சிரித்துக், கற்களை வாரி அவர்மேல் எறிந்தார்கள். பிருகற்பதி, தமது தவத்துக்கு இடையூறு செய்த அப்பிள்ளைகளைக் கோபித்து: "நீங்கள் வேளாளத்தொழிலை மறந்து, வேடத்தொழிலைப் பூண்டீர்கள். நீங்கள் மண்ணுழுந் தொழிலுடையீர்களாதலாற் பன்றிக்குட்டிகளாகிப் பிறந்து, தாய் தந்தைகளை இழந்து வருந்தக்கடவீர்கள்" என்று சபித்தார். உடனே அப்பிள்ளைகள் பன்னிருவரும் பயந்து: "அடியேங்களுக்கு இந்தச் சாபம் எப்போது நீங்கும்" என்றார்கள். பிருகற்பதி கோபந் தணிந்து: "சோமசுந்தரக்கடவுளே, உங்களுக்கு மாதாவாய் முலை தந்து, உங்களைக் காத்துப் பாண்டியனுக்கு மந்திரிகளாக்கிப், பின்பு முத்தியைத் தந்தருளுவார்" என்றார்.

அவ்வேளாளப் பிள்ளைகள் பன்னிருவரும், அந்தக் குருவிருந்த துறைக்குப் புறத்தில் உள்ள காடுகளிலே சஞ்சரிக்கும் பன்றிகளெல்லாவற்றிற்கும் அரசாகிய பன்

றியினது பெட்டை வயிற்றிற் போய்ப் பிறந்து, குட்டிக ளாய் இருந்தார்கள். இருக்கு நாளில் ஒருநாள், இராசராச பாண்டியன், வேட்டைவிருப்பினனாய்ச் சேனைகள் சூழ யானைமேற்கொண்டு, மதுரையினின்று நீங்கி, மேற்றிசைக் காட்டிற் சென்று, பலவிலங்குகளையுங் கொன்று, மேற்கே போவானாயினான். அப்பொழுது ஒரு பன்றி, மேற்கூறிய பன்றியரசின்முன் ஓடிப் போய் நின்று: "எங்களரசே! பாண்டியன் இங்குள்ள மிருகங்களெல்லாவற்றையுங் கொன்றுகொண்டு வருகின்றான்" என்று சொல்லிற்று. பன்றியரசு, அது கேட்டுக் களிப்படைந்து, தன் பெட்டையை நோக்கி: "நான் இன்றைக்குப் பாண்டியனோடு சென்று பொருவேன். போரில் வென்று திரும்புவேனோ! இறந்து விடுவேனோ! தெரியாது. நீ உன் குட்டிகளைப் பாதுகாத்துக்கொண்டு இங்கேயிரு" என்றது. அதற்குப் பெண் பன்றி: "என் பிராணநாயகனே! நான் உன்னைப் பிரிந்து இங்கே இருக்கமாட்டேன். நானும் உன்னோடு வருவேன். நீ வென்று திரும்புவையானால், நானும் உன்னோடு திரும்புவேன். நீ இறந்துவிடுவையானால், நானும் உன்னோடு இறந்துவிடுவேன். போவோம், எழும்பு" என்று சொல்லி, விரைந்தெழுந்து, தன் குட்டிகளையுங் கூட்டிக்கொண்டு புறப்பட்டது.

பன்றியரசு, பன்றிக்கூட்டங்களெல்லாந் தன்சேனைகளாய்த் தனக்குமுன் செல்ல, இடிபோல ஆரவாரித்துக்கொண்டு, யுத்தத்துக்கு நடந்தது. முன்சென்ற பன்றிகளுள்ளே பல, பாண்டியனுடைய சேனைவீரர்களோடெதிர்ந்து பொருது, அவர்கள் விடுத்த பாணங்களினால் இறந்தன. எஞ்சிய பன்றிகள், பாண்டியனுடைய சேனைவீரர்களுள்ளே பலரைக் கொன்றன; பலரை ஊறுபடுத்தின; பாண்டியனுடைய மந்திரிமார்கள், அது கண்டு, கோபங்கொண்டு, இருப்புலக்கைகளினாலுஞ் சக்கரங்களினாலும் அப்பன்றிகளைக் கொன்றார்கள். அப்பொழுது பன்றியரசை அதன் பக்கத்து நின்ற பெண்பன்றி பார்த்து: "நம்

முடைய சேனைகளெல்லாம் இறந்தன. இனி நாஞ் செய்வ
தென்னை! நாமும் இங்கே வீணாக இறக்கவேண்டுவதில்லை;
தப்பிப் போவதே கருமம்" என்றது. பன்றியரசு பெண்
பன்றியை நோக்கி: "நுண்ணறிவுடையராகி நூலொடு
பழகினாலும் பெண்ணறிவென்பதெல்லாம் பேதைமையு
டைத்து: ஆதலால், உன்னறிவுக்கேற்ற காரியஞ் சொன்
னாய். இது அறிவுடையோருக்கெல்லாம் இழுக்குடைய
தன்றோ! இரண்டு சிங்கம் நிற்கிற துறையிலே ஒரு பன்றி
வந்து தண்ணீர் குடித்துவிட்டுத் திரும்பும்; ஒரு பன்றி
நிற்கிற துறையிலே இரண்டு சிங்கம் வந்து தண்ணீர் குடி
த்தற்கு அஞ்சும். நான் இத்தன்மைத்தாகிய திடம்பொரு
ந்திய மரபிலே வந்து பிறந்தேனாதலால், பாண்டியனோடு
பொருது வென்று புகழை நாட்டுவேன்; அல்லது இறப்
பேன். இப்பூதவுடம்பேயன்றிப் புகழுடம்பு அழிவதில்லை.
நீ நில்" என்று சொல்லித், தன் பெட்டையை நிறுத்திவிட்
டுப், பாண்டியன்மீது பெருங்கோபத்தோடெதிர்ந்து செ
ன்றது. பாண்டியன், அது கண்டு வியந்து, வில்லை வளைத்
துப், பாணங்களைச் சொரிந்தான். பன்றியரசு, அப்பாண
ங்களுள்ளே சிலவற்றைப் பறித்து வாயினாற் கறித்தும்,
சிலவற்றைக் காலினாலே தேய்த்து முறித்தும், சிலவற்றை
வாலினாலே முறித்தும், நின்றது. பாண்டியன், மானம்
பொறாது, ஓரிருப்புலக்கையைத் தன் யானை கையிலே
கொடுத்து, அதனைச் செலுத்தினான். பன்றியரசு, இடி
போல் ஆரவாரித்து, அவ்வியானையினது துதிக்கையைச்
சிந்தித், தன் கொம்பினாலே அவ்வியானையைக் கொன்று
வீழ்த்தது. உடனே, பாண்டியன், தேர்மீது பாய்ந்து, சக்
கரத்தைச் சுழற்றிவிட்டான். பன்றியரசு, அதனை விலக்
கிக்கொண்டு, விரைந்து பாய்ந்து, அத்தேர் உடையும்படி
தகர்த்தது. உடனே, பாண்டியன் குதிரைமீது பாய்ந்து,
வேலாயுதத்தை விடும்படி சுழற்றினான். அதை விடுக்கு
முன், பன்றியரசு, அவனுடைய குதிரைக்குப் பின் போய்,
அதைத் தன் கோட்டினாலே குத்திக் கொன்றது. பாண்டி
யன், பூமியிலே குதித்து, இருப்புத்தண்டினாலே பன்றியர

லைத் தலையிலே அடித்தான். உடனே, பன்றியரசு இறந்து, விமானமேற்கொண்டு, தேவவுலகத்தை அடைந்தது.

பெண்பன்றி: "என் நாயகன் இறப்ப, நான் இருப்பது கற்போ! நான் போர்செய்யின் வெல்லேனாயினும், சுவர்க்கஞ் சேரலாம்" என்றெண்ணிப், பாண்டியனை எதிர்த்தது. பெட்டையைக் கொல்வது அரசனுக்குத் தருமமன்று என்று, அவனுடைய வேடவீரர்களுக்குத் தலைவனாகிய சருச்சரன் என்பவன், அப்பெண்பன்றியோடெதிர்ந்து, நெடுநேரம் பொருதான். பெண்பன்றி அவனைப் பொருது பூமியில் வீழ்த்த, அவன் இருப்புத்தண்டினால் அதனைத் தலையில் அடித்துவிட்டு, விழுந்திறந்து சுவர்க்கஞ் சேர்ந்தான். பெண்பன்றியும் இறந்து சுவர்க்கஞ் சேர்ந்தது. இராசராசபாண்டியன் தன் மதுரையை அடைந்தான். பன்றி விழுந்து பருப்பதமாயிற்று. அது அன்று தொடங்கி இன்றுவரையும் பன்றிமலை என வழங்குகின்றது. அம்மலையிலே, சித்தர்களும், விஞ்சையர்களும், யோகிகளும், முத்திபெறற்பொருட்டுத் தவஞ்செய்துகொண்டிருப்பார்கள்.

இப்படிச் சொல்லிய அகத்தியமகாமுனிவரை இருடிகள் நோக்கி: "சுவாமீ! அறிவில்லாத பன்றிமலையின்மீது சித்தர் விஞ்சையர் முதலியோரெல்லாருந் தவஞ்செய்தற்குக் காரணம் யாது?" என்று வினவினார்கள். அதற்கு அகத்தியமுனிவர்: "ரங்கவித்தியாதரன் என்னுங் கந்தருவன் புலத்தியமுனிவருடைய தவத்துக்கு இடையூறாகிய இசைபாட, அவர் அவனைப் பன்றியாம் வண்ணஞ் சபித்தனர். வித்தியாதரன்: "அடியேனுக்கு இந்தச் சாபம் நீங்குவது எப்போது?" என்று வினவப், புலத்தியமுனிவர்: "இராசராசபாண்டியன் வந்து உன்னைக் கொல்வான்: கொன்றவுடனே நீ இவ்வுருவத்தைப் பெறுவாய்" என்றார். அப்படியே அவன் வந்து இறந்து, பின் முன்னையுருவத்தைப் பெற்றான். அந்தக் கந்தருவனுடைய சரீரமாய்க் கிடந்த பரிசுத்த பருவதமாதலால், அதன்மீது தீறவிகளை

ல்லாருந் தவஞ்செய்யலுற்றார்கள். சோமசுந்தரக்கடவுளும் அங்கே விரும்பி எழுந்தருளியிருப்பார்" என்று விடை கொடுத்தார்.

"பன்றியரசும் பெட்டையும் இறந்த பின், பன்றிக்குட்டிகள் பன்னிரண்டுந் திகைத்தோடின; முலைப்பாலை விரும்பி வாடின; பசியால் வருத்தமுற்றன; வெய்யில் சுட வெதும்பி, நிழலைத் தேடின; இப்படி அவைகள் வருந்தும் பொழுது, அக்காட்டிலே மீனாக்ஷியம்மையோடு விமானமேற்கொண்டு திருவிளையாடல் செய்தருளிய சோமசுந்தரக்கடவுள், அப்பன்றிக்குட்டிகள்மீது திருவுளமிரங்கி, அவைகளுடைய தாய்ப்பன்றியின் வடிவங்கொண்டு, போய், அவைகளைத் தழுவி மோந்து, முலைப்பால் கொடுத்து, மிகுந்த வலிமையையும் ஞானத்தையும் நற்குணங்களையும் அருளிச்செய்து, அவைகளுக்கு முகமாத்திரம் பன்றிமுகமாகவும் உடம்பு முழுதும் மனிதவுடம்பாகவுஞ் செய்துவிட்டு, மறைந்தருளினார்.

திருச்சிற்றம்பலம்.

நாற்பத்தாறுவது

## பன்றிக்குட்டிகளைமந்திரிகளாக்கியபடலம்.

சோமசுந்தரக்கடவுள் மறைந்தருளிய பின், பன்றிமுகக் குமாரர்கள் பன்னிருவரும், உதயசூரியர்கள் பன்னிருவர்கள்போல் விளங்கிப், பலகலைகளினும் வல்லர்களாய்ப், பன்றிமலையில் இருந்தார்கள். அப்படியிருக்குநாளிலே, சோமசுந்தரக்கடவுளுடைய திருவருள் எல்லாவுயிர்களுக்கும் பொதுவாயுள்ளது என்னும் உண்மையை உலகத்தாருக்கு அறிவிக்கத் திருவுளங்கொண்ட மீனாக்ஷியம்மையார், அக்கடவுளை நோக்கி: "எம்பெருமானே! பொல்லாத விலங்குகளெல்லாவற்றினும் மிகப்பொல்லாதவைகளாய் அசேதனங்களாய் உள்ள பன்றிக்குட்டிகளுக்கு இரங்கி நீர் முலை கொடுத்து, முன்னை விலங்கறிவை நீக்கியருளின

மை என்னை!'' என்று வினவினார். அதற்குச் சோமசுந்தரக்கடவுள்: "சகல வேதங்களும் ஆகமங்களும் நம்மைச் சகலசீவதயாபரர் என்று சொல்லும். சேதனப்பொருள் அசேதனப்பொருள் என்னும் இரண்டும் நமக்குச் சமமே. அதனாற்றானே, தாயை யிழந்து பசியினாலும் வெய்யிலினாலும் வருத்தமடைந்த பன்றிக்குட்டிகளுக்கு இரங்கி, முலைகொடுத்து, அவைகளைக் காத்தருளினோம். அதனால் அவைகள் அளவில்லாத வலிமையையுங் கல்வியையும் ஞானத்தையும் பெற்றுக்கொண்டன. இனிமேல், அப்பன்றிமுகக் குமாரர்கள், பாண்டியனுக்கு மந்திரிமார்களாய் இருந்து, நம்முடைய கணத்தவர்களாவார்கள்'' என்று விடை கொடுத்தருளினார்.

பின்பு அச்சோமசுந்தரக்கடவுள் அன்றிரவு இராசராசபாண்டியனுக்குச் சொப்பனத்திலே தோன்றி: "பாண்டியனே! பன்றிமலையிலே பன்றிமுகமுடைய பன்னிரண்டு குமாரர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் அளவில்லாத வலிமையுங் கல்வியும் ஞானமுமுடையவர்கள். அவர்களை நீ உனக்கு மந்திரிமார்களாக்கிக்கொள்'' என்று திருவாய் மலர்ந்து, மறைந்தருளினார். பாண்டியன், விழித்தெழுந்து, பெருங்களிப்புடையனாகிக் காலையிலே தன் மந்திரிமார்களை அனுப்பி அக்குமாரர்களை அழைப்பித்தான். அவர்கள் வந்து பாண்டியனை வணங்கப், பாண்டியன், களிப்படைந்து, அவர்களுக்குப் பல வரிசைகள் கொடுத்து, அவர்களைத் தனக்கு மந்திரிமார்களாக்கி, அவர்களுக்குப் பழையமந்திரிமார்களுடைய கன்னியர்களை விவாகஞ்செய்வித்துக் கொடுத்தான்.

பன்றிமுகவீரர்கள் பன்னிருவரும், பாண்டியனுக்குக் கவசமுங் கண்ணும்போல், ஒழுகினார்கள்; பன்னிரண்டுடம்புக்கும் உயிர் ஒன்று என்று சொல்லும் வண்ணம் ஒற்றுமையுடையர்களாய்ப், பசுப்பாலோடு தேன்கலந்தாற்போலக் கல்வியறிவோடு புத்திநுட்பமுமுடையர்களாய் இருந்தார்கள்; இறுமாப்புச் சிறிது மின்றி ஏவல் செய்யுஞ் சிறு

வர்கள்போல் ஒதுங்கி நடந்தார்கள்; அரசனால் விரும்பப் பட்டது எதுவோ, அதனைச் சிறிதுந் தாம் விரும்பாது விடம்போல வெறுக்கும் இயல்புடையர்கள்; அக்கினி காய்வோர் அவ்வக்கினியை அணுகாதும் பிரியாதும் இருத்தல் போல, அரசனை அணுகாதும் பிரியாதும் அஞ்சி அவனிழல்போல ஒழுகும் நீர்மையையுடையர்கள்; உலகத்தாருள் யாவராயினுந் தங்கள் சொல்லை மறுத்தல் இல்லாமையால், அவர்களைத் தண்டித்து வாங்கும் பொருளும், எல்லாவரசர்களுந் தங்கள் பணிகேட்கையால் அவர்களுக்கு ஊறுசெய்து பெறும்பொருளும், அக்குமாரர்கள் ஈட்டுவதில்லை. குடிகள் இறுக்கும் இறைப்பொருளொன்றே அவர்கள் பாண்டியனுக்கு ஈட்டுஞ்செல்வம். பாண்டியனுடைய உட்கருத்துத் தங்கள் நெஞ்சினுள்ளே கண்ணாடியின் நிழல்போலத் தோன்ற, அதனை நன்றாக ஆராய்ந்து, அது தருமமாயிற் செய்வர்கள், தருமமன்றாயின் தங்கள் செல்வத்துக்கும் உயிருக்கும் இறுதி வரினுஞ் செய்யார்கள். இங்ஙனம் ஒழுகிப், பாண்டியனுக்குத் தருமத்தையும் புகழையும் நாடோறும் பெருக்கித், திகந்தங்களெல்லாம் வெற்றியையுண்டாக்கி, வாழ்ந்திருந்து, சிலகாலஞ் சென்றபின், சிவலோகத்தை அடைந்து, சிவகணநாதர்களாயினார்கள். இராசராசபாண்டியனுஞ் சிவபதமடைந்தான்.

திருச்சிற்றம்பலம்.

---

நாற்பத்தேழாவது

## கரிக்குருவிக்கு உபதேசஞ்செய்தபடலம்.

இராசராசபாண்டியன் சிவபதமடைந்தபின், அவன் குமாரனாகிய சுகுணபாண்டியன் அரசியற்று நாளிலே, ஒருவன், முற்பிறப்பிலே தருமத்தை மிகச் செய்துஞ் சிறிது பாவஞ் செய்தமையால், கரிக்குருவியாய்ப் பிறந்தான். அக்கரிக்குருவி, தனக்குக் காகமுதலியவை ஊறு செய்ய, இரத்தஞ்சோருந் தலையையுடையதாகிப், பறவைகளுக்கெல்லாம் எளியதாகி அவ்வூறுபாட்டுக்கஞ்சிப், பட்டணத்தி

னின்று நீங்கி, வனத்திலே போய், வழியில் ஒருபக்கத்தில் நிற்கின்ற ஒருமரத்தின்மேல் வெட்டமேலிட்டு ஒடுங்கிப், பெருமூச்செறிந்துகொண்டிருந்தது.

அப்பொழுது, விபூதி ருத்திராக்ஷந் தரித்தவரும், உள்ளும் புறமும் பரிசுத்தரும், கையிலே குடை பிடித்தவரும், தீர்த்தயாத்திரை செய்பவருமாகிய ஒரு சிவபத்தர், அம்மரநிழலில் வந்திருந்துகொண்டு, அங்குள்ள சிலரைப் பார்த்து: "தலங்களெல்லாவற்றினுஞ் சிறந்தது மதுரை. தீர்த்தங்களெல்லாவற்றினுஞ் சிறந்தது பொற்றாமரைவாவி. மூர்த்திகளெல்லாவற்றினுஞ் சிறந்தது சொக்கலிங்கம். மற்றைத் தலங்களெல்லாவற்றினும் இம்மூன்றனுள் ஒவ்வொன்றே சிறப்புற்றிருக்கும். மதுரையிலோ இம்மூன்றுஞ் சிறப்புற்றிருக்கும். அதனால் மதுரைக்குச் சமமாகிய தலம் வேறில்லை. சோமசுந்தரக்கடவுள், தம்மை வழிபடுவோர்களுக்கு எளியராகி, அவர்கள் விரும்பிய வரங்களெல்லாவற்றையும் இம்மையிற்றானே கொடுத்தருளுவர்; மற்றைத் தலத்து மூர்த்திகளோ மறுமையினன்றிக் கொடார்கள். ஆதலால் விசேடமூர்த்தி சோமசுந்தரமூர்த்தியே" என்று போதித்தார்.

அம்மரத்தின்மேல் இருந்த கரிக்குருவி, அதைக் கேட்டவுடனே, ஞானம் பெற்றது. தன் முற்பிறப்பையுந் தான் கரிக்குருவியாய்ப் பிறந்ததையும் அறிந்தது. "நான் இப்பிறப்பை ஒழித்தற்கு இச்சிவபத்தர் இங்கே சொல்லியதே உறுதி" என்று துணிந்தெழுந்தது; எழுந்து, காட்டினின்று நீங்கி, மதுரையை அடைந்து, பொற்றாமரைவாவியிலே ஸ்நானம்பண்ணிச், சோமசுந்தரக்கடவுளை வலஞ்செய்து, மனசினாலே பூசித்து வணங்கியது. இப்படி மூன்றுநாள் கழிந்தபின், மீனாக்ஷியம்மையார் சோமசுந்தரக்கடவுளை நோக்கி: "எம்பெருமானே! இந்தக் கரிக்குருவி செய்யுஞ் செய்கை என்னை. இதன் வரவு யாது?" என்றார். சிவபெருமான் அதன் வரவனைத்தையும் அம்மையாருக்கு அருளிச்செய்துவிட்டு, அக்கரிக்குருவியின்மீது திருவரு

ணேக்கம் வைத்து, முன்னாளிலே மார்க்கண்டேயமுனிவருக்கு மரணத்தையொழித்து நித்தியத்துவத்தைக் கொடுத்த மிருத்தியுஞ்சயமந்திரத்தை அதற்கு உபதேசித்தருளினார். உடனே அக்கரிக்குருவி சிற்றறிவு நீங்கப் பேரறிவடைந்து, சிவபெருமானை இவ்வாறு துதிக்கலுற்றது:—

எண்ணிலாவுயிர்க்கிறைவபோற்றிவான்
றண்ணிலாமதிச்சடிலபோற்றியென்
புண்ணியப்பயன்போற்றியங்கயற்
கண்ணிநாதநின்கருணைபோற்றியால்.

இப்படித் துதித்துக்கொண்டு, பின்பு: "எம்பெருமானே! அறிவின்றிச் செய்த தீமையினாலே இடையூறடைந்த தமியேனையும் ஆளல்வேண்டுமோ! எளியவர் எங்குளார் என்று தேடித் தேடி அவருக்கெளியராவதே உமது திருவருளின் செய்கை. தமியேன் முற்பிறப்பிலே தருமமுடையேனாதலாலன்றோ இப்பிறப்பிலே இம்மந்திரத்தைத் தமியேனுக்கு உபதேசித்தருளினீர். இது வருபிறப்பிலே நன்னெறிக்கேதுவாயிற்று. ஆதலினாலே தமியேன் மும்மையினும் நலமுடையேனாயினேன். ஆயினும், தமியேனுக்கு ஒருகுறையுண்டு. தீய பறவைகளெல்லாந் தமியேனுக்கு ஊறு செய்கின்றன. கண்டவரெல்லாம் நகைக்கும்படிக்கு எளியனாயினேன்" என்று விண்ணப்பஞ் செய்தது. சிவபெருமான்: "அப்பறவைகளுக்கெல்லாம் நீ வலியையாகக்கடவாய்" என்று திருவாய்மலர்ந்தருளினார். பின்னும், அக்கரிக்குருவி, வணங்கி: "தமியேனுக்கு இன்னும் ஒருவரந் தரல்வேண்டும். வலியை என்பது என்னுடைய மரபினுள்ள குருவிகளுக்கெல்லாம் பொலியவேண்டும். நீர் தமியேனுக்கு உபதேசித்த மந்திரத்தை அவைகளும் ஓதியோதி உய்தல்வேண்டும்" என்று விண்ணப்பஞ்செய்தது. சிவபெருமான்: "அப்படியாகுக" என்று அருளிச்செய்தார்.

அக்கரிக்குருவி, தன்னைப்போலவே தன்குலமுஞ் சிவபிரானது திருவருளினாலே பறவைகளுக்கெல்லாம் வலிய

னவாகி வலியான் என்னும் காரணப்பெயரைப் பெற்று உலகத்திலே சிறப்புற்றிருப்பத், தான் சிவபிரானுடைய திருவடியை அடைந்தது. இக்கரிக்குருவி, தான் தவஞ்செய்து அடைந்தவரத்தைத் தன்சுற்றம் எளிதாக அடையும்படி, பெற்றுக்கொண்டதனால்: "உலகத்திலே தக்கவனொருவன்வாழத் தன்கிளைவாழும்" என்னும் பழமொழி விளங்கிற்று.

ஈசனடிக்கன்பில்லார்போலெளியாரில்லையாவர்க்கும்
ஈசனடிக்கன்புடையார்போல்வலியாரில்லையாவர்க்கும்
ஈசனடிக்கன்பின்மையினலெளிதாய்த்திரிந்தவிக்கயவாய்
ஈசனடிக்கன்புடைமையினல்வலிதாயிற்றேயெவ்வுயிர்க்கும்.

திருச்சிற்றம்பலம்.

நாற்பத்தெட்டாவது

## நாரைக்குமுத்திகொடுத்தபடலம்.

பாண்டிநாட்டிலே தென்றிசையினுள்ள ஓரூரிலே ஒரு தாமரைத் தடாகமுண்டு. அதிலுள்ள மீன்களெல்லாவற்றையும் புசித்துக்கொண்டு ஒருநாரை இருந்தது. சிலநாள் மழையில்லாமையால், அத்தடாகம் வற்றிப்போயிற்று. அந்நாரை, இரையை விரும்பி, அங்குநின்று நீங்கி, விரைந்து சென்று, ஒரு காட்டில் விழுந்தது. அக்காட்டிலே, ஒரு கூப்பிடெல்லைச் சதுரமுடையதும், நான்கு பக்கத்தும் படித்துறையுடையதும், கரையிலே சந்தியாமடமுடையதுமாகிய ஒருகுளம் இருந்தது. முன் விழுந்த நாரை, இரையை விரும்பி, அக்குளக்கரையை அடைந்தது; அந்தத்தீர்த்தத்திலே இருடிகள் முழுகி முழுகி எழும்புந்தோறும், அவர்களுடைய தோட்புறத்திலே சாய்ந்த சடையிலே தத்துகின்ற மீன்கள் பாய்ந்து பாய்ந்து புரளுதலைப் பார்த்தது. பார்த்து: "இம்மீன்கள் இவ்விருடிகளுடைய திருமேனியைத் தீண்ட எத்தவஞ் செய்தனவோ! இம்மீன்களைநாம் புசிக்கலாகாது" என்றுஇரையைவெறுத்திருந்தது.

இருடிகளெல்லாரும், அத்தீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்து, கரையேறி, நித்தியகருமம் முடித்துச், சந்தியாமடத்தில் இருந்துகொண்டு, மதுரைப் புராணம் வாசிக்கலுற்றார்கள். சோமசுந்தரமூர்த்தி விசேடமும், மதுரைத் தலவிசேடமும், பொற்றாமரைத் தீர்த்தவிசேடமும், சோமசுந்தரக்கடவுள் செய்தருளிய திருவிளையாடல்களும், அவர் தம்மையடைந்தவர்களுக்கு எளியவரென்பதும், அதில் எடுத்துச் சொல்ல, அந்நாரை கேட்டது. கேட்டவுடனே, அறியாமை நீங்கி, மெய்யறிவடைந்து, சிவபிரானிடத்துள்ள அன்பு "வா வா" என்றிழுப்ப எழுந்து, மதுரையை அடைந்து, பொற்றாமரைவாவியிலே ஸ்நானம்பண்ணிச், சோமசுந்தரக்கடவுளை வலஞ்செய்து வணங்கி, அவர் திருமுன் இருந்துகொண்டு,அவருடைய திருமேனியைத் தியானஞ்செய்தது. இப்படியே பதினைந்துநாள் நியமமாக அனுட்டித்தபின், ஒருநாள், பொற்றாமரைவாவியிலே ஸ்நானஞ்செய்யப் புகுந்தபோது, பசியினாலே மிக வருந்தி, அங்குள்ள மீன்களைக் கவர்ந்துண்ணும்பொருட்டுச் சிறிது நினைந்தது. பின்பு சிவபிரானது திருவருளினாலே அறிவு வர: "ஐயையோ! இந்தப் புண்ணிய தீர்த்தத்துள்ள மீன்களைப் புசித்தற்கு எனக்கு இப்போது ஆசை எழுந்ததே! இப்பிறவி எப்போது நீங்கும்" என்று நினைந்து துக்கித்துப், பின்னுஞ் சோமசுந்தரக்கடவுளுடைய திருமேனியைத் தியானித்துக்கொண்டிருந்தது.

அப்படியிருக்கும்பொழுது, சோமசுந்தரக்கடவுள், அந்நாரைக்கு அது நினைந்த வடிவாய்த் தோன்றி: "உனக்கு வேண்டும் வரம் யாது? சொல்" என்று திருவாய்மலர்ந்தருளினார். நாரை வணங்கி; "எம்பெருமானே! இப்பிறவியை நீக்கித் தமியேனைச் சிவலோகத்திலே சேர்த்துக் கொள்ளல்வேண்டும். தமியேனுடைய குலத்தினவாகிய நாரைகளும் மற்றைப் பறவைகளும் இந்தப் புண்ணிய தீர்த்தத்தில் உள்ள மீன்களைப் புசிக்கின், ஒருகாலத்தும் நீங்காத பழி வந்து சேரும். ஆதலினால் இந்தத் தீர்த்தத்திலே

மீன்கள் எக்காலமும் இல்லாதொழிதற்பொருட்டும், ஒரு வரந் தரல்வேண்டும்" என்று விண்ணப்பஞ் செய்தது. சோமசுந்தரக்கடவுள், அப்படியே வரங்கொடுத்து, மறைந்தருளினார். நாரை, சிவசாரூப்பியம் பெற்று, விமான மேற்கொண்டு, பஞ்சதுந்துபிகளொலிப்பத், தேவர்கள் பூமாரி பொழியச், சிவலோகத்தை அடைந்து, நந்திகணத்துள் இருந்தது.

அன்று தொட்டு இன்று வரையும் பொற்றாமரை வாவியிலே நீர்வாழுயிர்கள் ஒன்றும் இல்லாதொழிந்தன. இந்நாரை, தன் சுற்றமேயன்றி வேற்றுப் பறவைகளுந் தன்போலவே நற்கதியடையும்படி, வேண்டிற்றே. இந்நாரையினது அன்போ, சிவபிரானது திருவருளோ, எது வியக்கற்பாலது! எவ்வெவர்க்கும் மேலாகிய சிவபெருமான் தம்மன்பருக்கு மிக எளியராயிருப்ப தென்னே!

சுகுணபாண்டியன், தன்னாட்டிலே, பாவமாகிய களையைக் களைந்து, தருமமாகிய பயிரை வளர்த்து, அதன் பயனை நுகரும்பொருட்டுச் சுவர்க்கத்தை அடைந்தான்.

திருச்சிற்றம்பலம்.

நாற்பத்தொன்பதாவது

## திருவாலவாயானபடலம்.

சுகுணபாண்டியன் சுவர்க்கமடைந்தபின், சித்திரரதன், சித்திரபூடணன், சித்திரத்துவசன், சித்திரவருமன், சித்திரசேனன், சித்திரவிக்கிரமன், இராசமார்த்தாண்டன், இராசசூடாமணி, இராசசார்த்தூலன், துவிசராசகுலோத்தமன், ஆயோதனப்பிரவீணன், இராசகுஞ்சரன், பரராசபயங்கரன், உக்கிரசேனன், சத்துருஞ்சயன், வீமரதன், வீமபராக்கிரமன், பிரதாபமார்த்தாண்டன், விக்கிரமகஞ்சுகன், யுத்தகோலாகலன், அதுலவிக்கிரமன், அதுலகீர்த்தி என்னும் இருபத்திரண்டு பாண்டியர்களும், வழி வழி

மைந்தர்களாய், அரசியற்றினார்கள். அதுலகீர்த்திபாண்டி யனுக்குப் பின், அவன் குமாரனாகிய கீர்த்திவிபூடணன் அரசியற்று நாளிலே, பிரளயகாலம் வந்தது. அப்பொழுது, சத்தசமுத்திரமுங் கரைகடந்து, ஆர்த்துப் பொங்கி, ஒருங்கெழுந்து, உலகத்தை அழித்தன. சோமசுந்தரக்கடவுளுடைய விமானமும், மீனாக்ஷியம்மைகோயிலும், இடபமலையும், யானைமலையும், நாகமலையும், பசுமலையும், பன்றிமலையும், அழியாதிருந்தன. வெள்ளம் வற்றியபின், சிவபெருமான், உலகத்தை முன்போலப் படைத்துச், சந்திரன் சூரியன் அக்கினி என்னும் மூவருடைய குலத்தினின்றுந் தமிழ்வேந்தர் மூவரையும் படைத்தருளினார்.

அப்பொழுது, சந்திரகுலத்துதித்த வம்மிசசேகரபாண்டியன், சோமசுந்தரக்கடவுளுடைய திருக்கோயிலைச் சூழ ஒருசிறுநகரம் நிருமித்து, அதில் இருந்துகொண்டு, அரசுசெய்தான். அவன் நீதி வழுவாது அரசுசெய்தமையால், கலிப்பகை புறந்தந்தோட, அவனுடெங்கும் பல வளங்கள் சுரக்கச், சனங்கள் நாடோறும் பெருகினார்கள். அச்சனங்களெல்லாம் வசித்தற்கு இடம் போதாமையினாலே, பாண்டியன், திருக்கோயிலை யடைந்து, சோமசுந்தரக்கடவுளை வணங்கி: "எம்பெருமானே! தமியேன் இத்தனை மனிதர்களும் இருக்கத்தக்கதாக ஒரு நகரம் நிருமிக்கவேண்டும். இந்நகரத்துக்கு ஆதியிலே வரையறுக்கப்பட்ட எல்லையைக் காண்கிலேன். இன்றைக்கு அதனைக் காட்டியருளும்" என்று பிரார்த்தித்தான். அப்பொழுது, சிவபெருமான், அரைஞாண் கௌபீனம் பூணூல் சன்னவீரங் குண்டலம் பாதகிங்கிணி கங்கணம் என்பவையெல்லாம் பாம்பினாலே தரித்த ஒரு சித்தராய், விமானத்தினின்றும் எழுந்தருளி வந்து, மகாமண்டபத்தின் பக்கத்திலே நின்று, தமது திருக்கரத்திலே கங்கணமாயுள்ள பாம்பைப் பார்த்து: "நீ இவனுக்கு இந்நகரத்தெல்லையை அளந்து காட்டு" என்று பணித்தருளினார். பாம்பு, அவரை வணங்கி: "எம்பெருமானே! இந்த நகரம் அடியேன்

பெயரினால் விளங்கும்படி அருள்செய்யும்" என்று பிரார்த்தித்தது. சிவபெருமான்: "அப்படியாருக" என்றார். பாம்பு, விரைந்து கிழக்குத்திக்கிலே போய், வாலை நீட்டி, நகரத்தை வலமாகச் சூழும்படி உடம்பை வளைத்து, வாலை வாயில்வைத்துப், பாண்டியனுக்கு எல்லை காட்டி விட்டுத், திரும்பிப் போய்ச், சித்தர்கையிற் கங்கணமாயிற்று. சித்தர் தமது திருக்கோயிலினுள் எழுந்தருளினார்.

பாண்டியன்; அப்பாம்பு கோலிய படியே சுவரெடுத்து, மதில் செய்வித்துத், தெற்குவாயிலுக்குத் திருப்பரங்குன்றமும், வடக்குவாயிலுக்கு இடபமலையும், மேற்குவாயிலுக்குத் திருவேடகமும், கிழக்குவாயிலுக்குத் திருப்பூவணமும், எல்லையாக, வகுத்தான். அம்மதில் ஆலவாய் மதிலெனவும், அந்நகரம் ஆலவாய்நகரம் எனவும், பெயர் பெற்றன. பாண்டியன், அந்நகரத்தையும் மண்டபங்கோபுர முதலியவைகளையும் புதியவாக நிருமித்துச், சோமசுந்தரக்கடவுளுக்கு, இரத்தின கிரீடமும் இரத்தினாபரணங்களுஞ் செய்து, சாத்துவித்தான்; அத்திருவாலவாய் நகரத்திலே பலவகைக் குடிகளையும் இருத்திப், பலவளங்களும் பெருக, அரசுசெய்துகொண்டிருந்தான்.

திருச்சிற்றம்பலம்.

ஐம்பதாவது

## சுந்தரப்பேரம்பெய்தபடலம்.

வம்மிசசேகரபாண்டியன் செங்கோல் நடாத்தி அரசியற்று நாளிலே, விக்கிரமசோழன், பாண்டியனோடு யுத்தஞ்செய்யக் கருதிக், கயபதி நரபதி துரகபதி முதலிய வடதேசத்தரசர்களைத் தனக்குப் போர்த்துணைவர்களாகக் கொண்டு, எண்ணில்லாத சேனைகளோடு புறப்பட்டுப், பாண்டிநாட்டையடைந்தான். பாண்டியன், அதையறிந்து, திருக்கோயிலையடைந்து, சோமசுந்தரக்கடவுளை வணங்கி: "பரமகருணாநிதியே! விக்கிரமசோழன் அடியேனோடு

யுத்தஞ் செய்யும்பொருட்டு வடதேசத்தரசர்களோடும் எண்ணில்லாத சேனைகளோடும் வந்து, பாசறையில் இருக்கின்றான். அடியேனிடத்து அத்துணைச்சேனை இல்லையே. இதற்கு யாது செய்வேன்" என்று விண்ணப்பஞ்செய்தான். அப்பொழுது, சிவபெருமான், ஆகாயத்தில் அசரீரியாய் நின்று: "பாண்டியனே! அஞ்சாதே. நீ முன்னே போய், அவனோடு போர் செய். பின் நாமும் உனக்குத் துணையாய் வந்து, உனக்கு வெல்வி கிடைக்கும்படி பொருவேம்" என்று திருவாய்மலர்ந்தருளினார். பாண்டியன், அது கேட்டு, மனமகிழ்ந்து, கண்ணீர்பொழிய வணங்கிக் கொண்டு, புறப்பட்டான். அப்பொழுது ஓரொற்றன் வந்து: "விக்கிரமசோழனுடைய சேனை இடபமலைக்குச் சமீபித்து வந்து விட்டது" என்றான்.

பாண்டியன், தேர்மேற்கொண்டு, பலவாத்தியங்கள் ஒலிப்ப, நால்வகைச் சேனைகளுஞ் சூழ, யுத்தத்துக்குச் சென்றான். பாண்டியனுடைய சேனைக்கும், திருவாலவாய் மதிலை வளைந்த சோழனுடைய சேனைக்கும், யுத்தநடந்தது. இரண்டு படையும் பின்னிடாது பொரும் பொழுது, சோழனுடைய போர்த்துணைவர்களாகிய வடதேசத்தரசர்கள் எதிர்ந்து பொரப், பாண்டியனுடைய சேனை உடைந்தது. அது கண்ட சோழன், தருக்கடைந்து, வெற்றிச் சங்கை எடுத்தூதினான்.

அப்பொழுது, சோமசுந்தரக்கடவுள், ஒரு வேடவடிவங்கொண்டு, பாண்டியனுக்குச் சேனாதிபதியாய் வில்லை வளைத்துச், சுந்தரேசர் என்னுந் திருநாமம் எழுதப்பெற்ற பாணங்களைச் சோழனுடைய சேனையின்மீது செலுத்தினார். அப்பாணம் ஒவ்வொன்று நூறு நூறு வீரர்களைக் கொல்லச் சோழன் அது கண்டு: "இப்பாணமொன்றுக்கு இவ்வளவு வலி ஏது" என்று வியந்து, அப்பாணமொன்றை எடுப்பித்து, வாசித்து: "இது சுந்தரேசர்' என்று எழுதப்பட்டிருக்கின்றது. சோமசுந்தரக்கடவுளே பாண்டியனுக்குத் துணை செய்கின்றார்" என்று பயந்து, மீண்டு

போவானாயினான். போகும்பொழுது, அவனுக்குப் போர்த்துணைவர்களாய் உள்ள வடதேசத்திரசர்களெல்லாரும்: "நில் நில்" என்று அவனைச் சூழ்ந்து: "நீ போருக்குந் தோற்றோடுகின்றாயே. உன்னாண்மை என்னை! மானமென்னை! போகாதே வா" என்று திருப்பிக்கொண்டு, பாண்டியனுடைய சேனைமேற் சென்று, பாணங்களை விடுத்தார்கள். வேடவடிவங்கொண்டு வந்த சோமசுந்தரக்கடவுள், ஒரு பாணத்தைச் செலுத்தி, அவர்கள் செலுத்திய பாணங்களெல்லாவற்றையும் துணித்துவிட்டுப், பின்னும் பற்பல பாணங்களை விடுத்துச், சோழனுடைய சேனையை அழித்தார். சோழன், தன்சேனை மடிந்தது கண்டு பயந்து, எஞ்சிய சிறுசேனை சூழத் தோற்றோடிவிட்டான். வேடவடிவங்கொண்ட சிவபெருமான், பாண்டியனுடைய மலர்ந்த முகத்தைப் பார்த்து, அருணகை சிறிது செய்து, மறைந்தருளினார்.

பாண்டியன், வெற்றிச் சங்கூதி, யானைமேலேறிப், பெண்கள் மங்கல மேந்தச் சென்று, திருநகரத்திற் புகுந்தான். தனக்கு வெற்றித்திருவையளித்த சோமசுந்தரக் கடவுளுக்கு, இரத்தினாபரணங்களும் வில்லும் அவருடைய திருநாமந் தீட்டிய பாணமுஞ் செய்வித்துச் சாத்தி, நீதி வழுவாமல் அரசுசெய்துகொண்டிருந்தான்.

திருச்சிற்றம்பலம்.

ஐம்பத்தொராவது

## சங்கப்பலகைதந்தபடலம்.

வம்மிசசேகரபாண்டியன் அரசியற்றுங் காலத்திலே, பிரமதேவர், காசியிலே பத்தசுவமேதயாகஞ் செய்து முடிந்த தினத்திலே, ஸ்நானஞ்செய்யும்பொருட்டுச், சரசுவதி சாவித்திரி காயத்திரி என்னு மனைவியர் மூவரோடும், கங்காநதியை நோக்கிச் செல்வாராயினார். செல்லும்பொழுது, சரசுவதி, ஒரு விஞ்சையப் பெண்ணுடைய கீதத்தைக்

கேட்டுக்கொண்டு நின்றாள். பிரமதேவர், கங்காநதிக்கரையை அடைந்து, சரசுவதி வரவு தாழ்ப்ப, மற்றை மனைவியர்கள் இருவரோடும் ஸ்நானஞ்செய்துகொண்டு கரையேறினார். ஏறும்பொழுது, சரசுவதி வந்து: "என்னையன்றி நீர் ஸ்நானஞ்செய்தமை என்னை!" என்று கோபித்தாள். பிரமதேவர்: "குற்றம் உன்மேலதாக, நீ நம்மைக் கோபிப்பதென்னை! இந்தத் தீங்கை நீ எண்ணில்லாத மனிதப்பிறப்பெடுத்து நீக்கக்கடவாய்" என்று சபித்தார். சரசுவதி, பயந்து நடுங்கி: "உமக்கு உயிர்த்துணையாயுள்ளேன் மனிதப்பிறப்படைந்து மயங்குவேனோ!" என்றாள். பிரமதேவர்: "உன் சரீரமாகிய முதலெழுத்தைம்பத்தொன்றினுள்ளே, ஆகாரமுதல் ஹாகாரமிறுதியாகிய நாற்பத்தெட்டும், நாற்பத்தெட்டுப் புலவர்களாய்ப், பூமியில் அவதரிக்கக்கடவன. அவ்வெழுத்துக்களெல்லாவற்றினும் ஏறிநின்று அவ்வவற்றின்றன்மையை அடைந்து வெவ்வேறாக இயக்குகின்ற அகாரத்துக்கு முதல்வர் சோமசுந்தரக்கடவுளே; ஆதலால், அவர், ஒருபுலவராய்த் திருவுருத் தரித்துச், சங்கப்பலகைமேல் ஏறியிருந்து, நாற்பத்தொன்பதாம் புலவராகி, அப்புலவர்களுடைய உள்ளத்திலே நின்று, அவரவருக்கு அறிவைத் தோற்றுவித் தருளுவர்" என்றார்.

அப்படியே ஆகாரமுதலிய நாற்பத்தெட்டெழுத்தும் வெவ்வேறு மனிதர்களாய்ப் பிறந்தன. அவர்கள், சம்ஸ்கிருத பாடையையும் பதினெண்பாடைகளையும் ஆராய்ந்தறிந்து, தமிழிலே தலைமைப் புலமையை அடைந்தார்கள். அவர்கள் இரத்தினாபரணங்களன்றி உருத்திராக்ஷமாலையுந் தரிப்பவர்கள்; பாமாலையாலன்றிப் பூமாலையாலுஞ் சிவபூசை செய்பவர்கள்; தேசந்தோறும் போய்ப் போய், அங்கங்கே புலமையால் வென்று வென்று, தாமிரபர்ணிநதி தீரத்தை அடைந்து, மதுரையை நோக்கிச் சென்றார்கள். செல்லும்பொழுது, சோமசுந்தரக்கடவுள், ஒரு புலவராய் அவர்களெதிரே சென்று: "நீங்கள் யாவிர்? எங்கு நின்றும் வருகின்றீர்கள்" என்று வினவ, அவர்கள்: "நாங்

கள் புலவர்கள். தாமிரபர்ணிநதி தீரத்தினின்றும் வருகி ன்றேம்'' என்றார்கள். சோமசுந்தரக்கடவுள்: "நீங்கள் மதுரைக்கு வந்து, நமது சோமசுந்தரக்கடவுளை வணங் கல்வேண்டும்'' என்று சொல்லி, அவர்களை அழைத்துக் கொண்டு மதுரையை அடைந்து, சோமசுந்தரக்கடவுளை வணங்குவித்து, மறைந்தருளினார்.

புலவர்கள், ஆச்சரியமடைந்து, சோமசுந்தரக்கட வுளை வெவ்வேறு செய்யுள்களினாலே துதித்து, வணங்கிக் கொண்டு, வம்மிசசேகரபாண்டியனைப் போய்க் கண்டார் கள். பாண்டியன், அவர்களுடைய கல்வியறிவொழுக்கங் களைக் கண்டு, மனமகிழ்ந்து, அவர்களுக்குப் பற்பல வரி சைகளைக் கொடுத்துச், சோமசுந்தரக்கடவுளுடைய திரு க்கோயிலுக்கு வடமேற்றிசையிலே ஒரு சங்கமண்டபம் உண்டாக்கி, அவர்களை அதில் இருத்தினான். அது கண்ட முன்னைப் புலவர்கள், மனம் புழுங்கி, அச்சங்கப்புலவர்க ளோடு வாது செய்து தோற்றார்கள். மற்றைத் தேசத்துப் புலவர்களும் அப்படியே வந்து வந்து, வாதுசெய்து தோற்றார்கள்.

சங்கப்புலவர்கள், ஒருநாள், சோமசுந்தரக்கடவுளை வணங்கி: "எம்பெருமானே! புலவர்கள் யாவரும் வந்து வந்து வாதஞ் செய்கின்றார்கள். புலமையை உள்ளபடி தூக்கி அளக்க வல்ல ஒரு சங்கப்பலகை அடியேங்களுக் குத் தந்தருளும்'' என்று விண்ணப்பஞ்செய்தார்கள். அப் பொழுது, சிவபெருமான், ஒரு புலவர் வடிவங்கொண்டு, ஒரு பலகையுடன் எழுந்தருளி வந்து: "புலவிர்காள்! இப் பலகை ஒருமுழச் சதுரமுடையது; சந்திரனிலும் வெண் மையுடையது; மந்திரவலியையுடையது; உம்போல்வார்க ளுக்கெல்லாம் ஒவ்வொரு முழம் வளர்ந்து இருக்கை தரும். இது உங்களுக்கு அளவுகோலாய் இருக்கும்'' என்று சொல்லிக், கொடுத்தருளினார். சங்கப்புலவர்கள், அப்பலகையை வாங்கிக்கொண்டு, திருக்கோயிலை வலஞ் செய்து, தங்கள் சங்கமண்டபத்திற் புகுந்து, பூமாலை தூக்

கிச், சங்கப்பலகையைப் பனிநீர் தோய்ந்த சந்தனம் புட்பம் வெள்ளைப்பரிவட்டந் தூபந் தீப முதலியவற்றினாலே பூசை செய்து, வணங்கினார்கள்; வணங்கி, நக்கீரர் முன்னேறினார்; அதன்பின் கபிலரும் அதன்பின் பரணரும் ஏறினார்கள். மற்றைப் புலவர்களும், இம்முறையே ஏறியேறி, ஒருங்கிருந்தார்கள். அவர்களெல்லாருக்கும், அச்சங்கப் பலகை, ஒவ்வொருமுழமும் வளர்ந்து, இடங் கொடுத்தது.

அச்சங்கப்புலவர்கள் எண்ணில்லாத செய்யுள்களைச் செய்துகொண்டிருக்கும் பொழுது, அவர்கள் செய்த நூல்களெல்லாம், சொல்வளத்தினாலும், பொருள்வளத்தினாலும், செய்யுட்குறிப்பினாலும் ஒற்றுமையுடையனவாய், மயங்கிக் கிடந்தன. அதனால், அவர்கள், வேறுபாடறியாது: "இது என்னுடைய பாடல்; இது உம்முடைய பாடல்" என்று மாறுபாடு கொண்டார்கள். அப்பொழுது, சோமசுந்தரக்கடவுள், ஒரு புலவராய் வந்து தோன்றி: "புலவீர்காள்! உங்கள் செய்யுள்களைக் கொண்டு வாருங்கள்" என்று அருளிச்செய்ய, அவர்கள் அவைகளைக் கொண்டு வந்து, திருமுன் வைத்தார்கள். சிவபெருமான், அவைகளை ஆராய்ந்து, அவ்வவர் செய்யுள்களை அவ்வவர் கையில் எடுத்துக் கொடுத்தருளினார். வாங்கிய சங்கப்புலவர்கள் மன மகிழ்ந்து: "நீர் எங்களோடும் ஒருபுலவராய் எழுந்தருளியிரும்" என்று பிரார்த்தித்து, அவரைத் தங்களோடு சங்கப்பலகையில் இருத்தினார்கள். அவர் அவர்களுக்கு நடுநாயகமாய் எழுந்தருளியிருந்தார்.

இந்நாற்பத்தொன்பது புலவர்களும் பின்னும் பற்பல தமிழ்நூல்களைச் செய்துகொண்டு இருக்கு நாளிலே, வம்மிசசேகரபாண்டியன், வம்மிசசூடாமணிக்கு முடிசூட்டிவிட்டுத், தான் சிவபெருமானது திருவடியை அடைந்தான்.

திருச்சிற்றம்பலம்.

ஐம்பத்திரண்டாவது

## தருமிக்குப்பொற்கிழியளித்தபடலம்.

வம்மிசசூடாமணிபாண்டியன், சோமசுந்தரக்கடவுள் பொருட்டுத் திருநந்தனவனம் உண்டாக்கிச், சம்பகவன மூந் தனியே வைத்தான். அதிலே மலர்ந்த சம்பகப் பூக்களைக்கொய்து, இண்டை முதலிய பலவித மாலைகளைத் தொடுத்துச், சோமசுந்தரக்கடவுளுக்குச் சாத்துவித்தான். சம்பகமாலையணிந்த சோமசுந்தரக்கடவுளுடைய திருக்கோலத்தைத் தரிசித்து, வியந்து: "இவர் சம்பகசுந்தரர்" என்று சொல்லி, வணங்கினான். இன்றைக்கும் அக்கடவுளுக்கு அத்திருநாமம் வழங்குகின்றது. அவருக்குச் சம்பகமாலை சாத்துவித்த காரணத்தினாலே, வம்மிசசூடாமணிபாண்டியனுஞ் சம்பகபாண்டியன் எனப் பெயர் பெற்றான். சம்பகபாண்டியன் சம்பகசுந்தரருக்குப் பணி செய்துகொண்டு வருநாளிலே, இளவேனிற்காலம் வந்தது.

அவ்விளவேனிற்காலத்திலே, ஒருநாள், சம்பகபாண்டியன், தன்னுடைய தேவியோடும், வெப்பநீக்கத்தின் பொருட்டு, அச்சம்பகவனத்தில் ஒரு சந்திரகாந்தக் குன்றில் இருந்தான். அவனுக்கு நேரே, ஒரு நறுமணந் தோன்றும்படி, தென்றற்காற்று வீசிற்று. பாண்டியன், அவ்வாசத்தை மோந்து: "இது ஒரு திவ்விய வாசம். தென்றற்காற்றானது சோலையில் வௌவிய வாசமன்று. காற்றுக்கும் வாசமில்லை. இது எவ்வாசமோ!" என்று நினைந்து, தன்னுடைய தேவியைத் திரும்பிப் பார்த்தான்; அவளுடைய கூந்தலின் வாசமாயிருந்ததைக் கண்டு: "இவ்வாசம் வண்டுக்குந் தெரியாது" என்று நினைந்து மகிழ்ந்து: "இவ்வாசங் கூந்தலுக்கு இயற்கையோ செயற்கையோ!" என்றையங் கொண்டான். "நான் ஐயுற்ற கருத்தை யாவராயினும் அறிந்து பாடல் செய்வாராயின், அவரே இவ்வாயிரம் பொன்னுக்கும் உரியர்" என்று சொல்லி, ஒரு பொற்கிழியை ஏவலாளர்கைக் கொடுத்தான். அவர்கள், அதைக் கொண்டுபோய்ச், சங்கமண்டபத்தின் முன்னே தூக்கினார்கள். சங்கப்புலவர்களெல்லாரும், தனித்தனியே ஆராய்

ந்தாராய்ந்து, பாண்டியனுடைய மனக்கருத்தை அறியாது வருந்தினார்கள்.

அப்பொழுது, ஆதிசைவருள் ஒருவனும், தந்தைதாயில்லாதவனும், பிரமசாரியும், விவாகத்தில் விருப்புடையனுமாகிய தருமியென்பவன், சோமசுந்தரக்கடவுள் சந்நிதியை அடைந்து, வணங்கி: "எம்பெருமானே! அடியேனுக்குத் தந்தையுந் தாயுமில்லை. விவாகத்தில் விருப்பமுற்றிருக்கின்றேன். அதற்குப் பொருள் சிறிதுமில்லை. அடியேன் வேதசிவாகமங்களெல்லாம் ஓதினேனாயினும், இல்வாழ்க்கையின்றி உமது பூசைக்கு அருகனாவேனோ! ஆகேன். நீர் சர்வஞ்ஞர். பாண்டியனுடைய மனக்கருத்தையறிந்து, ஒரு செய்யுள் செய்து தந்தருளும்" என்று விண்ணப்பஞ் செய்தான். உடனே, சோமசுந்தரக்கடவுள், ஒரு தமிழ்ச் செய்யுளைச் செய்து கொடுத்தருளினார். அது இது:—

கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
காமஞ்செப் பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின்
மயிலியற் செறியெயிற் றரிவை கூந்தலின்
நறியவு முளவோநீ யறியும் பூவே.

தருமி, வணங்கி, அச்செய்யுளை வாங்கிக்கொண்டு போய்ச், சங்கமண்டபத்தை அடைந்து, அங்குள்ள புலவர்கள்கையிலே நீட்டினான். அவர்கள் யாவரும் வாங்கி வாசித்துச், சொற்சுவையையும் பொருட்சுவையையுந் தூக்கி: "நன்று நன்று" என்று மகிழ்ச்சியடைந்து, பாண்டியனெதிரே போய், அப்பாட்டைச் சொன்னார்கள். பாண்டியன், தன் மனக்கருத்தொத்தலினாலே, முடியசைத்து, மனமகிழ்ந்து: "இச்செய்யுள் கொண்டு வந்த பிராமணன், இப்புலவர்களோடு போய், ஆயிரம் பொன்னையுங் கிரகித்துக்கொள்ளக் கடவன்" என்றான்.

அரசனேவலினாலே தருமி புலவர்களோடு போய்ச் சங்கமண்டபத்தின் முன்னே தூங்கிய பொற்கிழியை அறுக்கும்பொழுது, நக்கீரர், அவனை விரைந்தணுகி: "நில் நில்",

என்று தடுத்து: "இச்செய்யுளிலே குற்றமிருக்கின்றது என்றார். உடனே தருமி ஏங்கி, மெல்லச் சென்று, அச் செய்யுளைச் சோமசுந்தரக்கடவுள் திருமுன் வைத்து: "எம்பெருமானே! ஏழையேனுக்கு நீர் இப்பிழைப்பாட்டைத் தந்தது என்னை! வறுமைநோயினால் வருந்திப் பல நாள் உம்மை வழிபடும் அடியேன் உம்மால் இப்பொழுது பெற்ற பொருளை இழந்தேன் என்று தமியேன் பேசிலேன். எவ்வெவர்க்கு மேலாகிய உமது செய்யுளுக்குச் சில்வாழ் நாட் சிற்றறிவினையுடைய புலவர் குற்றஞ்சொன்னாராயின், யார் உம்மை மதிப்பார்! இவ்விகழ்ச்சி உமக்கல்லது எனக்கேது" என்று சொல்லி, நின்றிரங்கினான்.

அப்பொழுது, சோமசுந்தரக்கடவுள்; ஒரு புலவர் வடிவங்கொண்டு, விபூதியைத் திரிபுண்டரமாகத் தரித்துக், கண்டிகை பதக்கங் குண்டலம் மோதிரமுதலியவைகளை அணிந்து, திருவடிகளிலே பாதுகை மாட்டிக்கொண்டு, முத்துக்குடை நிழற்ற, வெண்சாமரம் வீசக், கற்றுச்சொல்லிகள் பின்வரச் சென்று, சங்கமண்டபத்தை அடைந்து, நேர்நின்று, அங்கிருந்த புலவர்களை நோக்கி: "நமது செய்யுளுக்குக் குற்றஞ்சொன்னவர் யாவர்?" என்றார். என்னுமுன்னர், நக்கீரர், அஞ்சாது: "நானே சொன்னேன்" என்றார். புலவர்: "யாது குற்றம்?" என, நக்கீரர்: "சொற்குற்றமின்று; பொருட்குற்றம்" என்றார். புலவர்; "பொருட் குற்றம் என்னை!" என, நக்கீரர்: "கூந்தலுக்கு வாசம் பூவின்சார்பாகிய செயற்கையாலன்றி, இயற்கையாலில்லையே" என்றார். புலவர்: "பதுமினியுடைய கூந்தலோ" என, நக்கீரர்: "அதுவும் அத்தன்மையதே" என்றார். புலவர்: "தெய்வப்பெண்களுடைய கூந்தலோ" என, நக்கீரர்: "அதுவும் மந்தார நறுமலர் அளைந்து மணத்தலாற் செயற்கையதே" என்றார். புலவர்: நீ வழிபடுகின்ற திருக்காளத்தியப்பருடைய சத்தியாகிய ஞானப்பூங்கோதையம்மையாருடைய கூந்தலும் அத்தன்மையதோ" என, நக்கீரர்: "அதுவும் அத்தன்மையதே" என்றார். உடனே

புலவர் நெற்றிக்கண்ணைச் சிறிது காட்ட, நக்கீரர் அதற்கு மஞ்சாது: "இந்திரனுக்குப்போல உமதுடம்பு முழுதுங் கண்ணானாலும், உமது பாடல் குற்றமே குற்றம்" என்றார். நக்கீரர், சிவபெருமானது நெற்றிக்கண்ணினுடைய அக்கினிவெப்பத்தினாலே பொறுக்கலாற்றாது, பொற்றாமரைவாவியிலே போய், விழுந்து அழுந்தினார். அவரை வென்ற புலவர் திருவுருக் கரந்தருளினார்.

திருச்சிற்றம்பலம்.

ஐம்பத்துமூன்றாவது

## கீரனைக்கரையேற்றியபடலம்.

நக்கீரர் சிவபிரானது நெற்றிக்கண்ணின் அக்கினியினாலே பொற்றாமரைவாவியில் விழுந்து துயருழப்ப, மற்றைப்புலவர்களெல்லாருங் கண்டு, பொறாது நடுங்கினார்கள். நக்கீரர் இல்லாத சங்கம், அரசன் இல்லாத குடியும், நாயகமணியில்லாத கண்டிகையும், ஞானம் இல்லாதவர் கல்வியும், போன்றது: "ஐயையோ! சொற்பொருள்வடிவாகிய சிவபிரானோடு வாது செய்த இப்பிழையோ பெரிது. இது தீர்வதெப்படி! உய்வது அரிதரிது" என்று யாவருஞ் சிந்தித்தார்கள். "சிவபிரான், தமது திருக்கைலாசமலையை எடுத்த இராவணனுங் கையில் வீணைகொண்டிசைபாடத் திருவுளமகிழ்ந்து அவன் செய்த தீங்கைப் பொறுத்ததுமன்றி அவனுக்குத் தேரும் வாளுங் கொடுத்தருளினாரன்றோ! இப்பிழை யாவரானு நீக்கரிது. யாவருக்குந் தேவராகிய சிவபிரானே திருவுளந் திரும்பினால், இது நீங்கிவிடும். இதுவே துணிவு" என்று தங்களுள்ளே சொல்லிக் கொண்டு போய்ச், சங்கப்புலவர்கள், சோமசுந்தரக்கடவுளை வணங்கி:—

திருத்தனேசரணஞ்சரணம்மறைச்சென்னிமேல்
நிருத்தனேசரணஞ்சரணந்நிறைவேதநூல்
அருத்தனேசரணஞ்சரணந்திருவாலவாய்
ஒருத்தனேசரணஞ்சரணங்களுனக்குநாம்.

என்று துதித்து: "எம்பெருமானே! புண்ணியஞ் செய்தவருக்கு இன்பத்தையும் பாவஞ் செய்தவருக்குத் துன்பத்தையுங் கொடுப்பது உமது திருவருளியற்கை. அதனால், அது, உயிர்களுக்கெல்லாந் தாயுந் தந்தையுமாகும். நக்கீரர் கல்விச்செருக்கினால் அறிவழிந்து உமது செய்யுளைப் பிழையென்றமையால், நீர் அவரை நெற்றிக்கண்ணினால் விழித்து, அவ்வெப்பத்தினால் அவர் பொற்றாமரை வாவியில் விழும்படி செய்தீர். இனிப் பெருங்கருணை கூர்ந்து, இப்பிழையைப் பொறுத்தருளும்" என்று விண்ணப்பஞ்செய்தார்கள்.

அப்பொழுது, சோமசுந்தரக்கடவுள், மீனாக்ஷியம்மையாரோடு எழுந்து போய்ப், பொற்றாமரைவாவிக்கரையை அடைந்து, புலவர் கூட்டத்துள்ளே நின்றுகொண்டு, அருட்கண்ணினாலே பார்க்க, நக்கீரர், தம்முடைய பொறி புலன் கரணமெல்லாஞ் சிவபெருமானுடையனவேயாக, அவரது பெருங்கருணைக்கடலின் ஆழ்ந்து, அன்புருவமாயினார். "உலகமாதாவாகிய ஞானப்பூங்கோதையம்மையாருடைய கூந்தலுக்குத் தீங்கு சொல்லிய கொடிய நாவின் குற்றத்தை அவரேயன்றி, யாவர் பொறுப்பார்!" என்று, திருக்காளத்தியப்பர்மீது நேரிசை வெண்பாவினாலே கைலைபாதி காளத்திபாதியந்தாதி பாடினார். சிவபெருமான், அதைத் திருச்செவிமடுத்து, நேர் வந்து, அவருடைய கையைப் பிடித்துக் கரையிலேற்றியருளினார்.

நக்கீரர், சோமசுந்தரக்கடவுளையும் மீனாக்ஷியம்மையாரையும் வணங்கிச், சிவபெருமான் தீமை செய்தவருக்கு நிக்கிரகமும் நன்மை செய்தவருக்கு அநுக்கிரகமுஞ் செய்தமையைப் பொருளாகக் கொண்டு, கோபப்பிரசாதம் பாடினார். பின்பு, பெருந்தேவபாணியுந் திருவெழுகூற்றிருக்கையும் பாடிச், சிவபெருமானுடைய திருவடிகளில் வீழ்ந்து வணங்கியெழுந்தார். மற்றைப் புலவர்களுந் தனித்தனியே துதித்து வணங்கினார்கள். சிவபெருமான், நக்கீரருக்குத் திருவருள் சுரந்து: "நீ முன்போலப் புலவர்

கூட்டத்துள் இருக்கக்கடவாய்" என்று பணித்து, மறைந்தருளினார்.

நக்கீரரும் மற்றைப் புலவர்களும், சங்கமண்டபத்தின் முன்னே தூங்கிய பொற்கிழியை அறுத்துத், தருமிக்குக் கொடுத்துப், பாண்டியனைக்கொண்டுஞ் சில வரிசைகள் கொடுப்பித்துக், கல்விச்செல்வர்களாய் வாழ்ந்திருந்தார்கள். சம்பகபாண்டியன், நாடோறுஞ் சோமசுந்தரக்கடவுளைத் தரிசித்துப், பற்பல திருப்பணிகளை நடத்திக்கொண்டிருந்தான்.

திருச்சிற்றம்பலம்.

ஐம்பத்துநான்காவது

## கீரனுக்கிலக்கணமுபதேசித்தபடலம்.

சோமசுந்தரக்கடவுளுடைய ஆஞ்ஞையினாலே சங்கப்புலவர் கூட்டத்திற் சேர்ந்த நக்கீரர், அழுக்காறு நீங்கி, அக்கடவுளுடைய திருவடிகளிலே அன்புகொண்ட மனத்தராகிச்: "சிவபிரானது நெற்றிக்கண்ணினால் எரிந்த மன்மதன் பிரம விட்டுணுக்களாலுங் காக்கப்பட்டவனல்லன். அவ்வக்கினிக்கண் நம்மைச் சுட்டபோது நம்மை வெப்பந்தீர்த்துக் காத்தது இப்பொற்றாமரைவாவி. இதுவே நம்மை இருமையினுங் காப்பது" என்று சிந்தித்து, நாடோறும் முப்பொழுதினும் பொற்றாமரைவாவியிலே ஸ்நானஞ் செய்து, சோமசுந்தரக்கடவுளை வழிபடு நியமம் பூண்டார்.

சிவபெருமான், தம்மை நக்கீரர் வந்து வழிபடு நியமத்தை நோக்கித் திருவுளமகிழ்ந்து: "இலக்கணம் இவனுக்கு இன்னுந் தெரிந்திலது. அதனால் இவன், இது வழாநிலைச்சொல் இது வழூச்சொல் என்பது, அறிகிலன். இவனுக்கிலக்கணம் யாரைக்கொண்டு போதிப்பிக்கலாம்" என்று சிந்திப்பாராயினார். அப்பொழுது உமாதேவியார், செங்கை கூப்பி: "எம்பெருமானே! முன்னொருநாட் கைலாசமலை

யிலே பிரமா விட்டுணு இந்திரன் முதலிய தேவர்களுஞ் சனகன் முதலிய முனிவர்களும் பிறரும் உம்மைத் தரிசிக்க வந்து கூடியிருந்தார்கள். அதனாலே, பூமியின் வடகிழக்கெல்லை தாழ்ந்தது: தென்மேற்கெல்லை உயர்ந்தது. தேவர்கள், அது கண்டு, உம்மை வணங்கி: 'உமக்குச் சமமாவார் ஒருவரை அங்கே இருக்கவிடுத்தால், இப்பூமி சமமாய் நிற்கும்' என்றார்கள். அப்பொழுது, நீர், 'நம்மையொப்பவன் அகத்தியமுனிவனே, நமது பார்ப்பதியையொப்பவள் அம்முனிவனுடைய பாரியாகிய உலோபாமுத்திரையே' என்று திருவாய் மலர்ந்து, அவனைத் தென்னாட்டுக்கு விடுத்தருளினீர். அவன், விடைபெறும்பொழுது, உம்மை நோக்கி: அடியேன் போகுந் தேசந் தமிழ்நாடாதலாலும், அங்குள்ளவர்களெல்லாருந் தமிழின் மிக வல்லவர்களாதலாலும், கேட்டவர்களுக்கு உத்தரஞ் சொல்லல் வேண்டுமாதலாலும் அடியேனுக்குத் தமிழிலக்கண நூலை அருளிச்செய்யும்'என்றான். அவ்வாறே நீர் முதனூலையருளிச்செய்தீர். அது தெளிந்த பின்னும். 'உம்மை எப்போது தரிசிப்பேன்' என்றான். 'கடம்பவனத்திலே நம்மைத் தரிசித்து வணங்கி விரும்பிய வரங்களெல்லாம் நம்மிடத்தே பெற்றுக்கொண்டு, பொதியமலையிலே போயிரு' என்று விடுத்தருளினீர். அவன், அப்படியே போய், உலோபாமுத்திரையோடும் அங்கே இருக்கின்றான். இது உமது திருவுள்ளத்துக்கு இசைந்ததாயின், இந்நக்கீரனுக்கு அவ்வகத்தியனைக் கொண்டு இலக்கணம் உணர்த்துவித்தருளும்" என்று விண்ணப்பஞ் செய்தார்.

அது கேட்ட சிவபெருமான்: "அப்படியே செய்வேம்" என்று அகத்தியமுனிவரை நினைந்தருளினார். அகத்தியமுனிவர், அதனையறிந்து, சிரசின்மீது அஞ்சலிசெய்து, உலோபாமுத்திரையோடு புறப்பட்டு, ஆகாயநெறிக்கொண்டு சென்று, மதுரைத் திருக்கோயிலுட் புகுந்து, சோமசுந்தரக்கடவுளையும் மீனாக்ஷியம்மையாரையும் வணங்கி, அங்கிருந்தார். அப்பொழுது, நக்கீரரும், பொற்றாம

ரைவாவியிலே ஸ்நானஞ்செய்து, தரிசனத்தின்பொருட்டு அங்கு வந்து சேர்ந்தார். சிவபெருமான், அகத்தியமுனிவரை எதிர்வர நோக்கி: "முனிவனே! இந்நக்கீரனுக்கு இயற்றமிழ் தெரிந்திலது. நீ நம்மிடத்திற் கற்றுக்கொண்டபடியே இவனுக்குக் கற்பிக்கக்கடவாய்" என்று பணித்தருளினார். அகத்தியமுனிவர், அப்பணியைச் சிரத்தினும் மனத்தினுந் தாங்கி, நக்கீரருக்கு, முதனூலைத், தொகை வகை விரி முறையினாலே, காண்டிகையுரையானும் விருத்தியுரையானும், ஐயந்திரிபறப் போதித்தார். அப்போதது சத்தியைக் கண்ட முதனூலாசிரியராகிய சிவபெருமான், திருவுள மகிழ்ந்து, அவ்வகத்தியமுனிவரைத் தழுவி, வேண்டிய வரங்களெல்லாங் கொடுத்து, இருக்கையிற் செல்ல விடுத்தருளினார்.

உலோபாமுத்திரையோடும் அகத்தியமுனிவர் விடைகொண்டு போன பின், உமாதேவியார், சிவபெருமானை நோக்கி: "இந்நக்கீரனுக்கு நீரே கற்பியாது, இவ்வகத்தியனைக்கொண்டு கற்பித்ததென்னை?" என்று வினவச், சிவபெருமான்: "தம்மை நித்தமும் வழிபடுவோருக்கும், தமக்குப் பொருள் கொடுப்போருக்கும், தம்மிடத்தே பொறுமையில்லாதவருக்கும், தமது சொல்லைக் கடவாதவருக்குமே நூல்கற்பித்தல் தருமம். இவன் நம்மிடத்தே பொறுமை கொண்டதனால், நாம் கற்பியாது, அகத்தியனைக்கொண்டு கற்பிப்பித்தேம்" என்று திருவாய்மலர்ந்தருளினார்

அகத்தியமுனிவரிடத்தே முதனூல் கற்றுக்கொண்ட நக்கீரர், வழுவும் வழாநிலை முடிபும் உற்று நோக்கி: "நான், அறியாமையினாலே சருவஞ்ஞராகிய சிவபெருமானுடைய பாடலிலே, பொருட்குற்றஞ் சொன்னேனே. வேதசிரசுந் தீண்டாத திருவடிகள் பூமியிலே தீண்டும் வண்ணம் எழுந்தருளிவந்த பெருங்கருணைப் பெருமானுக்குப் பிழைசெய்தேனே. 'அற்பவித்தையுடையோர் மகாகருவமுடையோர்' என்னும் பழமொழி என்னளவினதாயிற்றே. சிவ

பெருமானுக்கு அடியேன் செய்த தீங்கினால், அடியேனை அவருடைய நெற்றிக்கண்ணின் அக்கினி சுட்டதன்றி, அடியேனுடைய நெஞ்சமுஞ் சுடுகின்றதே" என்று நினைந்து நினைந்து, துக்கசாகரத்தழுந்தினார். மாதாவானவள் தன் குழந்தையைக் கைக்கின்ற மருந்தைப் பருகச்செய்து அதனது நோயை ஓட்டுதல்போலத், தமியேனைத் தண்டித்து அறிவுறுத்திய பெருங்கருணைப் பெருமானுக்கு ஏழையேன் செய்யத் தகுவது யாது!" என்று, வரம்பில்லாத ஆனந்தசாகரத்தழுந்தினார். தமக்கு அகத்தியமுனிவர் போதித்தருளிய முதனூலை மற்றைப் புலவர்களுக்கும் போதித்துச், சிவபெருமானுடைய திருவடித்தாமரைகளிலே பதிந்த பத்தியோடிருந்தார்.

திருச்சிற்றம்பலம்.

ஐம்பத்தைந்தாவது

## சங்கத்தார்கலகந்தீர்த்தபடலம்.

கடைச்சங்கப்புலவர் நாற்பத்தெண்மரும், வெவ்வேறு தமிழ்ப்பாடல் செய்து, செருக்குற்றுத், தங்களைத் தாங்கள் நன்குமதித்துத், தங்களுண் மாறுபட்டுத், தங்கள் ஏற்றத் தாழ்வுகளை அளக்கவல்ல முதனூலாசிரியராகிய சோமசுந்தரக்கடவுள் சந்நிதியை அடைந்து, வணங்கி: "அடியேங்கள் தொடுத்த இப்பாடல்களுள்ளே நன்றுந் தீதுந் தூக்கி வேறுபாடு காட்டி அடியேங்களுடைய ஐயத்தைத் தீர்த்தருளும்" என்று விண்ணப்பஞ்செய்தார்கள்.

சிவபெருமான், மூலலிங்கத்தினின்றும் ஒருபுலவராய்த் தோன்றி, வந்து: "புலவிர்காள்! இந்நகரத்திலே தனபதி எனப் பெயர் கொண்ட ஒருவணிகன் இருக்கின்றான். அவன் மனைவி குணசாலினி. அவர்கள் செய்த பெருந்தவத்தினாலே, ஒரு புத்திரன் அவதரித்திருக்கின்றான். அவன்பெயர் உருத்திரசருமன்; ஐந்து பிராயமுடையவன்; ஊமை. அவனை நீங்கள் அழைத்துக்கொண்டுபோய்

அவனெதிரே உங்கள் பாடல்களைச் சொல்லுங்கள். அவன் புத்திக்கிசைந்த பாடல் எதுவோ, அதுவே யாவராலும் நன்குமதிக்கப்படும் பாடல்" என்று திருவாய்மலர்ந்தருளினார். புலவர்கள்: "எம்பெருமானே! அவன் ஊமையானால், அடியேங்களுடைய பாடல்களைக் கேட்டு, நல்லன என்பதும் தீயன என்பதும் பகுத்தறிந்து அடியேங்களுக்குத் தெரிவிப்பது எப்படி?" என்றார்கள். அதற்குச் சிவபெருமான்: "அவ்வூமைப்பிள்ளை, தனக்கிசையச் சொல்லாழமும் பொருளாழமுங் கண்டானாயின், கண்ணீர் வார, மெய்ம்மயிர் சிலிர்ப்பத், தலையசைத்து, மகிழ்ச்சி கூருவன். அப்பொழுது உங்கள் கலகமெல்லாம் நீங்கிவிடும்" என்று அருளிச்செய்துவிட்டு, உள்ளே புகுந்தருளினார்.

பின்பு, புலவர்களெல்லாரும், உருத்திரசருமரை அழைத்துக்கொண்டு போய்ச், சங்கப்பலகையில் இருத்தி, அவரை வெண்பூவினாலும் வெண்சந்தனத்தினாலும் பூசித்து, வணங்கி, அவர் திருமுன்னே கீழிருந்து, தங்கள் தங்கள் பாடல்களைச் சொன்னார்கள். உருத்திரசருமர், அவைகளைக் கேட்டுச், சிலருடைய சொல்லமைதியை மகிழ்ந்தார்; சிலருடைய பொருளமைதியை மகிழ்ந்தார்; சிலருடைய சொல்லமைதியை இகழ்ந்தார்; சிலருடைய பொருளமைதியை இகழ்ந்தார்; சிலருடைய சொல்லின்பத்தையும் பொருளின்பத்தையும் ஒருங்கே புகழ்ந்தார்; நக்கீரர் கபிலர் பரணர் என்னும் மூவருடைய பாடல்களைக் கேட்டபொழுது, அவ்வாறாகாது, சொற்றோறும் பொருடோறும் நுழைந்து, அவற்றின் இன்சுவையை உண்டு, திருமேனி பூரிப்பக், கண்ணீர் வார, மெய்ம்மயிர் சிலிர்ப்பச், சிரமசைத்துப் பெருமகிழ்ச்சியுற்றார். உடனே புலவர்கள் கலகம் ஒழிந்தது. அம்மூவர் செய்யுளும் பாடற்றிலகமாய்ச் சிறந்தோங்கின.

திருச்சிற்றம்பலம்.

ஐம்பத்தாறுவது

# இடைக்காடன்பிணக்குத்தீர்த்தபடலம்.

சம்பகபாண்டியன் சிவபதமடைந்தபின்பு, பிரதாப சூரியபாண்டியன், வம்மிசத்துவசபாண்டியன், ரிபுமர்த்தனபாண்டியன், சோழவம்மிசாந்தகபாண்டியன், சேரவம்மிசாந்தகபாண்டியன், பாண்டியவம்மிசேசபாண்டியன், வம்மிசசிரோமணிபாண்டியன், பாண்டியேசுவரபாண்டியன், குலத்துவசபாண்டியன், வம்மிசவிபூடணபாண்டியன், சோமசூடாமணிபாண்டியன், குலசூடாமணிபாண்டியன், இராசசூடாமணிபாண்டியன், பூபசூடாமணிபாண்டியன், குலேசபாண்டியன் என்னும் பதினைவர், வழிவழி வந்து பிறந்து, அரசுசெய்தார்கள்.

அவர்களுள்ளே, குலேசபாண்டியன், இலக்கணவிலக்கிய நூல்களெல்லாங் கரைகண்டோனாதலால், சங்கப்பலகை அவனுக்கு ஏற இடங்கொடுத்தது. அவன் கல்வியின் மிகச்சிறந்தவன் எனக் கேள்வியுற்றுக்,கபிலருடைய நண்பராகிய இடைக்காடர், தமிழ்ச்செய்யுள் செய்துகொண்டு வந்து, அவனைக் கண்டு, வாசித்தார். அப்பொழுது, சொற்சுவையும் பொருட்சுவையும் அருந்த வல்ல பாண்டியன் பொறாமையினாலே, முடியசைக்காதும் முகமலர்ச்சி சிறிதுங் காட்டாதும், யாதொன்றும் பேசாதும், வாளாவிருந்தான். இடைக்காடர், தம்மை மானம் பிடர்பிடித்துத் தள்ளத், திருக்கோயிலினுள்ளே புகுந்து, சோமசுந்தரக்கடவுளை வணங்கி: "திருவாலவாயுடைய நாயகரே! தமிழறியும்பெருமானே! குலேசபாண்டியன் செல்வப்பொருள்போலக் கல்விப்பொருளு மிக்குடையனென்று கேள்வியுற்றுச்,செய்யுள் செய்துகொண்டு வந்தேன். சிறிதும் முடியசைக்காது, அவமதித்தான். செய்யுள்செய்து வருணித்தவருக்கு மனமகிழ்ந்து ஒருபயனுங் கொடாத கடலும், கழிக்கரையும், மிருகமும், பறவையும், மரமும், மலையும், சுரமுமாகிய அஃறிணைப்பொருள்களுள் ஒன்றுபோல் இருந்தான். அவன் அடியேனை இகழ்ந்தானோ! இல்லை. சொல்வடிவாகிய உமாதேவியாரையுஞ் சொற்

பொருள் வடிவாகிய உம்மையுமே இகழ்ந்தான். எனக்கென்னை!'' என்று விண்ணப்பஞ் செய்துவிட்டுத், தணியாதகோபம் இழுப்ப, வடதிசை நோக்கிச் சென்றார். அதனைத் திருச்செவி மடுத்த சிவபெருமான், இடைக்காடருக்கும் அவர் நண்பராகிய கபிலருக்கும் மனமகிழ்ச்சி உண்டாகும்பொருட்டுத், தம்முடைய இலிங்க வடிவத்தை மறைத்து, உமாதேவியாரோடும் எழுந்து, புறம்போந்து, தமது திருக்கோயிலுக்கு நேர் வடக்கே வைகையாற்றுக்குத் தெற்கே ஓராலயங் கண்டு, அங்கெழுந்தருளியிருந்தார். சங்கப்புலவர்களும், எழுந்து, சிவபெருமான் போன வழியே போய், அங்கிருந்தார்கள்.

அன்றிரவு புலா வரும் வைகறையிலே, திருப்பள்ளியெழுச்சிக்காலத்திலே சேவிக்க வந்த அடியார்கள், சிவலிங்கத் திருமேனியைக் காணாது: "இது என்ன அதிசயமோ?'' என்று சந்தேகித்தழுது: "இதை ஓடிப்போய் அரசனுக்கறிவித்தல்வேண்டும்'' என்று புறப்பட்டு வந்தார்கள். வரும்பொழுது, இலக்குமியை நீத்த தாமரை மலர் போலப் பொலிவழிந்த நகரத்தைக் கண்டார்கள். கண்டு, அரசனிடத்தே புகுந்து, மன நடுநடுங்கி, நாக்கு வரண்டு: "மகாராசாவே!நாம் ஒன்று சொல்ல அஞ்சுகின்றேம்.நாம் இப்பொழுது சோமசுந்தரக்கடவுளைத் திருப்பள்ளியெழுச்சியிலே தரிசிக்கப்போனோம். சிவலிங்கத் திருமேனியைக் காணோம். பட்டணமும் பொலிவழிந்தது'' என்றார்கள்.

அச்சொல் அக்கினியிற் காய்ச்சிய வேல்போலத் தன் செவியிற் புகுதலும், பாண்டியன், சிங்காசனத்தினின்றுங் கீழேவிழுந்து, உயிரொடுங்க அறிவொடுங்கிச், சிறிது பொழுது கிடந்து, அறிவு சிறிது வர, எழுந்து, இரண்டு கைகளையுஞ் சிரமீது கூப்பி, அழுது, கண்ணீர்வெள்ளத் தாழ்ந்து: "எம்பெருமானே! எம்பெருமானே! அடியேன் யாது பிழைசெய்தேன்! மகாமேருமலையிலோ, சிவபுரத்திலோ, திருக்கைலாசமலையிலோ, மெய்யடியாரது நெஞ்சத்திலோ, வேதசிரசிலோ, எங்கே போனீர்! எங்கே

போனீர்!" என்று சொல்லிச் சொல்லித், தளர்தலுற்றான். அப்பொழுது சிலர் வந்து: "மகாராசாவே! ஓரதிசயங் கண்டோம். வைகையாற்றுக்குத் தென்கரையிலே சங்கப்புலவர்களோடும் மீனாட்சியம்மையாரோடுஞ் சோமசுந்தரக்கடவுள் வந்து எழுந்தருளியிருக்கின்றார்" என்றார்கள். அவ்வார்த்தை தன் செவியிலே நுழைந்து புகுந்திழுப்பப், பாண்டியன், எழுந்து, அச்சத்தோடு விரைந்து நடந்து சென்று, வைகையாற்றுக்குத் தென்கரையில் மீனாக்ஷியம்மையாரோடும் எழுந்தருளியிருக்கின்ற சிவலிங்கப்பெருமானைக் கண்டு வணங்கிக், கண்ணீர் வார்ந்து, பேரானந்தப் பெருங்கடலின் ஆழ்ந்து, நாக்குழறித் தடுமாறி நின்று: "எம்பெருமானே! வேதங்களும் அறியாத திருவடிகள் சிவப்ப, நகரம் பொலிவழிய, உலகமாதாவோடும் இங்கு வந்து எழுந்தருளியிருக்குங் காரணம் யாது! அடியேனால் யாதாயினும் பிழையுளதோ! அடியேனுடைய சுற்றத்தாராலாயினும் பகைவராலாயினுங் கள்வராலாயினும் விலங்கு முதலியவற்றாலாயினுந் தமிழ்நாட்டுக்கு இடையூறெய்தியதோ! பிராமணர்கள் ஒழுக்கங் குன்றினார்களோ! தவமுந் தருமமுங் குறைந்தனவோ! இல்லறமுந் துறவறமும் வழுவினவோ! தமியேன் அறியேன் அறியேன்" என்று விண்ணப்பஞ் செய்துகொண்டு, இவ்வாறு துதிப்பானாயினான்:—

கள்ளேறுகடுக்கைநறுஞ்சடையானேபோற்றிபெருங்கருணை போற்றி, வெள்ளேறுகொடியுயர்த்தவிடையானேபோற்றியருள் விகிர்தாபோற்றி, புள்ளேறுகொடியுயர்த்தபுனிதனயன்றேறாகபுனிதாபோற்றி, வள்ளேறுசிறுகுழவிமதிநுதலங்கயற்கண்ணிமணாளா போற்றி.

பாதமலரிணைபோற்றிபன்னிரண்டுகையானைப்பயந்தாய்போற்றி
வேதமுடிகடந்தபரஞானத்திலானந்தவிளைவேபோற்றி [ற்றி
போதவடிவாய்நால்வர்க்கசைவிறந்துநிறைந்தபரம்பொருளேபோ
மாதவளநீறணிந்தமன்னாவங்கயற்கண்ணிமணாளாபோற்றி.

பொக்கமுடையார்செய்யும்பூசைதவங்கண்டுநகும் புராணபோற்றி, தக்கன்மகம்பொடியாகத்திருப்புருவநெரித்தகொடுந்தழலே

போற்றி, செக்கமலக்கண்ணிடந்தகண்ணனுக்குத்திகிரியருள்செல்வாபோற்றி, மைக்குவளையனையமணிகண்டாவங்கயற்கண்ணிமணாளபோற்றி.

இங்ஙனம் பாண்டியன் துதித்த பொழுது, சோமசுந்தரக்கடவுள்: "பாண்டியனே! உனது தோத்திரத்தை நாங் கேட்டு மகிழ்ந்தேம். எல்லாத் தலங்களுள்ளுந் திருவாலவாயே உயர்ந்தது. இங்கே சுயம்புலிங்கங்கள் அநேகமுண்டு. அசுரர்களும் இயக்கர்களுஞ் சித்தர்களும் இராக்கதர்களுந் தேவர்களும் முனிவர்களும் மனிதர்களுந் தாபித்த இலிங்கங்களும் அநந்தமுண்டு. அவ்விலிங்கங்களுள்ளே அறுபத்துநான்கு உயர்ந்தன; அவைகளுள்ளும் எட்டு உயர்ந்தன; அவ்வெட்டும் அட்டதிக்குப் பாலகர்களாலே பூசிக்கப்பட்டவை. அவைகளுள், நாம் வந்திருக்கும் இலிங்கம், நம்முடைய தோழனாகிய குபேரன் பூசித்த இலிங்கம். இத்தெய்வத்தானங்களெல்லாம் ஒருழிக்காலத்தில் இறந்தன. நம்முடைய தோழன் தாபித்த இலிங்கமாதலால், நாம் இங்கே வந்திருந்தேம். இருத்தலினால், இத்தெய்வத்தானம் இன்றுமுதல் உத்தரவாலவாய் என்று சொல்லப்படுக. நாங் கடம்பவனத்தை ஒருபொழுதும் விட்டு நீங்குவேமல்லேம். நீயும் வேறு தீங்குடையையல்லை. இடைக்காடன் செய்த செய்யுளை இகழ்ந்தாய். அவனிடத்து வைத்த அருளினால், நாம், அது பொறுக்கமாட்டாது, இங்கே வந்தேம்" என்று அசரீரிவாக்கினால் அருளிச்செய்தார். பாண்டியன் அது கேட்டு: "எம்பெருமானே! சிறியோர் செய்த குற்றத்தைப் பொறுப்பது பெரியோருக்குப் பெருமையன்றோ" என்று சொல்லி, வணங்கினான். அப்பொழுது, சோமசுந்தரக்கடவுள், மீனாக்ஷியம்மையாரோடும் புலவர்களோடுந் தமது திருக்கோயிலிலே புகுந்தருளினார்.

சிவபெருமானுக்குப் பின்னே நடந்து போய் விடைகொண்டு திரும்பிய பாண்டியன், இடைக்காடரைச், சங்கப்புலவர்களோடும், அழைத்துக்கொண்டுபோய்த் தனது திருமாளிகையினுள்ளே புகுந்து, வாழை கமுகு மேற்க

ட்டி கொடி மாலை சாமரை தீபம் பூரணகும்ப முதலியவற்றால் அலங்கரிக்கப்பட்ட மண்டபத்திலே, இடைக்காடரை அலங்காரஞ்செய்து, புலவர்கள் சூழப் பொன்னாசனத்தின்மீதிருத்தித், தான் சிங்காசனத்தின்மீதிருந்து, வெண்பூமாலையும் வெண்பட்டும் முத்துமாலையுந் தரித்துக் கொண்டு, மங்கலவாத்தியங்கள் ஒலிப்பப், பிராமணர்கள் ஆசி கூறப், பெண்கள் பல்லாண்டு சொல்லப், பிரபந்தங் கேட்டு, இடைக்காடருக்குஞ் சங்கப்புலவர்களுக்கும் இரத்தினாபரணமும் பட்டுந் திரவியமும் யானையுங் குதிரையும் விளைநிலமுங் கொடுத்து, அவர்கள் பின் காலினால் ஏழடி நடந்து போய்: "புலவிர்காள்! நான் இடைக்காடருக்குச் செய்த குற்றமெல்லாம் பொறுத்தருளக் கடவீர்கள்" என்று பிரார்த்தித்து வணங்கினான். அதற்குப் புலவர்கள்: "மகாராசாவே! நீ சொல்லிய சொல்லாகிய அமிர்தத்தினாலே எங்கள் கோபாக்கினி தணிந்தது. சோமசுந்தரக்கடவுளது திருவருளினால், இன்னமும் உனக்கு அளவில்லாத புகழும் பாக்கியமும் உண்டாகக்கடவன" என்று சொல்லிக்கொண்டு, போயினார்கள்.

குலேசபாண்டியன், தான் செய்த பெருந்தவத்தினாலே அரிமர்த்தனபாண்டியனைப் பெற்றுப், பலகாலஞ் சென்றபின், அவனிடத்தே தன்னரசை ஒப்பித்துவிட்டுத், தான் சிவபிரானது திருவடியை அடைந்தான்.

திருச்சிற்றம்பலம்.

ஐம்பத்தேழாவது

## வலைவீசினபடலம்.

திருவாலவாயில் எழுந்தருளியிராநின்ற சோமசுந்தரக் கடவுள், வேறிடத்து எழுந்தருளியிருந்துகொண்டு, மீனாக்ஷியம்மையாருக்கு அதிரகசியமாகிய வேதப்பொருளை உபதேசித்தருள்வாராயினார். அப்பொருளையெல்லாம், எம்பெருமாட்டியார், யாதுகாரணத்தாலோ, கவலை சிறிது

தோன்ற, விருப்பமின்றிக் கேட்டார். சிவபெருமான், அஃ தறிந்து, தேவியாரை நோக்கி: "நீ நம்மிடத்தே பராமுகை யாகி, வேதப்பொருளை விருப்பமின்றிக் கேட்டாய். இக் குற்றத்தினாலே, தருமமின்றி மீன்படுத்துழலும் இழிஞரா கிய பரதவர்குலத்து மகளாகக் கடவாய்" என்று பணித் தருளினார். பணித்தருளலும், தேவியார் அஞ்சி: "எம்பெ ருமானே! உம்மைப் பிரிந்து வாழவல்லனோ" என்று விண்ணப்பஞ்செய்து, வணங்கினார். சிவபெருமான் அது கண்டு, திருவுளமிரங்கி: "நீ பரதவராசனுக்கு மகளாய் வளருநாளிலே, நாம் வந்து, உன்னை விவாகஞ்செய்து கொள்வேம்" என்று திருவாய்மலர்ந்து, அவரைப் போம் படி விடுத்து, இருந்தருளினார்.

விநாயகக்கடவுள், அதனையறிந்து, தந்தையாராகிய சிவபிரானார் திருமுன் வந்து: "இச்செய்தியெல்லாம் விளை ந்தது இவைகளாலன்றோ" என்று, அங்கிருந்த புத்தகங்க ளெல்லாவற்றையும் புழைக்கையால் வாரிக், கடலினெறி ந்தார். முருகக்கடவுளும், தந்தையார் திருக்கரத்திருந்த புத்தகத்தைப் பறித்துக், கடலின் எறிந்தார். அப்பொ ழுது, சிவபெருமான், திருநந்திதேவரை வெகுண்டு நோ க்கி: "நாம் இருக்குஞ் சமயமறியாது இவர்களை உள்ளே விடுத்தாய். இக்குற்றத்தினாலே, நீ சுறவுருக்கொண்டு கட லிற் புகுந்து உழலக்கடவாய்" என்று சபித்தருளினார். விநாயகக்கடவுளுக்குச் சாபம் விதிக்கின் அது தம்மைச் சாருமாதலால், அவருக்குச் சாபம் விதித்திலர். முரு கக்கடவுளை நோக்கி: "நீ மதுரையின் வணிகர்குலத்து ஊமைப்பிள்ளையாகக்கடவாய்" என்று பணித்தருளினார். அது நிற்க.

பாண்டிநாட்டிலே கீழைச்சமுத்திரக் கரையினுள்ள ஒரு நெய்தனிலத்தூரிலே, ஒருவன், முற்பிறப்பிலே பெரு ந்தவஞ் செய்தும், சிறிது தீவினைசெய்ததனாலே, பரதவர் சாதியிற் பிறந்தான். அவன், அங்குள்ள பரதவர்கள் கட லிற் படுக்கும் மீனைத் திறையாகக் கொண்டு, அவர்களுக்

கெல்லாம் அரசனாய் இருந்தான். அவன் சிவபெருமானு டைய திருவடியிலே மிக்க அன்பையுடையவன். அவன், பிள்ளைப்பேறில்லாமையால், மிக்க வருத்தங்கொண்டிரு ந்தான். ஒருநாள், அவன் தன் கிளைஞரோடும் மீன்படுக் கும் பொருட்டுச் சமுத்திரத்துக்குச் சென்றபொழுது, அதன் கரையிலே, ஒருபக்கத்திலே ஒரு புன்னைமர நிழ லிலே, உமாதேவியார், ஒருகுழந்தையாய், அழுதுகொ ண்டு கிடந்தார். பரதவராசன் அது கண்டு: "சிவபெரு மானே பிள்ளைப்பேறில்லாத சிறியேன்பொருட்டிரங்கித் தந்தருளிய குழந்தை இது" என்று, தன் வலப்புயந் துள்ள, மனமகிழ்ந்து, எடுத்துத் தழுவிக், கற்பினிற் சிற ந்த தன் மனையாள் கையிற் கொடுத்தான். மனையாள், தான் பெறாது பெற்றெடுத்த குழந்தையைத் தழுவி,முத்த மிட்டு, உச்சிமோந்து, பேரானந்தத்தோடு வளர்த்தாள்.

திருநந்திதேவர், சிவபெருமான் பணித்தருளியப டியே, சுறாமீன் வடிவங்கொண்டு, அச்சமுத்திரத்திலே திரிந்தார். அச்சுறாமீன், விநாயகக்கடவுளும் முருகக்கட வுளும் அச்சமுத்திரத்தெறிந்த புத்தகங்களெல்லாவற்றை யுந் தன் சிரசின்மீதுஞ் சிவபெருமானுடைய திருவடிக ளைத் தன் மனத்தினுள்ளும் அடக்கிக்கொண்டு, மந்தர மலைபோல உழக்கும்; தோணி படவுமுதலியவைகளைக் கிட்டி, அவைகள் கிழியும்படி தட்டும்; அவைகள் சரக் கோடு கவிழும்படி முட்டும்; தன்மேலே சீறி வருஞ் சுறாக் களெல்லாவற்றையும் முடுக்கி வெட்டும்; மற்றை மீன்க ளெல்லாவற்றையுங் கோடு கோத்து வீசும்; அச்சமுத்திர த்திலே மரக்கலங்கள் போகாவண்ணம் அச்சுறாமீன் இங் ஙனந் திரிதலும், பரதவராசன், அம்மீனைப் பிடிக்கும்பொ ருட்டுப் படவின்மேலேறி, வலையை வீசினான். அம்மீன், அப்படவைச் சுற்றிப் பாய்ந்து, தன் வாயினாற் கிழித்தது. உடனே, பரதவன் ஒரு தோணிமேற் பாய்ந்து வலையை வீச, அம்மீன் அத்தோணியையும் உடைத்தது. உடனே பரதவராசன் ஒரு மரக்கலத்திற் பாய்ந்து, வலையை வீசி

ளுன். வலையை முன்னே வீசினுற் பின்னே எழுந்தும், பின்னே வீசினுல் முன்னே எழுந்தும், வலப்பக்கத்தில் வீசினுல் இடப்பக்கத்தில் எழுந்தும், இடப்பக்கத்தில் வீசினுல் வலப்பக்கத்தில் எழுந்தும், அம்மகரமீன் றிரியும். ஒரோர்தரம் வலையில் அகப்படும்; மனமகிழ்ந்து வலையை இழுக்க, அவ்வலையினின்றும் வழுவி ஓடிவிடும். பரதவராசன், தன் கிளைஞரோடும் அம்மீனைப் படுத்தற்கு வேண்டுந் தொழில்களெல்லாஞ் செய்யவும், அஃதகப்படாமையால், மனத்துயரங் கொண்டு: "இச்சுறுமீனை எவன் பிடிப்பானே, அவனே என்னுடைய புத்திரிக்கு மணமகனுதற்கு உரியவன்" என்று மனம் வலித்திருந்தான்.

சோமசுந்தரக்கடவுள், தம்முடைய கணநாதருள் ஒருவர் வலைஞர்வேடம் எடுத்து, வலையையும் பறியையுங் கொண்டு தம்பின்னே நடந்து வரத், தாம் ஒரு பரதவ வேடங்கொண்டு, சென்று,மேற்கூறிய நெய்தனிலத்துறை அடைந்தார். அவ்வூரினுள்ள பரதவராசன், அவருடைய வரவை நோக்கி: "நீயார்" என்று வினவ, அவர்: "நான் மதுரையின் உள்ள வலைஞர்களுக்கெல்லாம் அரசனுய் உள்ளவனுடைய புத்திரன்" என்றுர். அது கேட்ட பரதவராசன்: "இந்தத்துறையிலே ஒரு சுறுமீன் மிக்க சீற்றங் கொண்டு திரிகின்றது. அதனை நீ பிடித்தாயாயின், நான் என் புத்திரியை உனக்கு விவாகஞ்செய்து தருவேன்" என்றுன். அது கேட்ட பரதவவடிவங்கொண்ட சிவபெருமான், ஒரு படவிற் பாய்ந்து சென்று, வலையை வீசினுர். சுறுமீன் அவ்வலையினகப்பட்டது. அகப்படுதலும், சிவபெருமான், வலையைச் சுருக்கியிழுத்துக், கரையிலே போட்டார். வலைஞர்களெல்லாரும், அது கண்டு, வியந்து, ஆரவாரித்தார்கள். பரதவராசன், மனமிகமகிழ்ந்து, தன் புத்திரியை அப்பரதவவேடங்கொண்ட சிவபெருமானுக்கு விவாகஞ்செய்து கொடுத்தான்.

திருமணக் கோலங்கொண்ட வலைஞராகிய சிவபெருமானும் உமாதேவியாரும் இடபாரூடராய்த் தாமாந்தன்

மையை அறிதற்குரிய திருக்கோலத்தோடு ஆகாயத்திலே தோன்ற; சுறவு வடிவங்கொண்ட திருநந்திதேவரும் பழைய வடிவத்தைக் கொண்டார். பரதவராசன், இடபாரூடராய் ஆகாயத்திலே காட்சிகொடுத்தருளிய சிவபெருமான் உமாதேவியார் என்னும் இருவருடைய கிருபாநோக்கம் பெற்றமையால், நல்லறிவு தோன்ற; சிவபெருமானுடைய திருவடிக்கீழ் வீழ்ந்து வணங்கித் தோத்திரஞ் செய்வானாயினன்:—

*இரக்கமிலிழிந்தயாக்கையெடுத்துழலேழையேனைப்*
*புரக்கவின்றென்போல்வந்தபுண்ணியவடிவம்போற்றி*
*அரக்கெறிபவளச்செவ்வாயணங்கினைமணந்தென்பாசங்*
*கரக்கவெள்விடைமேனின்றகருணையேபோற்றியென்றான்.*

இப்படித் துதித்துநின்ற பரதவராசனைச் சிவபெருமான் நோக்கி: "அன்பனே! நீ நெடுங்காலம் மக்கட்பேறின்றி வருந்தினது கண்டிரங்கி, நாம் உமையை உனக்கு மகளாகத் தந்து, பின் வந்து மணஞ் செய்தோம். நீ இப்பூவுலகத்திலே குபேரன் போலப் பல போகங்களை அநுபவித்து வாழ்ந்து பின்னர் நம்முடைய உலகத்தை அடைவாய்." என்று திருவருள் புரிந்து, திருநந்திதேவரோடும் அடியார் கூட்டத்தோடும் திருவுத்தரகோசமங்கை என்னும் ஸ்தலத்தை அடைந்து, அங்கெழுந்தருளியிருந்து, உமாதேவியார் வணங்கிக் கேட்ப வேதத்தின் இரகசியப் பொருளைத் திரட்டி அவருக்கு உபதேசித்து, அன்பர்கள் அறுபதினாயிரவருக்கும் அருள்செய்து பாசநீக்கி முத்திகொடுத்து, உமாதேவியாரோடும் மதுரையை அடைந்தருளினார்.

திருச்சிற்றம்பலம்.

ஐம்பத்தெட்டாவது

## திருவாதவூரடிகளுக்குபதேசித்தபடலம்.

பாண்டிவளநாட்டிலே, வைகையாற்றின் கரையிலுள்ள திருவாதவூரிலே, அமாத்தியப் பிராமணகுலத்திலே,

வைதிகமார்க்கமுஞ் சைவமார்க்கமும் விளங்கவும், பௌத்தமத்மாகிய இருளுடைந்தோடவும், பாலசூரியன்போல ஒரு சற்புத்திரர், சிவபெருமானுடைய திருவருளினாலே, திருவவதாரஞ்செய்தார். அவருக்குத் திருவாதவூரர் என நாமகரணஞ் செய்தார்கள். அவர், கர்ணவேதனமுதலிய மற்றைச் சடங்குகளும் வேதவிதிப்படி செய்யப் பெற்று, இளம் பிறைபோல வளருவாராய்ப், பதினாறுவயசினுள் வேதமுதலிய அறுபத்துநான்கு கலைகளையும் கற்று வல்லராயினார். இத் திருவாதவூரருடைய கல்வித்திறமை முதலியவற்றை அறிந்தவர் சொல்ல அரிமர்த்தனபாண்டியன் கேட்டு, அவரை வரவழைத்து, மனமகிழுமாறு பலவரிசைகளளித்து, மந்திரி யுத்தியோகங் கொடுத்து, மேம்படுத்தினான். திருவாதவூரர், படைக்கலப்பயிற்சி முதலியன உணர்த்தும் நூல்களையும், மனுசாத்திர முதலிய நீதிநூல்களையும் ஐயந்திரிபற முற்றக் கற்றோராதலினால், மற்றை மந்திரிமாரெல்லாரினுஞ் சிறந்து, முதன்மந்திரியாகி, அரிமர்த்தனபாண்டியனுக்குக் கண்ணுங் கவசமும் போலக் காரியஞ் செய்தொழுகி, உயிர்கள் களிக்க வெண்கொற்றக்குடை நீழலில் உலகத்தைக் காத்து, முறைசெய்திருந்தார்.

இப்படி யிருக்குநாளிலே, மெய்ப்பொருளிது பொய்ப்பொருளிது என்று உள்ளபடி பகுத்தறியும் விவேகம் இவர் மனத்திலுண்டாயது. உண்டாகவே, நிலையில்லாத இம்மை மறுமை யின்பங்களி லுவர்ப்பு வரப் பெற்றுச், செம்மையாகிய மனத்தையுடையராய், மோக்ஷத்தையடையும் நெறியையே ஆராய்வாராயினார். "பௌத்தம் முதலாகிய புறச்சமயநூல்களும் நித்தமாகிய வேதத்தைத் தழுவிய அகச்சமயநூல்களும் மனத்திலுள்ள மாசை அறுத்து அரனருளை அறிவியா; அதனால் மித்தையாகிய ஆணவக்கட்டு அறாது; ஆகவே வீடடைதல் இல்லையாம். அன்பு செய்து அரனருள் பெற்ற அடியவர்க்கன்றி ஏனையோர்க்கு முத்தி அரிது என்று வேதம் கூறும். அவ்வேதத்தின்

உண்மைப்பொருளை யெல்லாம் சத்திநிபாதமடைந்த பரி பக்குவர்க்குச் சிவாகமம் உய்த்துணர்த்தும் என்று மெய் யுணர்ந்தோர் கூறுவர். வேதமுடிவினும் ஆகமத்தின் முடி வினும் எய்தும் பொருள்கட்குத் தம்முள் வேற்றுமை இல்லை; அவைகளை வேற்றுமையுள்ளனவாய்க் காட்டுகி ன்ற மாறுபாட்டினை நீக்கி, மலசம்பந்தத்தைப் போக்கி, உடையானாகிய தன்னையும் உடைப்பொருளாகிய என்னை யும் அறிவிக்கின்ற ஞானாசிரியன் வருவது எக்காலம்? உண்மை அன்பினுக்கு எளிவரும் கருணையினையுடைய ஆசாரியன் அருளாலன்றிக், கல்வியினாலே இப்பாசத்தைக் கழிக்கக் கருதுவது, கடலைத் தெப்பத்தினாலன்றிக் கையி னாலே கடக்கக் கருதுதல் போலாம்." என்று இவ்வாறு எண்ணித், திருவாதவூரர் மோக்ஷத்தை அடைதல் வேண் டும் என்னும் பேராசையாற் றொடக்குண்டு, வேதாகமாதி சாத்திரங்களிலே வல்ல பெரியோர்கள் தம்மிடத்து வருந் தோறும், தாம் அவரிடத்துச் சென்று காணுந்தோறும், அவர்களோடு மிகவும் அளவளாவி மெய்ப்பொருள் ஆரா ய்ந்தார். இப்படிப் பலரிடத்தும் ஆராய்ந்தும்,ஞானாசாரிய ரகப்படாமையால், தாகத்துக்கு உவர்நீருண்டு விடாய்த ணியாதார்களைப் போல, அகத்தமை வுறாது, சோரநாயக னிடத் தன்புவைத்து நடக்கும் மனத்தையுடைய ஒரு பெண்ணைப்போல, சிவபெருமானிடத்திலே மெய்யன்பு வைத்து, அரசனுடைய அமைச்சுரிமைத் தொழிலையும் கைவிடாதவராயொழுகினர். இப்படியொழுகுந் திருவாத வூரர், ஒருநாள் பாண்டியராசனுடைய சபையிலே போய் நிற்கும்பொழுது, குதிரைப்பந்தி காப்பவர் அரசன்முன் சென்று வணங்கி நின்று: "மகாராஜாவே, நமது குதிரை வெள்ளத்தில் இறந்தனபோக ஒழிந்த குதிரைகள் நோயு டையனவும் மூப்புடையனவுமாயின. நல்லகுதிரை ஒன்று மில்லை" என்றார்கள். அதுகேட்ட அரசன், திருவாதவூ ரரை நோக்கி: "நீர் நமது பண்டாரத்தைத் திறந்து வேண் டிய பொருளை எடுத்துக்கொண்டு சென்று, சமுத்திரக்க ரையில் வந்திறங்குங் குதிரைகளைத் தெரிந்து, விலைக்குவா

ங்கிக் கொண்டு வருதிர்" என்று சொல்லி விடுத்தனன். மனம்வேறுபட்டு அமைச்சியல் பூண்டொழுகுந் திருவாதவூரர், பண்டாரத்தைத் திறந்து குதிரை வாங்குதற்கு வேண்டிய திரவியமெடுத்துக்கொண்டு தாழிட்டிறுக்கி, அரசனிடத்து விடைபெற்றுப் புறப்பட்டுப், பொற்சுமைகளை ஒட்டகங்களிலேற்றுவித்து முன்செல்லும்படி அனுப்பி, பொற்றாமரைவாவியிலே ஸ்நானஞ் செய்து, சித்திவிநாயகரையும் மீனாக்ஷியம்மையாரையும் வணங்கிப், பின்னர்ச் சோமசுந்தரக்கடவுளுடைய திருவடிகளை வணங்கி, அவர் சந்நிதானத்தில் நின்று: "எம்பெருமானே! இப்பொருள்களெல்லாவற்றையும் தேவரீருக்கும் தேவரீருடைய அடியார்களுக்கும் உரியனவாகச் செய்தல்வேண்டும். அடியேனுடைய குறை இதுவே." என்று வேண்டுதல் செய்தார். அப்பொழுது, சோமசுந்தரக்கடவுளுடைய திருவருள் போல, அருச்சகராகிய ஆதிசைவரொருவர் எதிரேவந்து விபூதி கொடுத்தார். அதனைத் திருவாதவூரர்: "நமக்கிது போலும் நன்னிமித்தமில்லை. இது நன்னெறிக்கேதுவே" என்று இருகரங்களினாலும் வாங்கித் தரித்துச், சோமசுந்தரக்கடவுளிடத்தே விடைபெற்றுக் கொண்டு மீண்டு, வாத்தியங்கள் முழங்கவும், சாமரங்கள் இரட்டவும், சந்திரவட்டக்குடை நிழல் செய்யவும், சேனைகள் சூழவும், இரத்தினச் சிவிகைமேற் கொண்டு சென்றார்.

இப்படித் திருவாதவூரர் வழிக்கொண்டுசெல்லுமுன், சோமசுந்தரக்கடவுள் இவருடைய இருவினையொப்பையும் மலபரிபாகத்தையும் பார்த்து, மார்ச்சார சம்பந்தமாக இவரை வலியவந்தாண்டு தொண்டுகொண்டருளத் திருவுளங்கொண்டு, கருணையால் ஓர் பிராமண ஆசாரியராகித், திருப்பெருந்துறைக்கு வந்து, மாணாக்கர் கூட்டஞ்சூழ ஒரு குருந்தமர நிழலில் வீற்றிருந்தருளினார். பிறவியாகிய கடலைக் கடக்கவருந் திருவாதவூரர்,சேனைகளோடு அளவிறந்த காட்டுவழிகளைக் கடந்து சென்று, பெருங்கருணைக் கடலாகிய ஞானாசாரியர் வீற்றிருக்குந் திருப்பெருந்துறை

யை அடுத்து, அதை அணுக அணுக, மகிழ்ச்சி மிகவும், கூப்பிய கரங்கள் சிரமேலேறவும், கண்களினின்று ஆனந்த பாஷ்பம் சொரியவும், உள்ளத்திலே திருவருள் விளைய வும் நடந்தார். இப்படி நடக்கின்ற திருவாதவூரர், கண் டோர் "இவர் உன்மத்தர்" என்று நகைக்கும்படியாகிய அதிதீவிரபக்குவம் எனப்படும் நான்காம் சத்திநிபாதம் உண்டாகத், தமது உண்மைஞானத்தை மறைத்த மலத் தினும் மிகவும் அஞ்சிப், பெரும்பாரந் தாங்கினேனையும் பிணிப்புண்டோனையும் போன்று, "அழலிடைப்பட்ட வெ ண்ணெய்போல நெஞ்ச நெக்குநெக்குருக, என்னையுருக்கு தலால் என்மலத்தைச் சேதிக்கும் அருட்கடலாகிய ஞானு சாரியர் எழுந்தருளியிருக்குமிடமே இது" என்று எண் ணிக்கொண்டு, நகரத்தினுட் புகுந்து, திருக்கோயிலையடை ந்து, அங்குள்ள தீர்த்தத்திலே ஸ்நானம்பண்ணித், திருக் கோயில்வாயிலையடைந்து, சிவபெருமானை நமஸ்கரித்துத் தோத்திரஞ்செய்து, திருக்கோயிலை வலம் வந்தார். வரும் பொழுது ஞானுசாரியர் எழுந்தருளியிருக்கின்ற குருந்த மரத்தை எதிரே கண்டார். வேதங்களும் சிவாகமங்களும் புராணங்களும் பலசமயசாத்திரங்களும் ஒவ்வொரு மரு ங்கிலே கோஷிக்க, சரியையாதி நான்குபாதங்களும் வல்ல அடியார்குழாங்களுக்கிடையே, அக்குருந்தமரநிழலிலே, சிவஞானபோத புத்தகந் திருக்கரத்திலேந்தி, யோகவாச னத்தின்மீது எழுந்தருளியிருக்கின்ற பெருங்கருணைக்கட லாகிய பரமாசாரியரைத் தரிசித்துக்: "கனகசபையிலே ஆனந்ததாண்டவஞ் செய்யுந் திருக்கோலமும், கல்லால மரநிழலிலே சனகர் முதலிய நான்கு முனிவர்களுக்கு ஞானேபதேசஞ்செய்தருளிய திருக்கோலமும் இன்றை க்கு நாயினேனுக்கு எளிவந்த இத்திருக்கோலமே" என்று சிவபெருமானுடைய திருக்குறிப்புணர்த்த உணர்ந்து, வணங்கிக், கைகளைச் சிரமேற்குவித்து, என்பு நெக்குருக மனமுருகி, ஞானுசாரியராகிய சிவபெருமானுடைய திரு வருளாகிய வலையில் அகப்பட்டுக்கொண்டார்.

பார்வைமிருகம்போல வந்தருளிய பரமாசாரியரானவர், செங்கழுநீர்மாலையையும் சந்தனத்தையும் அணிந்து, திருவடியில் வீரக்கழலைக்கட்டி, திருவாதவூரருடைய ஒழுக்கத்தையும் அன்பையுங் கண்டு, உடல்பொருளாவிமூன்றையும் நீரோடு அவர் தத்தஞ்செய்ய ஏற்று, ஞானக்கண்ணினாலே பாசக்ஷயஞ்செய்து, திருவடித்தாமரையைச்சூட்டி, திருக்கரத்தைச் சிரமேல்வைத்துச், சூக்குமபஞ்சாக்ஷரத்தை உபதேசித்து, அவரைச் சிவசொரூபமாக்கினார். திருவாதவூரர், அருட்டிருநோக்கினாலே இருப்புண்ட நீர்போல மலத்தைக் கெடுத்துத் தன்வசமாக்கிய பரமாசாரியரையும், அவர் உபதேசஞ் செய்தமையையும், தம்மை மறைத்த பாசத்தையும், தம்மையும் மறந்து, மெய்ம்மையாகிய ஞானஸ்வரூபியாய், ஒன்றுமறிந்திலர். அவருடைய நாவில் ஞானக்கலைமகள் வந்து தங்கினாள். அப்பொழுது அவர், உள்ளத்திலே நிறைந்த பேரின்பவெள்ளந் தேங்கிப் புறத்தே வழிதல்போல, கைகள் அஞ்சலிக்கச், சிரம் கம்பிக்கக், கண்கள் ஆனந்தபாஷ்பஞ் சொரியத், திருமேனி உரோமாஞ்சங்கொண்டு அழலிடைப்பட்ட நெய்போலுருக, நாத்தழுதழுத்த அன்புரையினராய்த், தம்வசமிழந்து, பரமாசாரியரை வணங்கித் தோத்திரஞ்செய்வாராயினார். பழுதில்லாத சொற்களாகிய மணிகளை அன்பாகிய வடத்தாற்கோத்த பாமாலையை அழுதுசாத்துகின்ற மெய்யன்பராகிய திருவாதவூரருக்கு "மாணிக்கவாசகன்" என்னுந் திருநாமத்தை ஞானாசாரியராகிய சிவபெருமான் கொடுத்தருளினார். திருவாதவூரர், ஞானாசாரியருடைய திருவடிகளை ஆனந்தபாஷ்பமாகிய திருமஞ்சனத்தாலபிஷேகஞ்செய்து, பாவாகிய மலரைச்சாத்தி, தற்போதமாகிய அமுதை நிவேதித்து, சிவஞானமாகிய ஓமாக்கினியைமூட்டி, ஞானபூசையைச் செய்வாராயினார். மாணிக்கவாசகசுவாமிகள், பவவாசனைகழிந்து, ஞானாசாரியரது மாணாக்கர்கள் அவ்விடத்தோதுகின்ற ஆகமப்பொருள்களையும் உபநிடதப்பொருள்களையும் கேட்டு, அதில் விருப்புடையராயிருந்தார். அதனைச் சிவபெருமான்

பார்த்தருளி, அதிமதுரமாகிய அவருடைய பாடலை இன்னுஞ் சிலநாட்டிருச்செவி மடுக்கவும், அவருக்குப் பேரன் பளித்து அவர் கொடுவந்த பொருளெல்லாவற்றையுங் கவர்ந்து வேண்டும் பணிகள் செய்வித்து அரிமர்த்தனபாண்டியனுக்கு அவருடைய பெருந்தகைமைகளை அறிவித்து அவனை முத்தியை அடைவிக்கவும்,புத்தரை வாதிலே வெல்லுவிக்கவுந் திருவுளங் கொண்டு, மாணிக்கவாசகசுவாமிகளை எத்தி: "இங்கே நீ செய்யவேண்டிய கருமஞ்சிறிதுண்டு. ஆதலாற் சிலகாலம் இங்கிருப்பாய்." என்று கட்டளையிட்டு அடியாரோடு மறைந்தருளினார்.

சிவபெருமானனவர், கனுத்தோற்றம்போலத் தம்மைக் காட்டி மறைத்தலும், மாணிக்கவாசகசுவாமிகள் 'நாய்க்குத் தவிசிட்டதுபோல நாயினேனுக்குந் தமது அருமைத்திருமேனியைக் காட்டி எம்பெருமான் மறைந்தது கனவோ" என்றையுற்றுப், பின் ஒருவாறு தேறி, அவரைப் பிரியலாற்றுதவராய்: "உம்முடைய அடியாரோடு கூட்டாது அடியேனையும் அடியேனுடைய வினையையும் இங்கிருத்தி மறைந்தீரோ! இருவினைக் கொள்கலமாகிய இவ்வுடலைத் தீயிலிடுகிலேன்; மலையிலுருண்டு மாய்கின்றிலேன்; வாளாற் குறைக்கின்றிலேன்;அதுவும் தேவருடைமையாயிற்றே! ஆதலால் இவை செய்ய அஞ்சினேன்; இவ்வுயிர் தானேயாயினும் உடலைவிட்டுப் பிரிகின்றிலது. ஐயனே தேவரீரைப் பிரிந்தும் ஆற்றேன்! என்செய்வேன்! எந்தாயோ! எந்தாயோ! என்றிரங்கிப் புரண்டழுது புலம்புவாராயினர்:—

வறியனுமொருபிறவிக்குருடன்கையில்
  வந்தபெருவிலைமணிபோன்மழலைதேருச்
சிறியனுமொருமதலைகையிற்கொண்ட
  செம்பொன்மணிவள்ளம்போற்றேவர்யார்க்கு
மறிவரியாய்சிறியேனையெளிவந்தாண்ட
  வருமையறியேன்றுன்பத்தழுவத்தாழப்
பிறிவறியாவன்பரொடுமகன்றுய்கல்லாப்
  பேதையேன்குறையலதெம்பிரானுலென்னே.

மண்ணாதியாறுறுமனந்துழாவித்தடுமாறிப்
புண்ணுகியெனைக்காணுதுழல்கின்றேனைப்போதவருட்
கண்ணுலவைமுழுதுங்கரையநோக்கியான்யானென்
றெண்ணுவெனைத்தந்தாயெங்குற்றுயோவெந்தாயே.

வாணாதியைந்துமுதல்வகுத்தவோசைமுதலைந்து
நாணாதியங்குமனமாதிநான்கும்வழியடைப்பத்
தேனாதியறுசுவையுங்கழியவூறுந்தெள்ளமுதம்
யானாரநல்கினையாலெங்குற்றுயோவெந்தாயே.

மாசாய்மறைக்குமலவலியும்நானும்வேறின்றி
யாசாவிகாரமலமாயினேனைப்பொருட்படுத்திப்
பேசாதவின்புருவினின்றேடென்னைப்பின்வைத்த
வீசாவெனையிங்கிட்டெங்குற்றுயோவெந்தாயே.

இப்படி வாய்திறந்தாற்றி, இளங்கன்றை நீங்கிய தாய்ப்பசுவைப்போல மனம் கரைந்து, கோபுரவாயிலின் புறம்பே போந்து, அங்கே தம்மை எதிர்பார்த்துநின்ற படைஞர்களை நோக்கி, நீங்கள் முன்னேபோய்ச், "குதிரைக்கூட்டங்கள் ஆடிமாசத்தில் வருமென்று பாண்டியராசனுக்குச் சொல்லுங்கள்" என அனுப்பினார். அவர்கள் சென்று பாண்டியனை வணங்கி நிகழ்ந்தவற்றைச் சொன்னார்கள். அதுகேட்ட அரசன் ஒன்றுஞ் சொல்லாது குதிரையின் வரவை எதிர்பார்த்திருந்தான்.

மாணிக்கவாசகசுவாமிகள் பாண்டியன் குதிரைவாங்கும்படி கொடுத்த திரவியங்களெல்லாவற்றையும் தம்மையாண்டருளிய பரமாசாரியராகிய சிவபெருமானுடைய பூசை திருவிழாக்களுக்கும் ஆலயத்திருப்பணிக்கும் அடியார்களுக்கும் உபயோகித்து விட்டு, அத்திருப்பெருந்துறையிலே இருந்தார். இவர் வரையறுத்துக் கூறிய ஆடிமாசம் சமீபித்தலும், பாண்டியராசன்: 'இன்னும் குதிரைகள் வந்தில; இதுவென்ன!" என்று மாணிக்கவாசகசுவாமிகளுக்குத் திருமுகம் எழுதியனுப்பினான். மாணிக்கவாசகசுவாமிகள் அதனை வாங்கி வாசித்து: "இனிச் செய்யுமாறென்னை!" என்று யோசித்தயர்ந்து, தமது பரமாசாரியராகிய சிவபெருமான் வீற்றிருக்கின்ற கோயிலையடைந்து:

"என் தலைவரே, தேவரேறே,இடபத்தைக்கொடியிலுயர்த்த அரசரே,சௌந்தரபாண்டியரே,திருப்பெருந்துறையில்வீற்றிருந்த என்னருமணியே, பாண்டியராசன் தந்த பொருளெல்லாவற்றையும் உம்முடைய ஆலயத்துக்கும் அடியார்களுக்குமாகச் செலவழிக்கும்படி அருள்செய்தீர். இனி நான் அரசனுக்கு எதைக்கொண்டு குதிரை வாங்கிக் கொடுப்பது?" என்று விண்ணப்பஞ்செய்து வணங்கி இரந்தார். அவரெதிரே சிவபெருமான் அசரீரிவாக்கால் "குதிரையெல்லாம் வருமென்று அரசனுக்கு ஓலை அனுப்புதி" என அருளிச்செய்தார். மாணிக்கவாசகசுவாமிகள் அதுகேட்டு மிக மகிழ்ந்து அப்படியே அரசனுக்குத் திருமுகம் எழுதியனுப்பினார். அந்தத் திருமுகத்தெழுதிய பாசுரத்தைப் பாண்டியராசன், வாசிக்கக் கேட்டு, அடங்காமகிழ்ச்சியனாய்க், குதிரையின் வரவை நோக்கியிருந்தான்.

அன்றிரவு நித்திரைசெய்கின்ற மாணிக்கவாசகசுவாமிகளுடைய கனவிலே சிவபெருமானார் குருந்தமரநீழலில் வந்தாண்டருளிய ஆசாரியவேடங்காட்டி எழுந்தருளி வந்து: "பாண்டியனுடைய மனதைக் கவரத்தக்க குதிரைகளை நாம் கொண்டுவருகின்றோம். நீ இன்றைக்கு முன்னே செல்லுதி" என்று அருளிச்செய்தார். உடனே மாணிக்கவாசகசுவாமிகள் நித்திரைவிட்டெழுந்து,"தேவர்களுக்குக் கனவிலும் காண்டற்கரிய எம்பெருமானுடைய கருணைவடிவு நமக்குக் கனவிலும் நனவிலும் எளிதாயிற்றே!" என நினைத்துக்கொண்டிருந்தார். இருக்கச் சூரியோதயமாயிற்று. உடனே மாணிக்கவாசகசுவாமிகள், திருப்பெருந்துறையில் வீற்றிருக்கும் சிவபெருமானுடைய பாதங்களை வணங்கி, அவ்விடத்தினின்றும் நீங்கி, மதுரையை அடைந்து, பாண்டியராசனிடத்திற் சென்று,தாம் செய்யவேண்டிய முறையாக அவனுக்கு வழிபாடுசெய்து, முன்னே நின்றார். பாண்டியராசன் அவர் முகத்தை நோக்கி, "எவ்வளவு பொன்கொண்டுபோய் எவ்வளவு குதிரை வாங்கினீர்?" என்று கேட்டான். மாணிக்கவாசகசுவாமிகள்: "மகாராசாவே, நான் குதிரை வாங்கும்படி கொ

ண்டுபோன பொன்னுமளவில்லை, வாங்கின குதிரைகளுமளவில்லை; அக்குதிரைகள் பின்னே வருகின்றன; கண்டருளுதி. இதனாலே 'துரங்கபதி' என்னும் பெயரைப் பெற்றுதி" என்றார். பாண்டியன் பலவரிசைகள் செய்து அவரை மாளிகைக்கு அனுப்பினான். மாணிக்கவாசகசுவாமிகள், பொற்றாமரைவாவியிலே ஸ்நானஞ்செய்து, சித்திவிநாயகரைத் தொழுது, மீனாட்சியம்மையாரையும், சுந்தரேசரையும் வணங்கி, மனமொழிமெய்கள் அன்புமயமாய்த் "தலைவரே, அடியேனை ஆட்கொண்டருளிய அருமணியே, வெள்ளியம்பலத்திலே திருநிருத்தஞ்செய்யும் கடவுளே, முன்னே அரசன் தந்த பொருள்களையெல்லாம் அடியேன் வேண்டிக்கொண்டபடி ஏற்றுக்கொண்டு, அடியேனையும் தொண்டுகொண்டீரே. அரசன் முனிவுறாது மகிழும்படி குதிரைகள் வருதல் எங்ஙனம்?" என்று வேண்டிநின்றார். அப்பொழுது பரமசிவனுடைய திருவாக்கானது "மெய்யன்புடையானே, அஞ்சற்க. நீ விரும்பியபடி சூரியனுடைய தேரிற் குதிரைபோலுங் குதிரைகளைக் கொண்டு வருகின்றோம்." என்று ஆகாயத்தில் அசரீரியாக எழுந்தது. மாணிக்கவாசகசுவாமிகள், அதுகேட்டுப், பரமசிவனுடைய கருணையைத் துதித்துத், தமது திருமாளிகைக்குச் சென்றார்.

திருவாதவூரரை அவர் சுற்றத்தார்களும் நட்பினரும் முதலாயினார் வந்து நெருங்கி, இடிமுழக்கம்போலப் பல புத்திகளைச் சொல்வார்கள்: "மந்திரியுத்தியோகம் பூண்டு அரசர்கருமஞ் செய்வது பிராமணர்களுக்குத் தருமமன்று. அரசர்களுக்குரிய மந்திரியாக விருந்தாலும் அவர்களுக்கு இசைந்த காரியங்களைச் செய்வதே தகுதி என்று மநுநூலில் வல்லோர் சொல்லுவார்கள். அரசியலையும் அமைச்சியல்பையும் அறிந்த உம்போல்வார்கட்கு நாங்கள் சொல்வதென்ன! நீர் செய்வதொன்றும் நன்றாயிருக்கவில்லை. இன்றைக்குக் குதிரைகள் வரும் என்று பாண்டியராசனுக்கு வரையறுத்துச் சொன்னீர். ஐயரே, நாளைக்கு அவ்வரசனுக்கு என்ன சொல்லவல்லீர். நீர் அரசனிட

த்தா நடந்துகொள்ளும் விதத்தினாலே உமது கிளைஞர் நட்பினர் முதலாகிய எங்களைக் காக்கவேண்டுமென்னுங் குறிப்பு உமக்கில்லைப்போலும். உம்முடைய செய்கை உமக்கே மிக நன்றாயிருக்கின்றதுபோலும்!" என்று கழறியுரைத்தார்கள். அவற்றை மாணிக்கவாசகசுவாமிகள் கேட்டுச், "சிவபெருமான் ஆசாரியவேடங் கொண்டுவந்து நம்மை அடிமைக் கொண்ட அன்றைக்கே சுற்றத்தையும் அதுபற்றிவருந் தொடர்களையும் நீங்கினோம்; துன்பமும் இன்பமுமற்றோம்; தேகாபிமானம் தீர்ந்தோம்; திரவியத்தை வெறுத்தோம்; கோபத்தையும் செருக்கையும் கெடுத்தோம்; இருவினையையும் நீங்கினோம். எமக்குத் தந்தையும், தாயும், குருவும், ஆசாரியரும், சிவபெருமான்; பெண்டிர் நிராசை; புதல்வர்கள் பலசீவராசிகள்; சுற்றம் சிவனடியார்; பகை ஏழுபிறவிகள்; ஊரிலெல்லாஞ் சமைத்த சோறு நம்முடையதே;பூவுலகமெல்லாம் நமக்குப்படுக்கை; தைத்த கோவணம் நாம் தரிக்கும் வஸ்திரம்; நமக்குச் சந்தனம் விபூதி; ஆபரணம் உருத்திராக்கம்; நாம் இன்றைக்கே இறக்கினும் இறக்குக; என்றும் இருக்கினும் இருக்குக; அரசன் நம்மைத் தண்டிக்கினும் தண்டிக்குக;அவன் உடனே நம்மை மகிழ்விக்கினும் மகிழ்விக்குக; நாம் சுவர்க்கத்திற் சிறப்படையினும் அடைக; கொடிய அக்கினிமயமாகிய நரகம் சேரினும் சேர்க; பரமசிவனை மறக்கமாட்டோம். பிராரத்த வினைப்பயன் அநுபவிக்கவேண்டி வந்தால் அதைத் தவிர்க்கவல்லவர் யாவர்?" என்று சுற்றத்தார் முதலாயினார் சொல்லை மறுத்து,மாளிகையிலிருந்தார்.

திருச்சிற்றம்பலம்.

ஐம்பத்தொன்பதாவது

## நரிபரியாக்கியபடலம்.

மாணிக்கவாசகசுவாமிகளைப் பாண்டியராசன் மற்றைநாளழைத்து, "இன்னுங் குதிரைகள் வந்திலபோலும்"

என்று விசாரித்தான். அவர், "இன்றுமுதல் மூன்று நாளைக்குள் குதிரைகள் வந்துவிடும். அவைகள்நிற்றற்கு வேறு அகன்ற பந்திகளை அமைப்பிக்க; அவைகளுக்குத் தண்ணீரூட்ட வேறு தடாகங்களைத் தோண்டுவிக்க; நகரத்து மாடங்களெல்லாம் அலங்கரிப்பிக்க" என்றார். அரசனுடைய ஏவலர்கள் அவ்வண்ணம் செய்தார்கள். இப்படியிருக்க, மாணிக்கவாசகசுவாமிகள் குதிரைவரும் என்று வரையறுத்துக் கூறிய மூன்று நாளுங் கழிந்தன. பாண்டியன் மற்றைநாள் "இன்னும் குதிரைகள் வரக்கண்டிலம்" என்று மாணிக்கவாசகசுவாமிகளை அழைப்பித்துத் தண்டஞ் செய்பவனைத்துச் சீறி, "இவன் குதிரை வாங்கினதென்னை! அவை வருவது என்றைக்கு?" என்று கூறித், தன்னெதிர்நின்ற சிலதறுகண்ணர்களை நோக்கி: "இந்தக் கள்வனைக் கொண்டுபோய்த் தண்டஞ் செய்து நமது பொன் முழுதையும் அறவிடுங்கள்" எனக் கட்டளையிட்டான். பாண்டியனுடைய கோப மிகுதியைக் கண்ட தண்டலாளர்கள் அவனெதிர் நில்லாது அஞ்சி உடனே திருவாதவூரடிகளைப் பாசம்போலத் தொடர்ந்து பற்றிக் கொண்டு சென்று, "இனிப் பொன்னுக்கு வகையேது! சொல்லும்." என்று எதிர்த்துச் சீறி, அவர்மேற் கல்லேற்றினார்கள். தமது மெய்யன்பர்களுடைய பாரங்களையெல்லாந் தாங்குவாராகிய சிவபெருமான் அவர்மேலேற்றிய பாரம் முழுதையும் தாங்கியருளினார். கல்லின் பாரந்தெரியாது பரமசிவனுடைய திருவடி நீழலில் நின்ற திருவாதவூரடிகளுடைய நிலைமையைத் தண்டலாளர்கள் நோக்கி, "இது மாயம் போலும்" என்று மிகுந்த கோபங்கொண்டு, அவருடைய கரங்களிலும் பாதங்களிலும் கிட்டியை மாட்டி நெரித்தார்கள். அவர் இக்கொடுந் தொழிலுக்கும் அஞ்சாது பரமசிவனுடைய திருவடிகளைத் தியானித்துக்கொண்டிருந்தார். அப்பொழுது சூரியன் அஸ்தமயனமாயிற்று.

அன்றிரவு, தண்டலாளர்கள் அவரை இருண்மயமாகிய சிறைச்சாலையிலேவிடுத்து விலங்குமாட்டி, மிக்க துய

ரஞ் செய்தார்கள். அவர், பரமசிவனுடைய திருவடிப் புணையைத் துணையாகக் கொண்டு அந்துயர்க்கடலைக் கடந்து,வைகறையிலே அடியார்கள் சுந்தரேசரையும் மீனாக்ஷியம்மையாரையும் திருப்பள்ளியெழுச்சி செய்து வழிபடும் ஆர்ப்பையும் சங்கொலியையும் வேதகோஷத்தையும் கேட்டிருந்தார். இப்படியிருக்கச் சூரியோதயமாயிற்று.

திருவாதவூரர், சுந்தரேசர் வீற்றிருக்கும் ஆலயத்தின் சிகரத்தை நோக்கிக் கைகளைச் சிரசின்மேற் குவித்து அவரைத் தோத்திரஞ் செய்வாராயினர்:—

எந்தாயனைத்துலகுமீன்றுயெத்தேவர்க்குந்
தந்தாய்செழுங்குவளைத்தாராய்பெருந்துறையில்
வந்தாய்மதுரைத்திருவாலவாயுறையுஞ்
சிந்தாமணியேசிறியேற்கிரங்காயோ.

மூவாமுதலாய்முதுமறையாயம்மறையுந்
தாவாதசோதித்தனிஞானபூரணமாய்த்
தேவாதிதேவாய்த்திருவாலவாயுறையு
மாவார்கொடியாயடியேற்கிரங்காயோ.

முன்னுமுதுபொருட்குமுன்னுமுதுபொருளாய்ப்
பின்னும்புதுமைக்கும்பின்னும்பேரொளியாய்த்
தென்னுமதுரைத்திருவாலவாயுறைய
மென்னயகனேயெளியேற்கிரங்காயோ.

மண்ணுய்ப்புனலாய்க்கனலாய்வளியாகி
விண்ணுயிருசுடராயித்தனையும்வேறுகிப்
பண்ணுயிசையாய்ப்பனுவலாயெங்கண்ணுங்
கண்ணுணுயென்னுறுகண்காணுவாறென்கொல்லோ.

பொங்குஞ்சினமடங்கல்போன்றுருத்துவெங்கூற்ற
மங்கும்புரியாவருந்துன்பத்தாழ்ந்துநான்
மங்கும்படியறிந்தும்வந்தஞ்சலென்கிலையா
லெங்குஞ்செவியுடையாய்கேளாயோவென்னுரையே.

பூட்டியருட்பாசமிருபாதம்பொறித்துடலிற்
கூட்டியடியாருளகப்படுத்தாட்கொண்டருமை
காட்டியவோவின்றென்னைக்கைவிட்டாய்வெய்யரென
யாட்டியொறுக்குமிடத்தாரேன்றுகொள்வாரே.

ஊராருனைச்சிரிப்பதோராரயென்றுன்னடிமைக்
காராயடியேனயிர்வேனைஃதறிந்தும்
வாராயரசன்றமரிழைக்கும்வன்கண்ணோய்
பாராயுன்றன்மையிதுவோபரமேட்டி.

இவ்வாறு இரங்குகின்ற திருவாதவூராருடைய அழுகையொலி, குழந்தைகளுடைய அழுகையொலி தாயர் செவியிற் புகுந்ததுபோலத் தமது திருச்செவியில் நுழைதலும், சிவபெருமான், அவருடைய சிறையை நீக்கத் திருவுளங்கொண்டு, திருநந்திதேவர் முதலிய கணநாதர்களை அழைத்து, "ஆவணிமாசத்து மூலநக்ஷத்திரம் வந்துவிட்டது. நாம் முற்பட்டு இன்றைக்குப் பாண்டியன் கோபங் கொள்ளாமுன் குதிரைகள் கொண்டுபோய்க் கொடுத்தல்வேண்டும். காட்டிலிருக்கும் நரிகளைக் குதிரைகளாக்கி நீங்களெல்லீரும் குதிரைச்சேவகர்களாய் அவைகளின் மீது ஏறிக்கொண்டு முன் செல்லுங்கள். நாமும் அவ்வாறு குதிரைச் சேவகராய் வருகின்றோம்" என்று அருளிச்செய்தார். அக்கட்டளையின்படி கணநாதர்கள் நரிகளைக் குதிரைகளாக்கித் தாம் குதிரைப்பாகர்களாய் அவைகளில் ஏறி மேற்றிசையை நோக்கிச் சென்றார்கள். சோமசுந்தரக்கடவுளானவர், வீரக்கழலையணிந்து, வாட்படையை ஏந்திச், சாய்ந்த கொண்டையும் திருமுடிச்சாத்தும் கண்டிகையும் வாகுவலயமும் குண்டலமும் விபூதியைத் திரிபுண்டரமாக அணிந்த நெற்றியும் வெண்பட்டும் ஆகிய இவைகள் அடியார் நெஞ்சை அகலாமல் அழகெறிப்பத், தருமார்த்தகாமமோக்ஷம் என்கின்ற நான்கு கால்களையும், ஞானகாண்டம் கருமகாண்டமென்கின்ற செவிகளையும், பரஞானம் அபரஞானமாகிய கண்களையும், விதியாகிய முகத்தையும், விலக்காகிய வாலையும், ஆகமங்களாகிய புறவணிகளையும், மந்திரங்களாகிய சதங்கை மணிமாலைகளையும், சந்திர சூரியர்களாகிய அங்கவடியையும், பிரணவமாகிய கடிவாளத்தையும், உபநிடதமாகிய கலனையையுங் கொண்ட வேதமாகிய குதிரையின்மேற்கொண்டு, வெண்சாமரம் வீசவும் வெண்கொற்றக்குடை நிழற்றவும்

வாத்தியங்கள் ஒலிக்கவும் அந்த வீரர்களுக்கு நடுவே சென்றருளினர். நினைத்தமாத்திரத்திலே வேண்டியவடிவங் கொள்பவராகிய பரமசிவனுனவர் கண்ட ஆடவர்களும் பெண்களும் பலவாறு வியந்துபேச, இந்திரசாலவித்தை காட்டுவாரைப் போல, இங்ஙனங் குதிரைவீரராக வந்து, உலகை மயக்கி, வாத்திய வொலியும் குதிரைகளினொலியும் வீரர்களினாரவாரமும் திசைகளைச் செவிடாக்க, மதுரை நகர்க்கு அரைக்காத தூரத்தில் வந்தார். குதிரைகளின் வரவைக் கண்டவர்கள் முகமலர்ந்து விரைந்து சிறைச்சாலையிலிருக்கின்ற திருவாதவூரரிடத்திற் சென்று, "அரசநீதியிற்றவருத மந்திரித்தலைவரே, குதிரை வெள்ளங்களெல்லாம் எழுகடல்போல வருகின்றன. அவைகள் இப்பொழுது கோபுரவாயிலில் வந்துவிடும். இதனை விரைந்து பாண்டியராசனுக்குச் சொல்லும்" என்றார்கள். திருவாதவூரர் பாண்டியனை அடைந்து, "மகாராஜாவே, குதிரைகள் வருகின்றன." என்றார். அதைக்கேட்ட பாண்டியன், உடம்பு பூரிக்க மகிழ்சிறந்து, மிகுந்த விலைபெற்ற முத்தாரங்களையும் பீதாம்பரங்களையுங் கொடுத்துத், திருவாதவூரரை மகிழ்வித்து, அரியணையினின்றிழிந்து, அமைச்சர்முதலாயினர் சூழக் கோபுரவாயிலில் வந்து, குதிரையின்வரவை எதிர்கொள்வானாய், அங்குள்ள ஓர் மாடத்திலே சிங்காசனத்தில் வீற்றிருந்தான்.

சோமசுந்தரக்கடவுள் தமது திருவிளையாடலைக் காட்டும்படி திருவுளங்கொண்டு குதிரைகளின் வரவைச் சிறிது தாழ்த்தார். பாண்டியன் குதிரைகளைக் காணுமையால் மனம் வெள்கி, "நமது மந்திரிசொல்லியது பொய்." என்று எண்ணிக் கோபங்கொண்டு, "திருவாதவூரரைத் தண்டியுங்கள்" என்னுங் குறிப்போடு தண்டலாளர்களைப் பார்த்தான். அவர்கள் அரசன் குறிப்பின்படியே திருவாதவூரரைக் கொண்டுபோய் அஞ்சாது ஒறுத்தார்கள். மகாஞானியாகிய திருவாதவூரர் சோமசுந்தரக்கடவுளைத் தியானித்துத் துதிப்பாராயினர்:—

பூவார்முளரிப்புத்தேளறியாநெறிதந்தாய்
பாவார்தென்சொற்பனுவன்மாலைப்பணிகொண்டாய்
தேவாதேவர்க்கரசேசிறியேனுறுதுன்ப
மாவாவென்னவஞ்சேலென்னயாறனேயோ.

நெஞ்சேயுரையேசெயலேயெல்லாநினவென்றாய்
வஞ்சேபோலுமஃதேலின்றுவாராயோ
பஞ்சேரடியாள்பாகாகூடற்பரமேட்டி
யஞ்சேலென்னவிதுவோவருளுக்கழகையா.

காவிநேருங்கண்டாநாயிற்கடையான
பாவியேனைப்பொருளாக்கொண்டென்பணிகொண்டா
யாவியோடிவ்வுடலுநினதேயன்றேவின்
றேவிவாளாதிருந்தால்யாரென்னுடையானே.

இவ்வாறிரங்கும் திருவாதவூரர், தமது செவிகளில் நுழைந்த பலவகை வாத்தியங்களின் ஒலியினாலும், குளம்பினின்றெழுந்த துகட்படலத்தினாலும் குதிரைகளின் வரவை அறிந்தார். பாண்டியனும் குதிரைகளின் வரவை அறிந்து, வாதவூரரை அழைத்து, மிகுந்த அன்புவைத்து, "நமது கருமங்களை உம்மைப்போல வகித்து நடத்தவல்லவர் யாவர்!" என்று கூறி, அடங்காத மகிழ்வினனாய், அவரோடு அளவளாவி யிருந்தான். அப்போது இளஞ்சூரியர் போன்ற சிறந்த தோற்றத்தையுடைய பாகர்களோடு குதிரைகள் வந்தன. தன்முன்னோர்களும் கண்டறியாத அழகும் வேகமுமுடைய குதிரைகளைப் பாண்டியன் பார்த்து, "ஆயிரங்கண்களைப் பெற்றாலும் இவைகளைப் பார்க்க முடியாது" என்னுங் குறிப்போடு சந்தோஷத்தால் விழுங்கப்பட்டு, அழகிய குதிரையின்மேல் இவர்ந்து வந்த குதிரை வீரரை வியந்து, திருவாதவூரரை நோக்கி, "இவருள்ளே தலைவர் யாவர்" என்று வினவினான். அவர் "அரசனே, நான் அதனை அறியேன்." என்றார். அப்பொழுது சுந்தரேசராகிய குதிரைவீரர், அங்கவடியின்மீது வைத்த திருவடிகள் அசையக், கடிவாளத்தைப் பிடித்து, வேதமாகிய குதிரையைப் பாண்டியனெதிரே நடத்திக்கொண்டுவந்து, "அரசனே, எங்கள் குதிரையேற்றத்தைச் சிறிது காண்."

என்று சொல்லி, அரசன் முதலாயினோர் காணும்படி ஐங்கதியும் பதினெண்வகைச் சாரியும் முதலாகிய விகற்பங்கள் தோன்றச் செலுத்திக் காட்டியருளினார். கணநாதர்களாகிய குதிரைவீரர்களும் தாம் ஏறிவந்த குதிரைகளை நடத்திக் காட்டினார்கள். பாண்டியன் அவர்களை நோக்கி, "உங்களுள்ளே தலைமையானவர் யாவர்." என்றான். அவர்கள் சுந்தரேசராகிய குதிரைவீரரைச் சுட்டி 'இவர்' என்றார்கள். அப்பொழுது, அக்குதிரைவீரராகிய கடவுள், வேதமாகிய குதிரையை நடத்திக்கொண்டு பாண்டியனெதிரே வருதலும், அவன் அக்கடவுளுடைய கிருபாநோக்கத்தைப் பெற்று, மனமயங்கித், தன்னை மறந்து, இருக்கைவிட்டெழுந்து, கைகளைச் சிரசின்மேற் குவித்துக் கொண்டு நின்றான். பின்பு சிவபெருமானுடைய ஆணையினாலே மறைப்புண்ட அறிவு தன் உள்ளத்திலே தோன்ற: "இன்றைக்கு ஒரு குதிரைவீரனை நாம் கண்டெழுந்து கைகுவித் தஞ்சலி செய்து நின்றது என்ன காரணம்!" என்று வெட்கித்துத் திரும்ப ஆசனத்திலிருத்தற்கு நாணி நின்றான்.

நிற்கின்ற பாண்டியராசனுடைய முகத்தைக் குதிரைவீரராகிய கடவுள் பார்த்து, "அரசனே! உனது மந்திரியானவர் உன் பொருளெல்லாங் கொண்டுவந்து நமக்கும் நம்மவர்களுக்கும் மிகவும் கொடுத்தார். ஆதலாலே, மனிதர்களுக்குக் கிடைத்தற் கரியனவும், விலை மதித்தற் கரியனவும், இலக்கணக் குறைவுபாடில்லாதனவும் ஆகிய நல்ல குதிரைகள் உனக்கு வந்தன. இக்குதிரைகளை இன்றைக்கு நீ என்னிடத்திருந்து கயிறுமாறி வாங்குந்தன்மையால் உன்னுடையனவாம். அவை நாளைக்கு என்னவாயிருந்த வேணும் எனக்கு முனக்கும் அதைக்குறித்து ஒரு கருமமுமில்லை. குதிரை வாணிகத்தின் வழக்கம் இது" என்றார். அப்பொழுது பாண்டியராசனும் மனமகிழ்ந்து அதற்குடன்பட்டு: "எமது முதன் மந்திரியாராகிய திருவாதவூரர் ஒப்பில்லாதவராய் உம்மிடத்திற் கொண்ட நண்பினாலே மிகுந்த துப்புரவுடையரானார்." என்று மிகவும் புகழ்ந்து

ரைத்தான். குதிரைவீரராய் வந்த கடவுள், குதிரைகளைக் கயிறுமாறிக் கொடுத்தற்கு முன்னே, அவைகளின் சாதி பேதங்கள் இன்ன இன்ன என்றும்,அவைகள் எட்டு வயசின என்றும், நல்லிலக்கணமெல்லாம் ஒருங்கமைந்த இந்தக் குதிரைகள் உனக்குத் தகுந்தன என்றும் சொல்லிக், குதிரைவீரர்களுடைய முகத்தைப் பார்க்க, அக்குறிப்பினை அறிந்த வீரர்கள் தாம் ஏறிவந்த குதிரைகளெல்லாவற்றையும் அதிகவேகமாகச் செலுத்திக் காட்டினார்கள். பாண்டியன் கண்டு வியந்து, ஆப்தர்களாய்த் தன் அருகிலிருந்த அமைச்சர்களைப் பார்த்துத் தலையை அசைத்து, நகைமுகத்தனாய் மகிழ்ந்தான். கடவுள், பாண்டியராசனும் அந்நகரவாசிகள் முதலாயினாரும் கண்டு மகிழும்படி, தமது குதிரையைச் செலுத்திக்காட்டிப், பாண்டியனெதிரேவந்து, குதிரையினின்றிழிந்து பிறப்பிடம் நிறம் சுழி முதலியவைகளை எடுத்துச் சொல்லி: "அரசனே! அரசர்கள் இக்குதிரைகளைப் பூசைசெய்து வணங்கிக் கயிறுமாறுவர்." என்று அருளிச்செய்தார். அதுகேட்ட பாண்டியன், அக்குதிரைகளுக்கு மணிமாலை முதலியன அணிவித்துச், சந்தனம் புஷ்பம் தூபதீபங்களால் அருச்சித்து வணங்கி எதிர்நிற்பக், குதிரைவீரராகிய கடவுள், திருவாலவாயுடையாரைநோக்கிக் கைகளை சிரமேற்குவித்து, "வாழ்க" என்று வாழ்த்தித், தாமேறிவந்த வேதமாகிய குதிரையைத்தவிர மற்றைக் குதிரைகளெல்லாவற்றையும் கயிறுமாறிப் பாண்டியன்கையிற் கொடுத்தார். அவன் பாகர்கள் கையிற் கொடுக்க, அவர்கள் அவைகளை வாயுவும் கடலும்போலக் கொண்டுபோய்ப் பந்தியிற் சேர்த்தார்கள்.

குதிரைவீரராகிய கடவுளுக்குப் பாண்டியராசன் வெண்பட்டை வரிசையாகக் கொடுத்தான். அவர் குதிரையினின்றிறங்கி, அதனை யேற்றுத் திருமுடியின்மீது தரித்தருளினார். அதுகண்ட குதிரைவீரர்களாகிய கணநாதர்கள் "இந்த ஆடையை நமது கடவுள் குதிரையினின்றிழிந்து நின்றேற்றுத் திருமுடிமேலணிவதென்! இங்ஙனஞ் செய்

யாதொழியில் இவர் திருக்கரத்திலேந்திய ஓட்டையும் திகம்பரத்தையும் சர்ப்பாபரணத்தையும் பாண்டியராசன் கவர்ந்து கொள்வானோ?" என்று ஒருவரை யொருவர் தம் முள்வினவி வெகுண்டு பேசினார்கள். பாண்டியராசன், குதிரைவீரர் எல்லார்க்கும் பட்டாடைகள் கொடுத்தான். அவைகளைச் சிவபெருமானாகிய குதிரைவீரர் வாங்கிக் கொண்டு வேதமாகிய குதிரையோடு மறைந்தருளினார். நரிகளாகிய குதிரைகளில் வந்த கணநாதர்களாகிய குதிரைவீரர்களும் அவரோடுடன்மறைந்தார்கள். பாண்டிய ராசன், தனக்கிருமைக்குந் துணையாகிய திருவாதவூரடிக ளுக்கு, அருமையாகிய வரிசைகளைச் செய்து, அவரைத் திருமாளிகைக்குச் செல்ல விடுத்து, உச்சிப்பொழுதில் அங்கு நின்று மெழுந்து தன்கோயிலையடைந்தான். மற்றை மந்திரிமார்களும் நகரவாசிகளும் தத்தம் மனை புகுந்தார் கள். குதிரைவீரராய் வந்த சுந்தரேசப்பெருமானும் கோயி லையடைந்து தம்முடைய திருவிளையாடல்களையெல்லாம் மீனாக்ஷியம்மையார்க்குச் சொல்லி வீற்றிருந்தருளினார்.

திருச்சிற்றம்பலம்.

---

அறுபதாவது

## பரிநரியாக்கியபடலம்.

பாண்டியராசன் தந்த வரிசைகளோடு தமது திருமா ளிகையிற் புகுந்த திருவாதவூரர், சுற்றத்தார் முதலாயினோர் வந்து வினவ, அவரவர்க்கிசைய உபசாரவார்த்தையும் மகிழ்ச்சியும் வழங்கி, அவர்களை விடுத்துத், "திருவாலவா யுடையார் நாமன்றிரந்தவண்ணமே குதிரை வாங்கும்படி நாம் கொண்டு சென்ற திரவியங்களையெல்லாம் தம்மு டைய அடியார்களுந் தாமுங் கைக்கொண்டு, எம்மையும் பணிகொண்டு, பிறவித்துன்பத்தை யொழித்தருளினார். அதுவன்றி, பாண்டியராசனுடைய மனத்துக்கிசைய நல்ல குதிரைகளைச் செலுத்தி நமக்கினிக் கவலையில்லையாம்படி செய்தருளினார். இனிப் பிரபஞ்சத்தை வெல்லும் வண்

ணம் தம்முடைய சிவானந்தானுபவத்திலிடைவிடாதிரு க்கும்படி நம்மைச் செய்தருளவும் வேண்டும்.'' என்று அப்பேராசை தலைக்கொள்ள இகபரவாசை சிறிதுமின்றிச் சோமசுந்தரக்கடவுளுடைய திருவடிகளின் தியானமரு வுணர்வோடு ஓர் தனியிடத்திலே வீற்றிருந்தருளினார். இப் படியிருக்கச் சூரியன் அஸ்தமயனமாயிற்று. அன்று அர்த் தராத்திரியில், சிவபெருமானுடைய திருவிளையாட்டால் குதிரைகளாய் வந்த நரிகள், தங்கள் சுயவடிவங்கொண்டு, "சங்கினோசை பிணப்பறையோசை பெண்கள் அழுகுரல் அவர்கள் மார்பிலடிக்கும் ஓசை ஆகிய இவைகளை நாம் என்றும் மகிழ்வோடு கேட்போம். இன்று பகலெல்லாம் குதிரைகளாய் மனிதரைச் சுமந்து கட்டுண்டு சவுக்கடி பட்டு வருத்தமுற்றோம். இப்பொழுது நம்முடைய நல்ல விதிவசத்தாற் சுயவடிவைப் பெற்றுக்கொண்டோம். நாம் காட்டிற் சஞ்சரித்த நாண்முதலிந்தக் கடுந்துன்பத்தை ஒருகாலத்து மறிந்ததில்லை. கட்டிய சங்கிலித் தழும்பும் சவுக்கடித் தழும்பும் நம்முடலைவிட்டு இன்னும் போகவி ல்லை. இன்றிரா விடியுமுன் நாம் ஓடிவிடுவதே கருமம். மண சார நாந் தின்பதற்கு நத்தை ஞெண்டு முதலிய ஊன்கள் இங்கில்லை. இனிப் புதிதாகக் கொள்ளுப்பயறு புற்களைத் தின்னுதல் நமக்கடாது. அரசன் காவலாளரும் நகரிலுள் ளாரும் நம்மைக் காணில் அடித்து வருத்துவர், ஆதலால் இன்றிரவு விடியுமுன் கட்டை அறுத்துக்கொண்டோடிப் போவதே சூழ்ச்சி'' என்று ஒருங்கே கூடிப் பேசி, கொ ள்ளு முதலியவைகளை வெறுத்து, நத்தை முதலிய ஊன் களை விரும்பிச், சங்கிலித்தொடர்களை முறித்துக், காலிற் கட்டிய கயிற்றோடு முளைகளைப்பறித்து, ஊளையிட்டுத் தப்பியோடும் வழியைப் பார்த்துப், பந்தியினின்ற குதிரை களைத் தாவிக்கடித்து, அவைகளைப் பலவாறு ஊறு செய் வனவாயின. குதிரைப்பந்தி காக்கும் வீரர்கள் ஊளையோ சைகேட்டு உறக்க நீங்கி யெழுந்து, அந்நரிகள் அங்குநி ன்ற குதிரையின் குடர்களைப் பறித்துண்பது கண்டார் கள். காணுதலும் வலியுடைய சிலநரி மதிலைத்தாண்டியோ

டின. சில சாளரவழியாயும் சுருங்கைவழியாயும் நூழில் வழியாயும் ஓடின. முடமும் மூப்பும் குருடும் நோயுமுடைய நரிகள் ஓடுமிடங் காணுமையாற் பந்தியில் ஏங்கிக் கிடந்தன. வேறு சில நரிகள் கிட்டி வெருட்டுவோரைக் கடித்துத் தட்டியோடுவனவும், காற்கீழ்ப் பதுங்கியோடுவனவும், குட்டியை யணைத்துக்கொண்டு மதிலால் குதித்தோடுவனவுமாயின. இங்ஙனம் அரசமாளிகையைக் கடந்தப்புறப்பட்ட நரிகளெல்லாம் அந்நகரையடுத்த சோலை முதலிய பல இடங்களினும் நெருங்கி ஊளையிட்டுத் திரிந்தன. நரியோசை எங்கும் மிகுதலால் அந்நகரவாசிகளும் கண்விழித்தார்கள், நாய் முதலிய விலங்குகளும் மயின் முதலிய பக்ஷிகளும் விழித்தன. அந்நரிகள், பசி மிகுதியால் அடுக்களை களிற்புகுந்து, கருங்கலங்களை யுருட்டுவனவும், அங்குள்ள உணவுகளைத் தின்பனவும், குட்டிகளுண்ணக் கொடுப்பனவும், கிளி முதலிய பக்ஷிகளையும் ஆடு முதலிய விலங்குகளையும் வதைப்பனவும், தம்மைத் தொடர்ந்த நாய்களைக் கொல்வனவும், வீரர்களைக் கடிப்பனவுமாய், அந்நகரியெங்குந் திரிந்து, புலரிக்காலத்தில் நகர்க்கதவங்கடிறத்தலும், அவ்வாயில்களால் விரைந்து காட்டிலோடிப்போயின. விடியற்காலத்திலே குதிரைப்பந்தியாளர்கள் "இதனை என்னவென்று நம்மரசனுக்குச் சொல்வோம்" என அச்சங்கொண்டு, விரைந்தெழுந்து போய்ப், பாண்டியராசனுடைய அரசிருக்கையையடைந்து, அவனை வணங்கி, உடலடுங்க ஒதுங்கி நின்று, "மகாராசாவே, மிகுந்த வேகமும் அழகுமுடையனவாய் நேற்று வந்த குதிரைகளெல்லாம் நரிகளாய்ப் பந்தியில் முன் நின்ற குதிரைகளை ஊறுபடுத்திக் காட்டிலோடின." என்ருர்கள். இச்சொல் அரசன் செவியிற் புகுதலும் அரசன் கண்கள் சிவந்து தீப்பொறி சிந்தக் கோபாவேசத்தனுனன். அதுகண்டு அங்கிருந்த மந்திரிமார்கள் பயந்தொதுங்கினர். முதனுட் குதிரைகளைக் கண்டு பெருமகிழ்வடைந்த பாண்டியன், அவைகளே மீள நரிகளாயோடின எனக் கேட்டு, அமுதுண்டவன் மீள நஞ்சுண்டாற்போலத் துயர்க்கடலி

லாழ்ந்து, தன்னருகிலிருக்கு மந்திரிமார்களை நோக்கி: "மந்திரிமாரே, வாதவூரனென்னுங் கள்வன் நம்பொருண் முழுதையுங் கவர்ந்துகொண்டு நரிகளைக் குதிரைகளாக்கி நமக்கு வரவிடுத்தான். இவன் செய்த மாயத்தைக் கண்டீர்களா! இந்த மாயஞ் செய்தானை நாம் என்செய்வது?" என்று வினவ, அவர்கள் நம்மவர்களுக்கெல்லாம் பழிபாவம் உண்டாக இத்தீங்குசெய்து செய்ந்நன்றி மறந்த இப்பாவிபொருட்டு இனி யாம் ஏது சொல்லக்கடவேம்" என்று தலை கவிழ்ந்து பதில் ஒன்றுஞ் சொல்லாது சும்மாவிருந்தார்கள்.

அப்பொழுது மாணிக்கவாசகசுவாமிகள், "அரசனுக்கு அவன் விருப்பத்தின்படி குதிரைகளைக் கொடுத்து அவன் கருமத்தை இனிது முடித்தேம்; இனி மனக்கவலையில்லேம்." என்று மகிழ்ச்சி பொருந்திய மனசோடு, அங்கு நிகழ்ந்த தொன்றையும் அறியாதவராய், அரசனிடத்தே வந்தார். அரசன் அவரைக் கோபித்துப் பார்த்து: "அளவில்லாத பொருள் கொண்டுபோய் நல்ல குதிரைகளைக் கொடுவந்து தந்தாய். இராசகாரியம் பார்த்துப் புகழ்பெறத் தக்கவர் உன்னைப் போல எந்தவுலகத்திலுண்டு!" என்றான். மாணிக்கவாசகசுவாமிகள் ஒன்றுமறியாதவராதலினால், "அக்குதிரைகளுக்கு என்ன குற்றம்?" என்றார். பாண்டியன்: "குற்றமொன்றுமில்லை; அர்த்தராத்திரியில் நரிகளாகிப், பக்கத்திலே நின்ற குதிரைகளையுங் கடித்துத் தின்று, மனிதருக்கும் இடர் விளைத்து, ஊரைக் கலங்கச் செய்து, காட்டில் ஓடிப்போயின. இவ்வளவு காலமும் நீ கண்ணுங் கவசமும் போல ஒழுகியது சமயம் பார்த்து நம்முடைய பொருளைக் கவர்தற்கோ! உனது அமைச்சியல் நன்று நன்று! சுத்தமாகிய பிராமணகுலத்திலே பிறந்தேமென்றொரு பெருமையுடையாய். நீ செய்தவைகளைப் பிறர் செய்வாராயின், உடனே தண்டிக்கப்படுவார். தண்டலாளர்களே! இவனைக் கொண்டுபோய் நம்முடைய பொருண் முழுதையுந் தடுத்தும் ஈர்த்தும் வாங்குமின். மீண்

டினால் வலிசெய்தும் வாங்குமின்." என்று சொல்லியனுப்பினான். தண்டலாளர்கள் மாணிக்கவாசகசுவாமிகளைக் கொண்டுபோய், உச்சிப்பொழுதிலே சூரியனைப் பார்க்கும்படி நிறுத்தி, நெற்றியிலுங் கைகளிலுங் கல்லு வைத்து வருத்தினார்கள். மாணிக்கவாசகசுவாமிகள் அதனைச் சகிக்கலாற்றாதவராய் வீழ்ந்து, சோமசூரியாக்கினியென்னும் முச்சுடராகிய கண்களையுடைய சோமசுந்தரக்கடவுளை அழைத்து அழுவாராயினார்:—

நாதவோநாதமுடிவிறந்தநாடகஞ்செய்
பாதவோபாதகனுமென்னைப்பணிகொண்ட
வேதவோவேதமுடிவின்விளைந்ததனிப்
போதவோபோதநெறிகடந்தபூரணவோ.

ஐயவோவென்னுடையவன்பவோவன்பர்க்கு
மெய்யவோமெய்யில்வினையேன்றலைவைத்த
கையவோசெய்யகழற்காலவோகாலனைக்காய்
செய்யவோவேதப்பரியேறுஞ்சேவகவோ.

அத்தவோகல்லாக்கடையேனையாட்கொண்ட
பித்தவோபொய்யுலகைமெய்யாகப்பேதிக்குஞ்
சித்தவோசித்தந்தெளிவித்தெனைத்தந்த
முத்தவோமோனமயமானமூர்த்தியவோ.

சோமசுந்தரக்கடவுளானவர், மாணிக்கவாசகசுவாமிகளுடைய அழுகையைக் கேட்டு, அவருடைய செய்கைகளை யெல்லாம் அரிமர்த்தனபாண்டியனுக்கு உணர்த்தவும், தாம் திருமுடியிலே மண் சுமக்கவும், வந்தியென்கின்ற முதியாளைச் சிவலோகத்திற் சேர்க்கவுந் திருவுளங்கொண்டு, வைகைநதியை நோக்கி, ஊழிக்காலத்திற் பெருகாநின்ற சமுத்திரம்போலப் பெருகக்கடவாயென்று ஆஞ்ஞாபித்தருளினார். வைகையானது, முன்னாளிலே காமாக்ஷியம்மையாருடைய தவத்தைக் குலைக்க வந்த கம்பைநதிபோலக் கடும்பெருக்கெடுத்து, மதுராபுரியின் மதிற்புறத்திற்போய், வீடுகளை அழித்து, மதிலையும் வீழ்த்தி, உள்ளே புகுந்து, நகரத்தை அழித்தது. அது கண்ட சனங்களெல்லாரும், மைந்தரை எடுப்பாரும், மைந்தரைக்

காணாது அலமந்து அழுவாரும், மனைவியரைக் கைப்பற்றிக்கொண்டு பிழைப்பாரும், எங்கே போவோமென்று எண்ணுவாரும், திகைப்பாரும், ஆபரணாதிகளை எடுத்துப் பேணுவாரும், அவைகளை எடுக்க மறப்பாரும், உயர்ந்த மாளிகைகளிலே ஏறுவாரும், இதற்குக் காரணம் என்னவென்பாரும், நேற்றும் குதிரைகள் நரிகளாய் ஊறுசெய்தனவென்பாரும், ஒருகாலத்திலும் இந்த ஆறு *இவ்வாறு பெருகவில்லை யென்பாரும், அரசனுடைய செங்கோல் பிழைத்ததோ வென்பாரும், சோமசுந்தரக்கடவுளுடைய திருவிளையாட்டோ இது வென்பாரும், அந்தச் சோமசுந்தரக் கடவுளல்லாது வேறு யார் இதனைத் தணிப்பாரென்பாரும், ஆயிரங் குண்டோதரர் வந்து இந்நீரை வாய்மடுத்தாலும் அடங்காதென்பாரும், பரமசிவன் எடுத்துத் தமது சடையில் வைத்தாலல்லது அடங்காதென்பாரும், ஆனார்கள்.

அப்பொழுது, மாணிக்கவாசகசுவாமிகளை ஒறுத்த தண்டலாளரும் தம்முடைய பொருள்களைப் பேணுதற்காகத் தம் வீட்டுக்குப் போனார்கள். போகவே, மாணிக்கவாசகசுவாமிகள் ஆலயத்திற் சென்று சோமசுந்தரக்கடவுளுடைய பாதங்களைத் துதித்து வணங்கிக்கொண்டு ஆனந்தத்தின் மூழ்கிச் சித்திரம்போல அசைவற்றிருந்தார்.

திருச்சிற்றம்பலம்.

அறுபத்தொராவது

## மண்சுமந்தபடலம்.

மதுராபுரியிலுள்ள சனங்களெல்லாம் வைகைநீர்ப் பெருக்கினாலே வருந்துதலைப் பாண்டியராசன் அறிந்து, மந்திரிமாரை அழைத்து, வைகைநதிக்கரையைக் கட்டி அதன் வேகத்தைத் தணித்து வாருங்களென்று சொல்லியனுப்பினான். மந்திரிமார்கள் போய்க் குடிகளுடைய பெயர்களை யெழுதி, அவரவர்க்கு ஒவ்வொரு கூறு அளந்து

எல்லை கீறி, பட்டணமெங்கும் பறையறைவித்து, கூலி யாளரையழைத்து, அவரவர்க்கு அளந்தபடி செய்யுங்க ளென்று ஆஞ்ஞாபித்தார்கள். அவ்வாறே ஒவ்வொருவரு க்கும் அளந்துவிட்ட பங்கைக் கூலியாளர்கள் அடைப் பாராயினார்கள்.

இந்நகரிலே, தவத்தால் நிறைந்தவளும், பிட்டுவிற்று ண்பவளும், தான் நாடோறும் விற்கும் பிட்டினை முதற் சோமசுந்தரக்கடவுளை அன்பினாலே அருத்துவிப்பவளுமா கிய வந்தியென்கின்ற ஒரு தனித்த முதியாளிருந்தாள். அவள் தனக்கு அளந்து விடப்பட்ட பங்கை அடைத்தற் குக் கூலியாளில்லாமல் வருந்தி, அரசன் ஒறுப்பானென்று பயந்து, சோமசுந்தரக்கடவுளை நினைந்து: "பிட்டு விற்று ண்டு வாழ்கின்ற பேதையேனாகிய யான் இதுவரையுந் துன்பமென்பதை அறியேன். கூலியாளில்லாமையால் அரசன் தண்டிக்கப் போகின்றான். எனக்கோ நாயகனி ல்லை, மக்களில்லை, சுற்றமில்லை, துணையாவார் ஒருவருமி ல்லை. அவ்வாறாய அடியேனுக்கு இத்துன்பம் வருவதோ! தேவர்க்குந் தேவரே! அன்பர்க்கு எளியவரே! அரசன் கோபிக்கு முன் கூலியாளாய் வருவாரொருவரையுங் காணேனே! இனி என்செய்வேன்!" என்று மழைபோலக் கண்ணீர் சொரிய அழுதாள். அப்பொழுது அருட்கட லாகிய சோமசுந்தரக்கடவுள், வந்தியென்பாள் இடுகின்ற பிட்டை உலகத்திலுள்ளவர் காண உண்ணவும், அவளு டைய துன்பத்தை யொழிக்கவும், திருவுளங்கொண்டு, அழுக்குப்பொருந்திய பழைய வஸ்திரமொன்றை அரை யிற் சுற்றி, திருமுடியின்மேல் வைத்த சும்மாட்டிற் கூடை யைக் கவிழ்த்து, திருத்தோளில் மண்வெட்டியை வைத் துக்கொண்டு, மிக்க பசியுடையார்போல, வந்தியுடைய வீதியிலே வந்து: "கூலிகொடுத்து என் வேலை கொள்வா ருண்டோ?" என்று கூவினார். வறுமையினால் வருந்திய வொருவன் பெரிய செல்வத்தைக் கண்டாற்போல, வந்தி யென்பாள், அக்குரலைக் கேட்டு மகிழ்ந்து, வெளியே வந்து,

தாயை நோக்கி வருங் குழந்தையைப்போலத் தன்னை நோக்கிவரும் அக் கூலியாளரையழைத்து: "எனக்கு அளந்துவிடப்பட்ட கரையை அடைத்துத் தருவாயா?" என்று வினவினள். "தாயே அடைத்துத் தருகின்றேன், எனக்கு என்ன கூலிதருவாய்?" என்றார். "நான் விற்கும் பிட்டையே உனக்குக் கூலியாகத் தருவேன்." என்று வந்தி சொல்ல, சோமசுந்தரக்கடவுள் அதற்கு உடன்பட்டு: "அன்னே! பெரும் பசியால் இப்போது வருந்துகின்றேன். உதிர்ந்த பிட்டையெல்லாம் இடுவாயாயின், அவற்றை நான் முதலில் உண்டு இளைப்பாறி, உனக்கு அளந்து விடப்பட்ட கரையைக்கட்டுவேன்" என்றார். வந்தியார் பிட்டையள்ளி, "அப்பா, இதனை உண்பாயாக." என்று கொடுக்கக், கூலியாளர் வஸ்திரத்தை நீட்டி அதனை யேற்று உண்டு: "தாயினுடைய முலைப்பாலிலும் இப் பிட்டு மிகுசுவையுடைத்து. இது பாண்டியனாயிருந்து இவ்வுலகத்தையாண்ட சோமசுந்தரக்கடவுளுக்கே ஆகும். தந்தைதாயில்லாமற் கூலியாளாய் வந்த எனக்கு இதனைத்தந்து இளைப்பாற்றினாய். இனி வேலைத்தலத்திலே போய் உன் மனமகிழும்படி வேலைசெய்வேன்." என்று சொல்லிக்கொண்டு போனார்.

சோமசுந்தரக்கடவுளாகிய கூலியாளர், யாற்றங்கரையையடைந்து, வந்தியுடைய கூலியாளென்று தம்மை எழுதுவித்துக்கொண்டு, கரையை அடையாது நித்திரை செய்தும், ஆடியும், இனியவிசைகளைப் பாடியும், குதித்தும், வந்தியிடம் அடிக்கடி போய்ப் பிட்டு வாங்கியுண்டும், யாற்றிலே நீந்தியும், நகைத்தும், விளையாடிக்கொண்டு நின்றார். அப்பொழுது, அடைக்கப்பட்ட கரைகளையெல்லாம் பார்த்துக்கொண்டு வந்த ஏவலாளர்கள் வந்தியாருக்கு விட்ட பங்குமாத்திரம் அடைபடாமையைக் கண்டு வெகுண்டு, வந்திக்குக் கூலியாளாய் வந்தவன் யாரென்று ஆராய்ந்து, சோமசுந்தரக்கடவுளாகிய கூலியாளரைக் கண்டு: "மற்றைய பங்குகளை யெல்லாம் எல்லாரும் அடைத்திருக்கவும், இந்தப்பங்கை மாத்திரம் நீ அடையா

தது என்னை?'' என்று வினவினார்கள். அதனைக் கேட்டும் ஒன்றும் பேசாது இறுமாந்திருக்கும் கூலியாளரை அவர்கள் பார்த்து, "இவனோர் பித்தனோ பேய்கோட்பட்டவனோ ஒன்றுந் தெரியவில்லை; கூலியும் வாங்கிக்கொண்டானே; வந்தியுடைய கூலியாளென்றும் எழுதுவித்துக்கொண்டான்; மிக்க அழகுடையவனாயுமிருக்கின்றான்; இவனுடைய மேனியானது இவன் முன் கூலிவேலை செய்தவனல்லனென்பதை விளக்குகின்றது.'' என்று அடிக்க அஞ்சி இதனை நாம் அரசனுக்கு விண்ணப்பஞ் செய்வோமென்று போனார்கள். போய்ப் பாண்டியராசனை வணங்கி நின்று: "அரசனே! அளந்துவிடப்பட்ட பங்குகளையெல்லாம் எல்லாரும் மலைபோலக் கட்டினார்கள். வந்தியென்கின்ற முதியாண்மாத்திரம் தன் பங்கை அடைத்திலள். மன்மதனிலும் மிக்க கட்டழகுடையவொருவன் வந்து, அவளுடைய கூலியாளென்று தன்னை எழுதுவித்துக்கொண்டு, இராசகுமாரன்போலக் களித்தும் ஆடியும் பாடியும் வேலை செய்யாது காலம் போக்குகின்றான். அவனுடைய அழகைக் கண்டு அவனை அடிக்க அஞ்சுகின்றோம்.'' என்று விண்ணப்பஞ் செய்தார்கள். உடனே அரசன் அடைக்கப்பட்ட கரைகளை நாம் போய்ப் பார்ப்போமென்று மந்திரிமாரோடு புறப்பட்டு வைகையை அடைந்து, எல்லாக்கரைகளும் உயர்த்திக் கட்டப்பட்டிருத்தலைக் கண்டு மகிழ்ந்து, அடைப்பாரின்மையால் வந்தியுடைய பங்குக்கரையை அழித்து வெள்ளம் பெருகுதலைக் கண்டு கோபித்து: "இக்கரையை அடைப்பவன் எங்கே?'' என்று வினவினான். அரசனுடைய கோபத்தைக் கண்ட ஏவலாளர்கள், உள்ளும் புறமும் மேலும் கீழுமாய், உயிர்தோறு மொளித்து நின்ற கள்வராகிய கூலியாளரைக், கையிற் பிடித்து இழுத்துவந்து, "இவன்தான் வந்தியுடைய கூலியாள்.'' என்று காட்டினார்கள். அரிமர்த்தனபாண்டியன் அவரைக் கண்டு கோபமிகுந்து, பொற்பிரம்பைக் கையினால் வாங்கி, உலகமேயுருவமாக யோனிகளுறுப்பாகக்கொண்ட அவருடைய திருமுதுகில் அடித்தான். சோதிஸ்வரூபியா

கிய சோமசுந்தரக்கடவுள் கூடையோடு மண்ணை உடைப்பிலே கொட்டிவிட்டுஉடனே மறைந்தருளினர்.

உயிர்க்குயிராகிய சிவபெருமான்மேற் பட்ட அவ்வடித்தழும்பானது, பாண்டியன்மேலும், அவனுடைய மனைவியர்மேலும், மந்திரிமார்மேலும், இராசகுமாரர்மேலும், சேனாவீரர்மேலும், குதிரைமேலும், யானைமேலும், பட்டது; சூரியன் முதலாகிய கிரகங்கண்மேலும், நட்சத்திரங்கண்மேலும், பிருதிவி முதலாகிய பூதங்கண்மேலும், மேகங்கண்மேலும், வேதங்கண்மேலும், சமயக்கடவுளர்மேலும், தேவர்கண்மேலும், முனிவர்கண்மேலும் பட்டது; மனிதர்கண் முதலாகிய இயங்கியற்பொருண்மேலும், மலை மரம் முதலாகிய நிலையியற்பொருண்மேலும், ஊனிற்பொருந்திய கருவின்மேலும், உயிரில்லாத சித்திரங்கண்மேலும், பட்டது. விஷ்ணுமூர்த்தி தம்முடைய அறிதுயிலை விட்டெழுந்தார்; பிரமதேவர் இஃதென்னையென்று வியந்தார்; இந்திரன் அஞ்சினன்; தேவரும் பிறரும் நடுங்கினர்கள்; யக்ஷர் சித்தர் முதலானவர்கள் முன் வடுப்படாத தம் முடம்பிலுண்டாகிய புண்ணை ஒருவர்க்கொருவர் காட்டி மயங்கினர்கள்.

சோமசுந்தரக்கடவுள், எவ்வுயிர்க்கும் உயிராயுள்ளவர் தாமேயென்பதையும், பத்திவலையிற் படுபவரென்பதையும் காட்டும்பொருட்டுத், திருமேனியிலடிபட்டும், ஒருகூடை மண் கொட்டிக் கரையை உயரச்செய்தும், மறைந்தருளியதைக் கண்டு, அரசனுடைய ஏவலாளர்கள் வந்தியாரிடத்திற் போனர்கள். "நானனுப்பிய கூலியாள் என்ன செய்தானே என்ன முடியுமோ" என்று சோமசுந்தரக்கடவுளை நினைந்து அழுதுகொண்டிருந்த அவ்வந்தியாரைச், சிவபெருமானுடைய திருவருளினலே சிவகணங்கள் வந்து, "அன்னே வருக." என்று தேவவிமானத்திலேற்றித், தேவர்கள் பூமழைபொழியவும், வேதங்கள் ஒலிக்கவும், துந்துபி முழங்கவும், சிவலோகத்திற்கு அழைத்துக்கொண்டு போனர்கள்.

பாண்டியராசன், கூலியாளர் மறைந்ததையும், கரை உயர்ந்ததையும், தன்னுடைய உடம்பிலே அடிபட்டதையும், "என்மேலடி பட்டது! என்மேலடிபட்டது!" என்று மந்திரி முதலானோர் பேசுவதையுங் கண்டு, ஐயங்கொண்டு நின்றான். அப்பொழுது சோமசுந்தரக்கடவுள் ஆகாயத்திலே அசரீரியாய்த் தோன்றி: "செங்கோல் வழுவாத பாண்டியனே! உன்னுடைய பொருள்களெல்லாம் தருமவழியாலே சம்பாதிக்கப்பட்டனவாதலாற் சுத்தமுடையனவாம். ஆதலால் அவை நமக்கும் நம்மன்பர்க்கும் வாதவூரனாலே கொடுக்கப்பட்டன. அவனை நீ வருத்தினாய். அப்போது காட்டிலுள்ள நரிகளையெல்லாம் குதிரைகளாக்கித் தந்தேம். அவைகள் அன்றிரவில் நரிகளாய் மாறிப் போயின. மற்றைநாளும் அவனை நீ துன்பஞ்செய்தாய். அதுபொழுது நாம் வைகையைப் பெருகச்செய்து, வந்தியிடத்திலே பிட்டுவாங்கியுண்டு அவளுக்குக் கூலியாளாய் அடிபட்டு, மண்கொட்டிக் கரையை உயரச்செய்து, அவளுடைய துன்பத்தைத் தீர்த்து அவளை எம்முலகிற் சேர்த்தேம். இவையெல்லாம் நாம் செய்தது இந்த வாதவூரன் பொருட்டேயாம். இவனுடைய செய்கைகளொன்றையும் நீ அறியாய். உனக்கு இம்மையின்பத்தையும் மறுமையின்பத்தையும் தந்த இவனைத் தன் விருப்பத்தின்படி நடக்க விடுத்து, நீ நூல்வழியே நடந்து பூரண ஆயுளுடையனாய் நிறைந்த செல்வத்தோடும் வாழ்வாயாக." என்று சமஸ்தருங் கேட்க அருளிச்செய்தார். பாண்டியராசன் அச்சமும் அதிசயமும் ஆனந்தமுமடைந்து, வாதவூரர் எங்கேயென்று தேடித் திருக்கோயிலையடைந்து அங்கேயவரைக் கண்டு விழுந்து வணங்கி: "பூமியை அரசாண்டு நரகத்திற்கேதுவான பாவங்களைச் செய்த அடியேனுக்குத் தவப்பயனாய் வந்து இம்மை மறுமையின்பங்களைத் தந்தீர்; அதுவன்றிப் பிறவிப்பிணிக்கும் மருந்தாயினீர். தேவரீரையறியாது அடியேன் செய்த பிழைகளையெல்லாம் பொறுத்து முன்போல இப்பூமியை அரசாளுக." என்று பிரார்த்தித்தான். பற்றுக்களையெல்லாம் விட்ட

மாணிக்கவாசகசுவாமிகள் அரசனை நோக்கி: "கடல்சூழ்ந்த நிலவுலகுக்கெல்லாம் ஆயிரங்கண்களையுடைய இந்திரனைப்போல அரசுபுரிவீர், உங்கள் நாயகர் அருளிச்செய்த வண்ணமே செய்வீராக. உம்மை நான் அடுத்தமையினாலே உலகாசாரத்தையும் வேதாசாரத்தையும் அறிந்து சித்தசுத்தியடைந்து சிவனிடத்திற் பத்திவைத்துச் சம்ஸாரவாசனையற்றுச் சீவன்முத்தனானேன். பரமசிவனே மும்மூர்த்திகளையுண்டாக்கி இவ்வுலகத்தைப் படைத்துக் காத்து அழித்துப் பிறவித்துன்பத்தினுக்கு அஞ்சினோர்க்குக் கெடாத முத்தியின்பத்தைக் கொடுத்தருளுவர். உயர்வொப்பில்லாத இத்திருவாலவாயுடையாரே மந்தரம் கைலாசம் மேரு ஸ்ரீபருப்பதம் காசி முதலிய தலங்களிலே போகமோக்ஷங்களைக் கொடுத்துக்கொண்டு வீற்றிருப்பார். இவரே கண்ணுவர் முதலான இருடிகளுக்கு வேதத்தின் உண்மையை அருளிச்செய்தார். ஞானகாசமாகிய சிதம்பரத்துக்கு வரும்படி அடியேனுக்கு ஆஞ்ஞாபித்தார். ஆதலால் அங்கே என்னைப் போகும்படி செய்க." என்று சொல்லிச், சோமசுந்தரக்கடவுளை வணங்கித் துதித்து விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டார். பாண்டியராசன் பின்றொடர்ந்து, மாணிக்கவாசகசுவாமிகள் "நில்லும் நில்லும்." என்று தடுக்கவும், கூப்பிடுதூரமளவும் போய்ப் பாதங்களிலே விழுந்து நமஸ்கரித்து அனுமதி பெற்றுக் கொண்டு திரும்பினான். திரும்பிவந்து கோயிலையடைந்து, சோமசுந்தரக்கடவுளைத் தரிசித்து, தான் அடிக்கும்படி பிரம்பு நீட்டியபோது திருமுதுகைக் கொடுத்தருளிய அந்தக் கருணையை நினைந்து நினைந்து ஆருது:

அடையாளம்படவொருவனடித்தகொடுஞ்சிலைத்தழும்புந்
தொடையாகவொருதொண்டன்றொடுத்தெறிந்தகல்லும்போற்
கடையானேன்வெகுண்டடித்தகைப்பிரம்புமுலகமெல்லா
முடையானேபொறுத்ததோவுன்னருமைத்திருமேனி.

கடியேறுமலர்மகன்மான்முதலாயகடவுளரும்
படியேழுமளவிறந்தபல்லுயிருநீயேயோ

முடியேறமண்சுமந்தாய்முதுகுதனிலடிபட்ட
தடியேனும்பட்டேனின்றிருமேனியானேறே.

கைக்குமருந்தின்சுவைபின்காட்டுமாறெனவினைக்கும்
பொய்க்குமருங்கலனாகிமண்ணாண்டுபுலைநரகந்
துய்க்குமருந்துயர்களைவான்மாறாய்நின்றுணையடிக்கே
யுய்க்குமருந்தவரிவரென்றறியாமையொறுத்தேனே.

பாதியுமையுருவானபரமேட்டியெனக்கிம்மை
பூதியமும்பரகதியுமுறுதியெனவிளைவிக்கும்
நீதியினான்மந்திரியாய்நின்னருளாயவதரித்த
வேதியரையறியாதேவெறுத்துநானொறுத்தேனே.

மாயாவிருத்தியினான்மாழாந்துமாதவரை
யாயாதொறுத்தேனருநரகத்தாழ்ந்துநான்
வீயாமலின்றனையார்மெய்ம்மையெலாந்தேற்றியவென்
றுயானாய்த்தண்ணளிக்கென்றமியேன்செய்கைம்மாறே.

நின்னையுணர்ந்தவர்வேதநெறிவேள்விசெய்தூட்டு
மின்னமுதிற்கழிசுவைத்தோவிவளிடும்பிட்டெவ்வுயிர்க்கு
மன்னவனேசெந்துவர்வாய்மலர்ந்தமுதுசெய்தனையா
லென்னையிலாவுனக்கிவளோரன்னையாய்வந்தாளோ.

அன்றுசிறுத்தொண்டரிடும்பிள்ளைக்கறியமுது
மென்றுசுவைதெரிந்தவேடனிட்டவூனும்போ
னன்றுநரையாட்டியிடுபிட்டுநயந்தருந்தி
யென்றுமடியார்க்கெளிவந்தாயெந்தாயே.

நரியாவும்பரியாக்கிநடத்தியுமம்பரமன்றித்
தரியாயான்றருதுகிலைத்திருமுடிமேற்றரித்துமறைக்
கரியாய்நீயென்பாசமறுக்கவருந்திருமேனி
தெரியாதேபரியாசைதிளைத்திறுமாந்திருந்தேனே.

விண்சுமக்கும்புள்ளாய்விலங்காய்ச்சுழன்றுமனம்
புண்சுமக்குஞ்சூழ்ச்சிவலியுடையபுத்தேளிர்
மண்சுமக்குமள்ளராய்வந்திலரேவந்தக்காற்
பண்சுமக்குஞ்சொல்லிபங்கன்பாதமுடிகாண்பாரே.

என்று பலவாறு துதித்துத் தம்மையடைந்த அன்பர்க்கு இவரன்பராமென்றும் இவரைப் பெற்றாற் போகமோக்ஷம் பெறுதல் எளிதாமென்றுஞ் சொல்லிப், பல திருப்பணிகளையும் பூசை முதலானவைகளையுஞ் செய்வித்து,

வெள்ளியம்பலத்தில் மாறியாடிய திருவடிகளிலே பதிந்த அன்புடையனுய் அரசுசெய்துகொண்டிருந்தான்.

அப்படிவாழுங் காலத்தில் அரிமர்த்தனபாண்டியன், பல செல்வங்களும் ஓங்க, சகநாதனென்கின்ற புத்திரனைப் பெற்று, அவனை முடிசூட்டி அரசனுக்கிவைத்துவிட்டு, மாணிக்கவாசகசுவாமிகளுடைய சேர்க்கையினுலே மும்மலத்தொடர்ச்சி நீங்கிச், சிவபெருமானுடைய திருவடிகளை யடைந்தான்.

மதுரையினின்றும் புறப்பட்ட மாணிக்கவாசகசுவாமிகள், பல*திருப்பதிகளையும் வணங்கிக்கொண்டு, சிதம்பரத்தை அடைந்து, வீதிதோறும் விழுந்து விழுந்து நமஸ்கரித்துத், திருக்கோயிலிலே புகுந்து, சச்சிதானந்த மயமாகிய சிவகங்கையிலே ஸ்நானஞ்செய்து, சபாநாயகர் தமது அருட்சத்தியாகிய சிவகாமியம்மையார் காண ஆனந்த தாண்டவஞ் செய்தருளாநின்ற கனகசபைக்கு எதிரே சென்று, காந்தத்துக்கு எதிர்ப்பட்ட இரும்புபோல இழுப்புண்டு போனுர். திருப்பெருந்துறையிலே தம்மை அடிமைக்கொண்ட ஆசாரியமூர்த்தமாய்த் தோன்றி, வருக வென்கின்ற குறிப்போடு நின்று அங்கே நிருத்தஞ்செய்கின்ற சபாநாயகருடைய லீலையைக் கண்டு, அஞ்சலிசெய்து நிலத்தில் வீழ்ந்து பரவசமானுர். அக்கினியிற்பட்ட வெண்ணெய்போல மனங் கசிந்துருகப் பாடினுர் ஆடினுர். திருவாசகமருளிச்செய்து துதித்துக்கொண்டு சிலநாளிருந்து, பின் சபாநாயகருடைய ஆஞ்ஞையினுலே, சிதம்பரத்துக்குக் கிழக்கேயுள்ள தபோவனத்தையடைந்து சிவானந்தத்திலமிழ்ந்திச் சிவயோகஞ் செய்துகொண்டிருந்தார். அந்நாளிலே, ஈழமண்டலத்திலுள்ள புத்தர்கள் சிலர் சிதம்பரத்தையடைந்து தில்லைமூவாயிரவரோடு வாதுசெய்யும்படி கேட்டார்கள். சபாநாயகர் தில்லைமூவாயிரவருக்குச் சொப்பனத்திலே தோன்றி: "வாதவூரனை அழைத்துவந்து புத்தரோடு வாதுசெய்யும்படி விடுவீராயின் உங்களுக்கு வெற்றியாகும்." என்று திருவாய்மலர்ந்தருளினுர். தில்லை

மூவாயிரவர் நித்திரைவிட்டெழுந்து களிப்புற்றுத் தபோ வனத்தையடைந்து மாணிக்கவாசகசுவாமிகளை அழைத் தார்கள். அதற்குச் சிவாஞ்ஞையின் வழியே நின்ற சுவா மிகள் மறுத்தனர். தில்லைமூவாயிரவர் திரும்பிப்போய் வருத்தமுற்றிருக்கச், சபாநாயகர் மீளவும் அவர்களுக்குக் கனவிலே தோன்றித், திருப்பெருந்துறையிலே குருந்த மரத்தடியிலே தாம் ஆட்கொண்ட முறைமையினையும் மாணிக்கவாசகனென்று இட்ட நாமத்தினையும் அறிவித்து, "இனி அவனை மாணிக்கவாசகனென்று அழையுங்கள் வரு வான்" என்றருளிச்செய்தார். அப்படியே அவர்கள் போய ழைக்க, மாணிக்கவாசகசுவாமிகள், "சிவபெருமானு டைய திருவருள் இதுவோ?" என்று அவர்களோடும் புற ப்பட்டு வந்து, சபாநாயகரைத் தரிசித்துக்கொண்டு, புத்த ர்களோடு வாதுசெய்து அவர்களை வென்று, பிறவி தொ ட்டு ஊமையாயிருந்த சோழராசாவுடைய மகளை ஊமை தீர்த்தருளினார். பின்னுஞ் சிலகாலந் திருவாசகம் பாடித் துதித்துக்கொண்டு அந்தத் தலத்திலேயிருந்து சிவபெரு மானுடைய திருவடிநீழலை யடைந்தார்.

திருச்சிற்றம்பலம்.

அறுபத்திரண்டாவது

## பாண்டியன்சுரந்தீர்த்தபடலம்.

அரிமர்த்தனபாண்டியனுக்குப் பின் சகநாதன், வீர வாகு, விக்கிரமவாகு, பராக்கிரமவாகு, சுரதன், குங்கு மன், கருப்பூரன், காருணியன், புருடோத்தமன், சத்துரு சாதனன், கூன்பாண்டியன் என்பவர்கள் முறையே அரசு செய்தார்கள். இக்கூன்பாண்டியன் தன் புயவலிமையி னாலே புகழடைந்து, சேரனையும் சோழனையும் வென்று அவர் நாடுகளையுங் கைக்கொண்டு அரசுசெய்யும்போது, சேரராசன் இரத்தினமும் பொன்னும் யானையும் மகளி ருங் கொண்டுவந்து கொடுத்து நமஸ்கரித்துத், தன்னு

டைய ஊரைப் பெற்றுக்கொண்டு போனான். சோழராசனும் தான் பெற்ற புதல்வியாகிய மங்கையர்க்கரசியென்பவரை மணமுடித்துக் கொடுத்துத் தன்னாட்டைப் பெற்றுக்கொண்டான். சோழராசன் அம்மங்கையர்க்கரசியாருக்கு அளவில்லாத செல்வங்களையும் வஸ்திரங்களையும் தாசிகளையுங் கொடுத்துக், குலச்சிறையென்பவரைக் கூட அனுப்பினான். அக்குலச்சிறையாருடைய கல்விகேள்விகளைப் பாண்டியராசன் கண்டு அவரைத் தனக்கு மந்திரியாக்கிக்கொண்டான்.

பாண்டியராசன் முன் செய்த தீவினையினாலே சமணர்களுடைய போதனையிலகப்பட்டு ஆருகதனானான். அரசன் ஆருகதனானமையால் அந்நாடு முழுதிலும் வைதிக சைவங் குன்ற ஆருகதமாகிய இருண் மூடிற்று. மங்கையர்க்கரசியாருங் குலச்சிறையாருமாகிய இருவர்மாத்திரஞ் சைவராயிருந்தார்கள்.

ஒருநாள் இவ்விருவரும் "பொய்ச்சமயமாகிய இச்சமணசமயங் கெடச் சைவசமயந் தழைத்தோங்கச் செய்பவர் யாவரோ" என்று மனக்கவலையுற்றுச், சோமசுந்தரக்கடவுளை யடைந்து: "கண்ணுவர் முதலாகிய முனிவர்களுக்கு வேதத்தின் பொருளை அருளிச்செய்த கடவுளே! சமணர்களுடைய வலையிற்பட்டு அறிவிழந்த அரசனை மீள அடிமைக்கொண்டருளுக." என்று பிரார்த்தித்தார்கள். அப்பொழுது, சோழநாட்டிலுள்ள சீர்காழியிலிருந்து ஒரு பிராமணர் விபூதி ருத்திராக்ஷந் தரித்தவராய்ச் சோமசுந்தரக்கடவுளை வணங்கும்பொருட்டு அங்கே வந்தார். அவரை அவ்விருவரும் நோக்கி: "ஐயரே நீர் எங்கேயுள்ளவர்?" என்றார்கள். பிராமணர்: "நான் சீர்காழியிலுள்ளவன்." என்றார். "அங்கேயுள்ள விசேஷங்கள் என்ன?" என்று அவர்கள் வினவ, பிராமணர்: சீர்காழியிலே சிவபாதவிருதயரென்னும் பிராமணரொருவர் உளர். அவர், புறச்சமயங்களைப் பாற்ற வல்ல ஒரு புதல்வனைத் தரல் வேண்டுமென்று தோணியப்பரை நினைந்து தவஞ்செய்

தார். சிவானுக்கிரகத்தினாலே அவருக்கு ஒருகுழந்தை கிடைத்தது. அக்குழந்தைக்கு மூன்றாம் வயசிலே உமாதேவியார் சிவபெருமானோடும் எழுந்தருளிவந்து தமது திருமுலைப்பாலைப் பொற்கிண்ணத்திலே கறந்து ஞானத்தோடு கலந்து ஊட்டினார். உடனே அக்குழந்தை வேதாகமாதி சமஸ்த சாத்திரங்களையும் உணர்ந்து திருஞானசம்பந்தமூர்த்தி யென்னும் பெயரைப் பெற்று, சிவஸ்தலங்கடோறும் போய், வேதசாரங்களையெல்லாம் தமிழிலே தோத்திரமாகப் பாடுகின்றது. குழந்தைப்பருவத்தையுடைய அத்திருஞானசம்பந்தமூர்த்தி, சிவபெருமானிடத்திலே பொற்றாளமும் முத்துப்பல்லக்கும் முத்துச்சின்னமும் முத்துப்பந்தரும் படிக்காசும் பெற்றுப், பாலைநிலத்தை நெய்தனிலமாகவும் வேதாரணியத்திலே திருக்கதவு அடைக்கவும் பாடிச், சிவஸ்தலயாத்திரை செய்கின்றார். அவர் சுவாமிதரிசனத்தின்பொருட்டு இங்கும் வருவார்." என்றார். அதுகேட்ட மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும், அரசன் விபூதியை அணிந்தாலொத்த மகிழ்ச்சியெய்தி, உடனே திருஞானசம்பந்தமூர்த்திநாயனாருக்கு ஒரு ஓலையெழுதி அந்தப்பிராமணர் கையிற் கொடுத்தனுப்பிவிட்டுச், சுவாமியை வணங்கிக்கொண்டு வீட்டுக்குப்போயினார்கள்.

பிராமணர் வேதாரணியத்தையடைந்து, திருஞானசம்பந்தமூர்த்திநாயனாரைக் கண்டு: "இது மங்கையர்க்கரசியாருங் குலச்சிறையாருந் தந்தது" என்று சொல்லி அவ்வோலையைக் கொடுத்தார். அதில்: "திருஞானசம்பந்தமூர்த்திநாயனாராகிய தேவரீருடைய திருவடிகளை வணங்கி அடியேன் குலச்சிறை எழுதும் விண்ணப்பம்: தேவரீர் இங்கே எழுந்தருளிவந்து சமணசமயத்தைக் களைந்து, அரசனுக்கு விபூதிகொடுத்து, இத்தமிழ்நாட்டைச் சைவநாடாக்கி அடியேங்களைக் காத்தருளுக." என்று எழுதப்பட்டிருந்ததைத் திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் கேட்டு, மதுரைக்குப் போக உடனே புறப்பட்டார். திருநாவுக்கரசுநாயனார் அதனையறிந்து, திருஞானசம்பந்தமூர்த்திநாய

னுரை நோக்கி: "நீரோ சிறியவர். சமணரோ பாதகத்து க்கு அஞ்சாதவர்கள். தம்மோடு பன்னாட் பழகிய என க்கு அவர்கள் செய்த தீமை இவ்வளவென்று சொல்ல முடியாது. ஆதலால் அங்கே போதல் கூடாது. உமக்குக் கிரகங்களும் இப்போது வலியில." என்று சொல்லித் தடு த்தார். திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் அது கேட்டு: "சமணர்செய்த கொடிய துன்பங்களுக்கெல்லாந் தப்பிய அப்பரே! சிவபெருமானுடைய திருவருளில்லாதவர்போல நீர் இவ்வாறு சொல்வதென்? நட்சத்திரங்கள் கிரகங்கள் விலங்குகள் பறவைகள் அசுரர்கள் பேய்கள் பூதங்கள் முதலியவெல்லாம் சிவபெருமானுடைய ஆணையினாலே நட ப்பனவாம். அச்சிவபெருமான் நம்முடைய சிந்தையே கோயில்கொண்டு வீற்றிருப்பாரானால், அவைகளால் நம க்கு ஒருதீங்கும் உண்டாகாது." என்று சொல்லிக், கோ ளறுபதிகத்தை ஓதி அவரை ஒருப்படுத்திக்கொண்டு புற ப்பட்டார்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார், முத்துப்பந்தர் நிழ ற்ற முத்துச் சிவிகையின்மேலேறிச் சென்று, வழியிலுள்ள தலங்களை வணங்கித் தேவாரத் திருப்பதிகம் பாடிக்கொ ண்டு, "பரசமயகோளரி வந்தார். சமணசமயமாகிய அந்த காரங்கெட வுதித்த ஞானசூரியர் வந்தார்." என்று சின் னங்கள் ஒலிக்க, மதுரையை அடைந்தார். முத்துச்சின் னத்தின் ஓசையைக் கேட்டுச் சமணர்கள் வந்து: "உங் கள் தேவனைக் கும்பிட வந்த நமக்கு இந்த வெற்றிச் சின்னமேன்! நீங்கள் ஆரை வென்றீர்கள்" என்று தடுத்தா ர்கள். திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் அத்தடையைக் கடந்து, பரிசனங்களோடுங் கோயிலையடைந்து. சோமசு ந்தரக்கடவுளை மீனாக்ஷியம்மையாரோடு வணங்கி ஆனந்த வெள்ளத்திலமிழ்ந்திச், சமணர்களை வாதிலே வெல்லச் சுவாமியுடைய திருவுள்ளத்தை நோக்கித் திருப்பதிகமோ தித் திருவருள் பெற்றுக்கொண்டு வெளியே வந்தார். அப் பொழுது வாகீசமுனிவரென்கின்ற சிவனடியாரொருவர் வந்து அவரைத் தம்முடைய திருமடத்திலே எழுந்தருளி

யிருக்கும்படி வேண்டிக்கொண்டார். நாயனாரும் அதற்கு டன்பட்டு அந்தமடத்திலே இறங்கி, அன்றிரவு திருவமு துசெய்திருந்தார்.

நாயனாருடைய வரவையறிந்த சமணர்கள் பொறா மைகொண்டு ஒருங்கு கூடி, அவர் எழுந்தருளியிருக்குந் திருமடத்தை எரிக்கும்படி அன்றிரவு அக்கினிதேவனை அபிமந்திரித்து ஏவினார்கள். மந்திரம் பலியாமை கண்டு, பின் அக்கினியைத் தாமே எடுத்துக்கொண்டுபோய் மட த்திற் கொளுத்தினார்கள். அக்கினி புகைவதைக் கண்டு, பரிசனர்கள்போய் நாயனாருக்கு விண்ணப்பஞ்செய்ய,நாய னார் இது பாண்டியனால் ஏவிச்செய்யப்பட்டதென்றறிந்து: "செய்யனே திரு வாலவாய் மேவிய" என்னுந் திருப்பதிக த்தை யெடுத்து, அதிற் "பையவே சென்று பாண்டியற் காகவே" என்று அருளிச்செய்தார். அது உடனே அரச னுக்கு வெப்புநோயாய் அவனை வருத்தலாயிற்று.

அரசனுக்கு வெப்புநோயடுத்ததைப் பாண்டிமாதேவி யாருங் குலச்சிறையாருமறிந்து, வயித்தியரை அழைத்து மருந்துகள் செய்தும் மந்திரங்கள் செய்தும் அது தீரா மைகண்டு, வருத்தமுற்றார்கள். சமணர்களும் தங்கள் மந் திரௌஷதங்களினால் அந்நோய் மாறாமை கண்டு கவலையு ற்றிருந்தார்கள். பொழுது விடிந்தவுடன் மங்கையர்க்கரசி யாரும் குலச்சிறையாரும் அரசனிடத்தில்வந்து:"இந்நோய் திருஞானசம்பந்தமூர்த்திநாயனாராலன்றித் தீராது." என் றார்கள். அரசன் அதற்கு: "நீங்கள் சொல்லுஞ் சைவர் நீறி ட்டுப் பார்ப்பது தகுமோ?" என்றான். அவர்கள்:"எவ்வகை யானும் உம்முடைய நோய் தீரவேண்டுமே.' என்றார்கள். அரசன் அவரை இங்கே அழையுங்களென்று கூறக், குலச் சிறையார் நகரமெங்கும் அலங்கரிப்பித்துத், திருஞானச ம்பந்தமூர்த்திநாயனார் எழுந்தருளியிருக்கும் மடத்துக்கு மங்கையர்க்கரசியாரையும் அழைத்துக்கொண்டு வந்தார்.

பாண்டிமாதேவியாரும் மந்திரியாரும் திருமடத்தை யடைந்து திருஞானசம்பந்தமூர்த்திநாயனாரைத் தரிசித்து

வீழ்ந்து நமஸ்கரித்தார்கள். நாயனூர் அவர்களைத் தமது திருக்கரத்தாலெடுத்து: "நன்றிருந்தனிரோ!" என்று வினவியருளினார். அதற்கவர்கள் "தேவரீருடைய திருவருளைப் பெற்றவருக்கு யாது குறையுண்டு!" என்று சொல்லிப் பின்: "சமணர்கள் இறக்கவும், இப்பாண்டிநாடெங்கும் திருநீற்றினொளி பிரகாசிக்கவும் ஏதுவாய் அரசனுக்கு வெப்புநோய் வந்தது. தேவரீர் எழுந்தருளிவந்து அதனைத் தீர்த்தல்வேண்டும்." என்று பிரார்த்தித்தார்கள். திருஞானசம்பந்தமூர்த்திநாயனூர் அதற்குடன்பட்டு முத்துச்சிவிகையின்மேற் கொண்டு, முத்துச்சின்னங்கள் ஊதச் சென்று, பூரணகும்ப முதலியவைகளால் அலங்கரிக்கப்பட்ட அரமனையையடைந்து உள்ளே புகுந்து, அங்கே அரசனுக்குச் சமீபத்திலிடப்பட்டிருந்த இரத்திநாசனத்தில் வீற்றிருந்தார். நாயனூருடைய திருநோக்கத்தினாலே அரசன் சிறிது அறிவு வரப்பெற்று அவரைப் பார்த்து: "அடியேனுக்குண்டான இந்நோயைத் தீர்த்து அடியேனையும் அடிமைக்கொண்டருளுக." என்று வேண்டினான். சமணர்கள் அதுகேட்டு மனம் புழுங்கி: "மகாராசாவே! உம்முடைய வலப்புறத்து நோயை இவரும் இடப்புறத்து நோயை நாங்களும் தீர்க்க அநுமதி செய்தல் வேண்டும்." என்றார்கள். அரசன்: "அப்படியே செய்க." என்று சொல்ல, சமணர்கள் உடனே அருகனைத் தியானித்துக்கொண்டு மயிற்பீலியினாற்றடவிக் கரகநீரைத் தெளித்தார்கள். அது அக்கினியிற் பெய்த நெய்போலாக, வெப்புநோய் முன்னிலும் அதிகரித்தது. சமணர்கள் மானமிக்குடையராய்ச் செருக்கழிந்திருந்தார்கள். அப்பொழுது திருஞானசம்பந்தமூர்த்திநாயனூர் பாண்டியனுக்கு இடப்பொருட்டு விபூதியை எடுத்தார். அது கண்டு சமணர்கள் இது மாய நீறு என்று தடுத்தார்கள். நாயனூர் அதனைவிடுத்துக் கோயிற்றிருமடைப்பள்ளியிலுள்ள நீற்றைக் கொண்டுவரும்படி செய்து: "மந்திரமாவது நீறு" என்னுந் திருநீற்றுப் பதிகத்தையோதி, அரசனுடைய மேனியிலே அதனைப் பூசித் தடவினார். உடனே அரசனுடைய வலப்பக்கம் நோய் போய்ப்

பனிநீருஞ் சந்தனமும் பூசினாற்போலக் குளிர்ந்தது. அரசன் நாயனாரை நோக்கி: "மற்றப் பக்கத்து நோயையுந் தேவரீரே தீர்த்தருளல்வேண்டும்." என்று இரக்க, அவர் முன்போல விபூதியிட்டு இடப்பக்கத்தையுந் தடவினார். தடவவும், பாண்டியன் வெப்புநோயுடன் முன்னுள்ள கூனுந் தீரப்பெற்றுப் பாலசூரியனைப்போலப் பிரகாசித்தான்.

இதனாலே அக் கூன்பாண்டியனுக்குச் சௌந்தரியபாண்டியனென்னும் பெயருண்டாயிற்று. சௌந்தரியபாண்டியன் திருஞானசம்பந்தமூர்த்திநாயனாரிடத்திலே பஞ்சாக்ஷரோபதேசம் பெற்றுச், சமணசமயத்தை விடுத்துச் சைவமார்க்கத்தையடைந்து சுத்தனாயிருந்தான்.

திருச்சிற்றம்பலம்.

அறுபத்துமூன்றாவது

## சமணரைக்கழுவேற்றியபடலம்.

மங்கையர்க்கரசியாருங் குலச்சிறையாரும் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாருடைய திருவடிகளை வணங்கி: "சுவாமீ! அரசனுடைய வெப்புநோயையும் கூனையும் பாசத்தையும் மாற்றி விபூதியணிவித்தருளினீர். இனிச் சமணர்களை ஜயித்து இத்தென்னாடு முழுவதிலும் திருநீற்றினொளிவிளங்கச் செய்தருளல்வேண்டும்" என்று பிரார்த்தித்தார்கள். திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் திருவாலவாயுடையாருடைய திருவுள்ளத்தை அறிவேமென்று பாண்டிமாதேவியாரோடுங் குலச்சிறையாரோடும் புறப்பட்டுக் கோயிலையடைந்து, பொற்றாமரைவாவியிலே ஸ்நானஞ்செய்து, மழுப்படையைத் தரித்தவராகிய சோமசுந்தரக்கடவுளை வணங்கிச், சமணர்களை ஒறுத்தல் செய்யத் திருவுளஞ்செய்தருளுமென்று: "வேதவேள்வி" என்னுந் திருப்பதிகத்தை அருளிச்செய்தார். சோமசுந்தரக்கடவுள் ஆகாயத்திலே அசரீரியாய்த் தோன்றி: "அன்பர்களே! நுங்கட்கிசைந்ததே எமக்கும் வேண்டுஞ் சம்மதம். அதனால் வெ

ல்லத்தக்கவர் நீரே. பாண்டியனுடைய அவைக்களத்திற் சமணர்களோடு வாது செய்யின் அவர்கள் தோற்றுக் கழுவிலேறுவார்கள்." என்று அருளிச்செய்தார். நாயனார் அது கேட்டுத் தொழுதுகொண்டு திருமடத்துக்கு எழுந்தருளினார்; மாதேவியாரும் மந்திரியாரும் தம்மாளிகைக்குப் போனார்கள்.

மற்றநாட்காலையில் பாண்டிமாதேவியாரும் அமைச்சனாரும் திருஞானசம்பந்தமூர்த்திநாயனாரை வந்து வணங்கி அழைத்துக்கொண்டுபோய், அரசனையடைந்து அவனை நோக்கி: "மகாராசாவே! சமணசமயமாகிய இந்த நெருங்கிய காட்டைக் களைந்தாற்றான் சைவப்பயிர் ஓங்கும்." என்றார்கள். அரசனும் அதுகேட்டு "அப்படியே செய்க" என்றனன். நாயனார் திருவருளை நினைந்து மகிழ்ந்திருந்தார்.

அரசனுடைய நோயை மாற்ற முடியாது தோற்றுப்போன சமணர்களை அவர்கள் மனைவியரும் மக்களும் இகழ்ந்து: "அரசன் உங்கள் சமயத்தை விடுத்துச் சைவனானன், நீங்கள் அவனுடைய நோயை மாற்றும் ஆற்றலிலராய் ஒரு சைவச் சிறுவனுக்குத் தோற்றுச் சமணர்களெல்லாருக்கும் தீராத பழியை விளைத்தீர்கள்" என்று கூறினார்கள். அப்போது சமணாசாரியர்களெல்லாரும் மானத்தால் உந்தப்பட்டவராய்த் திருஞானசம்பந்தமூர்த்திநாயனாரோடு வாதுசெய்யப் புறப்பட்டார்கள். அவர்கள் மனைவிமார் அது கண்டு: "நம்முடைய பாழிகளிலும் பள்ளிகளிலும் சடையும் முஞ்சியும் நீறும் சூலமும் புலித்தோலுந் தரித்தவர் சிலர் வந்துலாவவும், பெண்டவப்பள்ளிகளை யானையொன்று வந்து சிதைக்கவும், முண்டிதஞ் செய்த தலையராய்க் குண்டிகை பொருந்திய கையராய்க் கோவணம் மாட்டிய தண்டத்தைத் தரித்த தோளினராய்ச் சடையனுடைய பெயரை உச்சரிப்பவராய் எங்கும் விளங்கவும், மதயானையொன்று வந்து எல்லாரையுந் தூரத்தி அசோகமரத்தை வேரோடு பிடுங்கவும், சூலத்தலையிலுங் கழுமுனையிலும் நீங்களேற நாமெல்லாம் அளகமவிழ மார்பிலடித்துப் புலம்பவும், சொப்பனங் கண்டோம். நீங்கள்

கற்ற வித்தையொன்றும் உங்கட்கு உதவிற்றில்லை. நம்மு ன்னோர் அக்கினி வளர்த்து அதிலுண்டாகிய யானை முத லியவைகளை ஏவிப் பட்ட பாட்டையுமறிவீர். அரசனு டைய நோயையும் மாற்றினீரில்லை. இனிச் செய்வது யாவ தாகுமோ அதனை எண்ணுங்கள். இன்றைக்கு வாதஞ்செ ய்யப் போகவேண்டாம்.'' என்று தடுத்தார்கள். சமணு சாரியர்கள் அவர்களுடைய வார்த்தையைக் கேளாதேகி, அம்மனைவியர்களாற் கையிற்பற்றி இழுத்துச் சபிக்கப்பட் டும் பெண்கள் சொற்கேட்பது பழுதென்றெண்ணி, அவர் கள் காணுதபடி ஒளித்துச் சென்றார்கள். செல்லும்போது பல துர்ச்சகுனங்கள் எதிரே நிகழ, அவற்றையும் பொரு ட்படுத்தாது நகர்ப்புறத்தையடைந்து, எல்லாரும் ஓரிட த்திற் கூடி, அரசனைக் கண்டு அநுமதிபெற்றுப் பகைவரை வாதினால் வெல்லுதுமென்று நிச்சயித்துக்கொண்டு அங்கு நின்றும் புறப்பட்டுச், சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு வந்த திருஞானசம்பந்தமூர்த்திநாயனாரைத் தொடர்ந்து கொண்டு இராசசபைக்கு வந்தார்கள். திருஞானசம்பந்த மூர்த்திநாயனார் இராசசபையிலே வந்து பாலசூரியன்போ லச் சிங்காசனத்தில் வீற்றிருப்பச், சமணர்கள் பொறாதவ ராய்: "மழலை வார்த்தை தெளியாத மைந்தரே! உம்மு டைய மந்திரத்தினாலே அரசனுடைய நோய் நீங்கிற்றெ ன்று எண்ணவேண்டாம். அது காக்கையிருக்கப் பனம் பழம் விழுந்ததுபோலும். நத்தையூர்ந்த கீறு எழுத்தாய் வரினும் வரும். அதுபோல உம்முடைய சாம்பலுஞ்சொ ல்லும் அரசனுடைய நோய்க்கு மருந்தும் மந்திரமுமாயின. ஆதலினால் எம்மை வென்றோமென்று நீர் தருக்கவேண் டாம். உம்முடைய மந்திரத்தையும் எம்முடைய மந்திரத் தையும் ஏட்டிலெழுதி அரசன் முன் அக்கினியிலிடுவோம். யாருடைய ஏடு வேவவில்லையோ அவரே வென்றவர். அத னைச் சிவனுறைகின்ற இந்த ஆலவாயை விட்டு வேறோரிட த்திற் செய்வோம்.'' என்றார்கள்.

சமணுசாரியர்கள் இவ்வாறு சொல்லிப் புறப்பட்டுப் போய் மதுராபுரிக்குக் கீழ்த்திசையிலே ஒரு கிடங்குவெ

டடி அதில் தீமூட்டிக்கொண்டிருந்தார்கள். பதினாறாயிரந் திருக்கூட்டத்தோடும் திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் அவ்விடத்துக்கு எழுந்தருளப், பாண்டியராசனும் பாண்டிமாதேவியாருங் குலச்சிறையாரும் பின்னே போனார்கள். தம்புதல்வருடைய செய்கையைப் பார்க்கச் சோமசுந்தரக்கடவுளும் மீனாக்ஷியம்மையாரோடு ஆகாயத்திலே எழுந்தருளினார். சமணாசாரியர்கள் தங்களுடைய மந்திரங்களைப் பச்சையோலைகளிலெழுதி அவ்வக்கினியிலே இட்டார்கள். அவை உடனே கரிந்து சாம்பராயின. திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் தாமருளிச்செய்த தேவாரத்திருப்பதிக மெழுதப்பட்ட புத்தகத்தையெடுத்துக் கயிற்றினால் வகிரவும் "போகமார்த்த பூண்முலையாள்" என்னுந் திருப்பதிகம் வந்தது. அது எழுதப்பட்ட ஏட்டைத் தமது திருக்கரத்தாலெடுத்து அக்கினியிலேயிட்டார். அக்கினியிலிடப்பட்ட அவ்வேடு எரியாது பச்சையாய்த் தோன்றிற்று. அது கண்டு அரசனும் மந்திரியும் அரசியும் அங்கு வந்து நின்ற பிறரும் நாயனாரைப் புகழ்ந்து இன்பவெள்ளத்திலமிழ்ந்தினார்கள். அந்த இடமானது இன்றைக்கும் திருஞானசம்பந்தமூர்த்திநாயனாருடைய பெயரால் வழங்கப்பட்டு வருகின்றது.

நாயனார் அவ்வேட்டையெடுத்துத் திருமுறையிற் சேர்த்துவிட்டு அரசனை நோக்க, சமணாசாரியர்கள் பின்னும் வெட்கமின்றி நாயனாரைப் பார்த்து: "நாங்களிட்ட பச்சையேடுகள் கரிந்துபோக, நீரிட்ட ஏடு மாத்திரம் பச்சையாய்த் தோன்றிற்று. இது நீர் அக்கினியை விஞ்சையினாலே கட்டிக்கொண்டதினாலேயாம். உங்களுடைய ஏட்டையும் எங்களுடைய ஏட்டையும் வைகையாற்றிலிடுவோம். யாருடையது எதிரேறுமோ அவரே வென்றவர். வென்றவருக்குத் தோற்றவர் அடிமையாவர்." என்றார்கள். திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் அது கேட்டு: "சிவனடியார்நிந்தை சிவநிந்தை செய்த நமக்கு ஏற்ற தண்டம் இதுவோ! சிவபெருமானுடைய திருவருளினாலே நாம் வென்றேமாயின் உம்மைக் கழுவிலேற்றுவோம்." என்றார்.

ஊழ் அதுவாயிருந்தமையினாலே சமணர்களும் அதற்குட-ன்பட்டார்கள். குலச்சிறையார் அஃதறிந்து தச்சரை யழைத்துக் கழுமரங்கள் செய்து அரசன்முன்னே பரப்பி னார். திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் சமணர்கண் மேற் கொண்ட இரக்கத்தினாலே அவர்களை நோக்கி: "வாரீர் ஆசாரியர்களே! வாதுசெய்வதை விடுத்து விபூதி ருத்திராக்ஷந் தரித்துப் பஞ்சாக்ஷரத்தை உச்சரித்துப் பாசத்தை நீங்கி உய்யுங்கள்." என்றருளிச்செய்தார். சமணர்கள் அது கேட்டுக் கோதித்து: "அக்கினியில் வென்றோம். நீரில் எப்படியாகுமோவென்று ஐயுற்று எம்மை இளைக் கிக்கொண்டு அகல நினைந்தீர். வாது செய்யத் துணி யும் பெற்றிலை உரைத்திலீர், போம்." என்று மறுத்து, வேகமாய்ப் பாய்கின்ற வைகையிலே அவ்வேகந் தணிய மந்திரத்தை உச்சரித்து, ஏட்டையெழுதி விடுத்தார்கள். திருஞானசம்பந்தமூர்த்திநாயனார், "வேதங்களே உண் மைப்பிரமாணமானால், அவ்வேதங்களாற் றுணியப்பட்ட பொருள் சிவபிரானேயானால், இவ்வேடு நீரிலே எதிர்செ ல்க" என்று சொல்லி, "வாழ்கவந்தணர்" என்னுந் திருப் பதிகத்தை எழுதி அவ்வாற்றிலே விடுத்தார். சமணரிட்ட ஏடெல்லாம் நீரோடு சமுத்திரத்தை நோக்கிச் செல்லத், திருஞானசம்பந்தமூர்த்திநாயனாரிட்ட ஏடானது சோமசு ந்தரக்கடவுளுடைய திருவருளாகிய கயிற்றினாலிழுக்கப்ப ட்டு எதிரேறச்சென்றது. அப்பொழுது தேவர்கள் பூமாரி பெய்தார்கள்; முனிவர்கள் வஸ்திரங்களை வீசி ஆரவாரித் தார்கள்; நாயனார் ஆனந்தபாஷ்பத்தில் மூழ்கினார்; சமணர் கள் வெயர்வையில் மூழ்கி நாணிநின்றார்கள். எல்லாரா லுந் தொழப்படும் பரமபதி சிவபெருமானே யென்பதை, புத்தர்களுக்கும், வேதங்களை யோதியும் சிவனே பதியெ ன்றுணராத சமயத்தவருக்கும், அரசனுக்கும், அமணரு க்கும், அக்கினியேயன்றி வைகையாற்று நீருமறிவித்தது. பாண்டியராசனுந் தேவியாரும் மந்திரியாரும் மற்றையடி யார்களுந் திருஞானசம்பந்தமூர்த்திநாயனாரை வணங்கி மகிழ்ந்து வியந்தார்கள். சமணர்கள் நாயனாரெதிரே

வந்து: ,"யாங்கள் உமக்குத் தோற்றேம்; நீரே வென்றீர்," என்றார்கள்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் தோற்ற சமணர்கள் உய்யுநெறியை நினைந்து அவர்களை நோக்கி: "எம்முடைய சிவபெருமான் உயிர்களுக் கெல்லாந் தாய்போல்வர். அவருக்கு ஆட்பட்டு உய்யுங்கள். ஏன் வாளா இறக்கின்றீர்கள்." என்று அறத்தாறு கருதி அருளிச்செய்தார். மானமுடைய சமணகுருமார் எங்கட்கடாத மொழி சொன்னீரோவென்று தாமே போய்க் கழுவிலேறினார்கள். மற்றவர்களை வலாற்காரமாகப் பற்றி யேற்றினார்கள். சைனமாணாக்கர்களுட் சாதற்கு அஞ்சினவர்கள் விபூதியிட்டுக் கொண்டார்கள்; அது கிடையாதவர்கள் கோமயத்தையள்ளி நெற்றியிலிட்டுக்கொண்டார்கள்; அதுவுங் கிடையாதவர்கள் பசுக்கன்றைத் தோளிலிட்டுக்கொண்டார்கள்; இவையொன்றுங் கிட்டாதவர்கள் விபூதியிட்ட நெற்றியோடும் கோமயமிட்ட நெற்றியோடுந் தம்முடைய நெற்றியைச் செறியத் தாக்கிக்கொண்டு உயிர் பிழைத்தார்கள். கழுவிலிறந்த சமணர்களுடைய புலாலைப் பருந்துங் காகமும் நரியும் நாயும் பற்றியீர்த்துத் தின்றன.

பாண்டியராசன் திருஞானசம்பந்தமூர்த்திநாயனாரை வணங்கித்: "தேவரீரிட்ட ஏடு எதிர்சென்றதே அது எங்கேபோயிற்று?" என்று வினவ, நாயனார் அதனை வருவிப்பேம்" என்று சொல்லி நதிக்கரை வழியே மேற்கே சென்று, காததூரத்தில் அது மறைந்தது கண்டு, அங்கே மாடு மேய்த்துக்கொண்டு நின்ற சிலரை நோக்கி, "இவ்விடத்தில் ஏதும் விசேடங் கண்டீர்களோ?" என்று வினவினார். அவர்கள் "ஒன்றும் அறியேம்" என்றார்கள். நாயனார் அங்கே எப்படியும் விசேடமிருக்கவேண்டுமென்று நிச்சயித்துக்கொண்டு சுவாமியைப் பாடி, அவர் அக்காட்டிலே சிவலிங்கமூர்த்தமாய் எழுந்தருளியிருக்கக் கண்டு வலஞ்செய்து துதித்து நிற்கப், பாண்டியராசனும் அதனையறிந்து சேனையோடும் அங்கே போனான். சுவாமி அவ்விலிங்கத்தி

னின்றும் ஒரு பிராமணக் கிழவர்போலத் தோன்றித் திருஞானசம்பந்தமூர்த்திநாயனருக்கு விபூதிசாத்தித் திருவருள்செய்தார். நாயனர், வேதியரை வணங்கி: "அடியேனிட்ட ஏடு இவ்வழியே வந்தது. அதனைத் தேவரீரே எடுத்தீர்: அதனை மீளத் தந்தருளவேண்டும்." என்று பிரார்த்தித்தார். சுவாமி அவரை நோக்கி: "மைந்தனே! இன்னும் பலநாள் நம்மைத் தலந்தோறுஞ் சென்று பாடிப் பரசமயத்தவரை வென்று, அதன்பின் நம்முடைய வீட்டையடையக்கடவாய்." என்று ஆசீர்வதித்து ஏட்டைக் கொடுத்து மறைந்தருளினர். நாயனர் ஏட்டை வாங்கி அரசனுக்குக் காட்ட, அவன் அவரை வணங்கி: "தேவரீருடைய பெருமையை அறியாது சோதித்த அடியேனுடைய பிழையைப் பொறுத்து ஆட்கொண்டருளுக." என்று வேண்டினன். பாண்டியராசன் பின்பு, விஷ்ணுமூர்த்தியும் கருழனும் ஆதிசேடனும் முதன்மூன்றுகங்களினும் பூசித்த அச்சிவலிங்கப்பெருமானுக்குக் கோயில் கோபுரம் மண்டபம் முதலானவைகள் செய்து பூசித்துச், சமணரோடு தான் கூடிய பாவத்தைப் போக்கிக்கொண்டான். அந்நாண்முதலாக அத்தலம் திருவேடகமென்று வழங்கப்படுகின்றது.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் அத்திருவேடகமென்னுந் தலத்தில் ஒருவருடமிருந்து பின் பாண்டியனேடும் புறப்பட்டு மதுரையை அடைந்து, அங்கே விபூதியை விளங்கச்செய்து கொண்டு சிலநாளிருந்து, வடக்கிலுள்ள தலங்களை வணங்கித் துதிக்க விரும்பி, சோமசுந்தரக்கடவுளையும் மீனுக்ஷியம்மையாரையும் பணிந்து, பலவரம் பெற்றுக்கொண்டு புறப்பட்டுப், பாண்டிநாட்டிலுள்ள தலங்களை வணங்கிச் சென்றார். பாண்டியராசனும் மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் நீங்காத நட்பினலே பிரிவாற்றாது பின்னே தொடர, நாயனர் அவர்களை நோக்கி: "அன்பர்களே! நம்மிடத்து அன்பு நீங்காதவராய் இங்கிருந்து விபூதியைப் பரிபாலித்துச் சிவபெருமானுடைய புகழை வளர்த்துக்கொண்டிருப்பீராக." என்று தடுத்தார். அவர்களும் அவ்வாணையை மறுக்க அஞ்சி நாயனரை வண

ங்கிக்கொண்டு மதுரையையடைந்தார்கள். நாயனார் சோழநாட்டையடைந்தார். திருஞானசம்பந்தமூர்த்திநாயனாரென்னும் மதயானையானது, கடம்பவனமாகிய காட்டிற் புகுந்து, சமணராகிய மரங்களைச் சாடி, விபூதியாகிய தூளியை அள்ளி எங்கும் வீசிற்று; அதனால் பூமியிலே எங்கும் விபூதியினொளி விளங்கிற்று.

திருச்சிற்றம்பலம்.

அறுபத்துநான்காவது

## வன்னியுங்கிணறும் இலிங்கமும் அழைத்தபடலம்.

சமுத்திரக் கரையிலேயுள்ள ஒரு பட்டினத்திலே பல செல்வங்களையுடையவனாகிய ஒரு வணிகன் இருந்தான். அவன் மகப்பேறு இல்லாமையினால் பல தருமங்களைச்செய்து அதனால் ஒரு பெண்ணைப் பெற்றான். அவன், மதுரையிலே மணமுடித்துக்கொண்டிருக்கும் தன்னுடைய நன்மருமகனுக்கே இப்பெண்ணையுங் கொடுப்பேனென்று சுற்றத்தாரறியச் சொல்லிக்கொண்டிருந்து, சிலநாட் சென்றபின் இறந்து விட்டான். உடனே அவனுடைய கற்பினிற் சிறந்த மனைவியும் கூட இறந்துவிட்டாள். சுற்றத்தார், அவர்களுக்குச் செய்யவேண்டிய கிரியைகளைச் செய்துவிட்டு, இவைகளையெல்லாம் மதுரையிலுள்ள அவனுடைய மருமகனுக்கு ஓலையெழுதி அனுப்பினார்கள். மருமகன் அவ்வோலையைக் கண்டு, அளவில்லாத துக்கத்திலழுந்திப் புலம்பி, கிளைஞரும் நட்பினருந் தேற்றத் தெளிந்து, பின் சுற்றத்தார் சிலரோடு மதுரையை நீங்கி மாமனுடைய ஊருக்கு வந்து, எதிர்வந்த சுற்றத்தாரையெல்லாந் தழுவிச், செல்லவிடுத்துப், போய் மாமனுடைய வீட்டிலிருந்தான்.

சிலநாள் கழிந்தபின்பு, அவன் அப்பெண்ணை மதுரையிற் கொண்டுபோய் அங்குள்ள சுற்றத்தார்முன் விவாகஞ் செய்வேனென்று சொல்லி, மாமனுடைய பொருள்களை

யெல்லாஞ் சேர்த்துக்கொண்டு புறப்பட்டு, வழிவிட வந்தவர்களை நிறுத்திவிட்டு, மதுரையினின்று தன்னுடன் வந்த சுற்றத்தாரை முன்னே போகும்படி செய்து, தான் பரிசனங்களோடு அப்பெண்ணை அழைத்துக்கொண்டு மெல்ல மெல்லப் போனான். சூரியன் அத்தமித்தபோது புறம்பயமென்னுந் தலத்தையெய்தி, இன்றிரவு இங்கே தங்கிப் போவோமென்று கோயிலுக்குச் சமீபத்திலுள்ள கிணற்றிலே ஸ்நானஞ்செய்து, அங்குள்ள வன்னிமரத்தடியிலே சமையல்செய்து போசனமருந்திக்கொண்டு, கோயிற்படியொன்றிலே தலைவைத்துச் சயனித்தான். அப்போது ஒரு சர்ப்பம் அவனைத் தீண்டிற்று. அவ்விஷந் தலைக்கொண்டு அவ்வணிகன் இறந்து விட்டான். அது கண்டு பரிசனங்கள் ஆவலித்திரங்கச் சேடிப்பெண்கள் மார்பிலடித்துப் புலம்பினார்கள். அப்பெண்ணானவள் இவைகளைக் கண்டு தனியே ஒருபுறத்தில் ஒதுங்கி அறிவிழந்து மயங்கி இறந்தவள்போலானாள். சேடியர்கள் அவளை வஸ்திரத்தினாலே வீசி இளைப்பாற்றினார்கள். நாணம் முதலிய நான்கு குணங்களும் நான்கு வேலிகளாய்ச் சூழ்ந்துகொள்ள, கண்ணீர் வாரக் கரைந்து தேம்பி விம்மாந்து ஒளி தேய்ந்து, அதுவரையுந் துன்பமென்பதைக் கனவிலும் அறியாதவளாதலால் ஆற்றாது, அன்பன்மேற்கொண்ட காதல் உருகுவதுபோல உருகித், துணையை இழந்த அன்றில்போலத் தனியேயிருந்து வாய்விட்டரற்றினாள்.

சிவஸ்தலங்கள்தோறும் போய்ச் சுவாமிதரிசனஞ்செய்துகொண்டு வந்து பக்கத்திலேயுள்ள திருமடமொன்றில் எழுந்தருளியிருந்த திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் அவ்வழுகையொலியைக் கேட்டு, ஆள்விட்டாராய்ந்து அக்கோயிலுக்கு எழுந்தருளிவந்து, அப்பெண்ணை நோக்கி: "யார்? நிகழ்ந்தது என்னை?" என்று வினாவியருளினார். அவள் தன் மரபும் தந்தைதாயரும் அவர் தன்னை இவனுக்கென்று பேசியிருந்திறந்ததும் இவனோடு தான் வந்ததும் இவனிறந்ததுமாகிய எல்லாவற்றையும் எடுத்துச் சொன்

ளுள். நாயனுர் தனித்தவளாகிய அப்பெண்மேல் இரக்கங் கொண்டு, இறந்த வணிகனுக்குச் சமீபத்தில் வந்து, அவனுடம்பு அமிர்தமாகும்படி சிவத்தியானம் பண்ணித் திருக்காண் சாத்தியருளினுர். உடனே நஞ்சு குதிக்க, இறந்த வணிகன் துயினீத்து எழுவான்போல எழுந்தனன். அதனை யாவருங் கண்டு நாயனுரைத் தொழுது துதித்து மகிழ்ந்தார்கள். அக்கன்னிகை அளவிறந்த சந்தோஷமடைந்து ஒருபுறத்தில் ஒதுங்கி நின்ருள்.

அக்கன்னிகையானவள் இறந்த வணிகன் தன் மாமனுடைய மகளுயிருந்தும் அவனிறந்தபோதும் உயிர்பெற்ற போதும் அவனைத் தீண்டாத நிலைமையினையுங் கற்பினையும் திருஞானசம்பந்தமூர்த்திநாயனுர் கண்டு, வணிகனை நோக்கி: "உன் மாமன் பெற்ற இவள் சோபனகாலத்தில் அல்லது துக்ககாலத்திலன்றி என்று உன்னுடைய சரீரத்தைத் தீண்டப் பெறுவாள்? ஆதலால் இவ்விடத்திற்ருனே நீ இவளை மணமுடித்துக்கொண்டு போகக்கடவாய்." என்று அருளிச்செய்தார். வணிகன் அவ்வார்த்தையைத் தலைமேற்கொண்டு நாயனுரை வணங்கிச்: "சுற்றத்தாரும் சாக்ஷிகளுமின்றி நான் இங்கே மணமுடிக்குமாறு எங்ஙனம்?" என்றுகேட்க, "இக்கன்னிகையைப் பெற்றபோதே இவளை உனக்கென்று உன் மாமன் பேசியிருந்ததைச் சுற்றத்தாரெல்லாரும் அறிவர். இஃதன்றி இந்த வன்னிமரமும் கிணறும் சிவலிங்கமும் சாக்ஷியாம். நம்முடைய வார்த்தையைக் கடவாது இங்கே தானே விவாகஞ் செய்யக்கடவாய்." என்று நாயனுர் அருளிச்செய்தார். "அடியேனுக்குக் குருவும் பிதாமாதாவும் சினேகிதரும் தெய்வமும் சுற்றமும் தேவரீரே" என்று நாயனுரை வணிகன் வணங்கி, அவருடைய கட்டளைப்படியே விவாகஞ்செய்துகொண்டு, மீட்டும் நாயனுரை மனைவியோடு வணங்கி விடைபெற்றுக்கொண்டு மதுரையை யடைந்தான். மதுரையிலுள்ள சுற்றத்தார்கள் இவன் விவாகஞ்செய்த வரலாற்றைக் கேட்டு மகிழ்ந்தார்கள். வணிகன் தன்னுடைய

பொருளும் மாமனுடைய பொருளுங்கொண்டு பெரிய வியாபாரஞ் செய்து குபேரனையொத்து வாழ்ந்திருந்தான்.

அவனுடைய மூத்த மனையாளுக்குத் துட்டர்களாகிய பல பிள்ளைகளும் இளையவளுக்கு ஒரு சற்புத்திரனுமுண்டு. இருவருடைய பிள்ளைகளும் வீதியிலே போய் விளையாடிவரும்போது, ஒருநாள் மூத்தவளுடைய பிள்ளைகள் இளையவளுடைய பிள்ளையைக் கோபித்து அடித்தார்கள். இளையவள் அது கண்டு அப்பிள்ளைகளை வைதாள். மூத்தவள் இளையாளை நோக்கி: "நீ எந்தவூர்? எந்தச் சாதி? யார் மகள்? யாவர்காண அக்கினி சான்றாக என்னுடைய நாயகன் விவாகஞ் செய்த பெண் நீ" என்னுயகனுக்கு ஆசைப்பட்டு வந்த காமக்கிழத்தியாகிய உனக்கு வாயேன்? பெருமையேன்? உன்னை என்னுயகன் தீமுன்னாக விவாகஞ் செய்தற்கு வேறு சான்றுண்டோ சொல்வாயாக." என்றாள். இளையாள் அதுகேட்டு வருந்திப்: "புறம்பயமென்னும் ஊரிலே எம்முடைய நாயகர் தாம் பாம்பு கடித்திறந்தபோது தம்மை உயிர்ப்பித்த திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாருடைய திருவருளினாலே சிவலிங்கமும் வன்னிமரமும் கிணறுங் காண என்னை மணமுடித்தார். அம்மூன்று சாக்ஷிகளுமுள்ளன." என்றாள். மூத்தாள் நகைத்து:"உன் விவாகத்துக்கு ஏற்ற சாக்ஷிகளையே சொன்னாய், நன்று நன்று! அந்தச் சாக்ஷிகள் இங்கும் வருமாயின் அது மெய்தான்." என்றாள். இளையாள் பெருமூச்செறிந்து வருந்தி, வீட்டிற் போய்ப் புலம்பித், "தந்தை தாயில்லாத தமியாளுக்குத் தெய்வமேயல்லாது யார் துணை" என்று சோமசுந்தரக்கடவுளை நினைந்து, "மாமனாக வந்து வழக்குரைத்த பெருமானே, இப்பழியைத் தீர்த்தருளுவீர்" என்று வேண்டிக்கொண்டு, அன்றிரவு உண்டியும் உறக்கமுமின்றியிருந்து, பொழுது விடிந்தவுடன் போய்ப் பொற்றாமரைவாவியிலே ஸ்நானஞ்செய்து, சோமசுந்தரக்கடவுளுடைய திருவடிகளிலே வீழ்ந்து நமஸ்கரித்து: "என்னுடைய விவாகத்துக்குச் சான்றாயிருந்த வன்னிமரமும் சிவலிங்கமும் கிணறும்

ஆகிய மூன்றையும் இன்றைக்கு இங்கே வருவித்து, மாற்று ளுடைய வாய்ப்பழிமொழியைக் காவாதொழிவீரேல்,நான் இறந்துவிடுவேன்." என்று முறையிட்டாள். அப்பொழுது அவளுடைய வருத்தத்தைக் கண்ட சோமசுந்தரக்கடவுளு டைய திருவருளினாலே அச்சான்று மூன்றும் கோயிலின் ஈசானமூலையிலே வந்து தோன்றின. இளையாள் மூத்தவளை அழைத்துவந்து அவைகளைக் காட்ட, அவள் கண்டு தலை வணங்கி நின்றாள். இளையவளுடைய கற்பையும் சிவபத்தி யையும் சிவபெருமானுடைய திருவருளையும் பார்த்து நக ரத்திலுள்ளவர்களெல்லாரும் மகிழ்ச்சியடைந்தார்கள். கற் பினுக கரியது ஒன்றும் இல்லை. மூத்தவளை இவள் பொல் லாதவளென்று எல்லாரும் பழித்தார்கள்.

நாயகனாகிய வணிகனும், "குற்றமற்றவளைக் குடிப்ப ழியுரைத்த பாவி" என்று மூத்தவளைத் தள்ளிவைத்தான். இளையாள் அதனையறிந்து நாயகனை வணங்கி: "என்னு டைய கற்பை உலகத்தவர் அறியும்படி செய்தவள் இவ ளேயாம். தாயில்லாத அடியேனுக்கு இவளே தாயாகும். இனி நாங்களிருவரும் உயிரும் உடலும் போல வாழு வோம்." என்று சொல்லி, அவ்வாறே தம்முள் இணங்கி அன்புற்று வாழ்ந்தார்கள். அவ்விளையவளினாலே வணிகனு க்குத் தீர்க்காயுளும் செல்வமும் சிறப்பும் ஒழுக்கமும் பெ ருமையும் தவநெறியும் தருமமும் புகழும் உண்டாயின.

திருவாலவாயாகிய மதுரையில் எழுந்தருளியிருக்கி ன்ற சோமசுந்தரக்கடவுளுடைய திருவிளையாடல்கள் இன் னும் பலவுள; நம்முடைய குருநாதராகிய சுப்பிரமணியக் கடவுள் அருளிச்செய்தபடியே இந்த அறுபத்துநான்கு திருவிளையாடல்களையும், முனிவர்களே! உங்களுக்குச் சொன்னோம் என்று அகத்தியமுனிவர் சொல்லித், துவா தசாந்தத்திலே மதுரையைப் பாவித்து, மீனாக்ஷியம்மை யாரோடு வீற்றிருக்கின்ற சோமசுந்தரக்கடவுளைத் தியா னம்பண்ணினார்.

திருச்சிற்றம்பலம்.

# அருச்சனைப்படலம்.

சோமசுந்தரக்கடவுளுடைய அறுபத்துநான்கு திருவிளையாடல்களையுஞ் சொன்ன அகத்தியமுனிவரையும் அவர் மனைவியாகிய உலோபாமுத்திரையையும் வசிட்டர் முதலாகிய முனிவர்கள் அருச்சித்து வணங்கிச்: "சுவாமீ! இச்சரித்திரத்தைக் கேட்டதினாலே செவிகளைப் பெற்றதினாலாய பயனைப் பெற்றேம். கேட்டவாறே கண்கள் களிக்கத் தரிசித்து வணங்கவும் விரும்புகின்றோம்." என்றார்கள். அகத்தியமுனிவர் முகமலர்ந்து: "முனிவர்களே! நான் எண்ணியபடியே நீங்களும் உரைத்தீர்கள். பரமசிவனை அகக்கண்ணினாலே தரிசியாதவர்கள் மோக்ஷமடையமாட்டார்கள். சோமசுந்தரக்கடவுளைப் போய் அருச்சிப்போம் வாருங்கள்." என்றார். முனிவர்களெல்லாரும், சுபதினத்திலே கங்கையில் ஸ்நானஞ்செய்து, விசுவநாதரைத் தொழுது, சங்கற்பஞ்செய்து, அநுஞ்ஞை பெற்றுச், சோமசுந்தரக்கடவுளைத் தியானித்துப், பஞ்சாக்ஷரத்தை உச்சரித்துக்கொண்டு விமானங்களில் ஏறி ஆகாயமார்க்கமாக நடந்தார்கள்.

நடக்கும்போது, அகத்தியமுனிவர் வசிட்டர் முதலாகிய முனிவர்களுக்குத் திருப்பருப்பதம் முதலிய சிவஸ்தலங்களையும் நதிகளையும் தபோவனங்களையும் காட்டி, அவைகளினுடைய மகாத்துமியங்களையுஞ் சொல்ல: முனிவர்கள் கேட்டு அவைகளையெல்லாம் பார்த்துத் தொழுது வணங்கிக்கொண்டு மதுரையை அடைந்தார்கள். அகத்தியரும் மற்றமுனிவர்களும், வைகைநதியைக் கண்டு வணங்கிக், கோபுரத்துக்கு எதிரே நமஸ்கரித்து, உள்ளே புகுந்து, வீதிதோறும் பணிந்தெழுந்து, பொற்றாமரை வாவியிலே விதிப்படி ஸ்நானஞ்செய்து, நியதிமுடித்துச், சிவமூலமந்திரத்தைச் செபித்துச், சித்திவிநாயகரை வணங்கி, மீனாக்ஷியம்மையாருடைய சந்நிதானத்தை அடைந்து நமஸ்கரித்து அன்பைக் கொடுத்து அருளைப் பெற்றுக்கொண்டு, சோமசுந்தரக்கடவுளுடைய சந்நிதானத்தை அடை

ந்து திருவடிகளிலே விழுந்து நமஸ்கரித்துத் துதித்து, அன்று ஒன்றும் புசியாதிருந்தார்கள்.

மற்றநாள் சூரியனெழுமுன் ஸ்நானஞ்செய்து நியதி முடித்துக்கொண்டு சுவாமியைத் தரிசித்துக், கருப்பஞ் சாறு முதலானவைகளினாலே அபிஷேகஞ்செய்து, சந்தனம் புட்பம் வஸ்திரம் ஆபரணம் என்பவைகள் சாத்திப், பாலன்னம் நிவேதித்து, முகவாசங் கொடுத்துத், தாம்பூலம் நிவேதித்துத், தூபதீபங் காட்டி, அக்கினிபூசை செய்து, அருச்சனை இயற்றிச், சிவபூசாபலனை அர்க்கியசலத்தோடு பூவைக் கையிற்கொண்டு சிவபெருமானுடைய வாதஹஸ்தத்திலே நிவேதித்து, வணங்கித், தோத்திரஞ் செய்தார்கள்.

பழியொடுபாசமாறுகெடவாசவன்செய்
 பணிகொண்டவண்டசரணம்
வழிபடுதொண்டர்கொண்டநிலைகண்டுவெள்ளி
 மணிமன்றுளாடிசரணஞ்
செழியன்விளிந்திடாதபடிமாறியாட
 றெளிவித்தசோதிசரண
மெழுகடல்கூவிமாமியுடன்மாமனுட
 விசைவித்தவாதிசரணம்.

வெங்கரியாவிசோரநரசிங்கவாளிவிடுவேடரேறுசரணம்
புங்கவர்தேறவாதிமறையுட்கிடந்தபொருளோதுபோதசரணம்
வங்கமதேறிவேலைமகரம்பிடித்தவலையாண்மணாளசரணங்
கங்கணநாகம்வீசிநகரெல்லைகண்டகறைகொண்டகண்டசரணம்.

மைந்தனிலாழிமேருமகவானகந்தைமடிவித்தநித்தசரணஞ்
சுந்தரநாமவாளிபணிகொண்டுகிள்ளிதொகைவென்றவீரசரணம்
வெந்திறன்மாறன்முன்கலுருவானைகன்னன்மிசைவித்தசித்தசரண
முந்தியகல்லின்மாதர்பெறவட்டசித்திமுயல்வித்தயோகிசரணம்.

திருமணிமைந்தன்மைந்தன்முடிசூடவிற்றதிருமல்குசெல்வசரண
மருமகனென்றுமாமனுருவாய்வழக்குவலிபேசுமைந்தசரணங்
குருமொழிதந்துநாரைகுருவிக்குவீடுகுடிதந்தவெந்தைசரணம்
வருபழியஞ்சிவேடமகனுக்கிரங்குமதுராபுரேசசரணம்.

விருத்தகுமாரபாலவருண்மேனிகொண்டுவிளையாடுமண்ணல்சரண
ங்;குரத்தியைநச்சுபாவியுயிருண்டுசோரிகுடைவாகைவேலசரணங்

கருத்திசைபாணனாளினிசைபாடிமாறுகளைவேதகீதசரணம்
நரித்திரண்மாவைமீளநகரங்கலங்கநரிசெய்தநம்பசரணம்.

முற்பகலாறிரண்டுசிறுபன்றியுண்ணமுலைதந்தவன்னைசரணம் [ம்
பொற்புறுமாயவாவையடலேறுகொண்டுபொருதட்டசிட்ட சூரனா
பற்பலஞாலமெங்குமடையப்பிரம்புபடுமட்டமூர்த்திசரணங்
கற்பினொருத்திமன்றலறிவிக்கமூன்றுகரிதந்தவள்ளல்சரணம்.

அளவைகளாலும்வேதமுதனூல்களாலு
மயன்மாயனாலுமளவாக்
களவையுனக்குநாமகுணசின்னசாதி
கதிசெய்தியில்லைபவையு
முளவெனயாமறிந்துதுதிசெய்யவேகோ
லுலகஞ்செயன்பினெளிதாய்
விளையருண்மேனிகொண்டிவ்வறுபத்துநாலு
விளையாடல்செய்தபடியே.

சோமசுந்தரக்கடவுளானவர் சிவலிங்கத்தினின்றும் வெளிப்பட்டு, வசிட்டர் முதலிய இருடிகளை நோக்கி: "முனிவர்களே! நீங்கள் செய்த பூசையினாலுந் தோத்திரத்தினாலும் மகிழ்ந்தேம்." என்று திருவாய்மலர்ந்து திருவருள்செய்து, அகத்தியமுனிவரை அழைத்து அவருடைய தலையிலே திருக்கரத்தை வைத்து, முதுகைத்தடவி: "உன்னை ஒப்பவர் உலகத்திலில்லை. உனக்கு நாம் தரும் வரம் யாது! உலகத்தில் உனக்கு அரியது ஒன்றுமில்லை." என்று பேரருள் புரிந்து மறைந்தருளினார். அகத்தியர் வசிட்டர் முதலாகிய முனிவர்கள் அம்மதுராபுரியிலே தங்கள் தங்கள் பெயராற் சிவலிங்கந் தாபித்துப் பூசித்துப், பக்கத்திலே ஒருதபோவனஞ்செய்து, அதிலிருந்துகொண்டு தினந்தோறுந் திரிகாலங்களிலும் போய்ச் சோமசுந்தரக்கடவுளையும் மீனாக்ஷியம்மையாரையும் வணங்கிக்கொண்டிருந்தார்கள்.

திருவிளையாடற்புராணம் முற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்.

MAHAMAHOPADHYAYA
SWAMINATHA IYER LIBRARY.